கழக வெளியீடு—௬௨௯

# ஷேக்ஸ்பியர்

# கதைக் கொத்து

700

[மூன்றும் பாகம்]

MAHARAJAH SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY, THE TANJORE
RECEIVED.
31 JAN. 1950
TANJORE

1. ஜூலியஸ் ஸீஸர்,
2. கோரியோ லானஸ்,
3. அந்தோணியும் கிளியோப்பாத்ராவும்,
4. நன்கு முடிவுறின் நலமே அனைத்தும்,
5. மாருட்டத்தால் நேர்ந்த போராட்டம்,
6. வெரோணு நகரின் இரு செல்வர்கள்,
7. இரண்டாம் ரிச்சர்ட் மன்னன்.

T000700
Sarasvati Mahal Library. Thanjavur

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: :: சென்னை 1.

1-ம் பாகம் விலை ரூ. 1— 8

2-ம் பாகம் விலை ரூ. 1—12

3-ம் பாகம் விலை ரூ. 2— 0

4-ம் பாகம் விலை ரூ. 2— 8

*Copy right* :

*Published by*

THE SOUTH INDIA SAIVA

SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY,

:: TINNEVELLY, LTD., ::

TIRUNELVELI, & MADRAS.

# பதிப்புரை

---

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நவில்தொறும் இன்பம் பயப்பன. ஆங்கில இலக்கிய நூல்களின் தலைமையாகப் போற்றப் பெறுவன இந்நாடகங்களே. சிறுவரும் படித்து இன்புறும் பொருட்டு சார்லஸ் லாம் என்னும் ஆங்கிலப் புலவர் ஒருவர் அவற்றைக் கதைவடிவில் எழுதியுள்ளார்.

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களில் இருபத்தொன்று மட்டும் கதைவடிவில் எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டு ஆறுபுத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. பரிசு வழங்குதற்கும் நூல்நிலையங்கட்கும் பயனாகுமாறு இரண்டிரண்டு புத்தகங்களை ஒன்றாய்ச் சேர்த்து அழகிய கட்டடஞ்செய்து வெளியிட்டுள்ளதில் இந்நூல் மூன்றாம் பாகமாகும்.

தமிழறிஞர்கள் இத்தகைய நூல்களை வாங்கி எங்கள் நூல் வெளியீட்டுத் தொண்டிற்குப் போதிய ஆதரவு தருவார்களாக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்

## ஷேக்ஸ்பியர் கதைகள்

### ஐந்தாம் புத்தகம்

ஜூலியஸ் ஸீஸர்

கோரியோ லானஸ்

அந்தோணியும் கிளியோபாத்ராவும்

### ஆரும் புத்தகம்

நன்கு முடிவுறின் நலமே அனைத்தும்

மாறுட்டத்தால் நேர்ந்த போராட்டம்

வெரோணு நகரின் இரு செல்வர்கள்

இரண்டாம் ரிச்சர்ட் மன்னன்

கழக வெளியீடு—௫௦௯

## சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

(ஐந்தாம் புத்தகம்)

விளக்கப் படங்களுடன்

திரு, K. அப்பாதுரைப் பிள்ளை, எம். ஏ., எல்.டி.
எழுதியது.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை

*First Edition: Jan. 1940*
*Second Edition: Aug. 1945*

[Copy-right]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI & MADRAS

*April 1947*

Printed at the Free Printers, Madras.
Q.H., M.S./95-B, 2,000 Copies. 4-47.

# முன்னுரை

ஷேக்ஸ்பியர் ஆங்கில மாகவி என்பதும் உலகறிந்த பெரும் புலவர் என்பதும் யாவரும் அறிவர். அவர்தம் நாடகங்கள் நவில்தொறும் நயம் பயப்பன.

அந் நாடகங்களுள் வெனிஸ் வணிகன் (The Merchant of Venice), விரும்பிய வண்ணமே (As you Like it) மாக்பெத் (Macbeth) என்னும் மூன்று கதைகள் முதற் புத்தகத்திலும்; புயற் காற்று (The Tempest), லியர் மன்னன் (King Lear), ஹாம்லெத் (Hamlet) என்னும் மூன்று கதைகள் இரண்டாம் புத்தகத்திலும் வெளி வந்திருக்கின்றன.

நடுவேனிற் கனவு (Midsummer Night's Dream), ஸிம்பலின் (Cymbeline), கார்காலக் கதை (The Winter's Tale), ஒதெல்லோ (Othello) ஆகிய நான்கு கதைகளும் மூன்றும் புத்தகத்திலும்; பன்னிரண்டாம் இரவு (Twelfth Night), சிறு பிழையால் நேர்ந்த பெருந்தொல்லை (Much Ado About Nothing), சரிக்குச் சரி (Measure for Measure), ரோமியோவும் ஜூலியட்டும் (Romeo and Juliet) ஆகிய நான்கு கதைகளும் நான்காம் புத்தகத்திலும் வெளி வந்திருக்கின்றன.

இவ் ஐந்தாம் புத்தகத்தில் ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar), கோரியோலானஸ் (Coriolonus), அந்தோணியும் கிளியோப்பாத்ராவும் (Antonio and Cleopatra) ஆகிய மூன்று கதைகளும் வெளிவருகின்றன.

எஞ்சிய கதைகளில் சிலவும் ஆறும் புத்தகமாக வெளியிடப்பெறும் என்பது அறிந்து மகிழ்

தற்குரியது. இவை இளைஞர்கள் மனத்தைக் கவரும் வகையில் எளிய இனிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. ஆதலின் இவற்றைப் படிக்கும் மாணவர் அறிவு வளர்ச்சியுடன் மொழித் தேர்ச்சியும் பெறுவர் என்பது திண்ணம். பல்கலைக்கழக வகுப்பில் ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படிக்கப்போகும் மாணவர்கள் கதைப் பொருளை எளிதிலே அறிந்துகொள்ள இவ் வெளியீடுகள் நன்கு உதவும்.

இத்தனை கதைகளும் இதுகாறும் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவரவில்லை என்பது அறியத்தக்கது. அக்குறையினை இப்போது கழகம் நீக்கி விட்டது. எனவே தமிழ் மக்கள் இவ் வெளியீடுகள் அனைத்தையும் வாங்கிப் படித்து இன்புறுவார்களாக!

**சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# பொருளடக்கம்

## 1. ஜூலியஸ் ஸீஸர்


| | | பக்கம் |
|---|---|---|
| க. | குடியரசும் முடியரசும் | 3 |
| உ. | கிளர்ச்சித் திட்டம் | 9 |
| ங. | ஸீஸர் வீழ்ச்சி | 14 |
| ச. | ஒட்டகத்துக்குக் கொடுத்த இடம் | 20 |
| ரு. | சொல்லாண்மையா ? வில்லாண்மையா ? | 26 |
| சா. | மறைந்து நின்றழிக்கும் பழி | 34 |


## 2. கோரியோலானஸ்


| | | |
|---|---|---|
| க. | வெற்றியும் செருக்கும் | 45 |
| உ. | வணங்கா முடிமன்னன் | 54 |
| ங. | வெஞ்சினமும் பழியார்வமும் | 64 |
| ச. | கும்பலைக் கெடுத்த கோவிந்தாக்கள் | 69 |
| ரு. | வீரத்தாயும் வீரமகனும் | 76 |
| சா. | முடிவு | 83 |


## 3. அந்தோணியும் கிளியோப்பாத்ராவும்


| | | |
|---|---|---|
| க. | வென்றி வீரனையும் வென்ற மெல்லியலாள் | 89 |
| உ. | மணமும் அரசியலுறவுகளும் | 94 |
| ங. | பிரிவும் பிரிந்தவர் கூடலும் | 100 |
| ச. | காதலுக்கு வீரம் பலியாதல் | 105 |
| ரு. | இறுதிப் போர் | 108 |
| சா. | முடிவு | 113 |

# 1. ஜூலியஸ் ஸீஸர்

## கதை உறுப்பினர்

### ஆடவர்

1. **ஜூலியஸ் ஸீஸர் :** ரோமின் ஒப்பற்ற வெற்றி வீரன், படைத்தலைவன் - பொது மக்கள் மனங்கவர்ந்த முடிசூடா மன்னன்-கிளர்ச்சிக்காரரால் கொலையுண்டவன். —**ஸீஸர் ஆவி.**
2. **அந்தோணி :** வீரன், ஆனால் இன்ப வாழ்வினன், கேளிக்கை விருப்பினன் - ஸீஸர் நண்பன் - நாத்திற மிக்க பேச்சாளி - கிளர்ச்சிக்காரரை எதிர்த்தவன்.
3. **காஸியஸ் :** ஸீஸரைக் கொல்ல முயன்ற கிளர்ச்சிக்காரருள் முதல்வன் - அரசியல் சூழ்ச்சி அறிந்தவன்.
4. **புரூட்டஸ் :** ஸீஸர் நண்பன் - உயர் குடியாளன் - தன்னலமற்ற உயர்நெறியாளன் - காஸியஸின் தூண்டுதலால் கிளர்ச்சிக்காரர் தலைவனானவன்-அரசியல் சூழ்ச்சியறியாதவன்.
5. **அக்டேவியஸ் ஸீஸர் :** ஜூலியஸ் ஸீஸர் மகன் - சூழ்ச்சித் திறத்தால் அந்தோணியையும் பிறரையும் இயக்கிக் கிளர்ச்சிக்காரரை ஒடுக்கியவன்.
6. **லெப்பிடஸ் :** அந்தோணிக்கும் அக்டேவியஸுக்கும் துணைதந்து கிளர்ச்சிக்காரரை எதிர்த்தவன்.

### பிற கிளர்ச்சிக்காரர்

7. காஸ்கா.
8. ஸின்னா.
9. திரெபோனியஸ்.
10. மெதல்லஸ் ஸிம்பர்.
11. தெஸிமஸ் புரூட்டஸ்.
12. ஸிஸரோ - ரோம அரசியல் மன்றத்துப் பெருஞ் சொல்லாளர்.

### பெண்டிர்

1. கல்பூர்ணியா : ஜூலியஸ் ஸீஸரின் மனைவி.
2. போர்ஷியா : புரூட்டஸின் மனைவி; கதோ என்ற உரோம அறிஞரின் மகள்.

# கதைச் சுருக்கம்

ரோமின் ஒப்பற்ற வெற்றிவீரனும் படைத்தலைவனுமான ஜூலியஸ் ஸீஸர் பொதுமக்கள் உள்ளங் கவர்ந்து முடிசூடா மன்னனாய் விளங்கினான். அவன் நண்பன் அந்தோணியோ நகர் விழாவின்போது மும்முறை முடியை அவனுக்குப் பொது மக்கள் சார்பாக அளிக்கவே, பெருமக்கள் பொறாமை கொண் டனர். அவனைக் கொலை செய்யச் சூழ்ச்சி செய்தனர்; அதில் தலைவன் காஸியஸ். நாட்டுப்பற்றும் விடுதலைப்பற்றும் மிக்க புரூட்டஸ் காஸியஸின் தூண்டுதலால் அதன் தலைமைப்பெயர் ஏற்றுக் காஸியஸின் அரசியல் சூழ்ச்சிகளுக்கு முட்டுக்கட்டை யானான்.

நகர் விழாவின்போது ஆண்டியொருவன் ஸீஸரிடம் " உன் பெருமையெல்லாம் மார்ச் நடுநாள் என்னுகிறது பார் என் றான். மார்ச் நடுநாள் அரசியல் மன்றக்கூட்டம், கிளர்ச்சிக் காரர் அவனைக் கொல்லத் திட்டப்படுத்திய நாள் அது ஸீஸர் தன் மனைவி கல்பூர்ணியா, கனவையும் பொருட்படுத்தாது சபை யில் தன்னை எச்சரிக்கவந்த நண்பன் அர்த்தெமிதோரஸையும் புறக்கணித்துக் கொலையுண்டான். அதன்பின் ஸீஸர் பிணத்தின் முன்னிலையில் பேச அந்தோணியோ இணக்கங் கேட்டான். காஸியஸிற் கெதிராக அதற்குப் புரூட்டஸ் இடங்கொடுக்க, அந்தோணியோ நாத்திறத்தால் மக்களைக் கிளப்பிக் கிளர்ச்சிக் காரரை வெளியே துரத்தினான். இத் துன்பச் செய்தி கேட்டு புரூட்டஸ் மனைவி போர்ஷியா இறந்தாள்.

புரூட்டஸின் நேர்மையால் பணவருவாய் வகையில் அவ னுக்கும் புரூட்டஸுக்கும் பூசல் நிகழவும், அந்தோணியுடன் சேர்ந்து லெப்பிடஸ் என்பவனும் ஸீஸர்மகன் அக்டேவியஸ் ஸீஸரும் சேர்ந்து அவர்களை எதிர்த்தனர். இதனாலும், போர்ஷி யா பிரிந்த செய்தி கேட்டும், புரூட்டஸ் உயர்வைக் கண்டும் காஸியஸ் தன் வாழ்வை அவனிடமே ஒப்படைத்துப் பிலிப்பிப் போரில் மாண்டான். முன்னிரவில் ஸீஸர் ஆவி கண்டு முடி வறிந்த புரூட்டஸும் தன் வாளில் வீழ்ந்திறந்தான். அக்டேவி யஸ்கூட அவன் உயர்வறிந்து பெருமைப்படுத்தினான்.

சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

## ஐந்தாம் புத்தகம்

## 1. ஜூலியஸ் ஸீஸர்[1]

### க. குடியரசும் முடியரசும்

ரோம்[2] இத்தாலி[3]யின் தலைநகரமாகும். இத்தாலி பண்டைக்காலத்தில் ஒரு குடியரசு நாடாக இருந்தது. ஆனால் பெயரளவில் அதன் ஆட்சி பொது மக்கள் சார்பா யிருந்தபோதிலும், உண்மையில் பத்ரீசியர்[4] என்று வழங்கப்பட்ட பெருமக்களே அங்கே எல்லாவகையான உரிமைகளையும் கையாண்டு வந்தனர். பொதுமக்கள்[5] வரவர விழிப்படைந்து தொகையிலும் ஆற்றலிலும் மிகுந்து வந்தபோதெல்லாம் பெருமக்கள் பொதுமக்கள் இவ் விருதிறத்தினரிடையே அடிக்கடி பூசலும் போட்டியும் நிகழ்ந்துவந்தன.

ரோம்நகர் நாளடைவில் இத்தாலியையும் அந்நாளைய நாகரிக உலகின் பெரும் பகுதியையும்

---

1. Julius Caesar. 2. Rome. 3. Italy 4. Patrician. 5. Plebians.

வென்றடக்கி உலகப் பேரரசாக விளங்கிற்று. அப் பேரரசை நிலைநாட்ட உதவிய பெரிய வீரர்களுள் ஜூலியஸ் ஸீஸரே முதன்மையானவன். அவன் **கல்லியா**[1] **பிரித்தானியா**[2] முதலிய பல நாடுகளை வென்றடக்கி அவற்றின் குறுநில மன்னர்களைச் சிறை பிடித்ததோடு அவர்களிடமிருந்து கணக்கற்ற பொருளைத் திறையாகவும் பெற்றான்.

அவன், தன் வெற்றிகளைப் பகட்டாகக் கொண்டாடியும், பொதுமக்களுக்கும் அவர்கள் தலைவர்களுக்கும் தான் திறையாகப் பெற்ற பொருளை வாரி இறைத்தும் அவர்கள் மனத்தைக் கவர்ந்தான். இவ்வகையில் அவனுக்கு உடனிருந்து வலக்கை என உதவியவன் **மார்க்கஸ் அந்தோணி**[3] என்பவன். இவ்வந்தோணியும் நண்பர்கள் இன்னும் சிலரும் பொதுமக்களின் துணைகொண்டு ஸீஸரைப் பேரரசராக்கி முடிசூட்ட வேண்டுமென்ற முயற்சியில் முனைந்தனர்.

இங்ஙனம் பொதுமக்கள் துணை ஸீஸருக்கு மிகுந்து வரவர, அவன், பெருமக்கள்பால் அசட்டையாயிருக்கத் தொடங்கினான். முன் இருந்த தலைவர்களைப்போல் அவன் அவர்களுக்குத் தனி உயர்வும் தனி உரிமைகளும் கொடுப்பதில்லை. இதைக்கண்டு அப் பெருமக்களுட் பலர் அவனை வெறுத்தனர். சிலர் அவனுடைய வெற்றிகளையும் புகழையும் கண்டு அவன்மீது பொறாமை கொண்டனர். அத்தகைய பகைவருள் **காஸியஸ்**[4] என்பவன்

1. Gallia i.e., France. 2. Brittannia i.e., England. 3. Marcus Antonius. 4. Cassius.

ஒருவன். அவன் மக்களின் நடையையும் உள்ளப் போக்கையும் அறிவதிலும் அவர்களை இயக்கி நடத்துவதிலும் அருந்திறனுடையவன். ஆகவே ஸீஸரை யார் யார் வெறுப்பவர்கள் என்று கண்டு, அவர்களை அவன் ஒரு கட்சியாகத் திரட்ட முயற்சி செய்துவந்தான். ஆண்டுதோறும் அந் நகரில் நிகழ்ந்து வந்த நகரக் கால்கோள்விழா இவ்வகையில் அவனுக்கு மிகவும் உதவியாயிருந்தது.

அவ்வாண்டு விழாவின்போது ஸீஸர் அந்தோணியுடன் கவலையற்று அவ்விழாக் கூட்டத்தைச் சுற்றிப் பார்வையிட்டு வந்தான். அந்தோணி ஒருவனே அன்று அவனுடன் நெருங்கி உறவாட முடிந்தது. பிறரையெல்லாம் '**காஸ்கா**'[1] என்ற ஒருவன் அவர்பக்கம் வராதபடி அடித்துத் துரத்தினன். அதுகண்டு பலருக்கும் முகம் சிவந்ததைக் காஸியஸ் கவனித்தான்.

அவன் பார்வை சிறப்பாக **மார்க்கஸ் புரூட்டஸ்**[2] என்பவன்மீதே சென்றது.

மார்க்கஸ் புரூட்டஸ் ரோமின் மிகப் பழைய பெருங்குடி ஒன்றைச் சேர்ந்தவன். ரோமில் முடியாட்சியை வீழ்த்திக் குடியாட்சியை நிறுவிய பெருந் தலைவனாகிய ஜூனியஸ் ஊலியஸ் புரூட்டஸின் வழி வந்தவன். ஸீஸரும் அவனும் தமக்குள் அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர். அப்படியிருந்தும் ஸீஸருடைய அரசியலின் போக்கில் அவனுக்கு விருப்பமில்லை. எழுநூறாண்டுகளாக நிலை

1. Casca. 2. Marcus Brutus.

பெற்றிருந்த குடியாட்சியை அழித்து ஸீஸர் முடியரசை நிறுவ முயல்வது அவனுக்குத் தாங்கமுடியாத துயரைத் தந்தது. எனவே நட்பு ஒருபுறமும் கொள்கை ஒருபுறமுமாக அவன் மனத்தகத்தே போராடின.

விழாநாளன்று அவன் ஸீஸரது தற்பெருமையையும், ஸீஸருடைய நண்பர்களது சிறுமையையுங் கண்டு, தனது களங்கமற்ற முகத்தில் வெறுப்பும் ஏளனமுந் தோன்றப் புன்முறுவல்கொண்டு நின்றான்.

இதனைக் கூர்ந்து கண்டுகொண்ட காஸியஸ் அவன் பக்கம் வந்து நின்று பேச்சுக்கொடுத்து, ஸீஸரைப்பற்றியும், நகராட்சி முறையைப்பற்றியும் அவன் கொண்டிருந்த கருத்துக்களை நயமாக உசாவி அறிந்துகொண்டான். அதன்பின் அவன், 'என் அரிய நண்ப, நானும் அன்பர்கள் பலரும் இதுபற்றியே உன்னுடன் கலந்தாராயவேண்டுமென்று நெடுநாளாகக் காத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் நீயோ சாம்பவான்மாதிரி உன் உயர்வையோ, பிறர் உன்னைப்பற்றி எண்ணிக்கொண்டிருக்கும் எண்ணங்களையோ அறியமாட்டாதவனாய் இருக்கிறாய்! ரோம்நகர மக்கள் ஸீஸரின் கொடுங்கோன்மையைத் தாங்கமுடியாது வருந்துகிறார்கள். குடியாட்சிக்கொரு குலதெய்வமாகிய புரூட்டஸின் குடும்பத்திற் பிறந்த நீதான் இதில் அவர்களுக்கு வழிகாட்டியாய் நிற்கவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்,' என்றான்.

**புரூட்டஸ்:** நான் எங்ஙனம் வழிகாட்டுவது? ஸீஸரோ என் அன்பார்ந்த நண்பனுவன். அவன் ஒப்பற்ற வீரமும் பெருந்தன்மையும் வாய்ந்தவன். ரோம் நகருக்கே—ஏன், உலகிற்கே பேரொளி போன்றவன். அப் பேரொளியே புகையடைந்து விட்டால் அதனை எதைக்கொண்டு விளக்குவது?

**காஸியஸ்:** என்ன புரூட்டஸ்! நீயே இப்படிக் கூறினுல் பின் அறியாதவர்கள் என்ன சொல்ல மாட்டார்கள்? அவன் நண்பனுனுல் என்ன, வீரன் ஆனுல் என்ன? அதற்காக நாம் நம் ஆண்மையை யும் நாட்டின் நலனையும் அவனுக்குப் பலி கொடுக்கவேண்டுமா?

**புரூட்டஸ்:** உண்மை, நீ சொல்வது உண்மை. அவனிடம் நான் மிகுந்த பற்றுடையவனே யாயி னும் தாய்நாட்டினிடம் அதனினும் மிகுந்த பற் றுடையேன். அவனிடம் எவ்வளவு அன்புடையே னுயினும் அதற்காகத் தன் மதிப்பை விட்டுக் கொடுக்கமாட்டேன். ஆனுல், இவ்வகையில் நாம் என்னதான் செய்யக்கூடும்?

காஸியஸ் விடை பகருமுன், விழாக் கூட்டத் தின் பக்கமிருந்து 'கொல் கொலோ கொல்' என்ற பேராரவாரம் கேட்டது. அதுகேட்டுப் புரூட்டஸ் 'நான் கேள்விப்பட்டபடி ஸீஸருக்கு அவ் வந் தோணியின் முயற்சியால் முடி அளிக்கப்பட்ட தென்றே அஞ்சுகின்றேன்,' என்றுன்.

**காஸியஸ்:** இப்படி நாம் செயலற்று அஞ்சிக் கொண்டிருப்பதனுலேதான் ஸீஸர் நமது பொது

வாழ்வை அவமதித்து மிதிக்கமுடிகிறது. அதனல் இன்று அவர் உலகளந்த பெருமாளாக மண்ணும் விண்ணும் தொட்டு நிற்கிறூர். நாமும் அவர் காலடியில் நின்றுகொண்டு அவர் முழந்தாள்களை அண்ணுந்து பார்க்கும் நிலையில் இருக்கிறோம். இது யார் குற்றம்? அவரவர் விதிக்கு அவரவர் மதிதான் காரணமேயன்றிப் பிறர் காரணமாவரோ? அவனும் நாமும் பிறந்தபோது ஒன்று போல் மனிதராகத்தானே பிறந்தோம்? பின் அவனை மனிதனுக நடக்கச் சொன்னவர்களும் இல்லை, நம்மைப் புழுக்களாய் அவன் காலடியிற் கிடந்து நெளியச் சொன்னவர்களும் இல்லை. இதோ பார்! நீதான் இருக்கிறுய்! நீ புரூட்டஸ், அவன் ஸீஸர்! ப்ரூட்டஸுக்கும் ஸீஸருக்கும் என்ன வேற்றுமை? ஆனல் நீ புரூட்டஸாக நடந்துகொண்டால்தானே!

புரூட்டஸ் மனத்தில் இச் சொற்கள் பசுமரத்தில் கூரம்புகள் பாய்வதுபோற் பாய்ந்து பதிந்தன. அவன் ஒன்றிரண்டு விஞடிகள் செயலற்று நின்று, பின் 'சரி காஸியஸ், நீ கூறியதை மறவேன். அதைக் குறித்து மீண்டும் கலந்து ஆராய்வோம். இதோ ஸீஸரும் அவர் கூட்டத்தாரும் வருகிறூர்கள்,' என்று கூறினன்.

## உ. கிளர்ச்சித் திட்டம்

ஸீஸர் திரும்பி வந்தபோது காஸ்கா முன் போல் கூட்டத்தை அடித்துத் துரத்திக்கொண்டு

முன்னால் வந்தான். ஸீஸர் அப்போது அந்தோணியின் தோள்கள்மேல்—ஓட்டப் பந்தயத்திற்கென ஆடையின்றி அரைக் கச்சையுடன் வரும் இளைஞனாகிய அந்தோணியின் தோள்கள்மேல் — கை போட்டுப் பேசிக்கொண்டே வந்தான்.

அச்சமயம் அவனது உடை பேரரசர்க்குரிய கருஞ்சிவப்பு உடை; அவன் கண்பார்வை உலகெலாம் தனதெனப் பார்க்கும் பார்வை.

அவன் வாழ்க்கையின் கோள் உச்ச நிலையை அடைந்த நேரம் அது. உலகத்தை ஆளும் ரோம் நகர் அவன் காலடியிற் கிடந்து அவன் ஆணைக்குக் காத்து நின்றது. அந்தோணி அவனுக்குப் பொது மக்கள் சார்பாக உலகின் மணிமுடியை அளித்தது சற்றுமுன்தான். அதனை அவன் மேற்போக்காக மறுத்தும் அது பேராரவாரத்தினிடையே மீண்டும் மீண்டும் வற்புறுத்தி அவனுக்கு அளிக்கப்பட்டது. அவன் இனி அதை அடைவது உறுதி. அடைவது என்று என்பது தெளிவாகவேண்டியது ஒன்றுதான் குறை. அதுவும் பெரும்பாலும் அவ்வாண்டின் மார்ச்சுத் திங்கள் நடுநாள் (மார்ச்சு ஐந்தாம் நாள்) கூடவிருக்கும் அரசியல் மன்றி[1]க் கூட்டத்தில் வைத்து நிறைவேறக்கூடுமென்று அவன் நண்பர்கள் கூறிக்கொண்டார்கள்.

ஆனால் ஊழின் போக்கை யாரே மதிப்பிட்டறியக்கூடும்? அவன் வாழ்க்கையின் வெள்ளி உச்ச நிலையை அடைந்த அதே நேரத்திலேதான்

1. Senate.

அதன் தூமகேதுவும் வானில் எழுந்தது என்னல் வேண்டும்!

பெருமக்களும் மன்னரும் அவனை அணுக அஞ்சிய அந்த நேரத்தில், ஆண்டி ஒருவன் எப்படியோ எல்லோரையுங் கடந்துவந்து அவன்முன் நின்ருன். முதற்பெரும் பூதங்கள்கூடக் கேட்க அஞ்சிய அவனது பெயரை அவ்வாண்டி கூசாது உரக்கக் கூறுகிருன்! 'ஸீஸர், ஏ ஜூலியஸ் ஸீஸர்!' என்ன அடம்!!

அவன் உடல் ஒடுங்கியிருப்பினும் இருப்புலக்கைபோல் உறுதியுடையதாய் இருந்தது. அவன் உடுத்தியிருந்த உடை தாறுமாருகக் கிழிந்த அழுக்குக் கந்தைகளேயாயினும் அவை காற்றிலசைந்து அவன் உரமிக்க உடலை வெளிப்படுத்தும்போது, அவை அவன் உடல் வலியை எடுத்துக்காட்டும் வீரக் கச்சையோ என்னும்படி விளங்கி யிருந்தன.

அவன் அச்சமற்றுத் துணிகரமான குரலில், 'ஸீஸர், ஏ ஜூலியஸ், ஸீஸர்! உன் பெருமையெல்லாம் மார்ச்சு நடுநாள்[1] என்னுகிறது பார்! என்று அதட்டிக் கூறி மறைந்தான். அவன் போய்ச் சிறிதுநேரம்வரையில் ஒருவருக்கும் தன் உணர்வு வரவில்லை. ஸீஸரது பெருமிதமும் அவனைச் சுற்றி வந்தவரது களிப்பும் மீளுதற்கின்றி மறைந்தோடின. அவர்க ளனைவரும் சூனியக்காரி

1. Ides of March.

யின்பின் செல்லும் பேயுருக்கள்போல ஸீஸரைப் பின்பற்றிச் சென்றனர்.

ஸீஸருடன் வந்த அவன் மனைவி கல்பூர்ணியாவோ ஓந்தியைக் கண்ட மயிலென நடுங்கிக் கணவன் தோள்களைப்பற்றி அதன்மேற் சாய்ந்தாள். அவளது இதயத் துடிப்பு அவன் தோள்களிலும் துடித்தது. அவனும் உள்ளூரச் சற்றே துணுக்குறினும், தன் மனைவிக்கும் பிறர்க்கும் ஊக்கமளிக்கும்வண்ணம் வலியப் புன்முறுவலை வருவித்துக்கொண்டு, 'அவன் ஒரு பித்தன்போலும்! அவன் சொற்களை ஒரு பொருட்டாக எண்ணுவார்களா,' என்றான்.

காஸியஸ் அக்கூட்டம் தன்னைக் கடந்து செல்லும் அந்நேரத்திலேயே, அதனிடையே முன்னைய



புருட்டஸும் காஸியஸும் காஸ்காவிடம் கலத்தல்

எழுச்சியின்றி ஒதுங்கி நடந்துவரும் காஸ்காவைத் தன்பக்கமாகச் சட்டையைப் பிடித்திழுத்து நிறுத்திக்கொண்டான். அவன் மூலமாகக் காஸியஸ் அன்று கூட்டத்தில் நடந்தவையனைத்தையும்

அறிந்துகொண்டதன்றி, அவன் ஒரு நல்ல சமய சஞ்சீவி என்பதை உணர்ந்து அவனிடம் பக்குவமாகத் தன் எண்ணங்களைத் தெரிவித்துத் தனது கிளர்ச்சித் திட்டத்துக்கு அவனை உடந்தையாக்கிக் கொண்டான்.

விழாக் கழிந்த சில நாட்களுக்குள்ளாக அவ்விருவர் முயற்சியாலும் **டிரெபோனியஸ்**[1], **டெஸிமஸ் புரூட்டஸ்,**[2] **ஸின்னு,**[3] **மெடெல்லஸ் ஸிம்பர்**[4] முதலிய இளைஞர் பலர் அவர்களுடன் சேர்ந்தனர். இவர்கள் அனைவரும் காஸியஸ் குறிப்பறிந்து துணிகரமாக எச்செயலையும் செய்ய இறங்குபவர்களே. ஆயினும் பொதுமக்கள் மதிப்பையும் அன்பையும் பெறும் வகையில் காஸியஸாயினும் சரி, அவனைச் சேர்ந்தவர்களாயினும் சரி, மிகவும் குறைபாடுடையவர்களாகவே யிருந்தனர். ஆகவே எப்பாடு பட்டாயினும் புரூட்டஸின் தலைமைக்காக உழைக்கவேண்டுமென அனைவரும் முடிவு கட்டினர்.

ஆனல் தன்னலமும் வகுப்பு வேற்றுமை உணர்ச்சியும் அழுக்காறும் நிறைந்த அக் கிளர்ச்சிக்காரரது திட்டத்தில் ஒழுக்க நெறியாளனுகிய புரூட்டஸைச் சேர்ப்பது எப்படி? நாட்டுப்பற்று, விடுதலைப்பற்று ஆகிய இரு பேருணர்ச்சிகளின் உதவியாலேயே அவனை இயக்க முடியும் என்று அவர்கள் அறிந்துகொண்டனர். அதன்படியே அவர்கள் அவனது தலைமையை நாடிப் பொதுமக்கள் எழுதியதுபோல் பல கையெழுத்துக்களில் பல

1. Trebonius. 2. Decimus Brutus. 3. Cinna. 4. Metellus Cimber.

மொட்டைக் கடிதங்கள் வரைந்து அவன் வீட்டிலும் தோட்டத்திலும் அவன் நடமாடும் இடங்களிலுமாக அவன் கண்களில் படும்வண்ணம் போட்டுவைத்தனர். நேரிலும் அவர்கள் தொடர்பற்றவர்கள்போலத் தனித்தனி வந்து அவன் மனத்தைக் கரைத்தனர். இறுதியில் புரூட்டஸ் அவர்கள் கட்சிக்குத் தலைவனாக நின்றுழைக்க ஒப்புக்கொண்டான்.

அவர்களது முதல் நடைமுறைக் கூட்டம், புரூட்டஸின் வீட்டுக்குப் பின்புறமுள்ள தோட்டத்தில் இரவில் கடையாமத்தில் நடைபெற்றது. அச்சமயம் உலகியல் அறிவு நிரம்பப்பெற்ற காஸியஸ் தனது வெற்றிக்கான பல கோரிக்கைகள் கொண்டுவந்தான். அவற்றுள், கட்சித் திட்டப்படி நடப்பதாக ஆணையிடல், ஸீஸரோடு அவனது கட்சிக்கு ஆணிவேரான அந்தோணியையும் அகற்றவேண்டுவது, அன்றைய ரோம் உலகின் தனிப்பெருஞ் சொற்பொழிவாளரான ஸிஸரோவையும் கிளர்ச்சிக்காரர் குழுவில் சேர்த்துக் கொள்ளுதல் ஆகிய இவை தலைமையானவை.

உலகியல் அறிவைவிட நேர்மையையும் கலப்பற்ற தூய உண்மையையுமே உயர்வாக மதித்த புரூட்டஸ், அவற்றுள் ஒவ்வொரு கோரிக்கையையும் தக்கதன்றென மறுத்துவிட்டான். ஆணையிடல் ரோமனது வாய்மொழியின் மதிப்பை அவமதிப்பதென்றும் அந்தோணி கேளிக்கைகளைமட்டுமே பெரிதாக நாடித்திரியும் பட்டுப்புழுவேயென்

றும், ஸீஸருக்குக் கைக்கருவி அல்லது வாலே யாவான் என்றும் ஸீஸரோ வெறும் பகட்டுக் காரன் என்றும் அவன் கொண்டான். இம்மூன்று இடங்களிலும் காஸியஸின்பக்கமே முன்னறிவும் தொலை நோக்கமும் இருந்தன என்பதில் ஐய மில்லை. புரூட்டஸ் அரசியல்வாழ்வு சூழ்ச்சிவாழ்வு என்பதனை அறியாது, அதனிலும் ஒழுக்கமுறை மையே வெற்றிபெறும் என்று நம்பினான்.

## ௫. ஸீஸர் வீழ்ச்சி

கிளர்ச்சிக்காரரது திட்டம் எவ்வளவு மறை வாய் இருந்தபோதிலும், அதனால் ஏற்பட்ட பர பரப்பு அந் நகரெங்குந் தாக்கியது. எங்கும் மக்கள் மனத்திற் குழப்பமும் கலவரமும் நிறைந்திருந்தன. பலர் தாம் கொண்ட நிலை உறுதிப்படுத்தும் தீக் குறிகளையும் தீக்கனாக்களையும் கண்டு மனம் பதைத் தனர். அன்று நகர மண்டபத்தின்மீது பட்டப் பகலில் ஆந்தைகூட வந்திருந்து கூவிற்றாம். இன்னோரிடத்தில் ஓர் அடிமையின் உடலைச் சுற்றி அவனையும் அறியாமல் தீ எரிந்ததாம். போதாக் குறைக்கு அன்றிரவு புயலும் மழையும் மின்னலும் இடியும் அதுவரை எவரும் கண்டுங் கேட்டும் அறி யாதவகையில் கலந்துகொண்டு கலங்காத நெஞ்சி னரையுங் கலங்கவைத்தன. அவற்றிடையே நாய் போன்றும் நரிபோன்றும் கூகைகள்போன்றும் காளிகளும் கூளிகளும் குறளிகளும் மயிர்க்கூச் செறியும்வண்ணம் ஊளையிட்டுக் கத்தினவாம். அறிவிலும் ஆராய்ச்சியிலும் சிறந்த அறிஞர்கள்

கூட இவற்றைப் பார்த்துவிட்டு, 'இவை ஏதோ பெரிய உலக மாறுதல்களுக்கு அறிகுறியாகத் தான் இருக்கவேண்டும்,' என்று கருதினர்கள்.

மிக நுண்ணிய இயக்கங்களும் கற்புடைய மாதரின் மனத்தில் அதிர்ச்சியை உண்டாக்கும் என்பர். அதன்படி புரூட்டஸின் மனைவியாகிய போர்ஷியாவும் ஸீஸரின் மனைவியாகிய கல்பூர்ணியாவும் அன்றிரவு தீக் கனுக்களால் துயிலின்றி வருந்தினர். போர்ஷியா புரூட்டஸைப்போன்றே ஒப்பற்ற நாட்டுப் பணியாளராகிய கதோ[1]வின் புதல்வியாவள். ஆகவே அவள் தான் பெண்ணுயினும், வீரர் புதல்வி என்ற முறையிலும் வீரர் துணைவி என்ற முறையிலும் புரூட்டஸின் மனத்தை அரிக்கும் உண்மைகளை அறிந்து அவன் கவலைகளில் பங்குகொள்ள வேண்டுமென்று வாதாடினள். புரூட்டஸ் அவளுக்கு இணங்கி, அன்று நிறைவேற்ற இருக்கும் தன் திட்டத்தை அவளுக்குக் கூறினன்.

ஆனல் கல்பூர்ணியாவுக்கு அதுபோலத் தன் கணவனைத் தன் மனப்படி திருப்ப முடியவில்லை. அவள் தன் கணவன் உருவத்தின்மீது பல ரோமப் பெருமக்கள் உடைவாளாற் குத்தி அவன் குருதியிற் கைதோய்த்தனர் எனக் கனுக்கண்டு அலறி எழுந்து—அரசியல் மன்றத்திற்குப் போகப் புறப்பட்டு நிற்கும்—அவனை அன்று எங்கும் வெளியே போகவேண்டாமென்று தடுத்தாள். விதி வழியே செல்லும் அவன் மனம், அவள் வேண்டுகோளை

1, Cato.

ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் அவளுக்கு அமைதி கொடுக்கும்வண்ணம், நகர்க் கோவிலுக்கு ஆடு ஒன்று பலியிட்டு நற்குறி யறிந்துவரும்படி ஓர் ஆளை அனுப்பினான். இதுவும் அவனுக்கு நற்குறி தரவில்லை. பலியிட்ட ஆட்டில் இதயம் காணப்படவில்லை என்று கூறப்பட்டது. தனது காரியத்திற்கேற்ப அவன் அதற்குப் பொருள் கொண்டு, 'வானவர் இன்று நான் இதயமற்ற கோழையாய்விட்டேன் எனக் கேலி செய்கின்றனர்போலும்,' என்றான்.

சற்றுநேரத்திற்குள் கிளர்ச்சிக்காரருள் ஒருவனாகிய தெஸிமஸ் புரூட்டஸ் அங்கே வந்து, அவன் அன்று வெளியே போவதைக் கல்பூர்ணியா தடுப்பதையும் அவன் தயங்குவதையும் கண்டதே, அவன் மனம் சுறுக்கென்னும்படி, 'பாராளும் ஸீஸர் ஒரு பாவை சொல்லுக்கிணங்கி அரசியல் மன்றத்தில் தன் கடனாற்ற மறுத்தால் உலகம் சிரிக்கும்,' என்றான். அதுகேட்டு ஸீஸர் கல்பூர்ணியாபக்கம் பாராமலே அவள் பிடியை உதறிக் கொண்டு புறப்பட்டான்.

அன்று பின்னும் இரண்டுதடவை அவனது பழைய நல்வினை அவனுக்கு எச்சரிக்கையாக வந்தது. ஆனால் அவனது தீவினையே அதனினும் மேம்பட்டு நின்று அவனுக்குத் துணிவைத் தந்தது என்னல் வேண்டும். முதலாவது, வழியில், விழாவன்று வந்த ஆண்டி மீண்டும் வந்து நின்றான். ஸீஸர் அவனைப் பார்த்து, 'உன் நடுநாள் வந்து

விட்டதே, உன் முன்னறிவு இப்போது என்னு வது?' என்று கேட்டான். அவன் அமைதியுடன், 'ஆம், நடுநாள் வந்துவிட்டதுதான்,? ஆனால் அது போய்விடவில்லையே,' என்றான்.

ஸீஸரின் நண்பர் அவனை முடிமன்னராக்கக் குறித்து வைத்திருந்த கூட்டமே அவன் எதிரிக ளால் அவனைக் கொலைசெய்து ரோமக் குடியர சைக் காக்கவுங் குறித்துவைக்கப்பட்டிருந்தது. இதனை எப்படியோ அறிந்தனன் ஸீஸர் நண்பர் களுள் ஒருவனான அர்த்தெமிதோரஸ் என்ற வழக் கறிஞன். ஸீஸருக்கு அதைச் சொல்ல நேரமும் இடமும் வாய்க்காமல், இக்கூட்டத்திலேயே அவ னிடம் அதனைக் கடித வாயிலாகத் தெரிவித்துவிட வேண்டுமென்று கருதிக்கொண்டு வந்திருந்தான்.

ஸீஸரை அண்டிக் குறையிரப்போர் ஒவ் வொருவராக வந்துகொண்டிருந்தனர். அவருள் கிளர்ச்சிக்காரருள் ஒருவனான மெதெல்லஸ் ஸிம்ப ரும் இருப்பதை அவன் கண்ணுற்றான். இவன் நாடுவிட்டுத் துரத்தப்பட்ட தன் உடன்பிறந்தானை மீண்டும் அழைத்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டப்போனான். அப்படி வேண்டும் சமயத் தையே கிளர்ச்சிக்காரர் தம் கருத்தை நிறைவேற் றும் நேரமாக முன்னேற்பாடு செய்திருந்தது, அர்த்தெமிதோரஸுக்குத் தெரியும். ஆகவே, மெதெல்லஸ்ஸிம்பருக்கு முந்தவேண்டும் என்ற பர பரப்பில் அர்த்தெமிதோரஸ் முன் கூட்டியே ஸீஸரை நோக்கி, 'ஆண்டகையீர், என் கடிதம் தம்மையே குறிப்பது; மிகவும் விரைவில் அறிய

வேண்டுவது; அதனை முந்திப் பெற்றருள்க," என்ருன்.

ஊழ்வினை முந்துறுத்துதலின் ஸீஸர் இதனையும் தன் பெருந்தன்மையைக் காட்டுமிடமெனக் கருதி, 'எம்மைக் குறிப்பதை யாம் இறுதியிற்



ஸீஸர் ஸெனட் செல்லல்

பார்ப்போம்,' என்று கூறி அவனைக் கடைசியிற் போகும்படி கூறிவிட்டான். அவன் விதிக்கேற்ப அன்று அவனது நன்மதியே அவனுக்குத் தீமதியா யமைந்தது.

இதற்குள் அந்தோணி, ஸீஸருடைய இணைபிரியா நண்பனுதலால், திரெபோனியஸ் முன்கருத்துடனே அவனைத் தக்க சாக்குக் கூறி அவ்விடம் விட்டு அகற்றிக்கொண்டு போய்விட்டான்.

கிளர்ச்சிக்கார ரனைவரும் முன்னமே வந்து ஸீஸரைச் சுற்றி நாற்புறமும் கூடியிருந்தனர். இப்போது அவர்கள் ஸீஸரை வளைத்து மெல்ல மெல்ல நெருங்கினர்.

மெதெல்லஸ் ஸிம்பர் தன் குறையைக் கூறத் தொடங்கியதே அவன் வழக்கின்னதெென அறிந்த ஸீஸர் அவனை நோக்கி, 'வேண்டா, வேண்டா, நீ கேட்க வேண்டுவதில்லை. உன் வேண்டுகோள் செல்லாது,' என்றான்.

'கெஞ்சுதலாலும் பல்லிளித்தலாலும் ஸீஸர் போன்றவர்களை அசைத்துவிட முடியாது. பிற விண்மீன்கள் தன்னைச் சுற்றினும் தான் சுழலாது நிற்கும் வட(துருவ) மீனை ஒத்த உறுதி யுடைய வன் அவன்,' என்ற இறுமாப்பு மொழிகள் ஸீஸர் நாவினின்று அப்போது எழுந்தன.

அவ்வேண்டுகோளுக்குத் தாமும் வந்து துணை தருபவர்போலக் காஸியஸும், புரூட்டஸும் சற்று நெருங்கி முன்வந்தனர். அப்போதும் எவ் வகை ஐயமும் இன்றி அவன் 'புரூட்டஸ்கூட இச் சிறு செய்திக்குத் துணையா? ஆயினும் என்ன? நடுநெறி பிறழாத ஸீஸர் தீமையைச் செய்வது மில்லை; செய்தபின், பின்வாங்குவதும் இல்லை. அவன் செய்தது செய்ததுதான். ஆளுக்காக அது மாறுவதில்லை. உயர்குணமுடைய புரூட்டஸ் சொல்கூட அதன்முன் வந்து பயனற்றுப் போவதுபற்றி வருந்துகின்றேன்,' என்றான்.

அதன்பின் ஸின்னவும் தெஸிமஸ் புரூட்ட ஸும் வந்து பணிந்தனர். ஸீஸர் சற்றுப் பொறுமை யிழந்து சினங்கொண்ட பார்வை யுடன், 'மேருவை அசைத்தாலும் ஸீஸரை அசைக்கமுடியாது; அப்பாற் செல்க. மார்க்கஸ் புரூட்டஸ் சொல்லுக்குக்கூட இங்கு விலையில்லை

என்பது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா?'' என்றான்.

இதுவே தக்க சமயம் எனக் கண்டு பின் நின்ற காஸ்கா 'ஆயின் விலையுடையது இதுவே' என்று கூறிக்கொண்டு, தன் உடைவாளால் அவன் முதுகிற் குத்தினான். அவனையே முதற் குறியாகக் கொண்டு காத்திருந்த கிளர்ச்சிக்காரர் அனைவரும் ஆளுக்கு ஒரு பக்கமாக அவன்மீது பாய்ந்து குத்தினர்.

காஸ்கா குத்தினபோது ஸீஸர் திடுக்கிட்டுப் பின்னால் திரும்புமுன் மற்றக் குத்துக்கள் விழவே, அவன் உடல் பதைபதைத் தெழுந்தது.

ஆனால் அதற்குள் மார்க்கஸ் புரூட்டஸ் அமைதியுடன் அவன்முன் வந்துநின்று, உடைவாளை ஓங்கிக்கொண்டு, 'ரோமின் பகைவன் வீழ்க; விடுதலையின் பகைவன் வீழ்க,' என்ற மொழிகளுடன் அவன் நெஞ்சில் குத்தினான்.

ஸீஸர் அவனைக் கண்டதுமே திகைத்து, 'என்ன, நீ கூடவா, புரூட்டஸ்' என்றான்.

அவன் நெஞ்சிற் குத்திய குத்தினால் அவன் இதயம் வெடித்துக் குருதி புரூட்டஸ் மீதே பீறிட்டுப் பாய்ந்தது. சில நொடிக்குள் அவன் கீழே சாய்ந்து உயிர்நீத்தான்.

### ௪. ஒட்டகத்துக்குக் கொடுத்த இடம்

இதுவரை கிளர்ச்சிக்காரர் திட்டத்திற்குக் கலப்பற்ற வெற்றியே கிடைத்துவந்தது. ஆனால்

ஸீஸர் இறந்த பின்புதான், ரோம் நகரத்திற்கு அவனது ஆட்சிமுறை எவ்வளவு இன்றியமையா ஏற்புடையது என்பது விளங்கலாயிற்று. தமது திட்டம் நிறைவேறியதும் அவ்வரசியல் மன்றத் தார்க்குத் தன் கட்சியின் கொள்கைகளை விளக்கி அவர்கள் உதவியால் குடியரசை நடத்தவேண்டும் என்பது புரூட்டஸின் ஏற்பாடு. ஆனால் ஸீஸர் கொலையுண்டது கண்டு திடுக்கிட்ட அரசியல் மன்ற உறுப்பினர், அவனது குருதியில் தோய்ந்த உடை வாள்கள் பின்னுஞ் சுழல்வது கண்டு இன்னும் யார் யார் உயிர்க்கு இடையூறு வருமோ என்று அஞ்சி மூலைக்கொருவராக ஓடிவிட்டனர்.

அதுகண்டு புரூட்டஸ், தம் நண்பர்களை நக ரெங்கும் அவ்வுடைவாள்களைச் சுழற்றிக்கொண்டு, 'ஸீஸர் வீழ்க, கொடுங்கோலன் வீழ்க, வீழ்க, ரோம் வாழ்க!' என்று கூவி மக்களை ஊக்கும்படி அனுப்பினான்.

அவர்களும் அவ்வாறே செய்தனர். 'ரோம் வாழ்க; புரூட்டஸ் வாழ்க; விடுதலை வாழ்க!' என்று அவர்கள் எங்கும் தொண்டை கிழியக் கூவிக் கொண்டு திரிந்தனர்.

ஆனால் நகரின் பரபரப்பு இதனால் இன்னும் மிகுந்ததே தவிர வேறன்று. உருவிய உடை வாள்களைக் கண்டஞ்சி ஓடி ஒளித்தபேர் பலர் கல வரத்தை மிகுதிப்படுத்தினர். முந்தின நாளே தீக் குறிகளைக் கண்டு அஞ்சிய நகரம், இன்று நிலை கொள்ளாது அல்லோலகல்லோலப்பட்டுக் குழப்ப முற்றது.

திரெபோனியஸுடன் வெளியே சென்றிருந்த மார்க்கஸ் அந்தோணி நகரின் குழப்பத்தைக் கண்டு நடந்த செய்தியைக் கேள்விப்பட்டதும், உடனே தன்னையுங் கட்டாயங் கொல்வர்; அதற்குள் தானே நகரைவிட்டு ஓடிவிடவேண்டும் என்று விரைந்தான்.

ஆனல் இம்முயற்சியிலீடுபட்டுத் தலைமை தாங்கி யிருப்பவன் புரூட்டஸ் என்பதைக் கேள்வியுற்றதும், கணவன் இறந்தது கேட்டு உயிர் துறக்க எண்ணிய கற்புடை மனைவி, அவள் கைக் குழவியைக் கண்டு எண்ணம் மாறுவது போல, 'ஆ, அப்படியானல் இனிப் பழி வாங்கும் வாய்ப்பு உளது,' என்று கருதித் தன் வீட்டுக்குச் சென்று ஒளிந்துகொண்டு, நம்பகமான ஒரு பணியாளின் வாயிலாக 'ஸீஸர் கொலையுண்டதன் காரணம் அந்தோணிக்குத் தெரியும். நண்பன் என்ற முறையில் ஸீஸர் உடம்பை அடக்கஞ்செய்ய மட்டும் அவன் விரும்புகிறான். புரூட்டஸின் திருவுளமறியக் காத்திருக்கிறான்,' என்று எழுதிய ஒரு கடிதத்தைப் புரூட்டஸுக்கு அனுப்பினன்.

காஸியஸ், புரூட்டஸினிடம் 'அந்தோணி பசுப் போலிருந்து புலிபோற் பாயும் இயல்பினன். அவனுக்கு இடந்தர வேண்டாம்,' என்று வற்புறுத்தினன்; புரூட்டஸ், 'காஸியஸ்! நீ ஏன் இங்ஙனம் எதைக் கண்டாலும் அஞ்சுகிறாய். அவன் நம்மிடம் வேறெதுவுங் கேட்கவில்லையே! ஸீஸர் உடலை அடக்கம் செய்யத்தானே உரிமை கேட்கிறான். ஸீஸரது செத்த உடலுமா நமக்குப் பகை?

என்று கூறிவிட்டு, 'அந்தோணி உடலை அடக்கஞ் செய்யவரலாம்,' என்று பணியாளனிடம் சொல்லி யனுப்பினான்.

புருட்டஸின் இணக்கத்தை அறிந்ததே, திகிலும் இருளுஞ் சூழ்ந்து வாடிய அந்தோணியின் முகம், கதிரவனைக் கண்ட தாமரை என அலர்ந்தது. அதுமுதல் அவன் உடலில் ஸீஸரின் உயிரே புகுந்த தென்னலாம்.

ஸீஸரின் பக்கத்தில் ஒரு விளையாட்டுக் கருவி போன்று ஓடியாடிய அவ்விளைஞன், அதுமுதல் மக்களுடைய மனத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டு அவர்களைத் தான் நினைத்தபடி ஆட்டும் மந்திரவாதியானான்.

அவன் வந்ததும் என்ன செய்வானோ என்ற கவலையுடன் அவனை எதிர்பார்த்து நின்றனர் கிளர்ச்சிக்காரர். ஆனால் அவன் அவர்களையோ புருட்டஸையோ கூட எதிர்பார்த்ததாகக் காண வில்லை. தாயை இழந்த கன்றேபோல் அவன் நேராக ஸீஸர் உடல் கிடந்த இடஞ்சென்று அவ் வுடலை மூடிய திரையை நீக்கிவிட்டுக் கோவெனக் கதறி அழுதான். இங்ஙனங் கால்நாழிகை சென்ற பின் கண்களைத் துடைத்துக்கொண்டு சரே லென்று கிளர்ச்சிக்காரர் முன் வந்துநின்று, தனது மேலுடையை அகற்றி உட் சட்டையையும் திறந்து நெஞ்சைக் காட்டிக்கொண்டு, 'ஐயன்மீர்! ஸீஸரின் குருதியால் உங்கள் உடைவாளின் விடாய் தீரவில்லையாயின், என் நெஞ்சையும் பிளந்து கொள்க. அவனிடம் நட்புக் கொண்ட பழி எனக்

கும் உண்டு. அவனுடன் சாவதைவிட உயர்ந்த பேறு எனக்கு வேறில்லை' என்ருன்.

அவனுடைய கண்கள் அப்போது கலங்கிக் கொவ்வைப் பழங்கள்போற் சிவந்திருந்தன. அவன் உதடுகள் துடித்தன.

அவனது நடிப்பை மிகவும் வெறுத்த காஸியஸும் கிளர்ச்சிக்காரர் பிறருங்கூட அப்போது அவனிடம் கனிவு கொண்டனர். உண்மையும் அன்புமே உருவெடுத்து வந்த புரூட்டஸைப் பற்றியோ கேட்க வேண்டுவதில்லை. அவன் நீர் ததும்பிய கண்களுடன் 'என் அரிய உடன்பிறப்பாள, ஸீஸரை நேசிப்பது ஒரு பழியாயின், அதில் உன்னைப்போல் எனக்கும் ஒரு பங்கு உண்டு. நாங்கள் ஸீஸரைப் பகைக்கவில்லை. அவன் ஆட்சி முறையையே பகைத்து அதனுடன் இரண்டற்று நின்ற அவனையும் கொல்ல நேர்ந்தது. உன்னிடம் எங்களுக்கு எவ்வகைப் பகையும் இல்லை,' என்ருன்.

காஸியஸ் இப்போது இடையில் வந்து, 'அது மட்டுமன்று அந்தோணி; உனது நட்பையும் நாங்கள் முழுமனதுடன் வரவேற்கிறோம். நீ எங்களுடன் சேரின் உன் விருப்பங்களுக்கு முழு மதிப்புத் தருவோம் என்பதை நீ உறுதியாக நம்பலாம்' என்ருன். அந்தோணி காஸியஸ் பேச்சை முறித்து, 'ஐய, ஸீஸரது அடிச்சுவட்டில் மிதித்து நிற்குந் தகுதியுடையவர் குழுவிற் சேரும் பெருமை எனக்கு வேண்டாம். அவன் நண்பன், அவனுக்காக அழுகின்ற உரிமைகொண்ட நண்பன் என்பதே என்

நிலே. ஆனல் நான் உங்களுக்கும் நண்பனே,'' என்று கூறி அவர்கள் ஒவ்வொருவருடனும் கை குலுக்கிக்கொண்டான்.

அந்தோணி பின்னும் ஸீஸர்பக்கம் சென்று உரக்க, 'ஆ புல்வாய்களுக்கு இரையாகிய கலே யரசேபோல் விழுந்துகிடக்கும் என் தலேவனே! நீ கிடக்கும் நிலே காணப் பொறுக்க முடியவில்லேயே? ஆ, நின் குருதியில் தோய்ந்து நின்னே வேட்டையாடிக் கொன்ற 'மன்ன'ரிடையே நீ கிடக்குங் கிடை' என்று கண்ணீர் வடித்தான்.

அந்தோணி தம்மை மறைமுகமாகக் குறை கூறுகின்ருன் என்பதைக் கண்டுகொண்ட காஸியஸ் அவனேத் தடுத்து, "நாங்கள் உனக்கு இடந் தருமுன் உன் நிலேயை அறிய விரும்புகிருேம். நீ எங்களுடன் சேர்கிருயா, அல்லது தனித்து நிற்கிருயா?" என்று கேட்டான்.

அந்தோணி புரூட்டஸ்பக்கமாகப் பார்த்து, "நண்பர் என்றுதான் உங்களே அண்டினேன். நண்பர் என்றுதான் உங்களுடன் கைகுலுக்கினேன். ஆனல் உங்களுடன் ஒருவனுக நான் இருப்பதெப்படி? ஸீஸரின் உடலே அடக்கஞ் செய்து என் நட்புக்கட ஞற்றுவதைத்தவிர வேறெவ்வகையிலும் நான் உங்கள் வழிக்கு வாரேன்," என்ருன்.

வழக்கம்போலவே காஸியஸின் தடங்கலேப் பொருட்படுத்தாமல் புரூட்டஸ் அவனுக்கு அக்க டஞற்ற இணக்கந் தந்தான். அதன்பின் அந்-

தோணி, " உங்களைத் தாக்காமல் ஸீஸரை நண்பர் என்ற முறையில்மட்டும் புகழ்ந்து என் நட்பை— நட்பின் கடனை—ஆற்றலாமன்றோ,' என்று கேட்டான்.

புரூட்டஸ் அதற்கும் இணங்கி, 'முதன்முதலில் என் கட்சியின் நிலையை நானே யாவரும் அறிய விளக்கிவிடுவேன் ; அதன்பின் நீ பேசலாம்,' என்று கூறினான்.

காஸியஸ், அப்போதே தன் திட்டம் உலைந்து விட்டதென முணவினான். ஆனல் புரூட்டஸை எதிர்ப்பது எப்படி ; அதுவும் அந்த நேரத்தில்!

### ரு. சொல்லாண்மையா வில்லாண்மையா?

புரூட்டஸ் மேடையிற் சென்று, அங்குக் கூடியிருந்த பொதுமக்கள்முன் நின்று பேசினான் :—

'பகுத்தறிவுடைய என் நாட்டு மக்களே, எங்கள் செய்கை உங்கள் அறிவுக்குச் சரி எனப் பட்டால் ஏற்றுக்கொள்ளுங்கள். அல்லாவிட்டால் நீங்கள் தரும் தண்டனையை ஏற்க நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம்.

எங்களுக்குப் பகை யாரும் இல்லை. ஜூலியஸ் ஸீஸரைப் பற்றியமட்டில், அவன் என் ஆருயிர் நண்பன். அவன் இறந்ததற்காகக் கண்ணீர் விடுபவருள் நானும் ஒருவன். அப்படியாயின் அவனை நான் ஏன் கொன்றேன் என்ற கேள்வி எழலாம். அதற்கு விடையாவது, அவனிடம் என் அன்பு குறைவுடையது என்பதனாலன்று, நாட்டினிடம் என் அன்பு மிகுதியானது என்பதனாலேயேயாம்.

நாட்டுக்குப் பகைவர் யாராவது உளரென்றால் அவர்மட்டுமே எங்களுக்குப் பகைவர்! அப்பேர்ப் பட்டவர் யாராவது இருந்தால் கூறுக! உங்கள் விடைக்கு நான் காத்திருக்கிறேன்.'

**கூட்டம்:** யாருமில்லை.

'விடுதலை வேண்டா; அடிமை வேண்டும் என்று கூறுபவர் யாரேனும் இருந்தால் அவர்களுக்குமட்டுமே நாங்கள் பகைவர். அப்பேர்ப்பட்டவர் யாராவது இருந்தால் முன் வருக!'

**கூட்டம்:** யாருமில்லை.

'அப்படியாயின், எங்கள் செய்கை உங்கள் நண்பர் செய்கை. அதன் நன்மை தீமை உங்களுடையது. உங்கள் பேரால். உங்கள் விடுதலைக்குத் தடையாயிருந்த பெரியார் ஒருவரது உயிரை நாங்கள் அகற்றினோம். இனி நீங்களே ஆட்சி புரிக.

**கூட்டம்:** ஆம்; ஆம்.

**சிலர்:** இனி நீரே தலைவர். நீரே ஸீஸர்.

**இன்னும் சிலர்:** உம்மையே இனி அரசராக முடி சூட்டுவோம்.

புரூட்டஸ் கூட்டத்தின் பொருந்தா உரைகளைக் காதில் வாங்கிக்கொள்ளாமல் அவர்களை விட்டு அகன்றான்.

நூலறிவும் ஆராய்ச்சியும் நிரம்பி உலக அறிவுக்கிடமில்லாத அவன் மனத்தில் ரோமப் பொது மக்களின் அறியாமையோ பெருமக்களின் தன்

னலமோ தென்படவில்லை. அவற்றை அறிந்து நடத்தும் ஆற்றல் வாய்ந்த காஸியஸுக்குத், தான் செய்யுந் தீங்கையும் அவன் உணரவில்லை.

புரூட்டஸ் பேசிக்கொண்டிருக்கையிலேயே அந்தோணி ஸீஸருடலின்பக்கம் சென்று அதனை வணங்கி, 'எம் அரசே, உமது உடலின் நிலை கண்டும் உம்மைக் கொன்ற கொலைகாரப் பாதகர்கள் நின்ற நிலை கண்டும், சீற்றத்தை உள்ளடக்கி, அவர்களுடன் நகைத்துக் கைகுலுக்கும் எனது சிறுமையை மன்னித்தருள்க,' என்று கூறிக் கொண்டே அவ்வுடம்பின் இறுதிப் பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான்.

பின், சில பணியாளருதவியுடன் அவ்வுடம்பைத் தானும் தாங்கி எடுத்துக்கொண்டு புரூட்டஸ் பேசிக்கொண்டிருந்த இடத்தினருகில் வைத்து விட்டு, மேடையினின்று இறங்கிவரும் புரூட்டஸை வணங்கித் தழுவிக்கொண்டு அந்தோணி மேடையேறினன்.

சிறந்த நாடகக்காரன்போலத், தன் நிலை, தன் மாற்றார் நிலை, தன்முன் நிற்கும் மக்கள் நிலை என்னும் மூன்றையும் நன்கறிந்து அவற்றிற்கேற்பப் பேசி. அவன் மக்கள் மனத்தைப் படிப்படியாகத் தன்பக்கம் திருப்பத் தொடங்கினன்.

முதலில் அவன் தான் புரூட்டஸின் நண்பன்; காஸியஸின் நண்பன்; அவர்கள் கூட்டத்தாரின் நண்பன் என்பதனை வற்புறுத்தி அவர்கள் உயர்வையும், ஸீஸர் இறுதிக் கடனை ஆற்றத் தனக்கு உரிமை கொடுத்த அவர்கள் பெருந்தன்மையினை

யும் புகழ்ந்து, அதன்பின் அவர்கள் இணக்கத்தால் தான் எடுத்துக்கொண்ட கடமை ஸீஸரைப் புகழ்வதன்று, ஸீஸரின் இறுதிக்கடனாற்றுவதே என்றும் முன்னுரையாகக் கூறிவிட்டு, நேரடியாக ஸீஸரைப்பற்றிப் பேசத் தொடங்கினான்.



மார்க்கஸ் அந்தோணி பேருரை

'ஒருவர் செய்த நன்மையை மறப்பது எளிது; அவர் செய்த தீமையை மறப்பது எளிதன்று.'

'ஸீஸர் தான் செய்த தீமையினாலேயே இறந்திருக்கவேண்டும்.'

'அவன் செய்த தீமை என்ன?'

'புரூட்டஸ் கருத்துப்படி அவன் பேராவல் உடையவன் என்று சொல்லப்படுகிறது. (புரூட்டஸ் சொல்வது சரியே. அது தப்பா யிருக்கமுடியாது. புரூட்டஸ்போன்ற அறிவாளிகள், காஸியஸ், காஸ்காபோன்ற அறிவாளிகள் சொல்வது தப்பா யிருக்கமுடியாது.)

ஸீஸர் என் நண்பன்; என்னிடம் மாறா உறுதி யுடையவன்; ஆனாலும் அவன் பேராவலுடை யான் என்பதில் ஐயமில்லை.'

'அவன் பேராவல் கொண்டது எதில்?'

'அவன் பெரிய போர்வீரன். அவன் வென்ற அரசர்கள் உங்கள்முன் ஊர்வலமாகச் சென்றதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். அவன் கொண்டுவந்த திறைகளால் உங்கள் கருவூலம் நிறைந்தது. உங் கள் கைகளும் நிறைந்துள்ளன. ஆயினும் அவன் பேராவலுடையவனே. இவ் வெற்றிகளால், இம் மன்னர் திறைகளால் அவன் மனம் நிறைவடைய வில்லையன்றோ?

'அவன் பேராவல் இதனுடன் நின்றதா? நான் விழாவன்று அவனுக்கு மணிமுடியும், அர சிருக்கையும் வழங்கினேனே! அவன் அதனை ஏற் றானா? இல்லை. மும்முறை மறுத்தான் என்பதை நீங்களே அறிவீர்கள். ஏன்? அவனுக்கு அந்த மணிமுடியை நான் கொடுத்தது போதவில்லை. உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் உங்கள் உள்ள மாகிய ஓர் அரசிருக்கையையும் உங்கள் அன் பாகிய ஒரு மணிமுடியையும் பெற எண்ணினான். இது பேராவலன்றோ?

இங்ஙனம் ஸீஸரைப் பழிப்பதுபோல அவ னது பெருமையையே கூறிப் பின்னும், ஏழைக ளிடம் அவன் கொண்ட கருணையையும், பொது மக்கள் அவன் வெற்றிகள் அடைந்தபோதும் கொடைகள் அளித்தபோதும் அவனை ஆரவாரத் துடன் புகழ்ந்த புகழையும் எடுத்துக் காட்டினான்.

'நீங்கள் அனைவரும் அவன் காலடிகளைக் கண்களில் ஒற்றிக்கொள்ளும் ஒரு நாள் இருந்ததன்றோ?

'அவன்மீது எறிந்த செண்டுகூட உங்கள்மீது முள்ளாகத் தைத்த காலம் ஒன்றிருந்ததன்றோ? அன்று அவன்மீது உங்களுக்கு அன்பு இருந்தது. இன்று அவன் இறந்தவுடன் உங்கள் அன்பு எங்கே போயிற்று? உங்கள் அன்பும் அவனுடன் போய்விடவா செய்தது? நம் நண்பர் இறந்தால், நம் வீட்டில் ஓர் அடிமை இறந்தால்—ஒரு மாடு இறந்தால்கூட நம் கண்ணில் நீர் வருகின்றதே; நம்மைப்போன்ற ஒரு மனிதன்—அதுவும் அரசனுக்கு ஒப்பானவன், ஒப்பற்ற வீரன், பெருந்தன்மையானவன், உங்களுக்காகவே வாழ்ந்தவன், உங்களையன்றித் தமக்கெனப் பொருள் தேடாதவன், அப்பேர்ப்பட்ட ஸீஸர் இறந்தபோதுமட்டும் உங்கள் கண்ணில் நீர் வாராததேன்?'

'நீங்கள் அறிவற்றவர்களா? இல்லை; பின் ஏன் ஸீஸரின் பெருமையை எண்ணிப் பார்ப்பதில்லை?'

'நீங்கள் அன்பற்றவர்களா? இல்லை; பின் ஏன் உங்கள் தாய்போன்ற, உங்கள் உயிர் போன்ற ஸீஸர் இறந்தபோது உங்கள் கண்கள் கனியவில்லை?'

'உங்கள் கண்களை, உங்கள் உள்ளங்களை மறைப்பது எது? அட கடவுளே, நீ கொடுத்த அறிவை, நீ கொடுத்த அன்பை இந்த மக்கள் ஏன்

பயன்படுத்தமாட்டேன் என்கிறார்கள்,' என்று கூறி மீண்டும் ஸீஸரின் உடலின்மீது விழுந்து அழுதான்.

'ஏட்டுச் சுரைக்காய்போன்ற புரூட்டஸின் மொழிகள் எங்கே! பொறி புலன்கள் அத்தனையும் வசப்படுத்தி உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இம் மாயாவி எங்கே? புரூட்டஸின் சொற்கேட்டு நாவைப் பறிகொடுத்து நின்றவர்கூட இப்போது உள்ளத்தையும் உணர்வையும் பறிகொடுத்து உயிரையும் ஸீஸரின் புதிய புகழுடம்பிற்காகப் பறி கொடுக்க முன்வந்தனர்.'

இவ்வளவும் போதாதென்று அவன் இது வரையிற் காட்டாது வைத்திருந்த கடைசித் துருப்பு ஒன்றை—கிளர்ச்சிக்காரர் கட்டிய இராவ ணக் கோட்டையை அழிக்கத்தகுந்த இறுதி 'இராம பாணத்தை'—எடுத்து வீசினான்.

'இதுவரையிலும் நான் கூறியது கேட்டே நீங்கள் கண்கலங்குகிறீர்கள்; உங்களை அறியாமல உங்கள் கண்கள் அழுகின்றன; ஆனால் அவற்றின் காரணத்தை நீங்கள் அறியமாட்டீர்கள்?'

'நீங்கள் அவனுக்காக இப்போதுகூடப் பதை பதைக்கிறீர்கள். அவனுக்கு நேர்ந்த தீங்குக்காக, அதற்கு விடை தருதற்காக உங்கள் உள்ளம் துடிக்கிறது. ஆனால் அவ்வளவு அன்பு உங்கள் உள்ளத்தில் எழுவானேன்?'

'உண்மையில் உங்கள் அன்பு காரணமற்ற தன்று. அவன் உங்களுக்காகவே பொருள்

தேடினன் என்பதை—சேய் நலனை நாடி உயிர் விடுந் தாய்போல் உயிர்விட்டான்' என்பதை— நான் உங்களுக்குக் காட்டமுடியும்.

'ஆனல், ஏற்கெனவே நீங்கள் அழுகிறீர்கள். ஏற்கெனவே நீங்கள் அவனைக்கொன்ற கொலைஞர்மீது, பகைவர்மீது சீற்றமடைந்திருக்கிறீர்கள். அவன் கடைசியாக உங்களுக்கும்—அவர்கள் பேச்சைக் கேட்டுக் கை கொட்டும் உங்களுக்கும், உங்கள் ஒவ்வொருவருக்கும்—தன்னை வென்றவருடன் கைகுலுக்கும் எனக்கும் வைத்துவிட்டுப் போன உடைமையை நீங்கள் அறிந்துவிட்டால், தலைகால் தெரியாது சாடிவிடுவீர்கள்! பெரியோர்களான—எனக்குப் பேச இணக்கம் தந்தவர்களான — புருட்டஸ் முதலியோர்களுக்கு நான் கொடுத்த உறுதியை நீங்கள் குலைத்துவிடுவீர்கள்,' என்று துணிகரமாய்க் கூறினன்.

பொதுமக்கள் இது கேட்டு வியப்பும் எழுச்சியுங்கொண்டு, 'அதைக் கூறுக, கூறுக' என்று துடித்த உள்ளத்துடன் கூவிக் கேட்டனர். அந்தோணி வேண்டா வெறுப்பாகக் கூறுபவன் போல ஸீஸர் தான் இறந்தபின் குடிகள் தனது பொருட்குவை முற்றும் அடையவேண்டுமென்றும், தன் வீடு தோட்ட முதலியவற்றைப் பொதுவிடமாகக் கொள்ள வேண்டுமென்றும் எழுதியிருப்பதை அறிவித்ததோடு அவ்வப்போது ஸீஸரது உடலிற் பட்ட படுகாயங்களையும், அவன் கொலையுண்ட வகையையும், கொலை செய்தோரை

யும் உருக்கிவிட்ட இருப்புப் பிழம்பு போன்ற அனல் மொழிகளால் இயைபுபடுத்தி அவர்கள் மனக்கண்முன் உயிர் ஓவியமென ஸீஸர் கொலையின் கொடுமையினை வரைந்து காட்டினான். இறுதியில் எல்லா நடிப்பையுந் துறந்து, அவர்கள் கிளர்ச்சிக்காரருடைய வீடுகளை எரித்து அவர்களையும் அவர்கள் நண்பர்களையும் உயிருடன் பொசுக்கி, ஸீஸர் கொலைக்குப் பழி வாங்குமாறு உறுதியாய்த் தூண்டினான்.

## ச. மறைந்துநின் றழிக்கும் பழி

"பாம்பறியும் பாம்பின் கால்" என்றபடி அந்தோணியின் உட்கருத்தையும் ரோமின் பொது மக்கள் நிலையையும் அறிந்து, வரப்போகும் புயலை முன் கூட்டி உணர்ந்த காஸியஸ், புரூட்டஸை எதிர்பாராமலே அவனையுங்கூட அவன் விருப்பத்திற் கெதிராகச் சேர்த்துக்கொண்டு நகரைவிட்டு வெளியேற வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வைத்திருந்தான். அதனால் அந்தோணியின் தலைமையிற் பொதுமக்கள் புயற்காற்றுட்பட்ட காட்டுத் தீயெனச் சீறிக்கொண்டும் தன்னகத்துள்ள எரிமலையின் எழுச்சியால் கொந்தளிக்குங் கடல்போலக் கொந்தளித்துக் கொண்டும் வருவதை அறிந்ததுமே, அவர்கள் ஓடி நெடுந் தொலைவு சென்று, 'ஆந்தியம்' என்னுமிடத்தில் தங்கித் தம்மைப் போருக்குச் சித்தமாக்கிக் கொண்டனர்.

அதுமுதல் ரோம் நகர் மீகாமன் இல்லா மரக்கலம்போல் ஒழுங்கான அரசியலின்றிக் குழப்பத்

துள்ளும் உள்நாட்டுச் சண்டையுள்ளும் ஆழ்ந்தது. பொதுமக்கள் அனைவரும் அந்தோணி பக்கமே நின்றனர். ஆயினும் பெருமக்களும் அவர்கள் கைப்பட்ட படையும் கிளர்ச்சிக்காரர் பக்கம் நின்று அவர்கள் கட்சியை வலுப்படுத்தினர். பொது மக்கள் ஆற்றலாற் கிளர்ச்சிக்காரர் நகரத்துட் புக முடியவில்லையாயினும், படையில்லாமல் அந்தோணிக்குப் பேரரசைக் கைக்கொள்ளவும் முடியவில்லை.

இந்நிலையிற் கள்ளன் வீட்டிற்குள்ளன் புகுந்ததுபோல், அந்தோணிக்குப் போட்டியாக ஸீஸரின் மகனாகிய அக்டேவியஸ் என்னும் இளைஞன் தோன்றினான். இவன் ஸீஸரை ஒத்த வீரனல்லவெனினும், ஒப்பற்ற சூழ்ச்சித் திறனும் அமைந்த தோற்றமும் உடையவன். அந்தோணியின் துணையின்றிக் கிளர்ச்சிக்காரரை வெல்ல முடியாததலால் அவன் அந்தோணியினிடம் மிகுந்த பற்றுடையவன் போல நடித்து அவனை வசப்படுத்திக் கொண்டான். ஆனால் அந்தோணி, படையில்லாமற் பொதுமக்களையே நம்பியது சரியன்றெனக் கருதிக் கொஞ்சங் கொஞ்சமாக ஒரு சிறிய படையைத் திரட்டினான்.

மேலும் கிளர்ச்சிக்காரரிடமிருந்து பெருமக்கள் துணையைப் பிரிக்கவும் படைப் பயிற்சிக்கான பணம் பெறவும் அவன் இன்னொரு சூழ்ச்சியுஞ் செய்தான். கிளர்ச்சிக்காரருடன் சேராமல் நின்ற பெருமகனும், பெருஞ் செல்வனுமான லெப்பிதஸ்[1]

1. Lepidus.

என்பவனை அந்தோணிக்குப் போட்டியாகக் கிளறிவிட்டு அவனிடமிருந்து பணமும், பெருமக்கள் துணையும் பெற்றதன்றி அவன் வாயிலாக அந்தோணியின் செல்வாக்கையும் மட்டுப்படுத்தினன். மேலும் அவ் அக்டேவியஸ் நாளடைவில் அவர்கள் ஒருவரை ஒருவர் பகைக்கும்படி தூண்டி அவர்களை அழிக்கும் எண்ணமுடையவனாயினும், கிளர்ச்சிக்காரர் அழியும்வரை அவர்கள் துணையைப் பெற எண்ணி அவர்களுடன் பேரரசை ஆளும் உரிமையைப் பங்கு கொள்வதாகப் பேசி 'மூவர் உடன்படிக்கை' ஒன்றை ஏற்படுத்திக் கொண்டான்.

மூவர் படை ஒருபுறமும் கிளர்ச்சிக்காரர் படை ஒருபுறமுமாக இரண்டும் ஓயாத சண்டைகளில் ஈடுபட்டன. ஆனால் உண்மையில் மூவரிடையே ஒற்றுமையில்லை; அதுபோலவே கிளர்ச்சிக்காரரிடையிலும் ஒற்றுமையில்லை. காஸியஸின் சூழ்ச்சிகளும், வருவாய்க்காக ஏழைமக்களை அவன் கசக்குவதும் புரூட்டஸுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் இதற்கு மாறாகப் புரூட்டஸுக்குச் செலவு செய்யும் வழியன்றிப் பொருள் வருவாய்க்கான வழி தெரியாதாகையால் அவன் காஸியஸினிடம் அடிக்கடி பணம் கேட்டு வந்தான். இப்படி ஒழுங்குமுறைகள் பேசித் தன் வருவாயை ஒரு பக்கம் கெடுப்பதன்றி அடிக்கடி செலவையும் உண்டு பண்ணும் புரூட்டஸின்மீது காஸியஸ் சீறி விழுந்தான். நாளடைவில் இருவரும் கீரியும் பாம்பும் போலாயினர்.

இவ்வொற்றுமைக் கேட்டால் அக்டேவியஸ் படிப்படியாகத் தன் கட்சியையும் தன்னையும் வலுப்படுத்துவது கண்டு, காஸியஸ் புரூட்டஸோடன் ஒத்துப்போக எண்ணி, அவனை நட்பு முறையிற் காணவிரும்பினான். இருவரும் தம் படைகளுக்கு அமைதியாயிருக்க ஆணை கொடுத்துவிட்டுத் தம் படைவீட்டிற் கலந்து நட்பாடலாயினர். அப்போது அவர்கள் ஒருவருக்கு ஒருவர் மனம் விட்டுத் தம் குறைகளைக் கூறிக்கொண்டனர்.

காஸியஸின் இடர்களையும், அவனுக்குத் தான் அறியாது கொடுத்த துயரையும் எண்ணிப் புரூட்டஸ் வருந்தியதோடு தான் அவனுடன் பொறுமையிழந்து சீறியதற்காக மன்னிப்புங் கேட்டுக் கொண்டான். மேலும், தான் பொறுமை யிழந்ததற்கு ஒரு காரணமும் உண்டெனக் கூறித், தன் மனைவி போர்ஷியா தன் கட்சியின் தோல்வியையும் தன் துன்பங்களையும் கேட்டுத் தாங்கமுடியாது இறந்ததையும், அதுமுதல் தான் தோற்றத்தில் மனிதனாயிருந்தும் உண்மையிற் பேயாகவே நடந்து வருவதையுங் கூறினான்.

அது கேட்டுக் காஸியஸூம் கண் கலங்கினான். புரூட்டஸ் தன்னை அறியாவிடினும் தான் புரூட்டஸையும் அவன் உயர்வையும் அறிந்திருந்ததனால் அவனிடம் நாம் பொறுமை காட்டினோமில்லையே என்று எண்ணிக் காஸியஸ் மனமுருகினான்.

இப்போது காஸியஸ் மனத்தில் தன் கட்சி தோற்றதைப்பற்றிய எண்ணமே யில்லை. விரை

வில் அவன் இறக்கப்போவதும் அவனுக்குத் தெரியும்: ஆயினும் அதைப்பற்றியும் அவனுக்குக் கவலையில்லை. புரூட்டஸின் உயர்வு ஒன்றே அவன் கண்முன் நின்றது. அவன் குற்றங்கள் மனிதன் குற்றம்—உலகையறியா மனிதன் குற்றம்; அவன் பெருமையோ கடவுள் பெருமை—கடவுள் தன்மை மிக்க பெருமை. அதனைக் கண்டறிந்தபின் தன் வாழ்வின் பயன் நிறைவேறியதாகவே கஸியாயஸ் கருதினான். இனி அவன் இறக்க அஞ்சவில்லை. பழைய தன்னலத்தின் நிழல், அழுக்காற்றின் நிழல் இன்று பொசுக்கப் பட்டு விட்டது. அவனது உலகியல் அறிவோ புரூட்டஸின் புகழொளிக்கு நெய்யாகப் பயன் பட்டது.

மறுநாள், மூவருள் முதல்வனை—நாளடைவில் மற்ற இருவரையும் விழுங்கிப் பேரரசின் முழு முதல்வனாய் விளங்கிய—அக்டேவியஸ் ஸீஸரது படை ஒருபுறமும், காஸியஸ், புரூட்டஸ் என்னும் இருவர் படைகளும் மறுபுறமுமாகக் கைகலக்கும் நாள், காஸியஸ் அன்று அவன் படைவீட்டுக்குச் சென்றுவிட்டான்.

புரூட்டஸுக்குக் கண்கள் ஒரு நொடிகூடத் துயிலில் நிலைக்கவில்லை. போர்ஷியாவின் எண்ணங்களைத் துரத்திக்கொண்டு அன்றிரவு ஸீஸர் நினைவும்—அவன் இறந்தபோது அவன் தோன்றிய தோற்றமும், அவன் கூறிய பொன் மொழிகளும்—'புரூட்டஸ், நீயுமா' என்ற வன்மொழியும்

அப்படியே அவனுக்கு மீண்டும் மீண்டும் நிகழ்வன வாகத் தோன்றின.

ஸீஸரின் உயர்வு அன்றுதான் அவனுக்கு நன்கு தென்பட்டது. அவன் குற்றம் உண்மை யில் அவன் குற்றமன்று; பொதுமக்கள் குற்றம். தான் அவனைக் கொன்றது ஏன்? இப்போது விளங்குகின்றது. கிளர்ச்சிக்காரர் அவனைக் கொன்றது விடுதலை வேட்கைக்காக அன்று. காஸியஸ்கூட—ஆம். காஸியஸ்கூடத் தன்னலத் தைச் சாராதவன் அல்லன். ஆனால் புரூட்டஸ் மனத்தில், அவன்மேற் சீற்றமில்லை. அவன் சிறு பிழைக்கு அவன் தன் அறியாமையாற் பட்ட தீமை போதும் என்று எண்ணினான்.

ஆனால் மன்னிக்க முடியாத குற்றம் தன் னுடையதே. ரோமின் பேரொளியை—ஆம். தன் மொழிப்படியேகூட, உலகின் பேரொளியைத்— தன் அறியாமையால் அழித்துத், தன்னையுங் கெடுத்துத், தன் மனைவியையுங் கொன்று, தன் நண்பர்களையுந் தன் நாட்டு மக்களையுங் கெடுத்த பழி தன்னதே என்று அவன் கருதினான். அவன் மனம் கழிவிரக்கத்தாற் கலங்கிக் கண்ணீர் சிந் தியது.

அவன் அழுததால் துயின்றானோ, துயிலினால் அழுகை நின்றதோ கூறவியலாது. ஆனால் அவ் வரைத் துயிலில், காய்ந்தும் முற்றிலுங் காயாத அக் கண்ணீர் வழியாக ஸீஸரின் உருவம் அவன் முன் வந்துநின்றது. அவன் உடல் மயிர்க்கூச்

செறிந்தது. அவன் கை கால்கள் நடுங்கின. ஆனால் அவன் உள்ளம் நடுங்கவில்லை. 'எல்லாம் என் குற்றம், என் குற்றம், என்றான் அவன்.

ஸீஸர் உரு 'ஆம். நாளை உனக்கும் உன் நண்பர்களுக்கும் இறுதிநாள். என் பழியை நீங்கள் அடைவீர்கள்,' என்றறிவித்தது.



புரூட்டஸ்முன் ஸீஸர் உருத் தோற்றம்

மறுநாள் **பிலிப்பி**[1] என்ற இடத்தில் நடந்த **போரிற்** கிளர்ச்சிக்காரர் படை நிலைகுலைந் **தழிந்**

1. Philippi

தது. கிளர்ச்சிக்காரர் ஒவ்வொருவராக ஓடிவிட்டனர். காஸியஸ் இனித் தனக்கும் புரூட்டஸுக்கும் இவ்வுலகம் இல்லை எனக் கண்டு, தன் புரூட்டஸ் இறக்குமுன்—தன் புரூட்டஸ் தோல்வி என்ற சொல்லைக் கேட்குமுன்—தான் இறக்கவேண்டுமென நினைத்துப் பணியாள் பிடித்துக்கொண்ட வாள்மீது வீழ்ந்து இறந்தான்.

அவ் வீர முடிவைக்கேட்ட புரூட்டஸ் தனக்கும் முடிவு வந்ததை உணர்ந்தான். போரில் ஸீஸர் உருவமே எதிரியுடன் எதிரியாய் நின்று தன் கட்சியாரைக்கூடக் கொன்று வென்றதை



புரூட்டஸ் முடிவு

அவன் கண்டான். இறுதியில் தன்னை நாடி அக்டேவியஸ் படைவீரர் வருவதையுங் கேள்வியுற்றான். 'ஸீஸர்! உன் பழி தீர்க.' என்று கூறி அவனும் தன் வாளை நட்டு அதன்மீது வீழ்ந்திறந்தான்.

ஸீஸரோடு ரோமின் அரசியற் பெருமை போயிற்றெனில், புரூட்டஸோடு அதன் அறிவியல் ஒழுக்க இயல் பெருமை போயிற்று என்னல் வேண்டும். அவன் வாழ்வையும் மாண்பையும் வாயாரப் போற்ருதார் இல்லை. உணர்ச்சி வசப் படும் இயல்பற்ற அக்டேவியஸ் ஸீஸர்கூட 'ரோமின் பெருமையனைத்தும் திரண்டெழுந்த பெரியோய்! இழந்த ஸீஸரையும் மறந்து நின்னை இழந்த இழப்பே இழப்பாக நின்று எம் நாட்டுத் தாய்க்கு இனி யார்தாம் ஆறுதல் அளிப்பர்! ஸீஸ ரும் நீயும் வாழ்ந்த நாட்டில் வாழும் தகுதியுடைய வர் யாரே?' எனக் கையறு நிலையெய்தி அவல முற்றனன்.

பெரியவரான ஸீஸரின் பழியே பெரியோ ராகிய புரூட்டஸையுங் கொண்டுபோக, ரோம் பேரரசு கணவனையும் அவன் தந்த தனி மகனையும் இழந்த இளந் தாயெனக் கைமை நோன்பு நோற்பாளாயினள்.

---

# 2. கோரியோலானஸ்

## கதை உறுப்பினர்

### ஆடவர்

1. **கயஸ்மார்க்கியஸ்:** கோரியோலியை வென்றதனால் **கோரியோலானஸ்** என்றழைக்கப்பட்டவன் - ரோமின் ஒப்பற்றவீரன் - வலம்னியா மகன், வர்ஜிலியா கணவன் - கயஸ் தந்தை - ரோமின் பகைவனை தார்க்குவினை முறியடித்தவன்.

2. **துள்ளஸ் ஆபீதியஸ்:** ரோமர் பகைவரான வால்ஷியரின் தலைவன் - கோரியோலானஸால் முறியடிக்கப்பட்டவன் - கோரியோலானஸ் ரோமின்பகைவனை போது நண்பனானவன்.

3. **காமினியஸ்:** கோரியோலி முற்றுகையின் போது கோரியோலானஸையும் நடத்திச் சென்ற ரோமப் படைத் தலைவன்.

4. **திதஸ் லார்ஷியஸ்:** கோரியோலி முற்றுகையில் கோரியோலானஸுடன் சென்ற துணைத்தலைவன்.

5. **மெனெனியஸ் சுக்ரிப்பா:** கோரியோலானஸ் நண்பன் - நாத்திறமும் நயமுமுடையவன் - பொது மக்களை உயர்த்தும் சீர்திருத்த நோக்கமுடைய பெருமகன்.

6. **தார்க்குவின்:** ரோமக்குடியரசின் பகைவனை பழைய ரோமக் கொடுங்கோலரசன்.

7. **கயஸ்:** கோரியோலானஸ் புதல்வன் - சிறுவன்.

### பெண்டிர்

1. **வலம்னியா:** கோரியோலானனின் மனைவி -- அறிவும் அடக்கமும் உடையவள்.

2. **வர்ஜிலியா:** கோரியோலானஸின் மனைவி -- அறிவும் அடக்கமும் உடையவள்.

3. (பிறமாதர்)

# கதைச் சுருக்கம்

கயஸ் மார்க்கியஸ் என்ற வீரன் ரோமப் பெருமக்கள் குடியிற் பிறந்தவன்; குடித் தருக்கு உடையவன். அவன் ரோமரின் பகைவனை பழைய ரோமக்கொடுங்கோலரசனை வென்றும், வால்ஷியர் நகராகிய கோரியோலியை வென்று அவர்கள் தலைவனை துள்ளஸ் ஆபீதியஸை முறியடித்தும் புகழ் பெற்று ரோமின்முடிசூடா மன்னனாய் விளங்கினான். கோரியோலியை வென்றதனால் கொரியோலானஸ் என்று அவன் பெருமக்கள் விருப்பப்படி அவன் நகர்த்தலைவனாகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டான். நின்றபோது வழக்கப்படி வாக்காளர்களான பொது மக்களை வணங்க மறுத்ததனால் பொதுமக்களும் அவர்கள் தலைவர்களான திரிபூணர்களும் அவனை வெறுத்து நகரினின்றும் துரத்தினர். அதனால் சினங்கொண்டு அவன் ஆபீதியஸுடன் சேர்ந்து ரோமை அழிக்க வஞ்சினங் கூறினான்.

ரோமர் கோரியோலானஸின் தாயையும் மனைவியையும் அவன் குழந்தையுடன், ரோம மாதர் தலைமையில் சென்று அவன்வஞ்சினத்தினின்றும் தம்மைக் காக்கும்படி வேண்டினர். அவர்களும் அங்ஙனம் சென்று அவன் மனமுருகப் பேசித் தம் திறமனைத்தும் காட்ட, கோரியோலானஸ் தன் கடமையையும், சினத்தையும் அவர்களுக்காக விட்டுக் கொடுத்தான். ஆனால் வால்ஸியர் அவன் தம்மைக் காட்டிக் கொடுத்ததாகக் கொண்டு அவனைக்கொன்று சின்னா பின்னப் படுத்தினர். ரோமர் அதன் பின் கழிவிரக்கங்கொண்டனர்.

# 2. கோரியோலானஸ்

## க. வெற்றியும் செருக்கும்

**கயஸ்மார்க்கியஸ்**[1] என்பவன் ரோம் நகரத்தின் பழைய அரசர் குடியிற் பிறந்தவன். இளமையிலேயே அவன் தந்தை இறந்துபோனமையால், அவன் தாயாகிய **வலம்னியா**[2]வே அவனை வளர்த்து வந்தாள்.

வலம்னியா ரோம்நாட்டு வீரத்தாய்களுக்கு ஓர் இலக்கியமானவள். ஆகவே அவள் தன் மகனுக்கு உடற்பயிற்சி, வில்லாண்மை, வாள் வீச்சு முதலிய வீரருக்கான கல்விகளை முற்றிலும் பயிற்றுவித்ததுடன் அவன் பதினாறு ஆண்டு எய்தியதும் அவனைப் போருக்கும் அனுப்பினாள். அவனும் ரோமின் பழைய கொடுங்கோலரசனும் ரோமக் குடியரசின் முதற் பெரும் பகைவனுமான **தார்க்குவினை**[3] எதிர்த்து முறியடித்து, அவனைச் சார்ந்த வீரரிடம் அகப்பட்டுத் துன்புறவிருந்த ரோமனொருவனையும் காப்பாற்றி மீட்டுவந்தான். இவ் வீரச் செயலை அந்நகரத்தார் அனைவரும் வியந்து பாராட்டி, அவனுக்கு அந்நாட்டு வழக்கப்படி வாகை முடி சூட்டி மகிழ்ந்தனர்.

வீரமில்லா மகன் ஒருவன் வாழ்தலினும், வீர மிக்க மக்கள் பதின்மர் மாள்தலையே சிறப்பாகக் கருதி மகிழும் பெருந்தகைமையுடைய வலம்னியா,

---

1 Caiws Marciws. 2. Vulumnia. 3. Targuin.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும், தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" —திருக்குறள்.

என்பதற் கிணங்கத் தன் மகன் புகழ் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள்.

கயஸ்மார்க்கியஸ் அவள் வளர்ப்புத்திறனுக்கோர் அரிய நற்சான்றாக விளங்கினான் என்பதில் ஐயமில்லை. அவனை ஒத்த வீரம், பெருந்தன்மை, நேர்மை, கலங்கா மன உறுதி முதலிய உயர் குணங்



வெற்றிவீரனை கயஸ்மார்க்கியஸ்

கள் படைத்தோர், வீரத்துக்குப் பேர்போன ரோம் நகரத்திற்கூட வேறெவரும் இல்லை எனலாம்.

வலம்னியா ரோம் மாதருக்கோர் இலக்கியமாக விளங்கியதுபோலவே, அவனும் ரோம் வீரர்களுக் கோர் இலக்கியமாக விளங்கினன்.

ஆனல், குளிர்ச்சியும் ஒளியும் நிறைந்து விளங் குந் திங்களிற் கறை என்பதொன்று காண்பது போல, அவ்வளவு குணங்களுக்கும் ஒவ்வாத ஒரு குறை கயஸ்மார்க்கியஸிடம் அதே தாயின் வளர்ப் பின் பயனகக் காணப்பட்டது. அதுவே அவள் வாயிலாக அவன் அடைந்த குடும்பச் செருக்கும் உயர் குடிச் செருக்கும். இக் குற்றம் உண்மையில் ரோமப் பெருமக்கள் அனைவரிடமுமே இருந்தது என்பது உண்மையே. ஆனல் கயஸ்மார்க்கியஸ் களங்கமற்றவன்; உலகின் சூதுவாது அறியாத வன். எனவே அக்குற்றம் அவன் பேச்சாலும் செயலாலும் பிறருக்குத் தெரியும்படி வெளிப் படையா யிருந்தது.

ரோம் அரசு, பெயருக்குக் குடியரசேயாயி னும். அதனை உண்மையில் ஆண்டவர்கள் உயர் குடியிற் பிறந்த செல்வர்களாகிய பெருமக்களே. உண்மையில் ரோம் வெற்றிகளிற் கிடைத்த பொருள் நகருக்குப் பொது உடைமையேயாயி னும், நடைமுறையில் அந்நகரின் அரசியல் ஏற் பாட்டின்படி அது பெருமக்களுக்கு மட்டும் உரி யதா யிருந்தது. ஏழைப் பொதுமக்களுக்கு அதிற் பங்கில்லை என்று மட்டுமில்லை; அவர்கள் கடன் சுமையால் வேறு துயருற்றனர். செல்வர்களான உயர்குடி மக்களின் பக்கமே வழக்கு மன்றங்களும் சட்டமும் நின்று ஏழை மக்களைக் குற்றுயிராக்கி வதைத்தன.

இந்த நிலையில், ‘இனி அரசியலிற் பங்கின்றி ரோமின் சண்டைகளில் கலப்பதில்லை,’ என்று அவ்வேழை மக்களின் தலைவர்கள் தீர்மானித்தனர். இக்குழப்பத்தை ரோமின் பகைவர்கள் அறிந்து படையெடுத்துவரத் தொடங்கினர். இங்ஙனம் பெருமக்களுக்கு எதிராக வெளியிற் பகைவர் படையெடுப்பும், உள்ளே பொதுமக்கள் கிளர்ச்சியும் ஒருங்கே ஏற்பட்டன. தமது இக்கட்டான நிலைமையை உணர்ந்து பெருமக்களிற் பலர் வட்டிச் சட்டத்தையும் அரசியல் உரிமைகளையும் சற்றுச் சீர்திருத்த உடன்பட்டனர்.

கயஸ்மார்க்கியஸ் பெருமக்களைமட்டுமே மக்களாக மதித்தான். அப்பெருமக்கள் செய்யும் வழிவழிக் கொடுமைகளையோ ஏழைப் பொதுமக்களின் நிலைமைகளையோ அவன் எண்ணிப் பார்ப்பதில்லை. ஆயினும் பொதுமக்கள் நாட்டின் இடுக்கணைத் தமக்குப் பயன்படுத்திக் கொள்ளுவதைக் கண்டு சீற்றங்கொண்டு அவன் அவர்களுக்கு ஓர் இம்மியளவுகூட விட்டுக் கொடுக்கக் கூடாது என்று முழங்கினான். கயஸ்மார்க்கியஸைப் போலவே பெருங்குடி மக்களிற் பலரும் ஏழைப் பொதுமக்களை எதிர்த்தபடியால் அரசியல் மன்றத்தில் சீர்திருத்தக் கட்சியின் திட்டம் தோற்றது. இதனைக் கேள்வியுற்றதே பொதுமக்கள், ‘இனி இந்நகரில் இருத்தலாகாது,’ என வெளியேறினர். அப்போது பெருமக்கள்பாடு திண்டாட்டமாயிற்று. ஆடல் பாடலிலே வளர்ந்த அப்பெருமக்கள், நாட்டு மக்கள் அனைவரும் போனபின் தனியே

நின்று என்ன செய்வது? அவர்கள் கயஸ்மார்க்கியஸின் நண்பனும் சீர்திருத்த விருப்புடையவர்களுள் ஒருவனுமான **மெனெனியஸ் அக்ரிப்பா**[1] என்பவனை அப்பொதுமக்களுக்கு நன்மொழிகள் கூறி அவர்களை அழைத்துவரும்படி அனுப்பினர்.

மெனெனியஸ் ஆண்டு முதிர்ந்தவன்; சொல் நயமுடையவன். அவன் பொதுமக்களைப் பலவாறாகப் புகழ்ந்து பேசினன். "ரோமப் பொது மக்களே! நீங்கள், உடலைவிட்டுச் செல்லும் உயிர் போலும், ஒள்ளிய விளக்கைவிட்டுச் செல்லும் ஒளி போலும் ரோமைவிட்டுப் போய்விட நினைத்தல் ஆகுமா? அங்ஙனம் போனல்தான் என்ன, உண்மையில் நீங்கள் சென்றுறையும் இடமெல்லாம் ரோமேயாதலின், ரோமைவிட்டு நீங்கள் செல்வது ஒருவன் தன் நிழலைவிட்டுச் செல்ல முயல்வதுபோலுமன்றோ?

"மேலும் நீங்கள் யாரிடம் சினங்கொண்டு போவது? பணம் பெருமக்களிடம் இருந்தால் என்ன? உங்களிடம் இருந்தால் என்ன? அவர்கள் உங்கள் பணப் பைகள், உங்கள் உணவுப் பொருட் களஞ்சியங்களே! நீங்களெல்லாரும் ரோம் நகரத்தின் உறுப்புக்கள், ரோம் நகரத்தின் கைகால்கள் அல்லிரோ! ரோமின் வெற்றி, ரோமின் செல்வம் எல்லாம் கைகால்களாகிய உங்கள் உழைப்பால் வருவதுதானே? அவ்வுழைப்பால் வரும் உணவை வைத்திருந்து, வேண்டும்போது உயிர் தருங் குருதியாக உறுப்புக்களுக்

1. Menenius Agrippa.

குக் கொடுக்கும் வயிறன்றோ பெருமக்கள்? அவ் வயிற்றுடன் ஒத்துழைக்காவிட்டால் வருந் தீங்கு வயிற்றுக்குமட்டுமா? உங்களுக்குமன்றோ?'' என் றிவ்வாறாக அவன் தேன் சொட்டப் பேசினன்.

அஃதோடு அவன் பின்னும், "அவ் வயிறு, இதுவரையில் தான் செய்த பிழையை உணர்ந்து வருந்துகின்றது. இன்றுமுதல் பெருமக்கள் உங் கள் வயிறார உணவும் பிற பொருள்களுந் தாமா கவே தந்துதவுவர் என்பதை உறுதியாகக் கொள்க,'' என்றான்.

அவன் பேச்சினுலும் அவன் காட்டிய குறிப் பினுலும் மக்கள் பெரிதும் மனமாறினர். ஆயினும் அவர்கள் தலைவர்களுள் ஐவர் முன் வந்து, "இஃது இடுக்கண் வேளைக்கான கைத்திறனல்லது மன மார்ந்த அருள் மொழி அன்று,'' எனக் கூறி அதனை ஏற்கவேண்டா மென மக்களைத் தடை செய்யலாயினர். இதுகண்ட மெனெனியஸ் அவர் களை நோக்கிப், "பொதுமக்கள் ரோமின் கைகள். ஆனால், நீங்கள் கையின் ஐந்து விரல்கள் போல் வீர்கள். கைக்கு நேர் வழி காட்டி எங்களுடன் ஒத்துழைப்பது உங்கள் கடன்,'' என்றான்.

அப்பொழுதும் அவர்களுள் ஒருவன் சீறி எழுந்து, "ஆனால் உங்களுடன் ஒத்துழைப்பது தான் நேர்வழியோ,'' என்றான். அவன் குள்ள மான உருவும் தடித்த உடலும் உடையவன். மெனெனியஸ் சட்டென அவன் பக்கம் திரும்பி, ,,ஆம், அதுவே நேர் வழி; ஆனால் ரோமின் பெரு

விரலாகிய நீ இதனை உணர்ந்து பிறர்க்கு உரைக்காததனாலேதான் அவர்கள் உணரவில்லை," என்றான். அவனைப் பெருவிரலென்று அவனுருவுடன் ஒப்புமை தோன்றக் கூறியதும் யாவரும் தம் நிலை மறந்து கொல்லென நகைத்தனர். நகைப்பில் பகை பறந்துபோயிற்று.

எல்லாரும் ரோமுக்குத் திரும்பினர். நன்மை தீமைகளிற் கருத்தூன்றி அவ்வப்போது வேண்டுவனவற்றைச் செய்ய அவர்களே திரிபூணர்கள் அல்லது தலைவர்கள் ஐவரைத் தேர்ந்தெடுப்பதெனத் தீர்மானித்தனர்.

கயஸ்மார்க்கியஸ் இச் சிறு சீர்திருத்தங்களைக் கூட வெறுத்தான். ஆனால் விருப்பு வெறுப்பைக் காட்ட அங்கே நேரமில்லை. பகைவர்களாகிய **வால்ஷியர்கள்**[1] நகர வாயில்வரை வந்துவிட்டனர். அவர்கள் தலைவனோ அந் நாளின் ஒப்புயர்வற்ற போர்வீரனான **துள்ளஸ் ஆஃபிடியஸ்**[2] ஆவான். அவ் வால்ஷியர்களை எதிர்க்கும்படி ரோம் அரசியல் மன்றத்தார், நகரத் தலைவர்களுள்[3] ஒருவனான **காமினியஸ்**[4] என்பவனை ஒரு பெரும் படையுடன் அனுப்பினர். கயஸ்மார்க்கியஸும் அவனுடன் சென்றான்.

வால்ஷியரை முறியடிப்பதற்குச் சரியான வழி அவர்கள் தலைநகரான கோரியோலியை முற்றுகையிட்டழிப்பதே எனக் காமினியஸ் நினைத்துத்

1. Volsciaus. 2. Tullus Aufidius. 3. Consuls. 4. Cominius.

**தீதஸ் லார்ஷியஸ்**[1] என்பவனையும் கயஸ்மார்க்கியஸையும் படையின் ஒரு பகுதியுடன் அங்கே அனுப்பிவிட்டுத் துள்ளஸ் ஆபீதியஸை எதிர்க்கச் சென்றான்.

ரோமப் படையின் ஒரு சிறு பகுதி மட்டுமே தம்மை எதிர்க்க வருகின்றதென்று கண்ட கோரியோலி நகர மக்கள் துணிவுகொண்டு, நகர்வாயில் கடந்து வெளிவந்து ரோமப் படையைப் பின்னிட்டோடும்படி துரத்தினர்.

கயஸ்மார்க்கியஸ் பின்னிடைந்த அவ் வுரோமர்களை நோக்கி ஏளனச் சிரிப்பும் வெகுளியுங் கொண்டு வீர முழக்கத்துடன் தானே தனியாக முன்னேறிச் சென்று நகர்வாயிலிற் புகுந்தான். வாயில் காவலர் உடனே வாயிலை மூடிவிடவே கயஸ்மார்க்கியஸ் உள் அகப்பட்டுப் பகைவர் வாளுக்கும் அம்பு மாரிக்கும் இடையே தனியே நின்று போராட நேர்ந்தது. அவன் துணிவைக் கண்டு பின்தொடர்ந்த ரோம வீரர் ஒருவரிருவரும் வெளியே நின்று, அவன் பகைவர்கள் கையிலகப்பட்டு இறந்தான் என்றே கருதிக்கொண்டு வருந்தினர்.

ஆனால் யானைக் கூட்டத்தில் அகப்பட்ட சிங்க வேற்றைப்போல அவன் உடலெல்லாம் குருதி பொங்கி வழிந்தும், விடாது போர்செய்து நாற்புறமும் இடம் உண்டுபண்ணி வாயிலை வந்து திறந்தான்.

---

1. Titus Lartius.

அவனது செயற்கருஞ் செயல் கண்டு வியந்த ரோமர் அவ் வாயில் வழியே உட்புகுந்து நொடிப் பொழுதில் அந்நகரைக் கைப்பற்றினர்.

காமினியஸ் தலைமையில் ஆஃபீதியஸை எதிர்க்கச் சென்ற ரோமப் படை அப் பெருந் தலைவனது தாக்குதலைப் பொறுக்கமாட்டாமல் நிலைகுலைந்து, நாற்புறமுஞ் சிதறியோடத் தொடங்கிற்று. காமினியஸூம் ரோம வீரர் சிலரும் பகைவரிடையில் அகப்பட்டுத் திண்டாடினர். அப்போது அவர்கள் ஒரு தூதனை அனுப்பிக் கயஸ்மார்க்கியஸினிடம் தமது நிலைமையைத் தெரிவித்தனர்.

கோட்டையைத் தீதஸ்லார்ஷியஸினிடம் ஒப்படைத்து விட்டு கயஸ், காமினியஸூடன் வந்து சேர்ந்து போர் புரிந்தான். அவனது ஒப்பற்ற திறமையால் இங்கும் வால்ஷியர் படை சிதறியோடிற்று. அதனிடையே கயஸ்மார்க்கியஸ் ஆஃபீதியஸை நேரில் எதிர்த்து வளைக்கலானான்.

தம் தலைவன் எங்கே சிறைப்பட்டு விடுவானோ என்றஞ்சிய வால்ஷிய வீரர், அவனை வலுவில் இழுத்துக்கொண் டோடினர்.

இதுவரையிற் போரிற் புறங்காட்டா வீரனாகிய ஆஃபீதியஸ் இவ்வவமதிப்புக்குக் காரணமாகிய கயஸ்மார்க்கியஸ்மீது பழிவாங்குவதென்று வஞ்சினங் கூறி அகன்றான்.

கயஸ்மார்க்கியஸ் கோரியோலியை வென்ற அருந்திறல் வீரன் என்ற காரணத்தால் அன்று

முதல் அவன் கோரியோலானஸ் என்று அழைக்கப்பட்டதோடு, ரோமின் முடிசூடா மன்னனுகவும் விளங்கினன். போருக்குப் போகுமுன் அவன் தம்மை எதிர்த்ததைக் கூட மறந்து பொதுமக்கள் அவனைத் தெய்வமாகக் கொண்டாடலாயினர்.

ரோம் நகரம் அன்று அவன் காலடியிற் கிடந்தது. அதன் தலைமையோ அதன் பொருட்குவையோ எல்லாம் அன்று அவன் நாவசைவிற்கே காத்திருந்தன.

ஏழைகளும், செல்வர்களும், பெண்டிரும், பிள்ளைகளும், சமயத் தலைவரும், அடிமைகளும், யாவரும் வீரர் பெருந்தகையான அவனை அன்று காணக் கிடைக்காமல் கூட்டத்தை நெருக்கிப் பிசைந்துகொண்டு வந்தனர்.

தென்றற் காற்றுக்கூட நேரிடையாக முகத்தில் வீசியறியாத உயர்குல மாதர்கள், முக்காடின்றி வெயிலையும் பிறர் பார்வையையுங்கூடப் பொருட்படுத்தாமல் மாடியில் வந்து நின்று அவனைக் கண்டு மகிழ்ந்தனர்.

அன்று அவன் வெறும் ரோமன் அல்லன், ரோமர் வணங்கும் தெய்வமேயாயினன் என்னல் வேண்டும்.

## உ. வணங்காமுடி மன்னன்

ஆனல், பொதுமக்கள் கொரியோலானஸின் எதிர்ப்பை மறந்துவிடினும் அவர்கள் தலைவர்க

ளான **ஜூனியஸ் புருட்டஸும்** [1] **ஸிஸினியஸ் வெலுதஸும்** [2] அதை மறக்கவில்லை. அவர்கள் அவன் புகழை அழித்துப் பழிவாங்கக் காத்திருந்தனர்.

அவ்வாண்டு, பெருமக்கள் அனைவரும் கோரியோலானஸையே தம் தலைவனாக்க வேண்டுமென்று முடிவுசெய்தனர். தலைவர் தேர்வு எப்போதும் பெருமக்கள் மனப்படியே நடப்பினும், தலைவராக விரும்புவோர் அவ்வொருநாள் பெருமக்கள் உடையையும் பெருங்குடிச் செருக்கையும் விட்டுவிட்டு எளிய உடையில் இரவலர்போல் நின்று பொது மனிதன் ஒவ்வொருவனிடமும் அவன் தருகின்ற இணக்கச் சீட்டுக்காக மன்றாட வேண்டுமென்பது அந் நகரத்தின் மரபு. போரிற் காயமடைந்தவர்கள் இத்தறுவாயில் அக் காயங்களைக் காட்டியுஞ் சீட்டிரப்பதுண்டு.

இத்தகைய வாழ்க்கைச் சடங்குகளிற் கோரியோலானஸுக்குப் பழக்கமுங் கிடையாது. அதில் அவன் மனம் செல்லுவதுமில்லை. தன் உயர்வு தன் வீரத்தினலேயேயன்றி இத்தகைய மன்றாடல்களாலன்று என்று அவன் நினைத்தான். ஆதலால், இதனை ஒரு வெட்கக்கேடாகக் கருதி அவன் தன் நண்பர்களுடன் நகைத்தும் கேலிசெய்தும் அதனை வேண்டாவெறுப்புடன் நிறைவேற்ற எண்ணினன்.

ஆனல் ரோமப் பொது மக்களை ஒருவன், ஏமாற்றி அவமதிக்க முடியுமாயினும் எதிர்த்து

1. Junius Brutus. 2. Sicinius Velutus.

அவமதிக்க முடியாது என்பதை அவன் அன்று கண்டான். என்றும் ரோம் அரசியல் வாழ்வில் தெருத் தூசிக் கொப்பாகப் பெருமக்கள் தேர்க் காலடியிற் கிடந்து புரண்ட பொது மக்களுக்கு அவ்வொரு நாள் தம் ஆற்றலையும் வெற்றியையும் அளந்தறியும் நாளா யிருந்தது.

எத்தகைய வீரனும் அன்று அவர்களுக்குப் பணிந்தே தீர வேண்டும். அன்று பணிந்து, வேண்டுமாயின் அடுத்தநாள் அவர்கள் தலையில் அச்சமும் இரக்கமுமின்றி மிதிக்கலாம். முழுப் பழியும் வாங்கலாம்; ஆனல் அன்று பணிந்தே தீர வேண்டும்.

ஒருநாள் கழிந்தபின் அவர்களனைவரும் அஞ்சி வணங்குந் தெய்வமாயினும் என்ன, அன்று அவர்கள் கையால் உருவாக்கப்படவேண்டியதே அன்றி வேறில்லை.

ஆனல் கோரியோலானஸ் இதை அறிந்து பொருட்படுத்தினல்தானே! வீரனகிய தான்—உலகினர் அஞ்சும் வால்ஷியரின் தலைமைப் பெருங் கோட்டையைப் பிறருதவியின்றித் தனியே நின்று வென்ற தான்—ஒப்பற்ற வீரனகிய ஆஃபீதியஸை யும் கலங்கவைத்த தான்—பந்திக்கு முந்தி படைக் குப் பிந்தியெனப் பதுங்கி ஓடும் இப் பதர்கள்முன் நின்று இரப்பதா என நினைத்தான் அவன். வணங்கா முடி மன்னனகிய தான், வழி வழி அடி மைகளாகிய அவர்கள்முன் நின்று பசப்பு மொழி பேசவேண்டுமேயென்று நினைக்கும்போதே அவன் நாக்கு மேல்வாயிற் சென்று பதிவதாயிற்று.

போர் முழக்கத்தில் தேர்ந்த அவன் நாக்கு அன்று குழறிற்று. போரிற் கோட்டையினின்று பொழியும் அம்புமாரிகளினிடையே நின்று நிமிர்ந்து ஏறிட்டுப் பார்க்கும் அவன் முகம் அன்று வணங்க முடியாமற் குழம்பிற்று. முன்பின் அறியாதவரிடம் இன்றியமையா நிலையில் பேசும் மங்கையர்போன்று முகத்தைத் திருப்பிக்கொண்டு உணர்ச்சியற்ற குரலில், 'உங்கள் சீட்டைக் கொடுங்கள், நான் தலைவனாகவேண்டும்,' என்றான்.

உணர்ச்சியற்ற இம் மொழிகளைக் கேட்டு வெறுப்புற்றும், அவன் வீரத்தை எண்ணி அவர்கள் அவனுக்குச் சீட்டை யளித்தனர். ஆனால் சீட்டளித்தபின் கூட்டத்திற் சென்று அவர்கள் முணுமுணுத்துக்கொண்டனர். தமது மரபுரிமையான மதிப்பை இழக்க அவர்கள் மனங்கொள்ளவில்லை. இம் மனப்பான்மையைக் குறிப்பாய் அறிந்த ஜூனியஸ் புரூட்டஸூம், ஸிஸினியஸ் வெலுதஸூம் அவர்கள்முன் வந்து, 'நீங்கள் கோரியோலானஸைத் தெரிந்தெடுத்தது சரிதான்; ஆனால் அவன், முன் உங்களை அவமதித்தவன், இனி அவமதிப்பதில்லை என்று மன்னிப்பாவது கேட்கவேண்டாமா?' என்றனர்.

கூட்டம் தன் ஆற்றலை வலியுறுத்த வாய்ப்பு நேர்ந்தது கண்டு எழுச்சியுடன், 'ஆம், ஆம்; மன்னிப்புக் கேட்கவேண்டும்; பொதுமக்கள் விருப்பத்தை இனி மதிப்பதாக உறுதிமொழி கூற வேண்டும்,' என்றது.

அவர்கள் உடனே, 'திரிபூணர்கள் என்ற முறையில், நாங்களே அவனுக்குத் தலைமை நிலைக்குரிய சின்னங்கள் அளிக்கவேண்டும்; அப்போது உங்கள் சார்பில் இம் மன்னிப்பைக் கேட்போம்; நீங்கள் துணை நிற்க,' என்று கூறிவிட்டுப் பொது மன்றத்திற்குச் சென்றனர். கூட்டம் பின் தொடர்ந்தது.

கோரியோலானஸின் தேர்வு கிட்டத்தட்ட முடிந்ததெனவே நினைத்துப் பெருமக்களும் அவனும் அத் தேர்வை நிறைவேற்றுதற்கான விழாவிற்காக முன்னேற்பாடுகள் செய்துகொண்டிருந்தனர்.

அச்சமயத்தில் தலைவனாகவிருக்கும் கோரியோலானஸ்முன் திரிபூணர் வந்து நின்றனர். அப்போது ஜூனியஸ் புரூட்டஸ் 'கோரியோலானஸ்! தலைமை நிலைக்குரிய பெருமை உனக்கு முற்றிலும் உண்டு; ஆயினும் நீ தலைவனாகுமுன், பொதுமக்களை அவமதிப்பதில்லை என்றும், அவர்கள் விருப்பத்திற்கு இணக்கமாக நடப்பேன் என்றும் உறுதிமொழி கூறவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்,' என்றனன்.

கோரியோலானஸ் சட்ட நுட்பங்களையும் மரபுரிமைச் சிக்கல்களையுங் கவனியாமல், அவர்களது சிறுமைத்தனமான இடையீட்டைக் கண்டு வெகுண்டு, 'என் தலைமை நிலை பொதுமக்கள் கொடையன்றே, இத்தனை பணிந்து மன்றாட! வேறு தகுதியின்றி அவர்களைப் புகழ்ந்து திரியும் உங்களைப்போன்ற சொத்தைகள் அல்லவா அவர்

களுக்குப் பணியவேண்டும்? ரோமின் பகைவர் களை எதிர்த்து உயிர் கொடுக்கும் வீரர் மன்றாட வேண்டுவதேன்?

பொதுமக்களும் அவர்கள் தலைவர்களும் பொதுப்படையாக மிகவும் சிறுமையுடையவரே யாயினும் இத்தறுவாயிற் பெருந்தீங்கு செய்யும் ஆற்றலுடையவர்கள் என்று கோரியோலானஸின் நண்பர்கள் கண்டு அவனைத் தடுத்துப் பணிய வைக்க விரும்பினர்.

ஆனால் அவனது வீரநெஞ்சம், கொசுக்கடிகள் போன்ற திரிபூணர்களின் மொழிகளை மதியாமல்



கோரியோலானஸும் பொதுமக்களும்

வெகுண்டெழுந்தது. அவனை அழிக்கக் காத்தி ருந்த அத் திரிபூணர்கள் பேரிரைச்சல் செய்து மக்களைத் தூண்டிவிட்டனர். கைக்கெட்டியது

வாய்க்கெட்டாமற் போனதுபோல கோரியோலானஸின் தலைமைநிலைத் தேர்வு நிறைவேறாது போயிற்று.

கோரியோலானஸுக்குமட்டும் இஃது ஒரு பெருங் குறைவாகத் தோன்றவில்லை. அவன் பெருமக்களைப் பார்த்து, "இவையனைத்தும் உங்கள் ஆண்மையற்ற நிலைமையினால் வந்தன. இச்சிறுமை மிக்க நாய்களையும், இந் நாய்களின் தலைக் கோளாறுடைய தலைவர்களையும் பெருமை செய்து கொண்டு நீங்கள் பசப்புவானேன்? அவர்கள் என்ன பெரு வீரர்களா? போர் என்று கேட்டவுடன் ஆட்டுக் கூட்டம்போற் கலைந்தோடும் பேடிகள் அல்லரோ அவர்கள்? அவர்களுக்கு நீங்கள் வீண் சோறிட்டுப் பெருமைப்படுத்துகின்றீர்கள்," என்றான்.

இதைக் கேட்டதும் திரிபூணர்கள் கையையும் கைக்குட்டைகளையும் வீசிப் 'பொதுமக்கள் பகைவன் கோரியோலானஸ் வீழ்க,' என்று கூக்குரலிட்டனர். மக்களை நோக்கி அவர்கள், 'இவன் கையில் நீங்கள் அடைந்த அவமதிப்பு என்றென்றும் அடைந்ததாகும். அவன் உங்களை நாய்க் கூட்டம் என்கிறான்; ஆட்டுமந்தை என்கிறான்; நீங்கள் மனம் வைத்தால் நாங்கள் அவன் செருக்கை அடக்கி அவன்மீது பழி வாங்குவோம்,' என்று கூறி அவர்களைத் தூண்டினர்.

பெருமக்கள் இப்போது ஒன்றுஞ் செய்ய இயலாது திகைத்தனர். கடல்போல் ஆரவாரித்தெழுகின்ற பொதுமக்கள் திரள் ஒருபுறம்; தீயையும்

புகையையுங் கக்கி வீறிட்டெழும் எரிமலைபோற் குமுறி முழங்கி நிற்கின்ற கோரியோலானஸ் ஒரு புறம். அவர்கள் பாவம் யாது செய்வர்!

தலைவர் நிலையை மறுத்ததுடன் அவர்கள் சீற்றந் தணியவில்லை. கோரியோலானனைக் குற்றவாளியைப்போல் ஊர் மன்றத்தில் ஆராய்ந்து தண்டிக்க விரும்பினர். கோரியோலானஸ் இதற்கு இடங்கொடாமல் மீறலானன். ஆனல், நண்பர்களும் பெருமக்களும் அவனை மிகுதியும் வேண்டிக் கொண்டு அப்பால் இழுத்துச் சென்றனர். ரோமரின் வழக்கு மன்றம் நகரின் புறத்துள்ள கொடும் பாறை ஒன்றின் பக்கம் இருந்தது. அதன் பக்க நோக்கிக் கோரியோலானனைச் சூழ்ந்து கொந்ளித்துக்கொண்டு பொதுமக்கள் கூட்டம், 'வெட்டுங்கள், குத்துங்கள், நகரத்தின் பகைவனை, நகர மக்கள் களையை அகற்றுங்கள்,' என்று கூறிய வண்ணஞ் சென்றது.

மன்றத்திலும் கோரியோலானஸ் இவ் வவமதிப்பை ஏற்க மறுத்துச் சீறினன். பெருமக்களும் நண்பர்களும் அவனைப் பணியும்படி வலிந்து மன்றாடி வேண்டினர். அப்படி வேண்டியும் அவன் மொழிகள் உருக்கிய இருப்புப் பிழம்பு போல் கனன்று பாய்ந்தன. பொதுமக்களது சீற்றத்தின் முழு வன்மையும் அவன்மீது மோதியது. ஆனல் அவன் பெருவீரன் என்பதையும் அவன் எதிர்த்துவிட்டால் அவனை அடக்குதல் அரிது என்பதையும் மட்டும் நன்குணர்ந்து, திரிபூணர் அவனுக்குக் கொலைத் தீர்ப்பு அளிக்காது நாடு கடத்தல் தண்டனையே அளித்தனர்.

கோரியோலானஸ் அப்போதும் நிமிர்ந்து நின்று, கொதித்துக் கொதித்து எழுங் குழம்பு போல்இரைந்தெழுங் கூட்டத்தை அசட்டையாய்ப் பார்த்து, 'வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று தெரியாத அறிவிலிகளே! யார் யாரை நாடு கடத்தும் வன்மை உடையவர்கள் என்பதை உங்களுக்கு நான் காட்டவேண்டுமா? சரி, எப்படியும் நான் இல்லாமல் ரோம் வாழ்வதையும், ரோம் இன்றி நான் வாழ்வதையும் பார்க்கிறேன்,' என்று கூறிவிட்டுச் சரேலென்று நகரெல்லை கடந்து செல்வானாயினன்.

தன் மகன் குற்றமே தன் குற்றமாதலின் அதனை **வலம்னியா** அறியாது, அவனை அவமதித்த அந் நன்றிகொன்ற மக்களைப் பழித்தாள். ரோம் மக்கள் அதாவது ரோம் பெருமக்கள், வீர மிக்க தன் மகனை இப் பதர்கள் கையில் விட்டு அவர்கள் அவனைத் துரத்த ஏன் பார்த்துக்கொண்டு வாளா நிற்கின்றனர் என்று அவள் புலம்பினுள். கோரியோலானஸின் மனைவி **வர்ஜிலியாவோ**[1] யாரையுங் குறை சொல்லாமல் தன் ஊழ்வினையையே நொந்து கண்ணீர் ஆருகப் பெருக்கி நின்ருள். கோரியோலானஸ் வெளியே செல்கின்ருன் என்று கேட்டதுமே அவ் விருவருந் தங் குல மதிப்பை மறந்து தலைவிரி கோலமாய் அழுதுகொண்டு அவனைப் பின்பற்றினர். அவன் உணர்ச்சியற்ற குரலில், 'நீங்கள் ரோம் மாதர்களாதலின், ரோமுக்கு வெளியே என்பின் வரல் தகாது,' என்ருன். அது

1. Virgilia.

கேட்டு அவர்கள் தம் விருப்பத்திற் கெதிராகப் பின்னிடைந்து நிற்கவேண்டியதாயிற்று.

அவன் வெளியேகுவது கண்டு, அவனுடன் நின்று போர் செய்த காமினியஸ்கூட அழுது, 'இஃ தென்ன முறையோ, நாயும் பேயுங்கூடச் சட்டை



கோரியோலானஸ் தாயிடமும் மனைவியிடமும் விடை கொள்ளல்

பண்ணுத இத் துரும்புகள் பேரால் ரோமின் தனிப்பெரு வீரனை வெளியேற்றுவதா என்று நினைத்து மனம் பதைத்தவனாய்ப் பின் தொடர்ந்து வந்து கோரியோலானஸ் கண் மறையும் வரை வாயிலில் நின்றான்.

## ௩. வெஞ்சினமும் பழியார்வமும்

கோரியோலானஸ் மனத்தில் இப்போது ஒரே ஒரெண்ணம். பழி! பழிக்குப் பழி! வீரத்திற்கு விலையின்றிக் கோழைத்தனத்துக்கு விலைதரும் ரோமிற்கு—உண்மைக்கு விலையின்றிப் பசப்பு மொழிகளுக்கும் பொய்ம்மைக்கும் விலை தரும் ரோமிற்கு—நகரைப் பாதுகாக்கும் ஆற்றலின்றி நகரத்தின் செல்வத்திற் பங்குகொள்ளமட்டும் வாய் பிளந்துகொண்டு நிற்கும் பேடிக் கூட்டத்தை யுடைய இந்த ரோமிற்கு—ஒரு பாடம் படிப்பிக்க வேண்டுமென்று அவன் மனம் துடித்தது.

பேடிகளான இந் நண்பர்களைவிட, நாட்டு மக்களைவிட, வீரசூரர்களான வால்ஷியரும், அவர்கள் ஒப்பற்ற தலைவனும் போர்ச் சிங்கமுமான ஆஃபீதியஸும் எவ்வளவோ மேம்பட்டவர்கள் என்று அவன் எண்ணினான். எண்ணவே குறிப்பிட்ட நோக்கமின்றி நடந்த அவன் கால்கள் அவனை அறியாமலே அவர்கள் பக்கம் திரும்பின. ரோம் மறுத்த தன் வீரத்தின் மதிப்பை அவர்கள் பக்கம் போயிருந்து காட்டுவதே பழிக்குப் பழி வாங்க நல்ல வழி என்று அவனுக்கு அப்போது தோன்றியது.

பல ஆண்டுகளாக இத்தாலி முழுமையும் நடுங்கவைத்த புறங்கொடா வீரர்களாகிய வால்ஷியரும் அவர்கள் தலைவனும், தாம் தம் நாடிழந்து பட்ட அவமதிப்பை ஓரளவு போக்கி, ரோமரிடமிருந்து கோரியோலியை மீட்டு ரோமையும் எதிர்த்

தழித்துவிடவேண்டுமென்று சீறி நின்று ஏற்பாடு செய்யும் நேரம் அது. அவர்கள் அண்மைவரை ரோமை ஒரு பொருட்டாக எண்ணியதில்லை. தம் பெயர் கேட்டவுடனேயே அஞ்சும் கூட்டமென்றே இதுவரை அவர்கள் ரோமரை மதித்திருந்தனர். 'ஆனால் இன்று எங்கிருந்தோ இக் கோரியோலானஸ் வந்து தோன்றினன். நமது விடுதலைக்கு நமனாகவும் நம் வீரத்துக் கொரு களையாகவும்' என்று அவர்கள் நொந்துகொண்டனர்.

ஆபீதியஸோ, ஒன்று ரோமை அழித்து அக் கோரியோலானஸை வெல்வது, அது முடியாவிடின் அவன் கையாலேனும் மாள்வது எனத் தீர்மானித்துவிட்டான். பகைவனாயினும் அவனை ஒத்த வீரர் இம் மனித உலகில் இல்லை என்று அவன் மனம் கூறிற்று. அவனை வெல்வது கூடாதாய்விடினும், அவன் கைப்பட்டு மாள்வதுகூடத் தனக்குப் பெருமையே என்று நினைத்தான் அவன். கோரியோலானஸ் மட்டும் ரோமனாயிராமல் வால்ஷியனாயிருந்தால்! ஆ, அப்போது தன் நாடு எத்தகைய இறும்பூது எய்தும் என்று எண்ணும்போதே அவனை அறியாமல் அவன் கண்களில் நீர் வடிந்தது. ஆ, பிறந்தால் அந்தக் கோரியோலானஸாகப் பிறக்கவேண்டும்,' என்று அவன் வாய்விட்டுக் கூறினன்.

அந்நேரத்தில் அவன்முன் காவற்காரன் ஒருவன் வந்து, 'ஐயனே, யாரோ ஒருவன் முக்காடிட்டு மூடிக்கொண்டு நகர் வாயிலண்டை வந்து நின்று துள்ளஸ் ஆபீதியஸைப் பார்க்கவேண்டும்

என்கின்றான்; ரோமன் குரல்மாதிரி இருக்கின்றது; ஆனால் நாங்கள் உறுக்கியும் போகமாட்டேன் என்கிறான்; தள்ளியும் போகமாட்டேன் என்கிறான்," என்றான்.

அரை நினைவுடனேயே 'அவனை உள்ளே அழை,' என்று கூறிவிட்டு ஆபீதியஸ் பழையபடி முன்னும் பின்னும் நடந்து, "ஆ, கோரியோலானஸ்! நீ ஏன் ரோமனாகப் பிறந்தாய்? அதைச் சொல்வானேன்? ஏ, ஆபீதியஸ், நீ ஏன் கோரியோலானஸ் பிறந்த உலகில் பிறக்கவேண்டும்? உலகில் ஒரு கோரியோலானஸ் தானே இருக்க முடியும் என்று உனக்கு ஏன் தெரியாமற் போயிற்று," என்றான்.

அந்நேரம் காவற்காரனுடன் முக்காடிட்ட அவ் வீரன் வந்து நின்றான். அவனைக் கவனியாது ஆபீதியஸ் பின்னும், "ஆ, கோரியோலானஸ், கோரியோலானஸ், நீ ஏன் எனக்கெதிராய் நிற்க வேண்டும்? நீயும் நானும் மட்டும் சேர்ந்தால், ஆபீதியஸும் கோரியோலானஸும் மட்டும் சேர்ந்தால் இந்த ஓர் உலகமன்று, ஈரேழுலகமும் ஒரு கை பார்த்துவிடுவோமே," என்றான்.

அப்போது முன் நின்ற முக்காடிட்ட வீரன், "ஆம், அப்படிப் பார்த்துவிடத்தான் நானும் வந்திருக்கின்றேன்,' என்றான்.

தன் மனத்தில் வைத்து வாய்விட்டுக் கூறிய எண்ணங்களைக் கேட்டு விடைகூறத் துணிந்தவன்

எவன் எனச் சினந்து அப் பக்கம் நோக்கினன் ஆபீதியஸ்.

உடன் தானே முக்காட்டை நீக்கி நின்றான் கோரியோலானஸ்.

'இது கனவா, நனவா! கோரியோலானஸாவது! இங்கு வரவாவது! இது வெறும் உருவெளித் தோற்றமாகவே யிருக்கவேண்டும்!' என்று நினைத்தான் ஆபீதியஸ்.

அவன் உடல் வெலவெலத்துத் துடித்தது. அவன் நாக்குப் பேசமுடியாது மரத்தது. கோரியோலானஸையே உறுத்து இமையாமற் பார்த்துக்கொண்டு வியப்பே உருவெடுத்து வந்தது போல் நின்றான்.

அப்போது கோரியோலானஸ், 'ஆபீதியஸ்! என்னை நீயும் வால்ஷியரும் எமனென வெறுப்பீர்கள் என்று அறிவேன். ஆனால் இன்று நான் நீங்கள் வெறுக்கும் ரோமனாகிய கோரியோலானஸாக வரவில்லை. ரோமர் வெறுத்துத் தள்ளிய, ரோமின் பகைவனாகிய கோரியோலானஸாகவே வந்துள்ளேன்,' என்றான்.

'கோரியோலானஸ்! ரோமின் பகைவன்! இன்னும் என்னென்ன வியத்தகு செய்திகளெல்லாம் உலகில் நிகழப் போகின்றனவோ!'

கோரியோலானஸ்: 'தாய் நாடே என்னைக் கைவிட்டபின் எனக்கு வாழ்க்கையில் பற்றில்லை

யாயினும். நான் அப் பழிக்குப்பழி வாங்கும். எண்ணமுடையேன் ; அதுவும் தாய் நாட்டின்மீது! அதன் பகைவர்களாகிய உங்களுக்கு, என்னுடன் பொருத இளஞ் சிங்கங்களாகிய உங்களுக்கு அப் பழி உதவுமாயின், என்னையும் அப் பழியையுங் கருவியாகப் பயன்படுத்திக்கொள்க.'

முதலில் கோரியோலானஸைக் கண்டதும் 'பகைவன் உள் வந்துவிட்டானே, என்ன செய்ய வந்தானே! என்று நினைத்துப் பரபரப்புடன் வந்து சூழ்ந்து வாள்களை உருவிக்கொண்டு தம் தலைவனைக் காத்து நின்றனர் வீரர். தலைவன் கையும் வாளை உருவவே முனைந்தது.

ஆனல், கோரியோலானஸ் முகத்தில் தென் பட்ட புயலொத்த சீற்றம், அவனது மழை முழக் கொத்த உருக்கமான வேண்டுகோள், அவனு டைய வெறுப்பும் துணிவும் கலந்த தோற்றம் ஆகிய இவற்றைக் கண்டதே, வீரப் பாலுடன் பெருந்தன்மையையுங் கலந்துண்டவனாகிய ஆபீதி யஸ், தன் பகைமையனைத்தையும் மறந்து, மடை திறந்த வெள்ளம்போல் தாவிச் சென்று கோரி யோலானஸைத் தழுவிக்கொண்டு, 'ஆ, என் ஒப்பற்ற வீரசிங்கம், ஆ, என் கோரியோலானஸ், உன்னை எதிரியாகப் பெற்றதையே ஒரு பெருமை யாகக் கொண்டேன் ; உன்னை இனி என் உடன் பிறப்பாகக் கொண்டு மகிழ்வேன்,' என்றான்.

பின் அவன் வால்ஷியர் பக்கந் திரும்பி, 'கோரியோலானஸ் போன்ற வீரர் பிறந்ததா

லன்றோ அந்த ரோம் இவ்வளவு மேன்மையுற்றது அவன் நம்மை அடைந்தது, நம் நல்வினைப் பயன். எதிரியாய் நின்று வால்ஷியர் வீரத்தைக் கண்ட அவனுக்கு யாம் வீரர்க்கே யுரிய அரிய நட்புணர்ச்சியையும் உடையோம் என்பதை இனிக் காட்டுவோம்,' என்றான்.

அவர்களும் அதனை ஏற்று, "கோரியோலானஸ் வாழ்க, ஆபீதியஸ் வாழ்க," என்று முழங்கினர்.

ரோம் ஞாயிறும் வால்ஷிய ஞாயிறும் அன்று வால்ஷிய வானத்திலேயே ஒருங்கு எழுந்து ஒளி வீசின.

ரோம் மீது படையெடுக்கும் முயற்சி, முன்னிலும் விரைவாய், முன்னிலும் பன்மடங்கு துணிவுடனும் முன்னிலும் பன்மடங்கு முனைந்த எழுச்சியுடனும் நடைபெறலாயிற்று.

### ௪. கும்பலைக் கெடுத்த கோவிந்தாக்கள்

கோரியோலானஸ் போனபின் திரிபூணர்கள் தலைதெரிக்க வெற்றி முழக்கம் முழங்கினர். அன்றுதான் அவர்கள் தங்கள் முழு வலிமையையும் உணர்ந்தவர்களாகக் கொக்கரித்தனர். 'பெருமக்கள் அன்று தமக்குமுன் தலை வணங்கினர்— அவர்கள் ஒப்பற்ற தலைவன், அவர்கள் அனைவர் பெருமைகளும் ஒருங்கே திரண்டு வந்தவன் போன்ற கோரியோலானஸையே தாங்கள் துரத்தி யோட்டிவிட்டோம்' என்ற நினைவில் அவர்கள் தலைகால் தெரியாமற் குதித்தனர்.

அப்போது வால்ஷியர் ரோம் மீது படையெடுக்க ஏற்பாடு செய்கின்றனர் என்று தூதன் ஒருவன் வந்து கூறினான்.

திரிபூணர்கள் அவன் தம்மைக் கேலி செய்கின்றான் என்று கருதியதோடன்றி, அதற்காக அவனை நையப் புடைத்துச் சிறையிலும் இட்டனர்.

அதன்பின் தூதன் இன்னொருவன் வந்து, 'வால்ஷியர் படை புறப்பட்டுவிட்டது; கோரியோலியை அவர்கள் கைப்பற்றிவிட்டனர்,' என்றான்.

அப்போதும் அவர்களுக்கு நம்பிக்கை வரவில்லை. 'என்ன கட்டுக் கதை! ரோமர்களிடமிருந்து கோரியோலியை மீட்க எவனால் முடியும்,' என்றார்கள்.' (கோரியோலியை வென்ற வீரனையே நாங்கள் வென்றவர்களாயிற்றே என்று அவர்கள் நினைத்தார்கள்போலும்!)

அப்போது கோரியோலியில் தலைவனாயிருந்து தோற்றோடிவந்த தீதஸ் லார்ஷியஸ் நேராக அலங்கோல உருவுடன் வந்து, 'அறிவிலிகளே, இன்னும் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? நகருக்கு இடையூறு வந்துவிட்டது! கோரியோலி வீழ்ந்துவிட்டது! இங்கும் படை வருகின்றது!' என்றான்.

அவன்பின் காமினியஸ் வந்து. 'வீரர்களே. நீங்கள் செய்த வீரச் செய்கையின் பயனை இன்று அடையுங்கள்; வால்ஷியர் முன் இனி என்ன செய்யப் போகிறீர்கள்? இளஞ் சிங்கத்தை வெறுத்

தொதுக்கிய இளம் புலிகளே! இனி உங்கள் கெட்டிக்காரத்தனத்தைப் பார்ப்போம்,' என்று சினந்து கூறினன்.

பெருமக்களும் இப்போது துணிகரமாக அப் பொதுமக்கள் தலைவர்களைக் கண்டிக்கலாயினார். 'இப் பொறுப்பற்ற கும்பல்கள் சொற் கேட்டு, ரோமின் விலைமதிக்க முடியாத மாணிக்கத்தை இழந்துவிட்டோமே,' என்று அவர்கள் வருந்தினர்.

அப்போது பின்னும் வேறு தூதன் ஒருவன் வந்து 'ஐயன்மீர், வால்ஷியரின் கிளர்ச்சிக்கும் முழக்கத்துக்கும் எல்லையில்லை. அவர்கள் முகத்தில் வெற்றி வெறியும் வீம்பு நடையும் தாண்டவமாடுகின்றன. அவர்களிடையே கோரியோலானஸே நேரிற் சென்றிருந்துகொண்டு ரோமை எதிர்க்க உதவுவதாகக்கூடக் கேள்வி,' என்றான்.

கோரியோலானஸ் என்ற பெயரைக் கேட்டதே பெருமக்கள் இடியேறுண்ட நாகம்போற் செயலிழந்தனர்.

பொதுமக்களிடையே இச் செய்தி மின் பாய்வதுபோற் பாய்ந்து பரவிற்று. அவர்களுட் பலரும் 'அந்தோ, நாம் செய்த பிழை' என்றிரங்கினர். 'வீரத்தைப் பழித்த நமக்கு இது வேண்டும்' என்றனர் சிலர். வாய் வீரர் சொற்கேட்டுவாள் வீரனை இழந்தோம்,' என்றனர் மற்றுஞ் சிலர்.

இன்னுஞ் சிலர், 'எமக்குக் கெடுமதி கூறிய அத் திரிபூணர்கள்மீது பழி வாங்குவோம்,' என்று எழுந்தனர். ஆனல் அத் திரிபூணர்கள் இப்போது

காற்று எதிர்த்தடிக்கிறதென்று கண்டு, மறை விடஞ் சென்று பதுங்கிக்கொண்டார்கள்,

ஆயினும், வெள்ளம் அணைகடந்துவிட்டதே! இனி என் செய்வது! இனி, வந்த வினைக்கு இறை இறுத்துத்தானே ஆகவேண்டும்! பெருமக்கள் அங்குமிங்கும் ஓடி வீரர்களைத் திரட்டிக் கோட்டை மதிலைக் காக்கத் துரத்தி யடித்தனர். படையின் தலைவர்களும் வாயிலில் வந்து கூடினர்.

கோரியோலானஸுடன் போர்செய்ய எவர் தாம் முன்வருவர்! ஆகவே எப்படியும் கோரியோலானஸின் சீற்றத்தை நன்மொழிகளால் தணித்து அவனை அவனது சூளினின்றும் விலக்கவேண்டுமென்று யாவரும் ஒரே மனதாகத் தீர்மானித்தனர். இதற்காகத் திரிபூணர்கள்—அவனை அவமதித்துத் துரத்திய திரிபூணர்கள்—பெயராலேயே ஒருவனை அனுப்புவதென்று எண்ணினர். கோரியோலானஸுடன் முன் படைத்தலைமை தாங்கிப் போருக்குச் சென்ற காமினியஸே அதற்குத் தக்கவன் என்று எல்லாருந் தேர்ந்தெடுத்தனர்.

காமினியஸ் கோரியோலானஸை ஒத்த வீரன் அல்லனாயினும், ரோமப் படையை அவனுக்கும் மேலாக நின்று தலைமை தாங்கி நடத்தியவன். ஆனால், படை உயர்வை ஒருபுறம் எறிந்துவிட்டுக் கால்நடையாய் நடந்து வந்து வால்ஷியரிடம் பணிந்து, 'கோரியோலானஸைக் காணவேண்டும்,' என்றான்.

முதலில் வால்ஷியர் 'அதற்கிணங்கமாட்டோம்,' என்றனர். ஆனால் ஆபீதியஸ் கோரியோ

லானஸுக்கு இடங்கொடுத்துவிட்டதுபற்றி உள்ளூரக் கழிவிரக்கங்கொள்ளத் தொடங்கியிருந்தான். கோரியோலானஸ் வந்ததுமுதல் வால்ஷியர் அனைவருந் தன்னை விட்டுவிட்டு அவனையே தெய்வமாகக் கொண்டாடியதனால், தன் புகழ், ஞாயிறு தோன்றியபின் திங்களொளி மழுங்குவதுபோல் மழுங்கக் கண்டான். ஆகவே ரோமருக்கு இடங்கொடுப்பதன்மூலம் கோரியோலானஸ் திரும்பிப் போகலாகும் என உய்த்துணர்ந்து அவன் அவர்களுக்கு உள்ளே செல்ல இணக்கமளித்தான்.

ஆனால், 'பழி! ரோமின்மீது பழி' எனத் துடித்து நிற்கும் கோரியோலானஸ் காமினியஸ் வந்ததைக் கண்டானில்லை. அவன் காதுகள் காமினியஸ் மொழிகளை ஏற்க மறுத்தன. ஆயினும் தன்முன் மண்டியிட்டு அவன் பணிந்தபோது பழைய நட்பு நினைவு கனிந்தெழலாயிற்று. அவன் காமினியஸைக் கையாலெடுத்து நிறுத்தித் தழுவிக்கொண்டு, 'நண்ப. மன்னிக்கவேண்டும்; பழி என் கண்களை மறைக்கின்றது; இப்போது செல்க! ரோம் அழிந்தபின்புதான் நட்பின் ஒளி என் கண்களில் வீசும்,' என்று கூறி அனுப்பினான்.

அதன்பின் ரோமர், முன் பொதுமக்களை வசப்படுத்திய சொல்லாளனாகிய மெனெனியஸை அவனிடம் அனுப்பிப் பார்த்தனர். அதனாலும் பயனில்லை. ரோம் மக்கள் மனமுடைந்தனர் வீரர்களோ, "கோரியோலானஸ் வருவதாயின் நாங்கள் சண்டை செய்யமாட்டோம்; அவனை

எதிர்த்துத் துரத்திய திரிபூணர்களும் அவர்கள் கும்பல்களுமே போய்ச் சண்டை செய்யட்டும்,'' என்று கூறிவிட்டு விலகி நின்றனர்.

திரிபூணர் பாவம் இப்போது யாது செய்வர்! மறைந்துகிடந்த இடம்வரைத் தம் வினையின் பயன் தம்மை வந்து தாக்குகின்றது; தமது பிழையை இனித் தாமேதான் சரிசெய்ய முயல வேண்டும் என்று அவர்கள் கண்டனர். கண்டு, தமது பகைமை, தமது வெற்றிச் செருக்கு ஆகிய அனைத்தையுஞ் சுருட்டி ஒதுக்கி வைத்துவிட்டுக், குனிந்த தலையொடும் குழைந்த உருவொடும் கோரியோலானஸின் வீடு சென்று, அங்குத் திரிபுர எழுச்சிக் காலத்துக் கடவுளர் வரவுக்குக் காத்திருந்த மலைமகளும் திருமகளும்போன்று கவலையே வடிவாக வீற்றிருக்கும் வலம்னியாவையும் வர்ஜீலியாவையுங் கண்டு, அவர்கள் காலடியில் வீழ்ந்து, தமது பொறுக்கொணாப் பிழையைப் பொறுக்கவேண்டுமென்றும், தமக்காக அன்றேனும் ரோம் அன்னைக்காகவேனும் மனமிரங்கிக் கோரியோலானஸின் சீற்றத்தைத் தணித்து அவன் பகைமையினின்று தம்மையும் ரோமையும் பாதுகாத்தல் வேண்டும் என்றும் அழுது மன்றாடினர்.

வர்ஜீலியா தன் கணவனைத் துரத்திய காதகர்களைக் கண்களால் பார்க்கக்கூடப் பிடிக்காமல் முகத்தைத் திருப்பிக்கொண்டாள். ஆனால் நாட்டுப் பற்றும் வீரமுங் கொண்ட வலம்னியா, தன் மகன் மீதுள்ள பற்றையும் அவன்மீது பழி சுமத்

தியப அம் மக்கள்மீதுள்ள சீற்றத்தையும் ஒருவா றடக்கிக்கொண்டு அவர்களிடம், 'என்னல் என்ன ஆகும்? கெடுதல் செய்யும் ஆற்றலுள்ள நீங்களே கையற்றபோது நான் செய்வதென்ன?' என்ருள்.

திரிபூணர்: 'அன்னையே உங்களால் இப்போது ஆகாத காரியமன்று நாங்கள் கேட்பது; குற்றம் செய்த எங்கள்சொல் ஏருவிடினும், நீங்கள் எங்க ளுக்காகப் பரிந்து கேட்டால் கோரியோலானஸ் கட்டாயம் மனமிரங்குவான்; பெண்கள் அழ, அதிலும் மனைவியும் தாயும் அழ அவன் பார்த் திருக்கமாட்டான்,' என்றனர்.

வலம்னியா சரி என ஏற்றுக்கொண்டு வர்ஜீலியா வின் கண்களைத் துடைத்து முடி திருத்தி அவளை யும் உடன்கொண்டு புறப்பட்டாள். அவர்களைப் பின்பற்றி ரோம் நகரப் பெண்கள் அனைவரும்— அந்தணர் வீட்டுப்பெண்களும், வீரர் பெண்களும், வணிகர் பெண்களும், வேளாளர் பெண்களும், ஏழைப் பொதுமக்கள் பெண்டிருமாக எல்லாரும்— ஒருங்கு கூடி அணிவகுத்துச் சென்றனர். நகர மூதாட்டிகள் இரு மருங்கிலும் வரிசையாக அவர் களைத் துணை தாங்கிச் சென்றனர்.

கரிய உடை உடுத்துக் கலங்கி அழுத கண்க ளோடு தலைவிரிகோலமாய் வந்த அப் பெண்கள் ஊர்வலத்தை நோக்கி எதிரிகளாகிய வால்ஷியர் முதற் கொண்டு வீரமெல்லாம் இழந்து மனங் கனி வுற்று வழிவிட்டனர். படை வீட்டைக் காத்து நின்ற காவலர்கூடக் கோரியோலானஸின் தாய் என்று கேட்டதுமே கை கூப்பி வணங்கி உட் செல்ல விடுத்தனர்.

## ரு. வீரத் தாயும் வீர மகனும்

படை வீட்டினுள் தனதிருக்கை அறைக்கு வெளியே வந்து வாளூன்றிய நிலையில் கற்சிலை என நின்றான் கோரியோலானஸ்.

அவன் முகத்தில் தோன்றிய மாறுதல் ஒவ்வொன்றையும் தம் இரு கண்களும் இமையாடாமல் கவனித்து நின்றனர் வால்ஷிய மக்கள்.

அவன்முன் அவன் மனைவி முதலில் வந்து தலை குனிந்து வேனிலில் தளர்ந்து வாடிய கொடியென நின்றாள். அவள் கண்ணீர் அவள் கன்னங்களின் ஒளியையே கரைத்து மார்பகத்தை முற்றிலும் நனைத்துப் பின்னும் வழிகின்றது. அவனது கனிந்த பார்வை ஒன்றிற்கு நெடுநேரம் காத்து நின்றும் பயனில்லாதது கண்டு அவள் மனமழுங்கி விம்மி விம்மி அழுதாள்.

தானாடாவிட்டாலும் தன் சதையாடும் என்பதற்கிணங்க அவ்வழுகை அவன் உள்ளத்தை ஈர்த்து ஏர்க்காலுழுதது போல உழுதது. ஆனால் அவன் தன்னை அடக்கி அவள் பக்கமிருந்து தன் கண்களைத் திருப்பிக்கொண்டு, " உன் கணவன் ரோமர் தலைவனான கோரியோலானஸ். அவன் இறந்துவிட்டான். நான் வேறு கோரியோலானஸ்,—நான் வால்ஷியர் நண்பனான கோரியோலானஸ்—நான் ரோமின் பகைவன்,—உங்கள் பகைவன்—ஆதலால் என்னைவிட்டுச் செல்க," என்றான்.

வர்ஜீலியா இச்சுடு சொற்கள் கேட்டுத் துடிதுடித்து அவன் கால்களில் விழுந்தழுதாள். அவர்

கள் பிள்ளை ஐந்து ஆண்டுகூட நிரம்பாத சிறுவன் கயஸ் அவள் முன்தானையைப் பற்றி நின்று தந்தையின் கடுகடுத்த முகத்தைப் பார்க்கவும் அஞ்சி அம்மா அம்மா என்றழுதான்.

அக் காட்சி கண்டு கல்லும் கரையும். ஆனால் கல்லினும் கடுமையான வஞ்சினம் கோரியோலானஸின் மனத்திற் குடிகொண்டிருந்தது.

அவன் அவளையும் குழந்தையையும் எடுத்து அப்பால் நிறுத்தி, 'நீங்கள் போங்கள்,' என்றான்.

பெற்ற பிள்ளையையும் கண்டு கரையாத அவன் சீற்றத்தைக்கண்டு அவனைப் பெற்ற வீரத் தாயாகிய வலம்னியாகூட அஞ்சினாள். ஆயினும் தன் கடமையை எண்ணி முன்வந்து அவனை நோக்கிக் 'கோரியோலானஸ் பெண்டாட்டியையும் பிள்ளையையும் கண்டிரங்காத உன்முன் உன்னைப் பெற்ற தாயாகிய நானே வந்து நின்று மன்றாடுகிறேன்,' என்று கூறி மகனென்றும் பாராமல், அவனை வணங்கப்போனாள்.

தாய், தன்னை ஈன்றெடுத்த தாயா தன்னை வணங்குவது என்று துடிதுடித்த உள்ளத்தினனாய்க் கோரியோலானஸ் அணை மீறிய வெள்ளம் போல் முன் சென்று அவள் கால்களில் வீழ்ந்து, 'அன்னையே, எல்லாம் அறிந்த தாங்களும் இப் பணியில் இறங்கி என்னை இருதலைப் பொறியிலிடுவானேன்! எனது தன்மதிப்பு என் பழியில் அடங்கிக் கிடக்கிறது. அதிலிருந்து என்னை விலக்க நீங்கள் முயல்வானேன்! இதற்காகப் பகைவர் இடம் என்றும் பாராமல் இவ்வளவு தொலை தாங்

களும் இத்தனை மெல்லியலாரும் கால் நோக நடந்துவந்து மன்றாடும்படி நேர்ந்தது என் நெஞ்சைப் பிளக்கின்றது,' என்று கூறி அவள் கால்களைப் பற்றித் தழுவினான்.

அவள் அவன் தலைமீது கைவைத்து வாழ்த்தி, 'நீ ஒரு போர்வீரன். உன்னைப் போர்வீரனாக்கியதும், தன்மதிப்புடையவனாக்கியதும் நான். என்முன் உன் தன்மதிப்பு ஒரு தடையாகாது. மேலும் நான் உனக்கெப்படி அன்னையோ அம்படியே ரோமும் உனக்கு அன்னையாவாள் அவள்மீது போர் தொடுப்பது என்மீது போர் தொடுப்பது போலவேயாம். ஆதலால் அவ் வெண்ணத்தை விடு,' என்றாள்.

கோரியோலானஸ்,! 'தாயே, தாங்கள் கேட்பது இன்னது என்று தாங்கள் அறியீர்கள். தாங்கள் கேட்பின் நான் மறுக்கும் பொருள் யாதுமில்லை. உயிரையே கேட்பினும் நான் மறுக்க மாட்டேன். இந்தக் கணத்திலேயே கொடுப்பேன். ஆனால் இதில் என் தன்மதிப்பு, நட்பு, வாக்குறுதி ஆகிய யாவும் அடங்கிக் கிடக்கின்றன, இவ்வொரு வகையில் தங்கள் ஆணையை மறுக்க நேர்ந்தமைக்கும் தாங்கள் வந்த காரியம் நிறைவேறாமல் மீண்டேக நேர்ந்தமைக்கும் வருந்துகிறேன்.'

வலம்னியா: 'சரி, உன் தன்மதிப்பையும் வாக்குறுதியையும் நீயே வைத்துக்கொள்,' என்று சினந்து கூறிவிட்டுச் சரேலென்று திரும்பி வர்ஜீலியாவைப் பார்த்து, 'வர்ஜீலியா, இனி அவன் என் பிள்ளையுமல்லன்; உன் கணவனுமல்லன்;

கயஸ், நீயும் இனி அவனைத் தந்தை என அழைக்க வேண்டாம், அவனுக்கு ரோம் அன்னையின் மதிப்பைவிட ஒரு மதிப்பு இப்போது ஏற்பட்டு விட்டது. ரோம் அன்னையின் பாலுடன் கலந்துண்ட வீரத்திலும் மேலான வீரமொன்று அவனுக்கு இப்போது வந்திருக்கிறது. நாம் இனி அவன் பகைவர்களானதனல் பகைவர்களாகவே போவோம்,' என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

கோரியோலானஸ் மனத்தில் இம்மொழிகள் சுறுக்கெனத் தைத்தன. அவன் சட்டென அவள் முன் சென்று நின்று அவளைத் தடுத்தான். வர்ஜீலியாவும் கயஸும் விம்மி விம்மி அழுதனர். ஆனல் அவள், 'நீ ஏன் அழவேண்டும் வர்ஜீ? இனி உன் கண்ணீரை அவன் கவனியான்; தாய் தந்தையர் இருந்தும் தாய் தந்தை யற்றவன் போலக் கரைந்தழும் இக் கையேந்தலைக்கூடக் கவனியாத இக் கல் நெஞ்சனை நினைந்தழுவதை விடு; நாம் செல்வோம்,' என்றாள்.

அவள் சொல் ஒவ்வொன்றும் பழுக்கக் காய்ந்த வேல்கள்போல் அவன் நெஞ்சில் பாய்ந்தன. அவன், "அம்மா, என்மீது ஏன் இத்தனை பழிகளைச் சுமத்தவேண்டும், நான் வேறென்ன செய்யமுடியும்? ஒரு கெடுதலும் செய்யாத என்னிடம் இப்படி எல்லாம் முகம் திருப்பிக்கொண்டு போவானேன்,' என்றான்.

அவன் மனம் திரும்புவது கண்டு வலம்னியா, 'எங்கள் நிலைமையை நீ நினைத்துப் பார்த்தாயா?

நீ எனக்குப் பிள்ளை! இதோ இக் கற்பரசிக்கு நீ கணவன்! எல்லா மாதர்களும் ரோமின் வெற்றிக்கும் உறவினர் வெற்றிக்கும் வணக்கம் செய்யும் போது நாங்கள் இருவர்மட்டும் ரோமின் வெற்றிக்கும் வணக்கம்செய்ய முடியாமல், உனது வெற்றிக்கும் வணக்கம்செய்ய முடியாமல் தவிப்பதா? நீ ஒரு வீரனையிருந்து தாயையும் மனைவியையும் தவிக்கவிடலாமா? இதுவரை ரோமுக்காக உயிர் துறந்தவர் குலத்திற் பிறந்த நீ, ரோமர் உயிர் கொன்ற பழியையா இத் தீங்கறியா இளம் பாலன் தலையிலும் இவன் வழிவழிக் குடும்பத்தின்மீதும் சுமத்துவது?' என்றாள்.

கோரியோலானஸின் வீர உள்ளம் வெந்தீயிற் பட்ட மெழுகென உருகி வழிந்தது. அவன், 'நீங்கள் கூறும் உண்மைகளை நான் அறியாதவன் அல்லன். ஆனால், என்று உங்கள் ரோம் என்னைத் துரத்தியதோ அன்றே நான் ரோமுக்கு உரியவன் அல்லனாயினேன். என் கடமையும் ரோமுக்கு அன்று, இவ் வால்ஷியருக்கே. இவர்கள் என் நண்பர்கள்; அதோடு ஒப்பற்ற வீரர்கள். தமக்கு உழைத்த நண்பர்களைப் பழித்து நாட்டைவிட்டுத் துரத்தும் கோழைகள் அல்லர்,' என்றான்.

அவன் கூறியது உண்மையாயினும். தன் நாட்டின் குறைகளை எதிரிகள்முன் சொல்கிறான் என்று சீறிக் கண்டிக்க எழுந்த நாவைத், தான் வந்த நோக்கத்தை எண்ணித் தடுத்தடக்கிக் கொண்டு அவள் கூறுவாள்:

'எந்த வீரருக்காவது எந்த கோழையருக்காவது அன்று, இன்று நான் உன் மனம் கரையும்படி வந்து நின்று மன்றுடுவது. அவர்கள் உன் பகைவர்கள் என்பது உண்மையே. ஆனால் உனக்காக அழுவது அவர்கள் அல்லர். உன் தாய், உன் மனைவி, உன் பிள்ளை யாகிய நாங்கள் அழுகிறோம். நாங்களல்லவோ உன்னால் பிள்ளையற்றும், துணையற்றும், தந்தையற்றும் தவிப்பதுடன் தாய்நாட்டின் பழியையும் சுமக்க இருக்கிறோம்.'

கோரியோலானஸுக்கு "ஏன் இப் பெண்கள் முகத்தில் விழித்தோம். ஏன் இவர்கள் மொழிக்குச் செவி கொடுத்தோம்" என்றாயிற்று.

ஆனால் அத் தாயின் துயர் கண்டும்—அவள் பின் நின்று கண் கலங்கியழும் தன் துணைவியின்



கோரியோலானஸ் தாய்க்காகத் தன்னை மறுத்தல்

அழுகை கேட்டும்—அவ் விருவரையும் மாறி மாறிப் பார்த்துப் பின் தன்னையும் பார்த்து மருளும் தன் இளஞ் சிங்கத்தையும் அதன் எதிர் காலத்தையும் உன்னியும், அவன் தன் உயிரினும் இனிய பழியையும் அதனுடன் தன் உயிரையும் துறப்பதென்னும் பேருறுதியைக் கொண்டான்.

"அன்னையே! நீ ரோமின் ஒப்பற்ற புதல்வி என்பதைக் காட்டினாய்! என் தாய் என்பதைமட்டும் காட்டத் தவறுகிறாய்; அதனால் என்ன? நான் மகன்தான் என்பதை நான் காட்டுகிறேன்.

"அன்னையே! என் மனித உணர்ச்சியை என் பெருமையைக் குலைத்த ரோம், உங்களை அனுப்பியது ஏன் என்று இப்போது தெரிந்தது. நீங்கள் ரோமின் உயிருக்கு மன்றாட வரவில்லை. ஒரு ரோமன் உயிருக்கு—என் உயிருக்கு—மன்றாட வந்தீர்கள். அவ் வுயிர்க்கு இனி விலையில்லை. ஏனெனில் அதனினும் மிக்க மானத்தையே நீங்கள் விலைகொண்டு செல்கிறீர்கள். உயிரையும், உயிரினும் இனிய பழியையும் அப் பழியினும் மிக்க தான என் நண்பர் வால்ஷியருக்களித்த வாக்குறுதியின் நிலையையும் நீங்கள் கொண்டு செல்லுகிறீர்கள். நீங்கள் செல்க!

"உங்கள் பெருமைக்கும், உங்கள் குடிப் பெருமைக்கும், உங்கள் நாட்டுப் பெருமைக்கும் என் உயிர் இரையாவதாக," என்றான்.

அவன் சொற்களின் பொருள் அவளுக்கோ ஏழை வர்ஜீலியாவிற்கோ விளங்கவில்லை. ஆனால் தம் வேண்டுகோளை அவன் ஏற்றான் என்றுமட்டும் அவர்கள் கண்டனர்.

ரோமின் பக்க நோக்கி அவர்கள் கையெடுத்துக் கும்பிட்டுக், 'கோரியோலானஸ், உன் பெருந்தன்மை கண்டு ரோமின் மனம் குளிர்க,' என்று கூறி அந் நற்செய்தியை ரோம் மக்களுக்கு அறிவிக்க மீண்டேகினர்.

## ள. முடிவு

அவர்கள் செல்வதைத் தன் உயிர் செல்வதாக எண்ணிப் பார்த்து நின்றான் கோரியோலானஸ். வால்ஷியரும் செய்வதின்னதெனத் தெரியாது திகைத்து நின்றனர். அவன் சொற்களை ஒருவராயினும் முழுமையாக உணரவில்லையாயினும், தாய் வந்த காரியம் வெற்றியாயிற்று என்று மட்டும் கண்டனர்.

உயிரைப் பறிகொடுத்து அதனை மீட்டுக் கொண்டுவரப் போனவர்களுக்காகக் காத்திருந்தவர்கள் போல் கவலையுற்றேங்கிய ரோம் மக்கள், தம் மாதர் அனைவரும் வலம்னியாவின் தலைமையில் மீள்வதைக் கண்டனர். அவள் முகத்தில் வீரக் களை மிளிர்ந்தது. வர்ஜீலியாவிடம் அக் களையில்லையாயினும் அவள் அழுகை ஓய்ந்து அமைந்த தோற்றத்துடனிருந்தாள். சிறுவன் கயஸை அவள் கையிலெடுத்து அணைத்து முத்தமிட்டுக்கொண்டே வருகிறாள். அவர்கள் நடையிலிருந்தே மக்கள், வெற்றி தமதென உணர்ந்தனர். கிட்டவந்ததும் வலம்னியா 'ரோம் வாழ்க' 'கோரியோலானஸ் வாழ்க,' என்றாள். பெண்கள் அனைவரும் தொடர்ந்து 'ரோம் வாழ்க! ரோம் வாழ்க! கோரியோலானஸ் வாழ்க!' என்று ஆரவாரித்தனர்.

இதன் எதிரொலிபோலக் கோட்டை முழுமையுமே, உயிர் வந்ததுபோல், 'ரோம் வாழ்க, கோரியோலானஸ் வாழ்க,' என்று ஆரவாரித்திரைந்தது.

வால்ஷியர் படைவீடுமட்டும் ஒளியிழந்தது.

கோரியோலானஸ் வீரமும் அவன் உயிரும் அவன் உடலைவிட்டு விடைகொண்டு சென்றுவிட்டன என்று தோன்றிற்று.

சிங்கம் போன்ற இறுமாப்புடைய அவன் உருவம் சிறியதொரு முயலென ஒடுங்கி நடுங்கிற்று.

அவன் தன் வாளை உறையிலிட்டுவிட்டு நேராக ஆபீதியஸ் இருக்கையை அணுகி அவனிடம் அவ்வாளை உறையுடன் கொடுத்துத் 'தாய் நாட்டின் பகைவன், தன் உறவினர் நாட்டின் துணைவன் ஆவனோ? நான் உங்களுக்கும் பகைவனே. என் உயிரைக்கொள்க,' என்றான்.

அவன் வீரனென்று தெரிந்தும் அவன் மீதுள்ள பொறாமை ஒரு புறம், அவனால் அடைந்த ஏமாற்றம் ஒருபுறம் ஆகநின்று ஆபீதியஸையும் அவன் வீரராகிய வால்ஷியரையும் மனித உணர்ச்சியற்றவராகச் செய்துவிட்டது.

படையிழந்து பகையுணர்ச்சியும் இழந்த அவனை அவர்கள் அவன் வாய்மொழிக்கிணங்கவே, 'தாய் நாட்டுக்குப் பகைவன், அண்டியவர்க்கும் பகைவன், மனிதவகுப்புக்கே ஒரு கோடாரிக் காம்பு,' எனக் கூவிக்கொண்டு அவனைச் சூழ்ந்து

வாளாலும் ஈட்டியாலும் கட்டையாலும் தாக்கி வெட்டியும் குத்தியும் எறிந்தும் அடித்தும் அவனைக் கொன்று அவனுடலைச் சிதைத்தனர்.



கோரியோலானஸின் முடிவு.

பின் அவர்கள் அவன் குடலை ஈட்டியில் குத்திக் கொடியாகப் பிடித்துக்கொண்டு, ரோம்மீது தங்களுக்குள்ள சீற்றமனைத்தையும் அவன்மீதே காட்டி, ரோம் மக்கள் கண்காண ரோம்நகர்க் கோட்டையைச் சுற்றிச்சென்று, 'கோரியோலானஸ் வீழ்க; வால்ஷியர் பகைவன் வீழ்க; வஞ்சக ரோமன் வீழ்க; என்று கதறினர்.

அவன் முடிவறிந்த ரோமர் தீ மிதித்தவர் போலத் துடிதுடித்தார். வர்ஜீலியா அத் துணுக்குறு செய்தி காதில் விழாமுன் ஒரே அலறுய் அலறி வீழ்ந்து மாண்டாள்.

வலம்னியாவும், தன் மகனை—தன் வீர மகனை—நன்றிகெட்ட அந் நகருக்கே பலிகொடுத்த துயர் தாளாது வாளால் தன்னை மாய்த்துக்கொண்டாள்.

வாழ்வுநாளில் பகைத்துக்கொண்ட கோரியோலானஸை இழந்து தாழ்வடைந்து, நாணிழந்த நங்கைபோல் நலனிழந்து மாழ்கியது ரோம் நகரம்.

# 3. அந்தோணியும் கிளியோப்பாத்ராவும்

## கதை உறுப்பினர்

### ஆடவர்

1. **அந்தோணியோ :** ரோம வீரன், ஒப்பற்ற படைத் தலைவன். ஆசியா நாடுகளை யும் எகிப்தையும் வென் றடக்கியவன் - கிளியோப் பாத்ராவின் ஆருயிர்க் காத லன். அவள் காதலால் வீர வாழ்வும், அரசியல் வாழ் வும் இழந்தவன்.

**மூவருள் முதல்வன்.**

2. **அக்டேவியஸ் ஸீஸர் :** மூவருள் ஒருவன்— ஜூலியஸ் ஸீஸரின் புதல்வன்- அரசி யல் சூழ்ச்சியில் வல்லவன். மற்ற இருவரையும் எதிரி களையும் வைத்துச் சொக் கட்டாடிய தலைவன்.

3. **லெப்பிடஸ் :** மூவருள் கடையானவன்- அக்டேவி யஸால் அந்தோணியின் ஆற்றலைக் குறைக்க உயர்த் தப்பட்ட பெருங்குடி மகன். செல்வன், வெள்ளையுள்ள மும், பெருந்தன்மையு முடையவன்.

4. **பாம்பி :** மூவரின் பொது எதிரி. கடற்படை வலிமை யுடையவன். பெருந்தன் மையும், நம்பிக்கையும் உடையவன்.

5. **ஏனோபார்பஸ் :** கிளியோப் பாத்ராவின் அமைச்சன். படைத்தலைவன். அரண் மனைப் பணியாளர் தலை வன். நண்பன். காதல் தோழன்.

6. **அந்தோணியின் துணைத் தலை வன் :** அந்தோணியிடம் பற் றுடையவனாயினும் தவறு களைக் கண்டிக்க எதிரி யிடம் சென்று அவன் பெருந்தன்மையினால் பின் னும் கழிவிரக்கங்கொண்ட வன்.

7. **தூதர்.**

### பெண்டிர்

1. **கிளியோப்பாத்ரா :** எகிப்து அரசி. டாலமிகளின் வழி வந்தவள். அழகி, ஒப்பற்ற சொல் திறமுடையவள். ஸீஸர், பாம்பி முதலிய வரைக் காதல் திறையாகக் கொண்டு அந்தோணியின் காதலிற்குத் தன்னைத் திறை யாக்கிக் கொடுத்தவள்.

2. **பல்வியா :** அந்தோணியின் முதல் மனைவி.

3. **அக்டேவியா :** அந்தோணி யின் இரண்டாம் மனைவி.

# கதைச் சுருக்கம்

ஜூலியஸ் ஸீஸருக்குப் பின் ரோம் அரசியல் மூவர் கையில் சிக்கியது. பொது மக்கள் உள்ளங் கவர்ந்த வீரன் அந்தோணி, ஜூலியஸ் ஸீஸர் மகன் அக்டேவியஸ் ஸீஸர், லெப்பிடஸ் என்ற செல்வப் பெருங் குடிமகன் ஆகியவரே இம் மூவர். அவருள் அந்தோணியே ஒப்பற்ற வீரனுதலின் கீழ் நாடுகளனைத்தையும் எகிப்தையும் வென்றடக்கினுன். ஆனல் முன் ஸீசரையும் பாம்பியையும் காதல் சூழலிற் சிறைகொண்ட அரசி கிளியோப்பாத்ரா அவனையும் கவர்ந்தாள்.

அரசியல் சூழ்ச்சிவல்ல அக்டேவியசினைச் சிலநாள் அந்தோணியின் முதல் மனைவி பல்வியா எதிர்த்து நின்றாள். அவள் இறந்தபின் அக்டேவியஸ் அந்தோணியை வருவித்துத்தன் ஒன்று விட்டதங்கை அக்டேவியாவை அவனுக்கு மணந்து அவனைப் பிணைத்தான். பின் அவனுதவியால் பாம்பி என்பவனைத் தம்முடன் நட்பாய்ச் செய்தான்.

ஆனல் விரைவில் பாம்பி இறந்தான். லெப்பிடனை நயமாகக் குற்றஞ் சாட்டி அக்டேவியஸ் கொன்றான். பின் அந்தோணியும் பகை தொடுக்க முயன்றான். கிளியோப்பாத்ரா காதல் வாழ்வால், அவன் எல்லா நாடும் பிடிக்குமளவும் அந்தோணி அசையவில்லை. எகிப்தை எதிர்த்த பின்னும் அவள் பிணக்கு வழி நின்று போரில் தோல்விகள் பெற்றான். இறுதியில் தம் காதல் வாழ்விலேயே அழுந்தி இருவரும் தற்கொலை செய்து எகிப்தை அக்டேவியஸுக்கு விடுத்தனர். உலகியல் சூழ்ச்சியில் வல்ல அக்டேவியஸ்கூட அந்தோணியின் வீரத்தின் அருமையையும் அதனை விழுங்கிய காதலின் பெருமையையும் பாராட்டினுன்.

# 3. அந்தோணியும் கிளியோப்பாத்ராவும்

## ௧. வென்றி வீரனையும் வென்ற மெல்லியலாள்

கிளியோப்பாத்ரா எகிப்தின் ஒப்பற்ற அரசி. அவள் கரிய நிறமுடையவளாயினும் மாசுமறுவற்ற வடிவழகி. அவள் தன் ஒரு பார்வையால் உலகையே ஆட்டிவைக்கும் திறமுடையவள்.

மக்களை அறியும் நுண் திறத்திலும், அவர்களை மகிழ்ச்சியுள் ஆழ்த்தும் நயத்திலும் அவளுக்கு யாரும் ஈடு அற்றவர். அவள் நாத் திறனே சொல்லுந் தரமுடையதன்று. உலகின் கவிஞர்களும் நாடக ஆசிரியர்களும் அவளிடமிருந்தே தம் கலைத் திறனைக் கடன் வாங்கவேண்டும்.

எகிப்துநாட்டு மக்கள் மாயத்திற்கும் மந்திரத்திற்கும் பேர்போனவர்கள். அவர்கள்கூட, அவள் நாவசைந்தால் உலகசையும் என்றும், அவள் முக அழகு சற்றுக் குறைந்திருந்தால் உலகின் வரலாறே முற்றிலும் மாறியிருக்குமென்றும் கூறுவராம்.

இங்ஙனம் கூறியதில் வியப்பு எதுவும் இல்லை. அவள் முதலில் மணந்த எகிப்து அரசன் டாலமிக்குப் பின், உலகை வென்ற வீரர்களும் ரோமப் பெருந் தலைவர்களுமான பாம்பியும் ஸீஸரும், ஒருவர்பின் ஒருவராக அவள் கவர்ச்சியுட்பட்டு அவள் காலடியில் துவண்டு கிடந்தனர். அவர்கள் உலகினர் அஞ்சும் வீரமும் வரலாற்றில் நின்று நிலவும் புகழும் உடையவராயினும், அவள் அழகின்முன், அவள் மாய மிரட்டல்களின்முன், தலை வணங்கி நின்றனரேயன்றி வேறுஞரல்லர்.

ஸீஸருக்குப் பின் ரோமப் பேரரசைத் தன் வீரத்தாலும் தோள் வலியாலும் ஆளுந் திறமுடையவன் அந்தோணி என்ற வீரனே. ஆயினும் அவன் பெருந்தன்மையுடையவன்; இன்ப வாழ்விலும், நண்பருடன் கூடிக் குலாவுவதிலும் விருப்புடையவன்; அரசியல் பெருமையை நாடியவன் அல்லன். ஆகவே ரோமின் அரசியல் அவன் காலடியில் கிடப்பினும் அவன் அதனை ஏற்றுப் பேரரசன் ஆகாமல் அதனைக் கைப்பந்துபோல் வைத்து விளையாடினான்.

ஸீஸரின் மகனாகிய அக்டேவியஸ் ஸீஸர் அந்தோணியின் மனப்போக்கையும் நாட்டின் நிலையையும் கண்டு, அவற்றைத் தனது முற்போக்கிற்குக் கருவியாகப் பயன்படுத்த எண்ணினான். ரோமப் பெருமக்களுள் செல்வாக்குடைய லெப்பிடஸ் பெருமகனையும், இவ் வெண்ணத்திற்கேற்ப, அவன் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். இம் மூவரும் ரோமப் பேரரசின்மீது ஒருங்கு ஆட்சி

செலுத்துவதாக உடன்படிக்கை செய்துகொண்டனர். ரோமப் பேரரசின் பெயரால் கீழ் நாடுகளை வென்றடக்குவதாக அந்தோணி ஏற்றுக்கொண்டான். அதன்படி அவன் சென்று பார்த்தியரும், பாக்தியரும், பாரஸீகரும், அயோனியரும் வெருண்டோடும்படி போர்புரிந்து பின் எகிப்தையும் வென்று கீழ் அடக்கினன். ஆயின், அந்தோ! நஞ்சூட்டிய அமிழ்தாகிய கிளியோப்பாத்திராவின் வனப்பில் ஈடுபட்டு அவன் தன் வீரமும் உயர்வும் இழந்ததோடு, தன் வெற்றி விழாவை அறவே மறந்து காதல் விழா அயர்வானுயினன்.

அந்தோணிக்குப் பல்வியா என்ற ஒரு மனைவியுண்டு. அவள் மிகுந்த அறிவும் திறமையும் உடையவள் ஆயினும், உணர்ச்சி வசப்பட்ட அந்தோணி போன்ற ஆடவனைக் கட்டுப்படுத்தப் போதிய கவர்ச்சியற்றவள். அவன் உயர்வையும் வீரத்தையும் அவள் நன்கறிவாள். அவனை யொத்த வீரனைக் கணவனுகப் பெற்றதற்காக அவள் இறும்பூது எய்தினுள் என்பதிலும் ஐயமில்லை. ஆனல் அவன் உள்ளத்தைக் கொள்ளைகொள்ள அவளால் முடியவில்லை. உயர் குடியிற் பிறந்த அவளுக்கு அரசியல் சூழ்ச்சிகள் நல்ல பாடமாயிருந்தன. அவற்றை எதிர்க்கும் எண்ணம் கணவனிடம் இல்லை என்பதை அவள் கண்டு அவன்மீது சீற்றம் கொண்டாள். இதனல் காதலுறவு பறந்தது. அவன் செய்ய வேண்டும் அரசியல் நடவடிக்கைகளை எடுத்து அவள் அவன் அரசியல் அமைச்சனுகச் செயலாற்ற மட்டுமே அவளால் முடிந்தது.

இந்நிலையில் அவள் அந்தோணியின் உடன் பிறந்தான் உதவியால் ஒரு சிறுபடை சேர்த்து ஸீஸரை எதிர்த்துப் போரிட்டாள். இங்ஙனம் செய்தது உண்மையில் ஸீஸரின் வன்மையைக் குறைப்பதற்காக மட்டுமன்று; அந்தோணியை ரோமிற்குக் கொண்டுவருவதற்காகவுமே யாம்.

கேவலம், பெண்ணாகிய பல்வியா இங்ஙனம் ஆடவர்களை வீரத்திலும் திறனிலும் மடக்குவது தெய்வத்திற்குப் பொறுக்கவில்லை போலும்! அது இந்த இக்கட்டான நிலையில் அவளைத் தன் பக்கம் அழைத்துக்கொண்டது.

கிளியோப்பாத்ராவின் கண் பார்வை என்னும் நிலவொளியில் அவளது கருங்குழ லென்னும் முகிலினிடையே விளையாடி, உலக ஆட்சியையும் ரோம் அரசியலையும் மறந்திருந்த அந்தோணி, பல்வியா இறந்தது கேட்டு வருந்துவதற்கு மாறாகத் தன் இன்ப வாழ்வின் இடையூறு ஒன்று அகன்றதென்று கருதி மகிழ்ந்தான்.

கிளியோப்பாத்ரா இதுவரை வீரர், அரசர்—பேரரசர் முதலிய பலர் நெஞ்சம் திறைகொண்டு அவர்கட்கு ஆட்படாது நின்றவள் எனினும், அந்தோணியைக் கண்டதுமே அவன்பால் தன் நெஞ்சம் தன்னையும் மீறிச் செல்வதை உணர்ந்தாள். இதுவரையிற் பிறர் நெஞ்சில் வீறுற இருக்கை கொண்டதன்றித் தன் நெஞ்சில் பிறர்க்

கிடந்தாராத அத் தையலர்மாணிக்கம், இன்று அதே நெஞ்சில் வேறெதற்கு மிடமின்றி அவன் வடிவழகும் பண்பழகும் வந்து நிறைந்ததை உணர்ந்தாள்.

எகிப்தில் அந்தோணி வாழும் வாழ்க்கையைப் பற்றி ரோமிற் பலரும் பலவாறு தத்தம் மனம் போனபடி பிதற்றுவாராயினர். அவற்றைக் கேட்டு மூவர் ஒப்பந்தத்திற் கையெழுத்திட்ட மற்ற இருவரும் மனங் கவன்றனர். அவர்களுக்குப் பொது எதிரியாகிய பாம்பியிடம் அரிய கடற்படை மூன்று இருந்தது. அதனால் அவர்கள் எளிதிற் பேரரசுமுற்றும் சென்று அடக்கியாள முடியாத படி அவன் அவர்களைத் தடைசெய்து கொண் டிருந்தான். அந்தோணியின் முழு ஒத்துழைப் பின்றி அவர்களால் அவனை எதிர்த் தடக்கமுடியா தென்று அறிந்து, அவர்கள் அந்தோணிக்கு மேன்மேலும் தூதரை அனுப்பி அரசியல் வாழ்வி லீடுபடுமாறும், ரோம் நகர்வந்து தம்முடன் கலக்கு மாறும் வேண்டினர்.

ஆனால் இவ்வரசியல் தூதர்கள் வரவு அந் தோணியின் காதல் வாழ்வாகிய நறுந்தேனி டையே அத்தேனைக் குடிக்கவொட்டாமல் கெடுக்க வரும் ஈக்களின் வரவு போன்றிருந்தது. அரிய துயிலுளாழ்ந்தவன் உடலிற் கொசுக் கடித்தால் அவன் தூக்கத்தோடு தூக்கமாக அதனை அறைந்து கொன்று மீண்டுந் தூங்குவதுபோல, அவன் முதன் முதல் வந்த தூதனை வரவேற் கவோ, அவன் யாரிடமிருந்து வந்தானென்று

கேட்கவோகூடச் செய்யாமல், பணியாட்கள் மூலமே அவனைத் துரத்திவிட்டான். இதுகேட்டு ஸீஸர் மிகவும் வெகுண்டா னெனினும், இடமும் வேளையு மறிந்து அதனை அடக்கிக்கொண்டு பொறுமையுடன் மீண்டும் மீண்டும் ஆளனுப்பிக் கொண்டேயிருந்தான்.

## உ. மணமும் அரசியலுறவுகளும்

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்ற உண்மைப்படியே, பல்வியாவின் பிரிவுச் செய்தியால் ஏற்பட்ட நல்லுணர்ச்சியாலோ, அந்தோணியின் மனத்திலுங்கூடச் சிலநாளில் ஒரு வகையான ஆண்மை யுணர்ச்சியும் மனச் சான்றும் எழுந்து அவனது வாழ்க்கைப் போக்கை —சோம்பல் வாழ்வைக்-குறைகூறத் தொடங்கின. பகைச் சிங்கத்தின் உறுமல் கேட்டுப் பெண் சிங் கத்தின் குழைவையும் குட்டிகளின் நடுக்கத்தை யும் பாராமல் வீறிட்டெழும் சிங்க வேற்றைப் போல அவன் கிளியோப்பாத்ராவின் காதலாகிய பட்டுநூல் வலையை அறுத்தெறிந்து ரோமிற்குப் புறப்பட்டான்.

அந்தோணிமீது, அவன் காதல் நெஞ்சின் மீது தான் ஆட்சி செலுத்தினும், அதே நெஞ் சிற்கு இன்னொரு பகுதி—வீரப்பகுதி—உண்டென் றும், அதைத்தான் உறங்கவைக்க முடியுமயன்றி ஒழிக்க முடியாதென்றும், அது விழித்துவிட்டால் அவனைத் தான் அடக்கியாள முடியாதென்றும் கிளியோப்பாத்ரா நன்கு அறிவாள். இப்போது

அவன் வீர உரு எடுத்துவிட்டபடியால் அவள் அவன்முன் காற்றிலாடும் மாந்தளிரென நடுங்கினாள். அவள் ஆணைப்படி, அவள் சேடியர் அவளுக்கு உடல் நலமில்லையென்றும், அவள் சினங்கொண்டுள்ளாள் என்றும், பலவாறு பேசிப்பார்த்தும் அவன் போவதிலேயே முனைந்து நின்றமை கண்டு அவனிடமிருந்து ஊடித் தன் அறை சென்று, அவனைப் பிரிந்த துயர்பொறாது பிதற்றி அப் பிரிவு நாட்களின் ஒவ்வொரு நொடியையும் ஒவ்வொரு சிறிய ஊழியாக எண்ணிக் கழித்தாள்.

பாம்பியால் அலைக்கழிக்கப்பட்டு நின்ற ஸீஸரும் லெப்பிடஸூம் அந்தோணியை ரோமில் கண்டதே, காட்டில் அலைந்து பசியாலும் விடாயாலும் வருந்திய மக்கள்முன் வேடச்சிறுரும் சிறுமியரும் இன்முகத்துடன் தேனும் தினைமாவும் ஊனும் கொண்டுவந்தா லெப்படியோ அப்படிக் களிப்புற்றனர். இதுவரை ஒருவருக்கொருவர் செய்த தீமைகளைப்பற்றிக்கூட வற்புறுத்திப் பேசாது தோழர்களுடன் குத்தலாகப் பேசு முறையில் எடுத்துக் காட்டிவிட்டுப் பின் இணக்கமாக ஒருவருடன் ஒருவர் கூடிக் குலாவலாயினர். இவ்வொற்றுமை நெடுநாள் நிலைத்திருந்தாலன்றித் தன் காரியங்கள் நடைபெறா என்றறிந்த அக்டேவியஸ் ஸீஸர், தன் நண்பர்களை அந்தோணியின் மனப்பாங்கறிந்து தன் ஒன்றுவிட்ட உடன்பிறந்தாளாகிய அக்டேவியாவை அவன் மணக்கும்படி தூண்டச் செய்தான்.

அந்தோணியின் தெளிந்த மனச்சான்று இப்போது கிளியோப்பாத்ராவுடன் தான் நடத்திய

சோம்பல்வாழ்வை வெறுத்ததாகலின், இனித் தான் நல் உணர்வுடைவனுய் ஆண்மை வாழ்வு வாழ இத்தகைய மணம் உதவும் என்று நினைத்



அக்டேவியா மணம்

தான். இதற்கேற்ப அக்டேவியாவும் எளிய குணமும் உயர்ந்த கடமையுணர்வும் உடைய வளாய்ச் சூது வாதற்றிருந்தமையால், அவள் அன்று அவனது இப்பிரிவு மனப்பான்மையில் மிகவும் உயர்ந்தவளாய்க் காணப்பட்டாள். ஆகவே விரைவில் அவ்விருவரையும் ஸீஸர் மணமுடித்து வைத்துவிட்டான்.

அவர்களும் சிலநாள்கள் கிளியோப்பாத்ரா வின் மாயவலையினின்றும், ரோமின் அரசியல்

சிக்கல்களினின்றும் விலகி நின்று தூய மண வாழ்க்கையி லீடுபட்டனர்.

ரோமில் மூவரும் மீண்டும் ஒருங்கு சேர்ந்ததும் இணக்கமடைந்ததும் பாம்பியின் வலிமையைக் குறைத்தன. அவர்களை இனி எதிர்ப்பது அரிது என்று கண்டு அவன் அவர்களுடன் உறவு கொண்டுவிட எண்ணினன். அதற்கு அவர்களும் உடன்பட்டனர். உடன்படவே பாம்பி தன்னுடன் கப்பலில் வைத்து விருந்துண்ண மூவரையும் வருமாறு அழைத்தான். முக்கனிகளும் தேனும் பாலும் சிற்றுண்டிகளும் அவர்கள் நட்பிற் கறிகுறிகளாக வழங்கப்பட்டன. இனிப் போராட்டமின்றி நால்வரும் தம்முள் ஒருவரையொருவர் சரிசமமாகக்கொண்டு வாழ்வதென்றும், ஒருவர் பங்கில் ஒருவர் புகுவதில்லை என்றும் உறுதி கூறிய பின் அவர்கள் பிரிந்தனர்.

ஆனல் அந் நான்கு உள்ளங்களில் ஒன்றுமட்டும் இந் நட்பை ஒரு மேலுறையாகக் கொண்டு உள்ளூர நஞ்சைக் கலந்து ஒளித்து வைத்துக் கொண்டிருந்தது. அதுவே ஸீஸரது உள்ளமாகும். உலகைமுற்றிலும் தானே ஆளவேண்டுமென்னும் ஓர் எண்ணத்தையும் அதற்கான சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் அல்லாமல், நட்பு, காதல், நம்பிக்கை ஆகிய இத்தகைய எண்ணங்கள் எதற்கும் அவன் அதில் இடங் கொடுக்கவில்லை. ஆகவே பாம்பி, அவர்களைத் தம் விருந்தினர் என்றெண்ணிக் கப்பலில் அவர்கள் தன்னிடம் வந்து சிக்கிய போது அவர்களைச் சிறைபிடிக்க வேண்டுமென்று

கூறிய தன் துணைத்தலைவன் மொழியைச் சினந்து கண்டிக்கவும், லெப்பிடஸூம் அந்தோணியும் தம் நலனை மறந்து அக்டேவிஸ் ஸீஸருக்கு உயர்வும் ஒப்புரவும் நல்கவும், அக்டேவியஸ் ஒருவன்மட்டும்



ஸீஸர்

நெஞ்சில் வஞ்சங்கொண்டு அவர்களனைவரையும் பிரித்து அழிக்கும் எண்ணங் கொண்டவனாயிருந்தான்.

ஊழ் இவ்வகையில் அக்டேவியஸூக்குப் பேருதவி புரிந்தது. முதலாவதாகப் பாம்பி தற்செயலாகத் தன் பணியாள் ஒருவன் கையால் கொலையுண்டான். அதைக்கேட்டதும் இனி லெப்பிடஸ் உதவி வேண்டுவதில்லை என்று கண்டு அக்டேவியஸ், அவன் பாம்பியுடன் மறைவாக எழுத்துப் போக்கு வரவு வைத்திருந்தான் என்று பொய்க்

குற்றஞ் சாட்டினன். அக்டேவியஸிடம் நம்பிக்கை வைத்து அவனை ரோமின் தலைவன் என்றே கொண்ட பெருந்தன்மையும் நாட்டுப் பற்றும் மிக்க லெப்பிடஸ், தான் தன் நாட்டுத் தலைவனது நம்பிக்கையை யிழந்ததாகக் கண்டதே தானகவே தன் நிலையை விட்டு அவனிடம் சிறையாளியாக வந்து நின்றான். அக்டேவியஸ் அப் பெருந்தகை லெப்பிடஸைப் பாராட்டுவதற்கு மாருக அவன் குற்றத்தை வற்புறுத்தி அவனைக் கொலை செய்தான்.

ரோமப் பேரரசின் பங்காளிகளுள் இப்போது அக்டேவியஸுக்கு எதிரியாக மீந்திருந்தவன் அந்தோணி ஒருவனே. தனது மூன்று எதிரிகளிலும் வீரத்தாலும் திறனாலும் தனக்குப் பேரிடர் தரத்தக்க எதிரி அவனே என்பது அக்டேவியஸுக்குத் தெரியும். அதனால் அவன் தன் தங்கைமூலம் அவனைப் பிணித்துவைக்க எண்ணினன். ஆனல் இப்போது பாம்பியும் லெப்பிடஸும் போனபின், அதுவும் அவன் கிளியோப்பாத்ராவின் வலையில் பிணிப்புண்டிருக்கையில் அவனை எதிர்ப்பது அவ்வளவு கடுமையானதன்று என்றுங் கண்டான். அந்தோணியும் தனது மனச்சான்றுக்கு இடங்கொடுத்த அளவே அக்டேவியாவுக்கு இணக்க முடையவனயிருந்தான். உள்ளுணர்ச்சியும் இன்ப விழைவும் ஏற்பட்டதே இல்லை; அவள் அவனுக்குக் கரும்பின் நறிய சாற்றினின்று பிரித்தெடுக்கப்பெற்ற வெள்ளியசக்கைபோலத் தோன்றினள். அக்டேவியா உலகமெச்சும் மனைவியாதற் குரியவளேயன்றித் தன்

உள்ளங் கவர்ந்தவள் அல்லள் என்று அவன் கண்டு கிளியோப்பாத்ரா இருந்த இட நோக்க லானன்.

## ௩. பிரிவும் பிரிந்தவர் கூடலும்

அந்தோணி தன்னுடன் இருந்தபொழுது அவன் தன் காதலுக்கு அடிமை என நினைத்திருந்த கிளியோப்பாத்ரா, இப்போது உண்மையில் தானே அவன் காதலுக்கு அடிமை என்பதை உணர்ந்தாள். அவள் உடலும் உயிரும் இப்போது இடைவிடாது அவனது தொடர்பு, அவன் தோற்றம், அவன் மொழிகள் இவற்றிலேயே நாட்டமாய் நின்றன. ஊணிலும் உடையிலும் ஆடல் பாடல் களிலும் அவள் கொண்ட விருப்பு அனைத்தும் அந்தோணி என்னும் ஒரு பொருளால் வரும் இன்பத்திற்குக் கருவிகளாகமட்டுமே இப்போது தோன்றின. அவள் சேடியர் எவ்வளவு வேண்டினும் அவள் அவற்றிலோ பிற அரச காரியங்களிலோ மனஞ் செலுத்தாமல், அந்தோணியையே நினைத்து நினைத்துப் பெருமூச்சு விட்ட வண்ணம் இருந்தாள்.

ரோமில் அந்தோணி எந்நிலையில் இருக்கிறான், என்னென்ன செய்கிறான் என்பதையறிய, கிளியோப்பாத்ரா மறைமுகமாக ஒற்றரை அனுப்பியிருந்தாள். அவர்கள் மூலமாக வந்த செய்திகள் அவள் மனத்தைப் பின்னும் மிகுதியாகக் குழப்பின. அந்தோணி தன் காதல் தளையினின்று விடுபட்டதன்றி, அரசியலுள் முழுமனதுடன் ஈடுபட்டு மூவருடன் ஒத்துழைத்தது அவள்

மனத்தை வாள்போல் ஈர்த்தது. அதன்பின், அவன் அக்டேவியாவை மணந்தான் என்ற செய்தியைக் கேட்கவே, அவளடைந்த சினத்திற்கும் துயருக்கும் எல்லையில்லை.

அச் செய்தி கொண்டுவந்த ஒற்றனையே முதலில் அவள் சினந்து பாய்ந்து கொல்ல இருந்தாள். அவள் பணியாட்களுள் தலைவனான **எனோபார்பஸ்** அவளுக்குத் தேறுதல் கூறி அவளை அமைதிப்படுத்தினான். அந்தோணி அக்டேவியாவை மணந்தது உண்மையில் ஸீஸருடன் அவனைப் பிணைப்பதன்று, முரணைச் செய்வதேயாம் என்று அவன் எடுத்துக் காட்டினான். அதோடு அக்டேவியா அழகற்றவள் என்றும், அந்தோணியின் உள்ளக் கிளர்ச்சிக்கு ஒரு நொடியும் ஈடு செலுத்தக் கூடாதவள் என்றும் அவன் கூறவே, அவள் தன் துயரை மறந்து அந்தோணியை மீண்டும் தன் பக்கம் இழுக்கும் வழி யாதென ஆராயலானாள்.

இச்சமயம் அக்டேவியா தன் கணவனைவிட்டு அகன்று தன் தமையனைப் பார்க்கச் செல்கிறாள் என்ற செய்தி வந்தது.

ஸீஸர் இப்போது நேரடியாக அந்தோணியைக் குறைகூறவும், அவன் நண்பர்களைச் சிறைப்படுத்தி ஒறுக்கவும் தொடங்கினான். இவற்றைக் கேட்டும், லெப்பிடஸினிடம் ஸீஸர் நடந்துகொண்ட வகையை அறிந்தும் அந்தோணி அவன்மீது சீற்றங்கொண்டு அதனை அக்டேவியாவினிடமும் காட்டினான். கணவனையும் தமையனையும் ஒருங்கே

பற்றிநின்ற அக்டேவியா தமையனை நேரே சென்று திருத்த எண்ணி ரோம்நகர் சென்றாள்.

லெப்பிடஸின் நட்பையும் பெருந்தன்மையையும் பாராத ஸீஸர் அந்தோணியின் உறவையும் தங்கையின் நல் வாழ்வையும்கூட எண்ணிப் பாரான் என்பது எதிர்பார்க்கத் தக்கதேயன்றோ? அவன் தங்கை வாய்திறக்கும் முன்னாகவே, அவளை அந்தோணி ரோமப் பேரரசின் பங்காளியாகிய தன்மனைவியென்ற முறையில் விருதுகளுடனும் மேளதாளங்களுடனும் அனுப்பாமல் பணிப்பெண் போலத் தனியே அனுப்பினான் என்று அவன் மீது சீறினான். அந்தோணிமீது இந்த அவமதிப்பிற்காகப் பழிவாங்குவதெனக் கூறி, அவன் தன் பகைமைக்குப் புதிய சாக்குக் கண்டான். இங்ஙனம் மைத்துனர் இருவரையும் ஒன்று சேர்க்கும் எண்ணத்துடன் வந்த அக்டேவியா அவர்களைப் பிரித்து வைக்கவே உதவியவள்போலானாள்.

அக்டேவியா போனதே, அந்தோணி, தான் இதுவரை வலியுறுத்தி மேற்கொண்டிருந்த செயற்கை யாண்மையாகிய போர்வையைக் கிழித்து எறிந்துவிட்டு, முன்னினும் பன்மடங்கு ஆர்வத்துடன் விரைந்து கிளியோப்பாத்ராவிடம் சென்று சேர்ந்தான்.

“பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?” நீரின்றி வெடித்த நிலத்தில் மழைத்துளி விழுந்தாலன்ன அவன் வரவு அவள் நெஞ்சின் துடிப்பையும் ஏக்கத்தையும் அகற்றி அவளை இன்ப உலகேழினும் மேலாம் துறக்க உலகு எய்துவித்தது.

தானின்றி அந்தோணி வாழினும்கூட இனித் தான் அந்தோணியின்றி வாழ முடியாதெனக் கிளியோப்பாத்ரா கண்டாள். ஆகவே அவள் அதுமுதல், எங்கே அந்தோணி இயற்கை வீர உரு எடுத்துத் தன்னைவிட்டு அகன்றுவிடுவானே என்று அஞ்சலானாள். அதன் பயனாக அவனது வீர உணர்ச்சி எழாதபடி ஓயாது காதல் உணர்ச்சியைத் தூண்டி அவனைச் சுற்றிக் காதற் கோட்டை கட்டுவதே அவளது இடைவிடா வேலையாயிற்று. மறந்துங்கூட அவன் அக் கோட்டையை விட்டகல எண்ணாதபடி செய்வதில் அவள் தன் ஒப்பற்ற திறனையும் மாயவித்தைகளையும் காட்டலானாள்.

பெண்மையே உருவெடுத்து வந்ததுபோன்ற அப் பெண்ணரசிக்கு இது மிகக் கடுமையான பணியுமன்று. கூடலின் உயிர்நிலை ஊடலே என்பதை யுணர்ந்து, அவள் அந்தோணியை ஒரு சமயம் தன் பக்கம் ஈர்ப்பதும் அடுத்த கணமே அவனை வெறுத்துத் தள்ளுவதும்போல் நடித்து, அவன் ஆர்வத்தைப் பன்மடங்கு மிகைப்படுத்தினாள். அவள் வரவும் செலவும், அவள் விருப்பும் வெறுப்பும், புகழ்ச்சியும் இகழ்ச்சியும், நகைப்பும் சினமும், மாறி மாறி ஒளியும் நிழலும்போலவும், உடலும் உயிரும் போலவும், பகலும் இரவும் போலவும்! நின்று, அவன் வீரமும் அறிவும் அவனிடம் வருவதற்கு ஓய்வு தராதபடி அவன் மனத்தைத் தாக்கி உரிமைப்படுத்தின.

ஆயின், என்ன இருந்தாலும் அவளும் பெண் தானே! தனது இம்முயற்சியினால் தன் உயிருக்கும் தன் காதலன் வாழ்க்கைக்கும் உலைவைக்கிறோமென்று அவள் அறிந்திலள்! ஜூலியஸ் ஸீஸரது மதிப்பிற்கும் பாம்பியின் அச்சத்திற்கும் இடமான அந்தோணி, தன் காதல் வலைப்பட்டு அக்டேவியஸ் ஸீஸர்போன்ற மோழையும் பாயும் ஏழையாய்விட்டான் என்று அவள் அறிந்திலள்!

அந்தோணி எகிப்தில் கிளியோப்பாத்ராவுடனும், அவள் சேடியர் பேடியருடனும் சூதாடியும், அவளுடன் பொய்கை நீராடியும், பூம்பந்தாடியும், பொற்படகு ஊர்ந்தும், ஆடல் பாடல்கள், கேளிக்கைகள் முதலியவற்றில் கலந்தும் நாள் போக்கிவந்தான். அதேசமயம் அவன் நடைமுறைகள் முற்றிலும் ஒற்றர்மூலம் அறிந்துவந்த அக்டேவியஸ் இதுதான் சமயமென்று கண்டு அந்தோணியின் நண்பர்களை ஒவ்வொருவராக முறியடித்து அழித்தும், அவன் பங்கிலுள்ள நாடுகளை வென்று கைக்கொண்டும் வந்தான். அவற்றைக் காதாற் கேட்டும் மனத்தால் கொள்ளாதவனாய் அந்தோணி சில நாள் கடத்தினான். பின் "வரட்டும் அவன் எங்கே போகிறான், ஒரு கை பார்க்கிறேன்," என்று உறுக்கி நாள் போக்கினான். தன் படைத் தலைவர்களிடம் "இன்று புறப்பட்டுச் சென்றெதிர்ப்போம், நாளை புறப்பட்டுச் சென்றெதிர்ப்போம்," என்று கூறி முயற்சியேயின்றிப் பல நாள் கழித்தனன். இங்ஙனமாக எகிப்தும் கீழ் நாடுகளும் நீங்கலாக எல்லாம் ஸீஸர் வசமாயின.

## ௪. காதலுக்கு வீரம் பலியாதல்

ரோமப் பேரரசின் குழப்பத்தைவிட இப்போது அந்தோணியின் மனத்திலுள்ள குழப்பமே மிகப்பெரிதாயிருந்தது. ஸீஸரின் சிறுமையை—அவனது நன்றி கொன்ற தனத்தை—அவன் தன்னை அவமதித்த அவமதிப்பை-எண்ணும்போதெல்லாம் அவன் தோள்கள் துடித்தன; அவன் மீசைகள் படபடத்தன. அப்போது அவன் இந்தக் கிளியோப்பாத்ராவையும் அவளது எகிப்தையும் சின்னாபின்னப் படுத்திவிடுவோமா என்றெழுவான். அடுத்த நொடியே அக் கிளியோப்பாத்ராவின் உருவம்—நகையும் சீற்றமும் மாறி மாறி வந்து நடனமிடும் அவள் முகம்-மயிலும்நாண அன்னமும் பின்னிட நடந்துவரும் அவளது ஒய்யார நடை-தேனினுமினிய தெவிட்டா அமிர்தான அவள் குயிலிசை மொழிகள்—ஆகிய இவை அவன் மனத் திரையில் வந்து தவழும். அப்போது அவன் தன் வீரத்தையும் தன் அறிவையும் இழந்து 'இவ்வுருவின்முன் ரோமப் பேரரசையும் என் வாழ்வையுங்கூடப் பலி கொடுக்கத் தயங்கேன்' என்பான்.

இறுதியில் ஸீஸர் மற்ற நாடுகள் அனைத்தையும் வென்று தன்னை எதிர்க்க எகிப்து நோக்கிவருகிறான் என்று கேள்விப்பட்டதும் அந்தோணி, மேற் பணியாளன் வரவு கேட்டு எழும் குடிவெறிப் பட்ட படைஞன்போல் எழுந்தான். தனது நாடாகிய எகிப்துக்கே இடையூறு வந்தது கண்டு கிளியோப்பாத்ராவும் அந்தோணியின் காதற்

புகைக்கு நறுந்தூளிடும் வேலையை விட்டு எழுந்தாள். விரைவில் அமைச்சர்களுக்கும் படைத் தலைவர்களுக்கும் உத்தரவுகள் பறந்தன. பேடியரும் சேடியரும் அஞ்சி அகல நிற்க வீரரது போர் அவை கூடிக் கலந்தது.

அந்தோணியை விட்டகல விரும்பாமல் கிளியோப்பாத்ரா தானும் போரில் தன் படைக்குத் தலைவியாய் வரவேண்டுமென்று விரும்பினாள். அந்தோணியின் அமைச்சனும் நண்பனுமான எனோபார்பஸ், பெண்டிர் போர்க்களம் செல்வது நன்றன்று என்றும் அதிலும் கிளியோப்பாத்ரா அந்தோணிக்குக் காற்கட்டாயிருப்பாள் என்றும் கூறினான். கிளியோப்பாத்ரா இதனை ஏற்காது அவனை வாயடக்கினாள்.

கிளியோப்பாத்ராவின் இப்பிழைகளால் வந்த தீங்கையன்றி வேறெவ்வகையிலும் வெற்றிக்குரிய முழுவன்மை அந்தோணி பக்கமே இருந்தது. அவனது படை அவ்வளவு வீரமும் நற்பயிற்சியு முடையது: அது அவனிடம் நிறைந்த பற்றுடையது: அவனுக்காக உயிரை ஒருபொருட்டாக மதியாது போரிடும் இயல்புடையது. அந்தோணியும் ஒப்பற்றவீரன்; தன் படைகளை வெற்றிமேல் வெற்றியாக நின்று நடத்திய நேரிலாத் தலைவன். ஸீஸரின் படை அந்தோணியின் படைக்கு ஈடுடையதும் வீரமுடையது மன்று; ஸீஸரும் வீரத்திலும் தலைமைத் திறத்திலும் அந்தோணிக்கு ஈடு ஆகான்.

கடற்படை வகையில் நிலைமை இதற்கு நேர் மாறானது. ஸீஸர் படை பாம்பியால் பயிற்சி தரப் பட்டது. அந்தோணியின் கப்பற்படையோ எகிப்து

அரசி உலாப்போகும் சமயம் அழகிற்காக உடன் செல்ல ஏற்படுத்தப்பட்டது. ஆகவே நிலத்திற் போர் புரிவது அந்தோணிக்கே நல்லது என்றும் கடலிற் போர்புரிவதே தனக்கு நல்லது என்றும் ஸீஸருக்கு நன்கு புலப்பட்டது. எங்கே அந்தோணி தன்னை நிலத்தில் தாக்கிவிடுவானோ என்று அவனுக்கு உள்ளூர அச்சமாயிருந்தது.

கிளியோப்பாத்ராவின் போக்கு இதிலும் ஸீஸருக்கு நன்மையாகவே முடிந்தது. எனோபார்பஸ் அந்தோணியின் கடற்படையைவிட நிலப்படையே வெற்றியுடன் போர்புரியத்தக்கது என்றபோது, அவள், அவன் தன் நாட்டின் கடற்படையைக் குறைகூறினான் எனக்கொண்டு இதிலும் அவன் கூறியதற்கு நேர்மாறாக அந்தோணியைத் தூண்டினாள். 'தையல் சொற் கேளேல்' என்னும் மூதுரையை மீறி அவனும் அவள் சொல்வதையே மேற்கொண்டு கடலிலேயே சண்டை செய்யுமாறு எனோபார்பஸுக்குக் கட்டளையிட்டான்.

எனோபார்பஸ் கூறியபடியே எகிப்தியக் கடற்படை ஸீஸரது படையுடன் சில மணி நேரங்கூட நிற்க ஆற்றாமல் முறிந்து பின்னிடைந்தோடியது. கிளியோப்பாத்ராவும் உடன்தானே நடுநடுங்கித் தன் கப்பலையும் அவற்றுடன் ஓடும்படி ஆணையிட்டாள். பாவம்! தான் போவது அந்தோணிக்கு உயிர்போவதுபோல் இருக்கும் என்பதை அவள் மறந்தாள்.

இருபடையும் நெருங்கிப் போர்புரியும் வேளையில் அந்தோணியின் கண்கள் தற்செயலாகக் கிளியோப்பாத்ராவின் பக்கமாகச் சாய அப்

போது அவன் அவள் படைகள் உடைந்தோடு வதையும் அவளும் உடனோடுவதையும் கண்டான். கண்டதே அவன் போரும் மறந்தான். புவியும் மறந்தான்; போர்வீரர் நிலையையும் மறந்து, ஓடு கின்ற தாய்ப்பசுவைப் பின்பற்றும் கன்றைப் போல அவளைப் பின்பற்றி ஓடினன்.

புறங்கொடா வீரனாகிய அவன் மனத்தில் காதற்பேயிருந்து உயிரினும் மிக்க மானத்தையும் உண்டதென்னல் வேண்டும்!

தலைவன்போனபின் படை என்ன செய்யும்? அது நாலாபக்கமும் சிதறி ஸீஸரது படையின் வாளுக்கும், அம்புமாரிக்கும் இரையாகிச் சீர்குலை வுற்றது. மனஞ்சென்ற வழியும் புலன் சென்ற வழியும் செல்லும் அந்தோணியைப் போலாது அம் மனப்போக்கையும் உலகப்போக்கையும் காற்றை யும் பூதங்களையும்கூடத் தான் கருதிய அருங் காரியத்திற்குத் துணையாகும்படி தன் கூர் அறி வால் இணைக்கும் ஒப்பற்ற சூழ்ச்சியாளனாகிய அக்டேவியஸ் ஸீஸர் அன்று ஊழ் என்னும் அலை யின் உச்சியில் மிதந்து வெற்றிவீரனாய் விளங் கினன்.

## ரு. இறுதிப் போர்

உணர்ச்சி வசப்பட்டுப் போரைவிட்டு ஓடிய அந்தோணி, எகிப்து சென்றதும் தன் வீரர் அடைந்த படுதோல்வியையும் அழிவையும் கேட்டு மனமுருகினன். அப்போதுதான் அவனுக்குத் தான் அடைந்த தீங்கின் முழு வன்மையும் புலப்

பட்டது. படவே இஃதனைத்திற்கும் ஏதுவான கிளியோப்பாத்ராவின் மீது அவன் சீறி விழுந்தான். அன்று அவன் கண்களுக்கு அவள் குற்றங்கள் தெரிந்தன என்றுமட்டுமல்ல; அக் குற்றங்கள் பெரிதாக்கப்பட்டும், பல தப்பெண்ணங்கள் சேர்ந்தும், அவள் உடலேபோல் அவள் உளமும் அவன் பார்வைக்குக் கருமையாகத் தோற்றின. ஆகவே அவளும் தன்னைப் போலவே உணர்ச்சிவசப் பட்டுத்தான் இத்தனை அழிவுகளையும் உண்டு பண்ணினள் என்று கொள்வதற்கு மாருக, அவள் வேண்டுமென்றே தன் நலத்தினல் தூண்டப் பெற்று ஸீஸருக்கு உடந்தையாய் நின்று தன்னைக் கவிழ்க்கத் தொடங்கினள் என்று சீறினன்.

இன்மொழியால் முகமலரும் மென்மலர்களாகிய நங்கையர் செவிகளில் வன்மொழிகள் புகுந்தால் அவர்கள் துன்பத்தைக் கேட்பானேன்! அவனது சீற்றத்தால் அவன் காதலை இழந்து விட்டோமோ என்ற அச்சம் ஒருபுறம்; அவன் தன்னைக் கொல்வதாகப் பாய்ந்தெழும்போது எங்கே தான் அவன் காதலையும் உயிரையும் ஒருங்கே இழக்க நேரிடுமோ என்ற அச்சம் ஒருபுறமாக நின்று அவளை வாட்டின.

எப்படியும் தன் உயிரைக் காத்துவிட்டால் அவன் சினந்தணிந்தபின் அவன் தப்பெண்ணங்களை மாற்றிவிடலாம் என்று நினைத்து அவள் ஓடித் தன் இருக்கையறையிற் சென் றொளிந்து கொண்டாள்.

அப்படியும் அந்தோணி அமையாமல் தன்னைக் கொல்லத் தேடுகிறான் என்று கேட்ட கிளியோபாத்ரா தான் இறந்துவிட்டதாகவே அவனிடம் கூறிவிடும்படி ஆணையிட்டாள். இத்தந்திரம் முற்றிலும் வெற்றிபெற்றது.

அவள் இறந்தாள் என்று கேட்டதுமே அந்தோணியின் சீற்றமெல்லாம் படமெடுத்த பாம்பு மந்திரத்தி லடங்குவதுபோல அடங்கி ஒடுங்கிற்று. அவள் எத்தகையள் ஆயினும் அவளில்லா உலகில் தனக்கு எத்தகைய விருப்புக்கும் இடனில்லையென்று கண்டு அவனும் சாகத் துணிந்துவிட்டான். இதனை யறிந்ததும் சேடியர் அவனைத் தேற்றி அவள் உண்மையில் இறக்கவில்லை என்று கூறினர்.

அவர்கள் கூறி வாய்மூடுமுன் கிளியோபாத்ராவே நேரில் வந்து அவன் காலில் வீழ்ந்து, 'நான் தங்கள் வாழ்வைத் தொலைத்தவள்; தங்கள் பெருமைக்கும் தங்கள் காதலுக்கும் ஒவ்வாதவள்; என்னை அதற்காக எப்படித் தண்டித்தாலும் சரி; தாங்கள் காட்டும் வெறுப்பையும் சீற்றத்தையும் மட்டுமே கண்டு அஞ்சுகிறேன். தங்கள் காதலுக்காக உயிர் விடுவதாயின் மகிழ்ச்சியுடன் இறப்பேன்,' என்றாள்.

அந்தோணி அவளைத் தன் நீண்ட கைகளால் வாரி எடுத்தணைத்து 'என் அரும் பொருளே! நின் அன்பை நோக்க இப்பேரரசும், இவ்வுலகுந்தான் என்ன விலையுடையது! நின் ஒரு புன்முறுவலுக்காக இன்னும் ஏழுமுறை இவ்வுலகத்தை வென்று

வென் றிழக்க நேரினும் பொருட்படுத்தேன். நீ கவலை கொள்ளவேண்டாம்,' என்ருன்.

இப்போது கிளியோப்பாத்ராவுக்குத் தன் காதல் போயிற்றென்ற சீற்றம் மறைந்துவிட்டது; அதோடு அந்தோணியோவிற்கும் தன் கிளியோப் பாத்ரா போயினள் என்ற வெந்துயர் அகன்றது. முன்போல் அவளது மதிமுகமும், துணைக்கரங் களும், இன்மொழிகளும் அவனுக்கு உயிரும் ஊக்க மும் அளித்தன. அவன் அவள் முகத்தை உற்று நோக்கியவண்ணம் "ஆ, இம்முகத்தில் காதல் ஒளி யுள்ளளவும் என் உள்ளத்தில் வீர ஒளிக்குக் குறை வில்லை. உன் பெயரால்—உன் காதலின் பெய ரால்—இன்னும் ஒருமுறை இவ்வுலகை வெல் வேன்," என்றெழுந்தான்.

அந்தோணியை நிழல்போல் தொடர்ந்து உட லுறுப்புக்களோ என்னும்படி மாறுபாடின்றி அவன் கருத்தறிந்து தவிய அவன் வீரரும், துணைத் தலைவரும் இதுகாறும் அவன் காதற் பெரும் புயலாலும் சீற்றத்தாலும் தன் நிலை இழந்து நிற் பது கண்டு வருந்திச் செயலிழந்து நின்றனர். இப் போது அவன் முகத்தே வீரக்களையைக் கண்ட துமே "இனித் தயக்கம் வேண்டாம். எம் தலைவர் எழுந்தார் இனியும் வெற்றி நமதே, உலகம் நமதே," என்று ஆரவாரித்து எழுந்தனர்.

மறுநாளே அக்டேவியஸ் படை எகிப்தில் வந் திறங்கியது. அந்தோணியும் அவன் வீரர்களும் அதனுடன் கைகலந்து தாக்கினர். அக்டேவியஸ் படை அந்தோணியின் படையைவிட எவ்வளவோ பெரியதாயிருந்தும், அந்தோணியின் ஆற்றலுக்

கும் அவன் வீரர்களின் துணிச்சலுக்கும் ஆற்ற மாட்டாது பின்னிடைந்தோடிற்று, ஸீஸர் தன் முழுத்திறனையும் காட்டி அவர்களைத் தன் கையாட்கள்மூலம் சாட்டையால் அடித்து ஆட்டுக் கூட்டங்களைப்போல் எல்லைப்புறத்தில் திரட்டிச் சேர்க்க வில்லையானால் அவர்கள் மீட்க முடியாதபடி சிதறியே இருப்பர்.

ஆண்மைமிக்க அந்தோணியின் வீரர் இவ்வெற்றியால் பின்னும் ஊக்கம் அடைந்தனர். அவ்வெற்றியைத் தொடர்ந்து ஸீஸரின் படைகளை ரோம் வரைக்கும் துரத்தியோட்டி அவனை அழிக்க வேண்டுமென்று அந்தோணியின் துணைத் தலைவன் மன்றாடினான். ஆனால் அந்தோணியின் இயற்கைச் சோம்பலும் இன்பவிழைவும் இவ்வின்றியமையாக் கடமையைச்செய்யக் காலந்தாழ்த்தின. வெற்றியைக் கொண்டாடும் வகையில் தன் பொருட்குவை முற்றிலும் தன் வீரர்களுக்கு வாரி இறைத்தும் அவர்களுடன் உண்டாட்டயர்ந்தும் அவன் பொழுது போக்கினான். இதனைக் கண்டும் தன் நன்மொழிகளை அவன் புறக்கணித்ததால் சினங்கொண்டும் அத் துணைத்தலைவன் அன்றிரவே அவன் எதிரியின் பக்கம் சென்று சேர்ந்து கொண்டான்.

இச்செய்தியைக் கேட்ட அந்தோணி அவனிடம் எள்ளளவும் சீற்றங்கொள்ளாது மற்ற வீரர்களிடமும் “ அவனைப்போலவே காலநிலைக்கொப்ப நீங்கள் நடந்துகொள்வதே எனக்கு விருப்பம் ” என்று கூறினான். அதோடு ஸீஸர் பக்கம் சென்ற

வன் தனது ஆத்திரத்தில் விட்டுப்போன பொருள்களை அவனிடமே சேர்க்கும்படி கட்டளையிட்டான். உண்மையில் அந்தோணியினிடம் நேசம்கொண்டு சீற்றத்தாலேயே எதிர்க்கட்சியில் சென்று சேர்ந்த அத் துணைத்தலைவன் இது கேட்டுத் தன் நன்றியின்மையையும் தன் தலைவன் பெருந்தன்மையையும் நினைத்துக் கண்ணீருகுத்தான்.

அந்தோணியும் அவன் வீரரும் இருந்த நிலைமையினை ஒற்றர்மூலம் அறிந்த ஸீஸர் தன் படையை இரவோடிரவாகத் திரட்டிக் குடி மயக்கத்திலும், துயில் மயக்கத்திலும், தம்மை மறந்திருந்த அந்தோணியின் படைவீரர்மீது பாய்ந்தான். கொஞ்ச நேரத்திற்குள் அந்தோணியின் படை இருந்த இடம் தெரியாது அழிந்தொழிந்தது. எஞ்சிய சில வீரரும், அந்தோணியும், கிளியோப்பாத்ராவும் அரும்பாடுபட்டுத் தப்பியோடித் தம் அரண்மனை வந்து சேர்ந்தனர்.

### ௬. முடிவு

வீரருள்ளும் துணைத்தலைவருள்ளும் பலர் இன்னும் அந்தோணியை நீங்காது பின் தொடர்ந்து வந்தனர். செத்தாலும் அவனுடன் சாவதைவிடத் தமக்கு உயர்ந்த பேறு வேறில்லை என்றே அவர்கள் நினைத்தனர். ஆனால் அந்தோணி தன்னால் இதுவரை அவர்கள் கெட்டது போதும் என்று நினைத்துத் தன் பொருட்குவை யனைத்தும், துணிமணி யனைத்தும் அவர்கட்கே கொடுத்து, ‘இவை யனைத்தும் உங்கள் வெற்றியால் வந்த பொருள்

களே. என் அறியாமையால் இழந்தவைபோக மீதத்தையேனும் உங்களிடம் சேர்க்கிறேன். எடுத்துக்கொண்டு நச்சுமரமாகிய என்னை விட்டகல்வீர்! எனக்கு நீங்கள் செய்யும் கடமையை எனது விருப்பத்தினும் எத்தனையோ மடங்கு நீங்கள் செய்து தீர்த்துவிட்டபடியால் இனி உங்களிடம் எத்தகைய கடமையையும் நான் எதிர்பார்க்கவில்லை. என் பெயர் சொல்வதே இனித் தீங்கு விளைவிக்குமாதலால் அதனை மறந்து காலத்துக்கேற்ப நடந்து கொள்ளுங்கள். எனக்கு வேண்டியதெல்லாம் என் நண்பர்களாகிய உங்கள் நல்வாழ்வே,' என்றான்.

தன் வெற்றிநாள் முழுமையும் காதலுக்காக உயிரைப் பலியிட்ட இப் பெருந்தகையாளன், தோல்வியிலும் நட்பிற்காகத் தன்னைப் பலியிடுவதைக் கண்டு வீரரனைவரும் கண்ணீருகுத்தனர். அவனை விட்டுச் செல்ல அவர்கள் எவரும் விரும்பவில்லையாயினும் அவன் மீண்டும் மீண்டும் வற்புறுத்தியதன் பேரில் ஒவ்வொருவரும் பிரியா விடை பெற்றுக், கால் முன்னும், மனம் பின்னும் இழுக்க அவனை விட்டுச் சென்றனர்.

அக்டேவியஸ் ஸீஸர் இப்போது உலகப் பேரரசனாக விளங்கினான். எகிப்தும் அவன் காலடியில் பட்டுவிட்டது. ஆனால் அவன் அந்தோணியிருக்குமளவும் தன் நிலை உறுதி யுடைத்தன்று என அறிந்து அவனையும் அவனுக்கு உடந்தையாயிருந்த கிளியோப்பாத்ராவையும் உயிருடன் கைப்பற்றிச் சிறையுள் வைக்க எண்ணினான். ஆனால்

இறக்கும் தறுவாயிலும் சிங்கவேற்றை மக்கள் அணுக அஞ்சுவதுபோல அவனையும் கிளியோப் பாத்ராவையும் நேரில் அணுக அஞ்சித் தூதர் மூலம் அக்டேவியஸ் அவர்கள் மன நிலையறிந்து வரும்படி ஏவினன்.

அந்தோணி தனக்குப் பரிவு வேண்டியதில்லை என்றும் தன் துணைவர்களையும் கிளியோப்பாத்ரா வையும் மட்டும் மதிப்புடன் நடத்தினல் போதும் என்றும் கூறினன். பின் அவன் கிளியோப் பாத்ராவை நோக்கி இனித் தன்னை விட்டுவிட்டு ஸீஸரை நயந்து நல்வாழ்வு பெறுவதே அவளுக்கு நல்லது; தனக்கும் அதுவே மனதிற்குகந்ததெ்ன வேண்டினன்.

இதுகாறும் பெண்மையின் மென்மையையே காட்டிய கிளியோப்பாத்ரா இச்சொற் கேட்டதே அரசியின் பெருமிதத் தோற்றங்கொண்டு தலை நிமிர்ந்து ஸீஸர் தூதனை நோக்கி-'அரசி கிளியோப் பாத்ரா அந்தோணி ஒருவன்முன் மட்டுமே பெண் ஆவள்; பிறருக்கு அரசியேயாவாள். அரசி என்ற நிலையில் வாழ முடியவில்லையாயின் அரசியாகவே சாவ அறிவாள்' என்று கூறி அனுப்பிவிட்டுப் பின் அந்தோணிபக்கமாகத் திரும்பி, 'என் அரசே, நீங்கள்கூட என் காதலை இங்ஙனம் பழிக் கப் பொறுக்கேன். அந்தோ நான் கரிய எகிப் தியரிடைப் பிறந்து ஜூலியஸ் ஸீஸர் முதலிய பல ருடன் உறவாடியதை நினைத்ததாலன்றோ என் அந்தோணி என்னை இவ்வளவு இழிவாக மதிக்க இடமேற்பட்டது! என் அந்தோணியைக் காணு முன் நான் யாதாயினும் ஆகுக! அந்த அரும்

பொருளைக் கண்டபின், அதன் காதலின் பெருக்கையும் ஆழத்தையும் உயர்வையும் அளவிட்டறிந்தபின், அஃதின்றி நான் வாழ்தல் கூடுமோ? அந்தோணியை ஒத்த மதயானையைப் பிணித்த இக் காதற் கரங்கள் இனி ஸீஸரையொத்த குள்ள நரியையும் பிணிக்க முற்படுமோ? என்னே என் அந்தோணி மனத்துட் கொண்ட கருத்தின் போக்கு!' என்றாள்.

அதுகேட்ட அந்தோணி 'சரி, அப்படியாயின் உன் முடிவு என்ன?' என்றான்.

அவள் 'உங்கள் உடலுடன் என் உடலைச் சேர்த்து உங்கள் உயிருடன் என் உயிரும் உடன் வரச் செய்வதே' என்றாள்.

அவள் காதலின் உயர்வையும், அதன் முழு வலியையும், அதன் வீறையும் அன்றுதான் அவன் கண்டான்.

அவன் முகம் எல்லையில்லாத பேரின்பக் கதிர் வீசி ஒளிர்ந்தது. அவ்வொளி கண்டு கிளியோப்பாத்ராவும் காதற் கடலின் கரை கண்டவளானாள். அவள் 'இனிப் பிறப்பு இறப்பும் இன்பதுன்பமும் மாறி மாறி அலைபோல் வந்து வந்து மோதும் இவ் வாழ்க்கைக் கடலைக் கண்டு நான் மலைவடையேன். என் அந்தோணியே அரிய அந் தோணியாகக் கொண்டு அதனைக் கடப்பேன்' என்று கூறி அவனைத் தழுவி முத்தமிட்டாள்.

வாழ்க்கை முற்றிலும் பிறர் அடையுய் இன்பத்தினும் அவ் வொரு நொடியில் அவர்கள் அடைந்த இன்பம் பெரிதென்னலாம்.

அந்தோணி கிளியோபாத்ராவை அன்று மணந்த மணமகனினும் உயர்வாக எடுத்தணைத்து முடிநீவி 'இறைவன் உன்னைக் காக்க! உன்னால் பிறவியின் பயன் பெற்றுவிட்ட எனக்கு இனி என்ன குறை! உன் காதல் நிறைவுடன் மாளக் கிட்டிய இம் மாள்வு வாழ்வினும் நிறைவுடையது! இனி நான் ரோமனாக நின்று உயிர்விடவேண்டும்.



அந்தோணியின் முடிவு

நீயும் டாலமிகளின் வழித்தோன்றல் என்ற தகுதிக்கும் ரோமன் காதலி என்ற தகுதிக்கும் இணங்க நிறைவாழ்வெய்துவாய்! காதற் கடவுளின் பாதுகாப்புக்கு உன்னை விடுத்துச் செல்கின்றேன்' என்று கூறி அவளைவிட்டகன்று வெளியிடம் சென்று தன் வாளாலேயே தன்னை மாய்த்துக்கொண்டான்.

அவன் இறந்தது கேட்ட கிளியோப்பாத்ரா உயிரிழந்த உடல்போல் செயலற்று நின்ருள். பின் தேறித் தன் காதற்கடனுற்ற எண்ணுமளவில் ஸீஸரின் தூதன் வந்து பலவகை இனிய மொழிகளால் அவளை வயப்படுத்த முயன்ருன். அவள் அவனை அசட்டையாகப் பார்த்துத் தன் இறுதி விருப்பங்களை ஸீஸருக்கு உணர்த்துமுறையில் அவனிடம் கூறினுள்.

'எனக்கு ஸீஸர் பரிவதாயின் அதனை என் புதல்வனிடமும், என் காதலன் நண்பரிடமும் காட்டுக!'

'நான் அந்தோணியின் உயிரே உயிராய் அவன் வாழ்வே வாழ்வாய் வாழ்ந்தவள்; அதுபோல் அவன் மாள்வே மாள்வாய் மாளத் துணிந்துவிட்டேன். ஸீஸர் நாடிய ரோமப் பேரரசையும், ஸீஸர் நாடிய எகிப்தையும் இழப்பதில் எனக்கு வருத்தமில்லை. அந்தோணி இல்லா உலகை ஸீஸர் ஆளட்டும். நான் அந்தோணியையும் அவன் வாழும் உலகையுமே ஆளப்போகிறேன்.'

'காதல் தளையால் கட்டுண்டிருந்த சிங்கத்தைப் பின்பற்றி நான் செல்லுகிறேன். சிறுமைப்பட்ட சூழ்ச்சி வலையால் உலகைக் கவர்ந்த ஸீஸர் இவ்வெற்றுலகை ஆளட்டும்.'

இவ்வாறு பெருமிதத்துடன் கூறிவிட்டு அவள் தன்னிடமே ஒரு சிறு பெட்டியில் கரந்துவைத்திருந்த கொடிய நச்சுப்பாம்பு ஒன்றையெடுத்து 'இதுகாறும் பிள்ளைபோல் உன்னை வளர்த்தேன். இப்போது நன்றி மறவாது என் காதற் கனியுடன்

என்னைச் சேர்ப்பிப்பாய்' என்று கூறி, அதன் நஞ்சை உடலில் ஏற்றாள். அரைநொடியில் அந்தோணியின் உடலுடன் அவள் உடல் கிடப்ப உயிர் அந்தோணியை நாடிச் சென்றது.

இறுதியில் அக்டேவியஸ் ஸீஸர் வந்து காதலரசனும் காதலரசியுமாய் மாள்விலும் பணியாது வீறுடன் விளங்கிய அத் துணைவரைக் கண்டான். ஒரு நொடி அவன் உலகியல் அறிவுகூடக் கலங்கியது. தமது தந்நலத் தாலும் ரோமின் சீர்குலைவாலும் இதுகாறும் இறந்த ஒப்பற்ற ரோமத் தலைவர்களை எண்ணிப் பார்த்தான். "வீரத்துக்கு இரையாகிய ஜூலியஸ் ஸீஸரென்ன, ஒழுக்கத்தின் உயர் குன்றாகிய புரூட்டஸென்ன, நட்பின் அணிகலமாகிய காஸியஸென்ன, கடைசியில் காதலின் ஒப்பற்ற சிகரமாகிய இவ் வீர அந்தோணியென்ன, இப் பெருந்தகை ரோம வீரர் அனைவரும் மாண்டனரே! ரோமின் பெருவாழ்வின் ஊற்றுக்களான இவர்கள் போனபின் பாலையாய் விட்ட இப் புன்மை உலகோ இப் பாவியேனுக்குக் கொடுத்துவைத்தது!" என்று மனமாழ்கிக் கண்ணீருகுத்தான்.

உலகப் பேரரசை வென்ற வெற்றி வீரனது வெற்றியைச் சிறுமைப்படுத்தின காதற் பேரரசனும் பேரரசியும் ஆகிய அவ் இருவருடைய உயர் தனிக் குணங்களை எண்ணி எண்ணி எகிப்தியரும் ரோமரும் ஆற்றொணாத் துயரெய்தினர்.

---

கழக வெளியீடு—௬௨௭.

சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

## ஆறும் புத்தகம்

திரு. K. அப்பாதுரைப் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.,
எழுதியது

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை

First Edition January 1942.
Second Edition April 1946.

[Copy-right]

*Published by:*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

TIRUNELVELI & MADRAS

June 1948

Printed at the B. N. Press, Mount Road, Madras.

# பதிப்புரை

ஷேக்ஸ்பியர் உலகமறிந்த புலவர் பெருமான் என்பதையும் ஆங்கில மாகவி என்பதையும் பலரும் அறிவர். அவர்தம் நாடகங்கள் நவில்தொறும் நயம் பயக்கும் நற்பண்புடையன.

அந்நாடகங்களுள் வெனிஸ் வணிகன் (The Merchant of Venice), விரும்பிய வண்ணமே (As you like it), மாக்பெத் (Macbeth) என்னும் மூன்று கதைகள் முதற் புத்தகத்திலும்;

புயற் காற்று (The Tempest), லியர் மன்னன் (King Lear), ஹாம்லெத் (Hamlet) என்னும் மூன்று கதைகள் இரண்டாம் புத்தகத்திலும்;

நடுவேனிற் கனவு (Midsummer Night's Dream) ஸிம்பலின் (Cymbaline), கார்காலக் கதை (The Winter's Tale), ஒதெல்லோ (Othello) ஆகிய கதைகள் நான்கும் மூன்றும் புத்தகத்திலும்;

பன்னிரண்டாம் இரவு (Twelfth Night), சிறு பிழையால் நேர்ந்த பெருந் தொல்லை (Much Ado about Nothing), சரிக்குச் சரி (Measure for Measure), ரோமியோவும் ஜூலியட்டும் (Romeo and Juliet) ஆகிய நான்கு கதைகளும் நான்காம் புத்தகத்திலும்;

ஜூலியஸ் ஸீஸர் (Julius Caesar), கோரியோலானஸ் (Coriolonus), அந்தோணியோவும் கிளியோப்பாத்ராவும் (Antonio and Cleopatra) ஆகிய கதைகள் மூன்றும் ஐந்தாம் புத்தகத்திலும் வெளிவந்துள்ளன.

இவ் ஆறும் புத்தகத்தில், நன்று முடிவுறின் நலமே அனைத்தும் (All is well that ends well), மாறுட்டத்தால் நேர்ந்த போராட்டம் (Comedy of Errors), வெரோணு நகரின் இரு செல்வர்கள் (Two Gentlemen of Verona), இரண்டாம் ரிச்சர்டு மன்னன் (King Richard II) ஆகிய நான்கு கதைகளும் வெளிவருகின்றன.

எஞ்சிய கதைகளையும் ஏழாவது எட்டாவது புத்தகங்களாக வெளியிட்டுள்ளோம் என்பதையும் மகிழ்வுடன் அறிவித்துக்கொள்ளுகிறோம். இக்கதைகள் மாணவர் மனத்தைக் கவரும் வகையில் எளிய இனிய தெளிவான நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. ஆதலின், இவற்றைக் கற்கும் மாணவர் அறிவு வளர்ச்சியுடன் மொழித்தேர்ச்சியும் பெறுவர் என்பது திண்ணம். பல்கலைக் கழக வகுப்பில் ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர் நாடகங்களைப் படிக்கப் புகும் மாணவர், கதைப் பொருளை எளிதில் அறிந்து கொள்வதற்கு இவ்வெளியீடுகள் பெரிதும் பயன்படும்.

இத்துணைக் கதைகளும் இவ்வளவு சுவை மிக்க தமிழ் உரை நடையில் இதுவரை வெளி வரவில்லை என்பதும், அக் குறையினை இப்போது கழகம் நீக்கி விட்டதென்பதும் நோக்கற்பாலன. எனவே, பள்ளி மாணவர்களும், பிற பொது மக்களும் இவ் வெளியீடுகளைப் பெற்றுக் கற்றுப் பெரும்பயனெய்து வார்களாக!

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


பக்கம்

**1. நன்கு முடிவுறின் நலமே அனைத்தும்**

| | | | |
|---|---|---|---|
| 1. | கைக்கிளைக் காதல் | ... | 1 |
| 2. | மாதர் நட்பு | ... | 8 |
| 3. | பழம் நழுவிப் பாலில் விழுந்தது | ... | 12 |

**2. மாருட்டத்தால் நேர்ந்த போராட்டம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | குடும்பப் பிரிவு | ... | 19 |
| 2. | ஈஜியின் துயர் | ... | 23 |
| 3. | குழப்பங்கள் | ... | 25 |
| 4. | கணவன் ஏமாற்றம் | ... | 29 |
| 5. | ஆடவர் நலிவு | ... | 33 |
| 6. | முடிவு | ... | 35 |

**3. வெரோணு நகரின் இரு செல்வர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | நண்பர் பிரிவு | ... | 40 |
| 2. | காதலர் பிரிவு | ... | 43 |
| 3. | பொருமைப் புழு | ... | 47 |
| 4. | கலங்கிய நீர் | ... | 49 |
| 5. | காதல் துணிவு | ... | 51 |
| 6. | தெளிவு | ... | 53 |

பக்கம்

4. இரண்டாம் ரிச்சர்டு மன்னன்

1. மூத்தோர் சொல்லும் முழு நெல்லிக்காயும் முன் துவர்க்கும் பின் இனிக்கும் ... 60
2. பகைப் புயல் ... 67
3. அலைமேல் அலை ... 73
4. ஊழிற் பெருவலி யாவுள ? ... 77
5. முயலெய்த அம்பும் யானை பிழைத்த வேலும் ... 84
6. தோல்வியில் வெற்றி ... 89

# 1. நன்கு முடிவுறின் நலமே யனைத்தும்

## (கதை உறுப்பினர்)

### ஆடவர்

1. கொரார்டு :—அரிய மருத்துவன்—ஹெலெனு தந்தை.

2. பெர்ட்டிரம் :—காலஞ் சென்ற ரூவிலான் பெருமகன் புதல்வன்—ஹெலெனுவின் காதலுக் காளாய் அவளை வெறுத்தும் இறுதியில் மணந்து ஏற்றுக்கொண்டவன்.

3. பிரான்சு அரசன் :—காலஞ் சென்ற ரூவிலான் பெருமகனிடம் பற்றுக் கொண்டவன் — ஹெலெனுவையும் பெர்ட்டிரமையும் மணவினையால் இணைத்தவன்.

### பெண்டிர்

1. ரூஸிலான் பெருமாட்டி :—ரூவிலான் பெருமகன் மனைவி—பெர்ட்டிரம் தாய்—ஹெலெனுவின் காதலுக்குத் துணை தந்தவள்.

2. ஹெலெனு :—மருத்துவன் கொரார்டு மகள்—தந்தை இறந்த பின், ரூவிலான் பெருங்குடியில் பணியாளாய்ப் பெர்ட்டிரமைக் காதலித்து அரசனுதவியால் மணந்தவள்.

3. தயானு :—பிளாரென்சு நகரிலுள்ள நங்கை—ஹெலெனுவின் ஆருயிர்த் தோழியானவள்—பெர்ட்டிரம் தகாக் காதலுக் காளாய் அதனை மறுத்தவள்.

4. மூதாட்டி :—தயானுவின் தாய்.

# கதைச் சுருக்கம்

கொரார்டு அரிய மருத்துவன். அவன் இறந்தபின் அவன் மகள் ஹெலெனு ரூஸிலான் பெருங்குடியில் பணியாளாய் அமர்ந்தாள். பிரான்சு அரசன் நண்பனுகிய ரூஸிலான் பெருமகன் இறந்தபின் அவன் மகன் பெர்ட்டிரமை அரசன் அமைச்சர் மூலம் அழைத்துத் தன்னிடம் வைத்துக் கொண்டான். அவனிடம் உள்ளூறக் காதல்கொண்ட ஹெலெனு, அப்பகையில் ரூஸிலான் பெருமாட்டியின் துணை பெற்று அரசனிடம் சென்று அவனது பாண்டு நோயைத் தந்தையின் அருமருந்தொன்றால் குணப்படுத்தினுள். அரசன் மகிழ்ச்சியுற்று அவளுக்குத் தன் கணையாழியைக் கொடுத்ததுடன், அவள் விரும்பிய ஆடவனை மணமுடிப்பதாகச் சொல்ல, பெர்ட்டிரமையே விரும்பி மணமுடித்தாள். பெர்ட்டிரம் அவளை வெறுத்து ரூஸிலானில் விட்டுவிட்டு பிளாரென்சு சென்று, அங்கே படைத் தலைவனுய்த் தயானு என்ற பெண்ணைக் காதலித்தான்.

பின்னுளில் மன வெறுப்புற்ற ஹெலெனுவும் வெளியேகித் திரிந்து, இறுதியில் தற்செயலாய் அதே பிளாரென்சில் வந்து ஹெலெனுவின் ஆருயிர்த் தோழியாய் அவள் துணையால் அவளுடையில் பெர்ட்டிரமுடன் தனியிட மடைந்து, அவன் காதலைப் பெற்று அவன் கணையாழியை வாங்கிக்கொண்டாள். இதற்கிடையில் ரூஸிலானுக்குச் சென்று மண மக்கள் பிரிவு கேட்டு வருந்திய அரசன், பெர்ட்டிரமை யழைத்து ஹெலெனு பற்றி உசாவி. அவன் அவளை வெறுத்து வேறு பெண்ணைக் களவு முறையில் மணந்ததாகக் கூறினுன். அதே சமயம் மறைவிலிருந்து ஹெலெனுவும் தயானுவும் வந்து கணையாழி காட்டிப் பெர்ட்டிரமின் மனத்தை மாற்றினர். பெர்ட்டிரம் ஹெலெனுவுடன் வாழ்ந்தான். அரசன் உதவியால் தயானு இன்னொரு பெருமகனை மணந்தாள்.

சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

## ஆறும் புத்தகம்

# 1. நன்கு முடிவுறின் நலமே அனைத்தும்

### 1. கைக்கிளைக் காதல்

பிரான்சு நாட்டில் கொரார்டு (Goarard) என்ற ஓர் அரிய மருத்துவன் இருந்தான். அவன் நோய் ஆராய்ச்சியிலும் மருந்தாராய்ச்சியிலும் ஒப்பற்றவன். அந்நாளைய மருத்துவரறிவுக்கு அப்பாற்பட்ட பல புதிய மருந்து வகைகள் அவனுக்குத் தெரிந்திருந்தன.

கொரார்டுக்கு ஹெலெனு (Helena) என்னும் புதல்வி ஒருத்தி இருந்தாள். கொரார்டு அவளுக்கு எத்தகைய பொருட்குவையையும் வைக்கவில்லை. ஆயினும் அவன் தன் மருந்து வகைகளையும் அவற்றை வழங்கும் முறைகளையு மட்டும் அவளுக்குக் கற்பித்திருந்தான்.

தந்தை இறந்தபின் ஹெலெனு, தன் தந்தைக்கு அறிமுகமான ரூஸிலான் (Rousillon) என்ற பெருங் குடியிற் சென்று, பணியாளாய் அமர்ந்திருந்தாள். அப் பெருங்குடியின் பெருந்தலைவனு யிருந்த பழைய

ரூஸிலான் பெருமகனார் இறந்துவிட்டமையால், இளைஞனாகிய அவர் மகன் பெர்ட்டிரம் (Bertram) புதிய ரூஸிலான் பெருமகன் ஆனான்.

பழைய ரூஸிலான் பெருமகனார் பிரான்சு அரசனுக்கு நெருங்கிய நண்பர். ஆகவே, அரசன் அவர் மகனாகிய பெர்ட்டிரமைக் காண விரும்பி அவனை அழைத்துவரும் பொருட்டுத் தன் அமைச்சனான லாபியூ (Lafew) என்பவனை, அவன்பால் அனுப்பினான். பெர்ட்டிரம் அவ்வமைச்சனுடன் புறப்பட்டு அரசனைக் காணச் சென்றான்.

ரூஸிலான் குடியில் காலடி வைத்தது முதல் ஹெலெனா தன் நெஞ்சை முற்றிலும் பெர்ட்டிரமுக்குப் பறி கொடுத்தாள். ஆயினும், தன் ஏழைமையும் துணையற்ற தன்மையும் எங்கே, அவன் உயர்குடியும் புகழும் எங்கே, என்று அவள் மனம் சாம்பினாள்.



ஹெலெனா

பெர்ட்டிரமின் தாயான ரூஸிலான் பெருமாட்டி ஹெலெனாவின் மன நிலையை உய்த்துணர்ந்துகொண்டாள். அவள் பார்வைக்கு, ஹெலெனாவின் ஏழைமையைவிட அவள் அழகும் குணமுமே விளக்கமாகத் தோன்றின. ஆகவே அவள் ஹெலெனாவின் காதலுக்கு இணக்கமளித்தாள். ஆயினும், பெர்ட்டிரம்

அவளை மதியாமல் அசட்டையா யிருந்தான். அதனால் அவள் மிகவும் மனச் சோர்வு அடைய நேர்ந்தது.

பெர்ட்டிரம் போனபோது ஹெலெனா, அவன் போன பக்கமே நோக்கி நின்று, "அந்தோ நெஞ்சாரக் கலந்து உறவாடாவிடினும் இதுவரையிற் கண்ணார வேனும் காண முடிந்தது; இன்று அதற்கும் வழியில்லையே" என்று மன மாழ்கினாள்.



பெர்ட்டிரம்

பெர்ட்டிரமை அழைத்துப் போக வந்த அமைச்சன் அரசவைக் காரியங்கள் பலவும் பேசிக் கொண்டிருந்தபோது, அரசன் பாண்டு நோயினால் வருந்துகின்றா னென்றும், அதற்கு அரண்மனை மருத்துவர் அனைவரும் பற்பல மருந்துகள் கொடுத்தும் குணம் வந்தபாடில்லை என்றும் கூறியது அவள்

நினைவிற்கு வந்தது. வரவே, அவள் மனத்தில் சில ஆழ்ந்த எண்ணங்கள் தோன்றின. "ஆ! என் தந்தை குறித்துத் தந்துபோன புதுவகை மருந்து களுள் பாண்டு நோய்க்கான மருந்தும் ஒன்றன்றோ? அதன் மூலம் ஒருவேளை என் எண்ணங்கள் ஈடேறு மாயின் எவ்வளவு சிறப்பாகும்" என்று அவள் வாய் விட்டுக் கூறினாள்.

அவள் கூறிய மொழிகளை, அடுத்து நின்று கேட்டுக்கொண்டிருந்த ரூஸிலான் பெருமாட்டி, "அரசன் பிணியும், இம் மங்கை பிணியும் ஒருங்கே நீங்குதல் திருவுளமாயின், அஃது அங்ஙனமே நிறைவேறுக" என்று மனத்துட்கொண்டு, அவளை அரசன்பால் விடுத்தனள்.

ஹெலெனா, அரசனை அணுகுவதே முதலில் அருமையாக இருந்தது. அணுகியபோதும் அவள் மருந்தை அரசன் உட்கொள்ளுவதற்கு அவன் அவையோர் ஒருப்படவில்லை. இங்நிலையில், அரசன் காதில் இச்செய்தி விழுந்தது. தனது நல்வினைப் பயனால் தூண்டப்பட்டு அவன், "எப்படியும் நோய் குணமடைவதாகக் காணவில்லை. பிற மருத்துவர் அனைவரும் கைவிட்டனர். இப்புது மருந்தால் குணம் ஏற்படாவிட்டாலும் கேடென்னை? அஃது ஒருவேளை என் உயிர் கொள்ளும் நஞ்சாய் இருந்தாலுங்கூட இவ்வேளைக்கு அது என்னை நோயினின்றும் தப்பவைக்கும் கருவியாகவே அமையும்" என்று கூறி, அவளை வரவிடுத்தான். பின்பு அவள் கொரார்டின் புதல்வி என்றும் மருந்து கொரார்டின் புது மருந்துகளுள் ஒன்று என்றும் கேட்டபோது அரசனுக்குப் பின்னும் நம்பிக்கை உண்டாயிற்று.

ரூஸிலான் பெருமாட்டியும் ஹெலெனவும் கண்ட கனவு நனவாயிற்று. அம்மருந்து உட்கொண்ட இரண்டு மூன்று நாட்களில் அரசன் நோயின் அடையாளமே இல்லாதபடி முழுமையும் குணமடைந்தான். ஆகவே, அவன் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு அவளுக்கு விலை மதிப்பற்ற ஒரு கணையாழியைப் பரிசாக வழங்கினன். அதோடு அவ் அவையில் யாரை வேண்டுமானலும் அவள் மணந்துகொள்ளலாம் என்றும், அவளுக்கு அவன் உறுதி கொடுத்தான். ஹெலெனு, அங்கே வேறு யார்மீதும் கண்ணெடுத்துப் பாராமல் ரூஸிலான் பெருமகனுகிய பெர்ட்டிரமையே கணவனுகத் தெரிந்தெடுத்தாள்.

பெர்ட்டிரம், பழக்க மிகுதியினலும் பணியாள் என்ற புறக்கணிப்பினலும் ஹெலெனவின் அழகையும் உயர் குணங்களையும் மதியாதவனு யிருந்தான். ஆகவே, தன் விருப்பத்துக்கு மாறுக அவள் தன் மீது சுமத்தப்பட்டதை அவன் வெறுத்தான். ஆயினும் என் செய்வது? அரசன் ஆணையை மறுப்பது முடியாது; ஆதலால், பெர்ட்டிரம் அவளை வேண்டா வெறுப்பாக மணந்துகொண்டான்.

ஆயினும், மணத்தைத்தான் ஒருவர் வலிந்து சுமத்த முடியுமேயன்றிக் காதலைச் சுமத்த முடியாதன்றே? ஹெலெனு, 'காதலற்ற மணம்' என்னும் கடுநரகிற்கு ஆளானுள். மண நாளிலேயே பெர்ட்டிரம், அவள் பக்கம் பாராமல் கடுகடுத்துப் பேசவும் சீறிவிழவுந் தொடங்கினன். அவற்றையெல்லாம் அவள் பொறுமையே உருவாக நின்று தாங்கிவந்தும், அவன் அவள்மேலுள்ள வெறுப்பைச் சற்றும் குறைக்காமல் அவளைத் திட்டி, "என் குடிப் பெரு

மையையும் பொருளையும் எண்ணித்தானே என் தலைக்குக் கண்ணி வைத்தாய். நீ அவற்றையே போய் மணந்து வாழ்" என்று அவளை ரூஸிலானுக்கே அனுப்பினன். அனுப்பிவிட்டுப் பல நாடுகளிலும்



ஹெலெனவின் திருமணம்

திரிந்து இறுதியில் பிளாரென்சு என்னும் நகரம் வந்து, அந்நகர் அரசனது படையிற் சேர்ந்தான். வேண்டா மனைவியுடன் வாழ்வதை விடப் போரில் மாள்வதே நல்லது என்ற எண்ணத்துடன், அவன் வேண்டுமென்றே போர் முனைகளிற் சென்று நின்று காலனை

விரும்பி வழிபாடு செய்தான். ஆனால், இவ்வகையி னால் அவனுக்கு, அவன் விரும்பிய முடிவு சிறிதும் கிட்டவில்லை. நேர்மாருக அவன் வெற்றியும் புகழும் மிகுந்து படைத்தலைவன் ஆவதற்கே அஃது உதவிற்று.

ரூஸிலான் பெருமாட்டி, முதலில், ஹெலெனு வுக்கு ஆறுதலாக, "பெர்ட்டிரம் சீற்றந் தணிந்து வருவான்; பொறுத்திரு" என்று கூறிவந்தாள். ஆனால், திங்கள் ஒன்றிரண்டாயின. வரும் வகை எதுவுங் காணோம். ஹெலெனுவுக்கு, வாழ்க்கையிற் பற்று வர வரக் குறையலாயிற்று. ரூஸிலான் பெரு மாட்டிக்கோ, உலக வெறுப்புப் பின்னும் மிகுதியா யிற்று.

இங்கிலையில், பெர்ட்டிரமிட மிருந்து கடித மொன்று வந்தது. வற்றற்பாலையில் நீர்வேட்கையாற் செயலிழந்தவன், நீரென்ற பெயரைக் கேட்டவுடனே உயிர்த்தெழுவதுபோல, ஹெலெனு உள்ளந்துடிக்க எழுந்து சென்ருள். ரூஸிலான் பெருமாட்டியும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கிக் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள். பார்த்தவுடனே அவள், கை களும் உடலும் துடிக்க, "சீ சிறுமைப் பட்ட பதரே" என்று கூறி நிலத்திற் சாய்ந்தாள்.

அக் கடிதத்தில், "பெர்ட்டிரம் மண நாளிற் கொண்ட வெறுப்புச் சற்றும் மாருது. தாயே, ஹெலெனுவுக்கு உரியவன் நானல்லன்; அவள் உன் னையும் உன் குடியையும் பொருளையும் விரும்பினளே யன்றி, என்னையோ என் காதலையோ விரும்பினவள் அல்லள்; அவற்றையே அவள் அடைக; நான் இனி அவளுக்கும் உனக்கும் உரிய அவ்வீட்டில் நுழை யேன்" என்று எழுதியிருந்தான்.

ஹெலெனுவின் உள்ளத்தில் பாலைப் புதர்போல் உலர்ந்து நின்ற கைக்கிளைக் காதலையும் இக் கடிதத்தின் தீமொழிகள் எரித்தன. "இத் தீயவளின் தீவினைக்காக, வீட்டுக் குரியவர் வீட்டைத் துறப்பதா? வேண்டாம் நானே போய்விடுகிறேன்" என்று மொழிந்து அவள் வெளியேறினாள். ரூஸிலான் பெருமாட்டி எவ்வளவோ தடுத்தும், அவள் புலி கண்டு மருண் டோடுபவள்போல் ஓடினாள்.

## 2. மாதர் நட்பு

அப்பொழுது அவள் உள்ளம் பட்ட பாட்டை யாரே கணித்துக் கூறவல்லார்? ஒரு நேரம், 'காதலற்ற இவ்வுலகினின்று அகன்று விடுவோமா' என்று எண்ணுவாள். ஆனால் அடுத்த நேரம், 'காதலனற்ற மறு உலகில் எங்ஙனம் சென்று வாழ்வேன்' என்று எண்ணி அலைக்கழிவாள்.

அவள் மனதில் ஒன்றன்பின் ஒன்றாகப் பெர்ட்டிரமின் வாழ்க்கைப் படங்கள் எழுந்தெழுந்து நடனமிட்டன. அதன் இறுதிக் காட்சியை நினைக்க நினைக்க அவள் அங்கம் குலைந்தது. பெர்ட்டிரம் அன்று வெறுப்பு நிறைந்த கண்களோடு அவளை ஏளன நகைகொண்டு நோக்கிப், "பேதாய், எனக்கும் உன் காதலுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது. இதோ, என் கையிலிருக்கும் இக்கணையாழியை என்னிடமிருந்து, எத்தகைத் திற மிருந்தாலும் உன்னால் வாங்க முடியுமா? அதுபோலத்தான் என் காதலைப் பெறும் திறமும் இருக்கும். நீ இக் கணையாழியைப் பெறும் நாளே என் காதலைப் பெறும் நாள்" என்று

சீறி யுரைத்த கனல் மொழிகள் அவளது நெஞ்சத் திரையில் கொழுந்துவிட் டெரிந்து துன்பமாகிய புகையை எழுப்பின.

என் செய்வாள் பாவம்! பஞ்சு படப் பதைக்கும் பாதத்தையுடைய அம்மெல்லியலாள், பருக்கைக் கற்களென்றும் படர்முள்ளென்றும் படுகரென்றும் பாராமல் அலைந்து திரிந்து, இறுதியில், வினைப் பயனின் வலியால், பெர்ட்டிரம் வாழ்ந்துவந்த அதே பிளாரென்ஸில் வந்துசேர்ந்தாள்.

ஆ, விதியின் இயைபு கிடந்தவாறு என்னே! ஹெலெனவை விட்டொழிய வேண்டும் என்று வெளிவந்த பெர்ட்டிரமும், பெர்ட்டிரமின் வீட்டிலிராது அகலவேண்டுமென்று புறப்பட்ட ஹெலெனவும் இப்படி அயல் நாட்டில் வந்தொன்றுதல் வியப்புடையதன்றோ?

ஹெலெனு அவ்வூரில் ஒரு மூதாட்டியுடன் தங்கி அவள் ஆதரவில் இருந்துவந்தாள். அம் மூதாட்டியின் புதல்வி டயானு (Diana) என்பவள் ஹெலெனுவின் மறு பதிப்போ என்று சொல்லும்படி ஒத்த பருவமும் ஒத்த உருவமும் சாயலும் உடையவளாயிருந்தாள். சின்னுட்களுக்குள் அவ் விருவரிடையே இணைபிரியா நட்பும் பற்றும் ஏற்பட்டன. அப்போது அவர்கள் ஒருவர்க் கொருவர் பொதுச் செய்திகளையும், பின்பு தத்தம் விருப்பு வெறுப்புக்களையும், இறுதியில் தத்தம் வாழ்க்கைச் செய்திகளையும் கூறிக் கொண்டனர்.

அவர்கள் இருவரும், இரு வேறுடலிலும் மாறிப் புக்க ஒரே உள்ளத்தின் இரு பகுதிகளே என்னும்படி இங்ஙனங் கனிவுடன் கலந்து உறவாடி இருக்கு

நாளில், ஒருநாள் ஹெலெஞ கல்லுங் கரையும் வண்ணம் தன் காதற் கதையையும் காதலனது புறக் கணிப்பின் போக்கையுங் கூறிஞள். கேட்ட தயாஞ அத்தனையும் தனக்கே நிகழ்ந்த தெனத் துடித்துத் தத்தளித்தாள்.

எல்லா வகைகளிலும் தயாஞ ஹெலெஞவை முற்றிலும் ஒத்து இருந்தாள். ஆஞல், ஹெலெஞ, காத லொளியைக் கண்ணுற்றும் அதன் கொடிய வெம்மையுட் பட்டுக் கருகி வாடிய மலர் போன்றவள். தயாஞவோ, காதலின் கடைக்கணிப்புக்கும் புறக்கணிப்புக்கும் ஒன்றுபோல் ஆளாகாத நறுமலர் போன்றவள். ஹெலெஞவின் கதையைக் கேட்கக் கேட்கத் தயாஞவுக்குத் துயர் ஒருபுறம் நேரினும் அத்தகைய துயரினும், ஹெலெஞவைத் தன் வழிப் படுத்தி அடிமையாக்கும் அக் காதல் எத்தகைய தென்றும் அத்தகைய காதலை அவளிடம் எழுப்பிய தலைமகன் யாவன் என்றும் அறியும் வேட்கை அதனினும் மிகுந்து நின்றது.

அவ்வேட்கை மிக்க தயாஞ, அதற்கேற்பத் தான் அவ்வகையிற் கண்ட ஒரே நிகழ்ச்சியை ஹெலெஞவுக்கு எடுத்துக் கூறினள். உயர் நிலையிலுள்ளவனும் அழகு மிக்கவனும் மங்கையர் கருத்தை ஈர்ப்பவனுமான ஓர் இளைஞன், தான் வெறுத்துத் தள்ளினும் போகாமல் தன்னைத் துன்புறுத்துவதையும், அவனிடமோ பிறரெவரிடமோ தனக்கு ஹெலெஞவின் காதலைப் போன்ற உணர்ச்சி ஏற்படாததையும் அவள் தெளிந்த உள்ளத்தோடு எடுத்துரைத்தாள்.

பலநாள் இங்ஙனம் உரையாடி வருகையில் இருவரும், தம்மில் ஒருவரைப் புறக்கணிக்கும் காதலனையும், மற்றொருவர் புறக்கணிப்புக்கு ஆளாகுங் காதலனையும் பற்றிப் பலவும் பேசுவர். அப்போது ஹெலெனு, அவ் விருவரைப் பற்றிய உரைகளும் பெரிதும் ஒத்திருக்கக் கண்டு வியந்து ஒருநாள் தயானுவினிடம் அவளை நாடிய இளைஞனின் பெயர் என்ன என்று கேட்டாள். அவள் பெர்ட்டிரம் என்று கூறியதும், ஹெலெனு திடுக்கிட்டு "என்ன, என்ன, பெர்ட்டிரமா? பெர்ட்டிரமா!" என்ருள்.

ஹெலெனுவின் நிலைகண்டு வியப்புற்ற தயானு, "என் ஆருயிர்த் தோழீ, ஏன், அப் பெயரில் என்ன? அதனல் உனக்கு ஏன் இத்தனை பரபரப்பு" என்ருள்.

"தயானு! இன்னும் அவரைப்பற்றிச் சற்றுக் கூறு. என் காதலன் பெயரும் அதுவேயாதலால் என் மனம் பதறுகின்றது."

"அவர் ஏதோ ரூஸிலான் குடியைச் சேர்ந்தவர் என்று என்னிடம் கூறிஞர்."

இவ்வுரை கேட்டதும் ஹெலெனு இடியேறுண்ட அரவமென அலறி வீழ்ந்து, "ஆ, கொடுமை கொடுமை: கடவுளே இதுவும் உன் திருவுள்ளமோ" என்று புலம்பி மயங்கினுள்.

இப்போது, "அந் நங்கையர் இருவர் வாழ்க்கையையும் இரு வேறு வகையிற் பாழ்படுத்தி வருபவர், இருவேறு மனிதரல்லர்; ஒருவரே" என்பது அவர்களுக்கு விளங்கிற்று. அதுமுதல் அவர்கள் பெர்ட்டிரமைப்பற்றி முன்போல் கனிவுடன் உரையாடுவதில்லை. ஆனல், ஹெலெனு மட்டும் தன்னை வெறுத்த

பெர்ட்டிரமை, அவன் விரும்பினும் தான் விரும்பாது ஆட்டி வைக்கும் இத்தோழி மூலமே தன்வயப்படுத்தலாம் என்று கருதி, அக் கருத்தைத் தயானுவிற்குத் தெரிவித்தாள். தயானுவின் தாய் பெர்ட்டிரமிடந் தன் மகளுக்குள்ள வெறுப்பையும், ஹெலெனுவின் துயரையும் கண்டு அவர்கள் ஏற்பாட்டிற்கு இணங்கினள்.

## 3. பழம் நழுவிப் பாலில் விழுந்தது!

தயானு என்றும் பெர்ட்டிரமை வெறுத்து அவன் காதலைப் புறக்கணித்தே வந்திருந்தாள். அவளும் அவள் தாயும் அவனிடம், "நீங்கள் பெரிய இடத்தைச் சேர்ந்தவர்கள். உங்களுடன் ஒத்த மண வாழ்க்கை கொள்ள எங்களுக்குத் தகுதியில்லை" என்று தெளிவாகத் தங் கருத்தை அறிவித்து மிருந்தனர். அவ்வாறிருந்தும், காதலின் தூய்மையை முற்றும் அறியாத பெர்ட்டிரம், "மண வாழ்வு கிட்டாவிடினுங் கவலையில்லை; எவ்வகையிலும் அவளை அடைந்தே தீருவேன்" என்று தனது சிற்றின்ப வேட்கை தோன்றக் கூறினன்.

கற்பிலும் தன்மதிப்பிலும் குறைவுறாச் செல்வர்களாகிய தயானுவும் அவள் தாயும் இத் தீமொழிகள் கேட்டு நெருப்பிற் பட்ட புழுவெனத் துடித்துப் பொங்கினும், ஹெலெனுவின் நன்மையை எண்ணித் தம்மை அடக்கிக்கொண்டு, அவன் ஏற்பாட்டிற்கு இணங்கியவர்கள் போல நடித்து, அவனைத் தயானு தனியே வந்து காணுவதற்கான இடமும் நேரமும் குறித்தனர். குறித்த நேரப்படி குறித்த விடத்தில்

பெர்ட்டிரம் வர, ஹெலெனு தயானுவின் தோற்றத்துடன் அங்கு வந்து ஆராக் காதலோடு அவனுடன் அளவளாவி மகிழ்ந்தாள். அம்மகிழ்ச்சி நேரத்தில் ஹெலெனுவின் கணையாழியைப் பெர்ட்டிரம் வாங்கிக் கொண்டான். அதற்கு மாறாக, அவன் தன் கணையாழியை ஹெலெனுவிடம் கொடுத்தான்.

இதற்கிடையில், பிணி நீங்கப்பெற்ற அரசன் அதற்குக் காரணமான ஹெலெனுவின் மண வாழ்வைக் கண்ணுற்று மகிழ எண்ணி, அவளையும் பெர்ட்டிரமையும் தன்னிடம் வருமாறு அழைப்பு விடுத்தான். அப்பொழுது, அவர்கள் இணக்கமின்றித் தனித் தனி பிரிந்து காணமற் போனதை ரூஸிலான் பெருமாட்டி மூலம் அறிந்து, அரசன் நேரில் வந்து அப்பெருமாட்டிக்கு ஆறுதல்சொல்லுவதோடு தானே முயன்று அவர்களைத் தேடுவதென்றும் முற்பட்டான்.

அவ்வண்ணமே அரசன், ரூஸிலான் வந்து ரூஸிலான் பெருமாட்டியின் பெருந் துயர் கண்டு தன்னிலை மறந்து கண்ணீர் உகுத்துக் கதறினன். பின்பு திறனுடைய தூதரையும் ஒற்றரையும் ஏவி, ஹெலெனுவையும், பெர்ட்டிரமையும் தேடிக் கொணருமாறு பணித்தான். அவன் தூதரும் ஒற்றரும் அவர்களைப் பல நாள் பல இடங்களிலும் தேடினர். இறுதியில் அவர்கள், பெர்ட்டிரமைப் பிளாரென்சில் கண்டு, அவ்வூர் அரசன் இணக்கம் பெற்று அவனைக் கொண்டுவந்தனர். இச் செய்தி யறிந்த ஹெலெனு, தானும் தயானுவையும் அவள் தாயையும் உடன் கொண்டு நேரே ரூஸிலான் வந்தாள்.

அரசன் பெர்ட்டிரமிடம் ஹெலெனுவைப் பற்றி உசாவியபோது, அவள் உயிருடன் இருக்கிருளோ

மாண்டொழிந்தாளோ தனக்கொன்றுந் தெரியாதென்றும், அவள் இதுவரையில் மாண்டிராவிட்டால் விரைவில் மாளவேண்டுமென்றே தன் மனம் விருப்புகின்றதென்றும், அவள் மாண்டிருப்பின், அதனை அறிந்த மறு நொடியே தான் இன்னொரு மாதை மணஞ் செய்துகொள்ளும்படி ஏற்பாடு



ஹெலெனு அரசனது அழைப்பைப் பெறுதல்

செய்யப்பட்டிருக்கின்றதென்றுங் கூறினன். அரசன், 'இன்னொரு மாதென்றது யார்' என்று கேட்கப் பெர்ட்டிரம், தயானுவைப்பற்றி மொழிந்து, அவளுடன் தான் ஏற்கெனவே உளமுவந்து களவியல் முறையில் மணஞ்செய்து கொண்டதாகவுந் தெரிவித்தான்.

அரசன் பெர்ட்டிரமிடம் எல்லையற்ற சினங் கொண்டானாயினும், ஹெலெனுவின் செய்தியறியாது எதுவுங் கூறமுடியாத நிலைமையிலிருந்தான்.

அப்போது, ஹெலெனுவே முன்வருவது கண்டு, அரசன் எல்லையற்ற மகிழ்ச்சியோடு அவளை எதிர் கொண்டு அழைத்தான். உடனே அவளைப் பெர்ட்டிரமிடம் அழைத்துச் சென்று, அவளை ஏற்றுக் கொள்ளும்படி கூறப், பெர்ட்டிரம், தான் மனங் கலந்து நேசிக்கும் மங்கையை யன்றி, வேறு யாரையும் ஏற்கமுடியாதென்றும், வேண்டுமானுல் தான் விரும்பிய மாதை மணக்கும் உறுதியுடன் இவள் இறக்கும் வரைக்குங் காத்திருக்கத் துணிந்துவிட்ட தாகவும் கூறினுன்.

அரசன் சினங்கொண்டு, 'இனி இவன் இறப்பதே நன்'றென்று பெர்ட்டிரமை வீழ்த்தப்புகும் எல்லையில், அவன் கையிற் கிடந்த கணையாழி அரசன் கண்களுக்குப் புலப்பட்டது. "இது நான் ஹெலெனுவுக்குக் கொடுத்த கணையாழி அன்றே! இஃது உன் கையில் எப்படி வந்தது? கூறுக" என்று கேட்க, அவன் திகைத்து மிரள மிரள விழித்தான்.

அந்நேரத்தில் ஹெலெனு இடையிட்டுப் பெர்ட்டிரமிடம் தனக்கு ஒரு வழக்கிருக்கின்றதென்று கூறினுள். ஹெலெனு என்ன சொல்லப் போகிறுள் என்று பெர்ட்டிரம் அவள் பக்கம் திரும்பியதும், அவள் தன் கையில் அணிந்திருந்த பெர்ட்டிரமின் கணையாழியை அவனிடம் காட்டி, "இதனை நான் பெருகின்ற நாளே தம் காதலைப் பெறும் நாள் என்று முன்பு மொழிந்திருக்கின்றீர்; அவ்வாறே, கணையாழியைப் பெற்றேன்; தம் காதலையும் பெற்றவளானேன்; இப்போது யாது கூறுகின்றீர்" என்று திர்ந்த குரலில் தனது வழக்கை எடுத்துரைத்தாள்.

பெர்ட்டிரம் அது கேட்டு, நிகழ்ந்தது இன்னதென்றறிய இயலாமல் திடுக்கிட்டு, "இது நான் என் காதலிக்கன்றோ கொடுத்தது! நீ திருடியோ, அல்லது கொலை செய்தோதான் இதனைக் கவர்ந்திருக்க வேண்டும்; அப்படியாயின், உன்னை எளிதில் விடேன்" என்றான்.

ஹெலெனா, "அரசே, ஏழையாயினும் யான் திருட்டும், கொலையும், கொள்ளையும் அறியேன்; இச் செல்வர் என் உள்ளம் கொள்ளை கொண்டவர். போதாதென்று என் தோழி ஒருத்தியின் காதலைத் திருட்டாற் பெறவும், அவள் கற்பைக் கொள்ளை கொள்ளவும் முயன்றுள்ளார்" என்று கூறி, மறைந்து நின்ற தயானாவையும் அவள் தாயையும் வெளியே வருவித்து, அவர்கள் மூலம் கணவன் குறிப்பிட்ட களவியல் மணம் அவன் நினைத்தபடி வேறொரு மாதுடனன்று; தன்னுடனேயே நிகழ்ந்தது என்பதை விளக்கினாள்.

பெர்ட்டிரம், ஹெலெனாவின் திறனையும் வடமீன் போல் சற்றும் மாறாத நிலையான காதலையுங் கண்டு, தான் செய்த பிழைகளுக்கெல்லாம் அவள்பால் மன்னிப்புக் கேட்டு அவளை மனமார ஏற்றுக்கொண்டான். தயானாவினிடமும் தன் பிழை பொறுக்குமாறு வேண்டி, அவளைத் தன் தங்கையாகக் கருதி நடத்தலானான்.

தயானாவின் ஒப்பற்ற கற்புறுதி கண்டு வியந்த மன்னன், ஹெலெனாவின் திறத்துக்குப் பரிசாக அவளுக்குப் பெர்ட்டிரமை அளித்ததுபோல், தயானாவுக்கும் தன் பெருமக்களுள் ஒருவரைக் கணவனாகத் தேர்ந்தெடுத்து வழங்கினான்.

# 2. மாறாட்டத்தால் நேர்ந்த போராட்டம்

## (கதை உறுப்பினர்)

### ஆடவர்

1. **ஈஜியன்:**—ஸைரக்கூஸ் நகர்ச் செல்வன்—இரட்டையரான இரு அந்திபோலஸ்களின் தந்தை.
2. **மூத்த அந்திபோலஸ்:**—ஈஜியன் மூத்த மகன்—எபீஸஸ் நகரப் படைத்தலைவன்—அதிரியானா கணவன்.
3. **மூத்த துரோமியோ:**—மூத்த அந்திபோலஸின் பணியாள்——அதிரியானாவின் பணிப் பெண்ணின் கணவன்.
4. **இளைய அந்திபோலஸ்:**—ஈஜியன் இளைய மகன்—தாயையும் தமையனையும் தேட எபீஸஸ் வந்தவன்.
5. **இளைய துரோமியோ:**—இளைய அந்திபோலஸின் பணியாள். —பின்னால் அதிரியானா பணிப் பெண்ணின் தங்கையை மணந்தவன்.
6. **எபீஸஸ் நகரத் தலைவன்.**
7. **மெனெபோன் கோமகன்:**—நகரத்தலைவன் உறவினன் மூத்த அந்திபோலஸின் உயிர் நண்பன்—அதிரியானாவின் மாமன்.
8. **பொற் கொல்லன்.**

### பெண்டிர்

1. **ஈஜியன் மனைவி:**—(மாற்றுருவில்) **எபீஸஸில் மடத்தலைவி.** இரு அந்திபோலஸ்களின் தாய்.
2. **அதிரியானா:**—மூத்த அந்திபோலஸின் மனைவி—மெனெபோன் கோமகன் மருகி.
3. **அதிரியானாவின் தங்கை:**—இறுதியில் இளைய அந்திபோலஸின் மனைவி.
4. **அதிரியானாவின் பணிப்பெண்:**—மூத்த துரோமியோவின் மனைவி.
5. **அதிரியானாவின் பணிப்பெண்ணின் தங்கை:**—இறுதியில் இளைய துரோமியோவின் மனைவி.
6. **நடிகை:**—மூத்த அந்திபோலஸின் காதலி.

---

# கதைச் சுருக்கம்

கப்பலுடைந்ததனால் ஸைரக்கூஸ் நகரச் செல்வன் ஈஜியனுடைய மூத்த மகன் அந்திபோலஸனும், அவன் வேலையாள் துரோமியோவும் எபீஸில் தங்கினர். அந்திபோலஸ் நகர்த் தலைவன் உறவினன் மெனபோன் நட்பினால் அவன் மருகியாகிய அதிரியானவை மணந்து படைத்தலைவனாய் வாழ்ந்தான். அவன் பணியாள் துரோமியோவும் அதிரியானவின் பணிப்பெண்ணை மணந்தான். ஈஜியன் மனைவி அதே நகரில் ஒரு மடத்தில் சேர்ந்து மடத்தலைவியானாள். ஈஜியனும் மூத்த அந்திபோலஸனுடன் பிறந்து அவனையே போன்ற உருவுடைய இளைய அந்திபோலஸனும், துரோமியோவையே போன்ற உருவுடைய அவன் தம்பி இளைய துரோமியோவும் ஸைரக்கூஸில் வாழ்ந்தனர். தமையனையும் தாயையும் தேடி இளைய அந்திபோலஸனும் துரோமியோவும் எபீஸஸ் செல்ல, அவர்களைப் பின்பற்றிச் சென்ற ஈஜியன் ஸைரக்கூஸநுக்கெதிரான எபிஸஸ் நகரத்துச் சட்டப் பொறியுட்பட்டுக் கோபத் தீர்ப்பளிக்கப் பட்டான். ஆயினும், அவன்மீ திரங்கித் தலைவன் மாலை வரை ஆயிரம் பொன் தண்டம் செலுத்தித் தண்டனையிலிருந்து தப்புமாறு கூறினான். இதற்கிடையில் இரு அந்திபோலஸ்களும், இரு துரோமியோக்களும் ஒரே உருவுடையவரா யிருந்ததனால், அதிரியானு, அவள் பணிப்பெண் முதலியோரும், மூத்த அந்திபோலஸினிடம் காதல் கொண்ட நடிகையும், அவள் பொற் சங்கிலி செய்யக் கொடுத்திருந்த பொற் கொல்லன் ஒருவனும் பலவாறு குழப்பமடைந்தனர். இறுதியில் ஈஜியன் தூக்கிலிடப்போகும் தறுவாயில் அவன் மனைவியாகிய மடத் தலைவியும், பிள்ளைகளும் ஒருங்கே வந்து குழப்பம் தற்செயலாய் நீங்க, அனைவரும் மகிழ்ந்தனர். இளைய அந்திபோலஸ் அதிரியானவின் தங்கையையும், இளைய துரோமியோ அவள் பணிப்பெண்ணின் தங்கையையும் மணந்தனர்.

# 2. மாருட்டத்தால் நேர்ந்த போராட்டம்

## 1. குடும்பப் பிரிவு

ஸைரகூஸ் (Syracuse) என்ற நகரில் ஈஜியன் (Aegeon) என்று ஒரு செல்வன் இருந்தான். தொழிலை ஓட்டி, அவன் சிலகாலம் அயல்நாடு சென்று வாழ வேண்டி யிருந்தது. அப்போது அவனுக்கு, ஒரே அச்சில் வார்த்தவர் போன்ற இரண்டு புதல்வர் பிறந்தனர். பெயரிலும் வேற்றுமை இல்லாதபடி ஈஜியன் அவ்விருவரையும் அந்திபோலஸ் (Antipolis) என்றே அழைத்தான்.



அந்திபோலஸ்களும் துரோமியோக்களும்

அப்புதல்வர்கள் பிறந்த அதே நேரத்தில் அந்நகர் விடுதியில் ஓர் ஏழை மாதினுக்கும் இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களும் ஒரே சாயலும் தோற்ற

மும் உடையவரா யிருந்தனர். அவர்கள் தாய் அவர்களுக்கும் துரோமியோ (Dromio) என்று ஒரே பெயரிட்டு அழைத்தாள். அவள் மிகவும் ஏழைபானதனால் அவர்களைத் தானே வளர்க்க முடியாமல் ஈஜியனிடம் ஒப்படைத்தாள். ஈஜியனும் அவ்விருவரையும் தன் பிள்ளைகளின் பணியாளராக வைத்து வளர்த்து வந்தான்

இரு அந்திபோலஸ்களும் இரு துரோமியோக்களும் சிறுவரா யிருந்தபோது பெற்றோர், தம் தாய் நாட்டுக்குப் போகப் பயணமாயினர். ஆனால் காலக்கேட்டினால், வழியில் அவர்கள் ஏறிச்சென்ற கப்பல் புயலிற்பட்டு நொறுங்கிவிட்டது. கப்பலில் இருந்தவருள் ஒரு சிலர் மட்டுமே படகுகளில் தப்பினர்.

ஈஜியனும் அவன் மனைவியும் தம் பிள்ளைகள் ஒவ்வொருவரையும் அவரவர் பணிப்பிள்ளைகளுடனே சேர்த்து இரண்டு மரத்துண்டுகளில் கட்டி மிதக்க விட்டார்கள். பின் தாங்களும் தனித்தனியாகப் பாய் மரத்தில் மிதந்து தப்ப முயன்றனர்.

காற்றும் அலையும் அடிக்கும் வழியிற் சென்று எல்லாருமே பிழைத்தனர். ஆயினும், ஒருவர் பிழைத்ததை இன்னொருவர் அறியமுடியவில்லை.

ஊழ்வலியால் இங்ஙனம் சிதறிய அக்குடும்பத்தினரைப் பல ஆண்டுகள் கழித்து அதே ஊழ்வலி எபிஸஸ் (Ephesus) என்னும் நகரில் வேறு வேறாகக் கொண்டுவந்து சேர்த்தது. அனைவருக்கும் பிறர் உயிர் பிழைத்தது தெரியாதது போலவே, அனைவரும் ஓர் இடத்தில் வந்து சேர்ந்ததும் அவர்களுக்குத் தெரியாமலே இருந்தது. அதன் பயனை அவர்கள் பலவகை

யான இக்கட்டுகளுக்கும் குழப்பங்களுக்கும் ஆளாயினர்.

அவர்கள் அனைவரிலும், முதன்முதலாக எபீஸஸ் வந்தவர் ஈஜியன் மனைவியும், மூத்த அந்திபோலஸும் அவன் பணியாளான மூத்த துரோமியோவுமேயாவர். அவர்கள் அந்நகரத்துச் செம்படவர் சிலரால் கடலிலிருந்து காப்பாற்றப் பட்டனர். சிறுவர் இருவரையும் தாயினிடமிருந்து பிரித்து அச்செம்படவர் பிறர்க்கு அடிமைகளாக விற்றுவிட்டனர்.

மக்களை இழந்த தாய் மனமுடைந்து, நகரெங்கும் பித்துக்கொண்டவள்போல் அலைந்தாள். அப்போது துறவி ஒருவர் அவளுக்கு மெய்யறிவு புகட்ட, அவள் ஒருவாறு மனந்தெளிந்து ஒரு மடத்தில் இறைவன் பணியில் ஈடுபட்டாள். அவளது மனத் தூய்மையைக் கண்ட மடத்துத் துறவுமாதர் அவளையே அம்மடத்தின் தலைவியாக்கினர்.

ஈஜியன் மக்களை விலைக்கு வாங்கியவன், நகர்த் தலைவனுக்கு உறவினனும் பெருவீரனுமாகிய மெனெபோன் கோமகனே (**Duke of Menaphon**). அவன் மூத்த அந்திபோலஸின் பெருமிதத் தோற்றத்தைக் கண்டு அவனைப் படையில் ஒரு பணியாளனாகச் சேர்க்கும்படி நகர்த்தலைவனைத் தூண்டினன்.

படை வீரனான அந்திபோலஸ், தனது வீரத்தாலும் நற்குணத்தாலும் மிகவும் மேம்பாடெய்தி இறுதியில், தனக்கு உதவிசெய்த மெனெபோன் கோமகன் உயிரையும் காப்பாற்றினன். அதன் பயனாக நகர்த்தலைவன் அவனையே தன் படைத் தலைவனாக அமர்த்திக்கொண்டான். அது முதல்

மெனெபோன் கோமகன் அவனைப் பின்னும் அருமை யாகப் பாராட்டித் தன் மருகியாகிய அதிரியானாவை (Adriana) அவனுக்கு மணஞ்செய்து கொடுத்தான்.

அந்திபோலஸின் பணியாளாகிய துரோமியோவும் அதிரியானாவின் பணிப்பெண் ஒருத்தியை விரும்பி மணஞ் செய்துகொண்டு, அவளுடனேயே வாழ்ந்து வந்தான்.

மூத்த அந்திபோலஸ் இங்ஙனம் எபீஸஸில் நல் வாழ்வுடையவனா யிருப்பது ஸைரக்கூஸ் நகரிலிருக்கும் அவன் தந்தையாகிய ஈஜியனுக்கும், இளைய அந்திபோலஸுக்கும் தெரியாது. ஆகவே அவர்கள் அவனைப்பற்றிக் கவலைகொண்டு அவனை என்று காண் போமோ என்று தனித்தனியாக ஏங்கி யிருந்தனர்.

பல ஆண்டுகள் இங்ஙனம் கழிந்தும் அண்ணனைப் பற்றிய செய்தி எதுவும் தெரியாதது கண்டு இளைய அந்திபோலஸ் தந்தையை அணுகி, ' அப்பா, இன்னும் நாம் வாளா இருப்பது நன்றன்று; நானாவது போய் அம்மையையும் அண்ணனையும் தேடி வருகிறேன் " என்றான்.

ஈஜியனுக்கும் உண்மையில் மனைவியைப்பற்றியும் மகனைப்பற்றியும் கவலை உண்டு. ஆயினும், அவர் களைத் தேடத் தன் இளைய மகனை அனுப்பினால் எங்கே அவனையும் இழக்கவேண்டி வந்துவிடுமோ என்று அஞ்சினான். எனினும், வேறு வழியின்றி அவன் அவர்களைத் தேடும்படி இளைஞனை அனுப்பத் துணிந்தான்.

இளைய அந்திபோலஸ் இளைய துரோமியோவை யும் உடன்கொண்டு பல இடங்களுக்குச் சென்று தன் உடன்பிறந்தானையும் தாயையும் தேடி யலைந்து கடைசியாக எபீஸஸ் நகரம் வந்து சேர்ந்தான். அந் நகருக்கும் ஸைரக்கூஸிற்கும் நெடுநாள் பகைமை உண்டு என்பதை அவன் அறிவானதலால், தானும் பணியாளும் வேற்று நகரத்தாராக உருமாறி உட் சென்றனர். சென்று எங்குஞ் சுற்றி ஓய்வுற்று, அங்குள்ள விடுதி ஒன்றில் தங்கி இளைப்பாறினர்.

முதலில் மனைவியையும் ஒரு பிள்ளையையும் இழந்ததனால் ஒரு கண்ணும் கையும் இழந்தவன் போன்றிருந்த ஈஜியன், எஞ்சிய கண்ணும் கையுமாய் அமைந்த இளைய மகனையும் பிரிய நேர்ந்ததில் மிகவும் மனமுளைந்தான். ஆனால், எப்படியும் அவ்விளையோன் முன் இழந்த மனைவியையும் மகனையும் தேடி அழைத் துக்கொண்டு வருவான் என்ற நம்பிக்கையில் ஈஜியன் சிலகாலம் கழித்தான். நாளாக ஆக அந் நம்பிக்கையும் மறையலாயிற்று. இறுதியில் அவன் பொறுமை இழந்து, முதலிற் காணமற் போனவரையும் பின்பு அவர்களைத் தேடச் சென்றவரையும் சேர்த்துத் தானே சென்று கண்டு பிடிப்பதெனத் துணிந்து புறப்பட்டான்.

## 2. ஈஜியன் துயர்

இளைய அந்திபோலஸை எபீஸஸ் பக்கம் இழுத் துச் சென்ற அதே ஊழ், ஈஜியனையும் அந்நகரின் பக்கமே கொண்டுவந்து சேர்த்தது.

எபீஸஸுக்கும் ஸைரக்கூஸிற்கு மிடையில் பகைமை உண்டு என்பதை ஈஜியன் மறந்து, ஸைரக்கூஸர் உடையிலேயே நகரில் புகுந்துவிட்டான். ஆகவே நகர்க்காவலர் அவனைப் பிடித்துக் கொண்டு போய் நகர்த்தலைவன் முன் நிறுத்தினர்.

தலைவன் ஈரநெஞ்சினனாயினும் நடுநிலை பிறழாதவன். ஆதலால் ஈஜியனின் ஆண்டு முதிர்ச்சியைக் கண்டு பரிவுற்றானாயினும், நகர்ச் சட்டத்தைத் தவிர்க்கக்கூடாமல் ஆயிரம் வெள்ளி தண்ட வரி செலுத்த வேண்டும்; அன்றேல் அவன் தலை யிழத்தல் வேண்டுமெனத் தீர்ப்பளித்தான்.

ஈஜியன் தன் துயரமிக்க வரலாறு முற்றும் நகர்த் தலைவனுக்கு எடுத்துரைத்தான். அதுகேட்டு மனமிரங்கிய அத்தலைவன், தண்டனையை நிறைவேற்ற மாலை வரையில் தவணை கொடுக்கக் கூடுமென்றும், அதற்குள் நகரில் நண்பர் எவரேனும் இருந்தாற் கண்டுபிடித்து ஆயிரம் வெள்ளியைக் கொடுத்து உயிர் பிழைக்கலா மென்றும் கூறினன்.

ஈஜியன் இத்தீர்ப்புக் கேட்டு, அன்றே தன் உயிர் அகன்ற தென்று கருதினன். ஆயினும், மாலைவரையில் நேர மிருக்கின்றது. ஒருகால் அதற்குள் இறையருள் ஏதேனும் வழிகாட்டுதலுங் கூடும் என்ற நம்பிக்கையுடன் சுற்றிச் சுற்றி அலைந்தான். மாலை அணுக அணுக அச்சிறு நம்பிக்கையும் வறண்டு போயிற்று.

கறுத்திருண்ட முகிலினிடையிலும் வெள்ளிய மின்னற்கொடி தோன்றி ஒளிர்வதுபோல, நம்பிக்கை

யற்றுத் துயர் சூழ்ந்த இடத்திலும் மறைந்து நின்றளிக்கும் இறையருள் ஒளி வீசும் என்பதை யாரே அறிவர்! ஈஜியன் தான் ஆளற்றுத் துணையற்றுத் தவிப்பதாக நினைத்து மனமழுங்கிய அதே நகரிில், அண்மையிலேயே அவன் மனைவியும் அவன் பிள்ளைகளும் இருந்தனர் என்பது அவனுக்குத் தெரியாதன்றோ? அதிலும், இறையருளால் ஒரு மகன் நிறை செல்வமும் உயர்நிலையும் உடையவனாய் அருகிலுள்ளதோர் மாளிகையில் வீற்றிருந்தான் என்பதை எப்படி அவன் அறியக்கூடும்?

இதற்கிடையில், இங்ஙனம், ஒரே வடிவுடைய இரண்டு அந்திபோலஸ்களும் இரண்டு துரோமியோக்களும் அந்நகரில் இருந்தது, அவர்களிடையே பல வகையான மருட்சிகளையும் குழப்பங்களையும் உண்டு பண்ணிற்று.

## 3. குழப்பங்கள்

இளைய அந்திபோலஸ் தன் பணியாளிடம் பணப் பையைக் கொடுத்துக், கடைக்குப் போய்ச் சமையலுக்கான பொருள்கள் வாங்கிவர அனுப்பிவிட்டுத், தான் நகர் பார்க்கும் எண்ணத்துடன் தெருக்களில் சுற்றிக்கொண்டிருந்தான்.

மூத்த அந்திபோலஸ் அதே நேரத்தில் தனது படை நிலையத்தில் இருந்தான். உணவு நேரமாகியும் தொழில் மிகுதியால் அன்று அவன் வீடு செல்ல முடியாமல் காலந்தாழ்த்த நேர்ந்தது. அவன் மனைவியாகிய அதிரியானா அக் காலத்தாழ்வுக்குக் காரணந் தெரியாமல் பலவகையில் தன் மனத்தை அரட்டலானாள்.

அவள் தன் கணவனிடம் மாருப் பற்று வாய்ந்தவளாயினும், ஐய மனப்பான்மையால் அலைக்கழியும் நெஞ்சினளா யிருந்தாள். இதனால் அவள் அவனுக்கு நேரம் வேளை என்பதின்றி எப்போதும் தொந்தரவு கொடுத்துவந்தாள். அன்றைக்கு முந்தின நாளும் அவள் அங்ஙனம் தொந்தரவு செய்தபோது அந்திபோலஸ், 'இப்படி நீ என்னை என்றும் அரிப்பதாயின், நான் உன்னை விட்டுவிட்டு வேறு மனைவிதான் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று சினந்து கூறினான்.

வெள்ளை யறிவினளாகிய அதிரியானா, அவன் மேலீடாகக் கூறிய இச் சினமொழிகளை அப்படியே மெய்யெனக் கொண்டு மனமுளைந்தாள். இன்று அதற்கேற்ப, அந்திபோலஸ் வேளையில் வீட்டுக்கு வரக் காலந் தாழ்த்தது கண்டு, அவள் தன் கணவன் தன்னிடம் சொன்னபடியேதான் தன்னை விட்டுவிட்டானோ என்று மிக்க அச்சங் கொண்டாள். எனவே, அவள் தன் பணியாளாகிய மூத்த துரோமியோவை அழைத்துத் தன் கணவனைத் தேடிக்கொண்டு வரும்படி அனுப்பினாள்.

துரோமியோ தன் தலைவனைத் தேடிக்கொண்டு போகும்போது, வழியில் இளைய அந்திபோலஸைக் கண்டான். கண்டு அவன் தன் தலைவனே என்று எண்ணிய துரோமியோ, தலைவி அழைக்கின்றாள் என்று கூறி வீட்டுக்கு இழுத்தான். ஆனால், அவ்வந்திபோலஸ், இத் துரோமியோவைத் தன் பணியாளாகிய துரோமியோவே எனக் கருதி வெகுளியுடன், "என்னிடம் ஏன் நகையாடுகிறாய்? எனக்குத் தலைவியு மில்லை, கொலைவியு மில்லை; ஏன் தொந்தரவு

செய்கிறாய்?" என்று சீறினான். துரோமியோ போகாமல் பின்னும் பசப்புவது கண்டு, அவனை அந்திபோலஸ் நையப் புடைத்தனுப்பினான்.



இளைய அந்திபோலஸ் துரோமியோவை அடித்தனுப்புதல்

துரோமியோ அழுதுகொண்டு தலைவியிடம் வந்து, "அம்மணி, தங்கள் கணவர், நான் போய் அழைத்ததும் கடுஞ்சினங்கொண்டு என்னை அடித்துத் துரத்திவிட்டார். மேலும், அவர் 'எனக்குத் தலைவியுமில்லை, கொலைவியுமில்லை' என்று வெறுத்துரைக்கிறார்" என்று கூறினான். அதைக் கேட்டதும், அதிரியானாவின் மனக்குழப்பம் முன்னையினும் பன்மடங்கு மிகுதியாயிற்று. உணர்ச்சிச் சுழலிற் பட்ட அவள், மனம் பதைத்துத் தன் கணவனைச் சீற்றந் தணித்து அழைத்துவரத் தானே புறப்பட்டாள்.

துரோமியோ கூறிய குறிப்பைப் பின்பற்றி அதிரியானா ஒரு பணிப்பெண்ணுடன் இளைய அந்திபோலஸ் இருக்கும் விடுதிக்கு வந்துசேர்ந்தாள்.

துரோமியோவைப் போலவே அவளும் அவனைத் தன் கணவன் அந்திபோலஸே என்று நினைத்தாள். ஆகவே, அவள் அவனைத் தன்னுடன் வீட்டுக்கு வந்து உண வருந்தும்படி வேண்டினாள். அந்திபோலஸ் உண்மையில் அவள் யார் என்றே அறியாதவனாதலின், ஒன்றும் விளங்காது விழித்தான். சற்று முன்னதாகப் பணியாள் கூறிய மொழிகளைக்கூட, அவன், 'வேண்டுமென்றே ஏளனமாகக் கூறிய புனைசுருட்டு' என்று கருதினான். இப்போது அவன் கதைக்கு ஏற்றபடி தாளமிட, இப்பெண் எங்கிருந்து வந்தாள் என்று அவன் நினைத்து வியப்படைந்தான்.

ஆனால், அவன் எவ்வளவுக் கெவ்வளவு அதிரியானாவினிடம் ஏதிலனாக ஒதுங்கி நடந்துகொண்டானோ, அவ்வளவுக்கவ்வளவு அவள் அவனிடம் கணவன் என்று உரிமை கொண்டாடிக் கெஞ்சி வற்புறுத்தி அழைக்கலானாள். அம் மொழிகளை மறுக்க முடியாமையினாலும், பசி வேளையாயிருந்ததனாலும், இப் பித்தலாட்டங்களின் முடிவுதான் என்ன என்று தெரிந்துகொள்ளும் விருப்பத்தினாலும் அவன் அவளைப் பின்பற்றி அவள் இல்லத்தை அடைந்தான்.

அதிரியானாவுக்குத் தங்கை ஒருத்தி இருந்தாள். அவளும் அதிரியானாவைப் போலவே அழகுமிக்கவள். ஆனால் அவளிடம், அதிரியானாவின் படபடப்போ ஐய மனப்பான்மையோ சிறிதும் இல்லை. அதிரியானா அந்திபோலஸை வற்புறுத்தி உணவளிக்கும்போதெல்லாம், அவள் சற்றே அகல நின்றிருந்தாள். அதிரியானாவின் கடுமொழிகளைவிட, அவளுடைய கலங்கிய இரு விழிகளும், அவ்வப்போது கூறும் அன்பு நிறைந்த

அருமொழிகளும் அந்திபோலஸின் மனத்தை மிகுதியாக இயக்கின. அவன் தன்வயமற்றவனாய் அவர்களுடன் இன்னுரையாடி அன்போடு உண்ணலானான்.

## 4. கணவன் ஏமாற்றம்

இதனிடையில் அதிரியானாவின் கணவனை மற்றைய அந்திபோலஸ், மற்ற நாளினும் மிகுதியாக நேரஞ்சென்று வீட்டிற்குத் திரும்பினான். வரும் வழியில் தன்னைத் தேடிவரும் பணியாள் துரோமியோவைக் கண்டு அவனையும் அழைத்துக்கொண்டு வந்தான். ஆனால் இருவரும் வீடுவந்து சேர்ந்தபொழுது வீட்டின் வாயில் அடைத்திருந்தது. வீட்டினுள்ளிருந்து, அதிரியானாவும் அவள் தங்கையும் யாருடனோ அளவளாவிப் பேசுங்குரல் கேட்டது. வெளியில் கதவைத் தட்டியது அவர்களுக்குக் கேட்கவில்லை.

ஆனால், கதவருகில் இருந்த பணிப்பெண்கள் சிலர், 'யார் அங்கே' என்று கேட்டார்கள். இருவரும் தாம் இன்னார் என்பதைத் தெரிவித்த அளவில் அவர்களுள் ஒருத்தி கொல்லென நகைத்து, "ஏனையா, இப்படி அடாப்பொய் அளக்கிறீர்! தலைவரும் என் கணவராகிய அவர் பணியாளும் உள்ளிருந்து உண்டுகொண்டிருக்க, அவர்கள் பெயரால் என்னை ஏமாற்றுகிறீரே" என்று எடுத்தெறிந்து கூறி ஏளனஞ் செய்தாள். அதுகேட்டு மூத்த அந்திபோலஸ், கடுஞ்சினங்கொண்டு தன் நிலையத்தையே நோக்கி மீண்டான்.

அவன் போகும் வழியில் ஒரு நடிகையின் வீடு இருந்தது. அவன் சில நேரங்களில் பொழுதுபோக்

கிற்காக அங்கே சென்று அவளுடன் பேசி யிருப்ப துண்டு. இன்று தன் மனைவி தன்னை அவமதித்ததை எண்ணி மனம் வெறுப்புற்று, அவளிடம் சென்று சற்றுப் பேசிக் களித்திருக்கலாம் என்று கருதினான். அவளும் அவன் வரவின் அருமை யறிந்து போற்றி, அவனிடம் பரிவாய் உரையாடினாள். அதுகண்டு களிப்புற்ற அந்திபோலஸ், தான் தன் மனைவிக்கென்று செய்துவரும் பொற்சங்கிலி ஒன்றை அவளுக்குத் தருவதாக வாக்களித்தான். அவளும் அவன் பரிவுக்கு மகிழ்ந்து, தன் கைக் கணையாழியை எடுத்து அவன் கையில் அணிவித்தாள்.

பொற்சங்கிலியைச் செய்ய ஏற்றுக்கொண்ட பொற்கொல்லன், அது முடிந்ததும் அந்திபோலஸைக் காண வந்துகொண்டிருந்தான். வழியில், அவன் இளைய அந்திபோலஸைக் கண்டு, அவனை மூத்த அந்திபோலஸ் என்று நினைத்து அவனிடம் சங்கிலி யைக் கொடுத்தான். அந்திபோலஸ் அது தனதன்று என்றபோது, அவன் சினங்கொண்டு, "இப்போது எனதன்று என்பதனால் என்ன பயன்? உமக்கெனச் செய்தாயிற்று; இனி நீர் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியதே" என்று அதை அவனிடம் எறிந்து விட்டுப் போனான்.

கொஞ்சநேரங் கழித்து அப் பொற்கொல்லன் ஒரு கடன்காரனால் சிறைபிடிக்கப்பட்டான். காவ லுடன் சிறைக்கூடத்திற்குச் செல்லும் வழியில், அவன் மூத்த அந்திபோலஸைக் கண்டான். கண்ட வுடன் சங்கிலிக்குப் பணம் கொடுக்கும்படி அவனைக் கேட்க, அந்திபோலஸ், 'பணம் இருக்கட்டும், சங்கிலி

எங்கே' என்றான். பொற்கொல்லன் உம்மிடந்தான் சற்றுமுன் கொடுத்தேனே' என்று துணிவாகக் கூறினான். இருவரும் வாதாடினர். காவலர், இருவரையும் சிறைப் பிடித்து நகர்த்தலைவனிடம் அழைத்தேகினர்.



மூத்த அந்திபோலஸ் சிறை செல்லுதல்

இங்ஙனம் சிறை செல்லுதல், தன் உயர்நிலைக்குத் தகாதெனஅந்திபோலஸ் எண்ணினான். ஆகவே, தான் வழியில் கண்ட இளைய துரோமியோவைத் தன் பணியாள் என்று நினைத்துத், தன் மனைவியினிடம் சென்று தான் விடுதலை பெறுதற்கான பொருளை உடனே வாங்கிவரப் பணித்தான்.

துரோமியோ அந்நேரத்தில் உண்மையில் தன் தலைவனாகிய இளைய அந்திபோலஸைத் தேடிக் கொண்டு வந்தான். ஏனென்றால், அவர்கள் இதற்கு முன், 'பித்தர் போன்று நடக்கும் மக்களையுடைய இம் மாய நகரை விட்டு உடனே நீங்கவேண்டும்' என்று உறுதிசெய்திருந்தனர். ஆதலால், இளைய அந்தி போலஸ், கப்பல் புறப்படும் நேரத்தை அறிந்து வரும் படி தன் துரோமியோவை வெளியே அனுப்பி யிருந்தான். கப்பல் ஒன்று அன்றே புறப்பட இருந் ததை அறிந்த துரோமியோ, அதை அறிவிக்கத் தான் தன் தலைவன் அந்திபோலஸை நாடி வந்தான். ஆனால் தன் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாத மொழிகளை அவன் இப்போது பகர்ந்தது கேட்டுத் துரோமியோ, பெரிதுங் குழப்பமுற்றான்.

ஆயினும், 'பணியாளுக்குரிய கடன் காரியகாரண ஆராய்ச்சி யன்று; கட்டளைப்படி நடப்பதேயாம்' எனத் துணிந்து, அவ் வந்திபோலஸைக் கணவன் என்று உரிமை பாராட்டிய அதிரியானாவின் வீடு சென்று நிலைமையைத் தெரிவித்துப் பணம் கேட் டான். கணவனிடம் எல்லையற்ற பற்று வைத்திருந்த அதிரியானா, உடனே பதைத்துக்கொண்டு தானே பணத்தைக் கொடுத்தனுப்பினாள்.

துரோமியோ அப்பணத்தைக் கொண்டு செல் கையில் இளைய அந்திபோலஸைக் காணவே, அவன் 'நம் தலைவன் இதற்குமுன் காவலிருந்தானே; எப் படி வெளிவந்தான்' என்ற வியப்புடன் பணத்தை அவன்முன் வைத்தான். பணம் ஏது என்று அந்தி போலஸ் கேட்க, அவன், 'நீங்கள் கேட்டுவிட்ட

படியே உங்களைக் கணவர் என்றழைத்த அம் மாது தான் கொடுத்தாள்' என்றான்.

சற்றுமுன் ஒரு பொற்கொல்லன் ஒரு சங்கிலி யைக் கொடுத்துச் சென்றதும், தன் பணியாளே முன் பின் முரணாக நடப்பதும் காண, இளைய அந்தி-போலஸின் மனத்தில் 'அந்நகர் ஏதோ சூனியக்காரி யின் மந்திரவலையிற் பட்ட மாயநகர்போலும்' என்ற ஐயம் வலுத்தது.

இந்நிலையில் மூத்த அந்திபோலஸுடன் நட்புப் பூண்ட நடிகை அங்கு வந்து, தனக்குச் செய்த உறுதிப்படி சங்கிலி வராததனால் தன் கணையாழி யைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி அவனை வேண்டினாள்.

இளைய அந்திபோலஸ் 'நீ யார் என்பதையே நான் அறியேன். ஆயினும், ஏதோ சங்கிலி என்று நீ கூறுவதற் கேற்ப, ஒருவன் இச் சங்கிலியை என் னிடம் எறிந்து போனான்' என்று சொல்லி அதனை அவளிடம் கொடுத்தான்.

அவள் சங்கிலியை எடுத்துக்கொண்டு வீட்டுக் குப் போகும்வழியில் அதிரியானாவைக் கண்டு, தான் அறிந்த வரலாறுகளெல்லாம் சொல்லி, 'அந்திபோல ஸுக்குக் கட்டாயம் பித்துத்தான் பிடித்திருக்க வேண்டும்' என்று தன் கருத்தை வெளியிட்டாள்.

## 5. ஆடவர் நலிவு

அதிரியானாவும் தன்னிடம் அவன் நொடிக்கு ஒரு வகையாக நடப்பதை ஓர்ந்து அவள் கூறுவது உண்

மையாக இருக்கக்கூடும் என்று நம்பினாள். அப்போது இளைய அந்திபோலஸும் அவனுடன் பூசலிட்டவண்ணமாக இளைய துரோமியோவும் வந்தனர். தம் கணவர் பித்துக் கொண்டனர் என்றெண்ணிய அதிரியானாவும் அவள் பணிப்பெண்ணும் அவர்களிடம் நடிகையின் செய்தியைக் கூறி, அவர்களை உண்மையிலேயே வெறிகொள்ளச் செய்தனர். எப்படியாவது தப்பினால் போதும் என்று அவர்கள் திமிறிக்கொண்டோடப் பார்க்கவே, பெண்டிர் அவர்கள் பித்தராதலால் அடைத்து வைப்பது நன்று என்று கூறிக்கொண்டு அவர்களைப் பிடிக்கச் சென்றனர். ஆடவர் இருவரும் சினந்து எழுந்தனராயினும் அத்தகைய நெருக்கடியில் வேறுவகை யறியாமல் ஓடிச் சென்று பக்கத்திலிருந்த ஒரு பெரிய கட்டிடத்தினுள் நுழைந்தனர். அதிரியானாவும் பணிப்பெண்ணும் அங்கும் நுழைய முயன்றனர்.

அக்கட்டிடமே ஈஜியன் மனைவி மடத்தலைவியாக அமர்ந்து நடத்திய மடமாகும். இளைய அந்திபோலஸும் இளைய துரோமியோவும் அதிரியானாவினால் துரத்தப்பட்டுத் தஞ்சம், தஞ்சம் எனத் தன் மடத்திற் புகுந்தபோது, அவள், அவர்கள் தன் பிள்ளையும் பணியாளுமே யாவர் என்பதை அறியாதவளாய்த் தன் இயற்கை இரக்க மனப்பான்மையினால் அவர்களுக்குத் துணைதர முன்வந்தாள்.

அதிரியானாவும் அவள் பணிப்பெண்ணும் தம் கணவர் பித்துக்கொண்டவராதலால், அவரைத் தம்மிடமே ஒப்படைக்க வேண்டும் என்று கேட்டனர். ஆனால், மடத்தலைவியான ஈஜியன் மனைவி, 'அவர்கள்

அறிவிழந்து பித்துக்கொண்டால், நீங்கள் அமைதி இழந்து பித்துக்கொண்டிருக்கிறீர்கள்; அவர்களை ஆதரிக்கும் நிலை உங்களுக்கில்லை. நானே அவர்களை ஆதரித்து உங்களிடம் ஒப்புவிக்கிறேன்' என்று கூறி விட்டாள்.

மேலும், அதிரியானு தன் கணவனிடம் மட்டற்ற பற்றுக் கொண்டவளாயினும், அதன் காரணமாகப் பொறுமையும் நல்லுணர்வும் இழந்து, அவன் மீது ஐயங்கொண்டு அவனுக்கு ஓயாத தொந்தரவு கொடுத்து வருவதையும் மடத்தலைவி உய்த்துணர்ந்து கொண்டாள். ஆகவே, அவள் தனது இனிய நேரிய மொழிகளால் அதிரியானுவுக்கு அவள் குற்றம் தென் படும் வண்ணம் அறிவுரை நல்கினாள். அதிரியானு வும் தெருட்சியுற்றுப் பொறுமையுடன் கணவன் குறிப்பறிந்து நடப்பதாக ஒத்துக்கொண்டாள். ஆயி னும், மடத்தலைவி அவளை முற்றும் நம்பி அந்திபோல ஸையும் துரோமியோவையும் அவளிடம் ஒப்படைக்க மனமில்லாமல் அவர்கள் அனைவரையும் நகர்த்தலைவ னிடம் கொண்டுபோய் நிறுத்தி, அவன்மூலம் ஆவன செய்யவேண்டுமென்று கருதினாள்.

## 6. முடிவு

அந்திபோலஸின் தாய் மடத் தலைவியாய் இருந்த இம்மடத்தின் முன்புறமே, அந்நகரின் தூக்குமேடை அமைந்திருந்தது. மாலைவரையில் நண்பர் எவரை யுங் காணாமையால் தண்டவரி செலுத்த வகையில் லாத ஈஜியனைக் காவலர் கொலைத் தண்டனைக்காக அம்மேடைக்குள் கொண்டுவந்தனர். அவனுடன்,

அத் தண்டனையை வேண்டா வெறுப்பாக நிறை வேற்றும் பொறுப்பை ஏற்று நகர்த்தலைவனும் வந்தான்.

இதே நேரத்தில், சிறையில் வைக்கப்பட்ட மூத்த அந்திபோலஸ் தன் உயர் நிலையின் உதவியால் சிறை காவலனை அச்சுறுத்தி விலக்கிவிட்டுத் துரோமி யோவுடன் அத்தலைவன் முன் வந்து, தமக்கு நகரில் நேர்ந்த பலவகை இன்னல்களையுங் கூறி, 'இவை யனைத்தும் யாரோ எதிரிகளின் மாயமா யிருக்கவேண் டும்' என்று மன்றுடினான். தலைவன், அஃது இன்ன தென்று அறியாது குழப்பமுற்றான்.

ஊழ்வலியால் இத்தறுவாயில், மடத்தலைவியாகிய ஈஜியன் மனைவி, இளைய அந்திபோலஸையும் இளைய துரோமியோவையும் அதிரியானாவுடனும் பணிப் பெண்ணுடனும் கூட்டிக்கொண்டு வந்து தன் மடத்தின் முன் நடந்தவை அனைத்தும் புகன்றாள். இதற்குள், அதிரியானாவும் அவள் பணிப்பெண்ணும் தத்தம் கணவர் உருவுடன் ஒருவருக் கிருவர் நிற்பது கண்டு எல்லையிலா வியப்பும் விழிப்பும் அடைந்தனர். நகர்த்தலைவனும் அவர்களைக் கண்டு, 'இஃதென்ன, இவர்கள், வடிவும் அதன் நிழலும்போல ஒத்து நிற் கின்றனரே; இவர்கள் இருவரோ ஒருவரோ' என மலைவுற்றான்.

அப்போது திருமடத் தலைவியின் உள்ளத்தில் ஒரு பேரொளி உண்டாயிற்று. அவள் இரு அந்தி போலஸ்களையும் வாரி எடுத்து, 'ஆ, நீங்கள் என் பிள்ளைகள் அல்லிரோ' என்று அழுதாள். ஈஜியனும்

தன் துயரமெல்லாம் மறந்து தானே பிள்ளைகளின் தந்தை எனக் கூறிக்கொண்டு ஓடிவந்து, அருகிருந்து இன்பக் கண்ணீர் உகுத்தான்.

மடத்தலைவி, இரு அந்திபோலஸ்களும் ஒரே உருவுடைய தம் இரு பிள்ளைகள் என்றும், உடன் இருக்கும் இரு துரோமியோக்களும் அங்ஙனமே பணிமாது ஒருத்தி பெற்ற இரட்டைப் பிள்ளைகள் ஆவர் என்றும் கூறி, ஈஜியன் தன்னை விட்டு நெடுநாட் பிரிந்திருந்த தன் கணவனே என்றும், தாம் பிரிந்து கூடிய இவ் வியத்தகு வரலாறு முற்றும் எடுத்துரைத்தாள்.

அதுகேட்டு அனைவரும் எல்லையிலா வியப்பும் மகிழ்ச்சியும் எய்தினர்.

இளைய அந்திபோலஸ் அதிரியானாவின் தங்கையையும், இளைய துரோமியோ அவள் பணிப்பெண்ணின் தங்கையையும் விரும்பி மணந்தனர்.

நகர்த்தலைவன் இளைய அந்திபோலஸைத் தன் கருவூலத் தலைவன் ஆக்கினான். அனைவரும் இன்புற்று வாழ்ந்துவந்தனர்.

# 3. வெரோணு நகரின் இரு செல்வர்கள்

(கதை உறுப்பினர்)

## ஆடவர்

1. **புரோத்தியஸ் :**—வெரோணுநகர் இளைஞன்—ஜூலியாவின் காதலன்.
2. **வலந்தைன் :**—புரோத்தியஸ் நண்பன் — ஸில்வியாவின் காதலன்.

   **மாற்றுருவில் கள்வர் தலைவன்.**
3. **மிலன் நகரத் தலைவன் :**—ஸில்வியாவின் தந்தை.
4. **தூரியோ :**—மிலன் தலைவனால் ஸில்வியாவுக்குக் கணவனாகத் தேர்ப்பட்டவன்.
5. **எக்ளாமர் :**—ஸில்வியாவின் நம்பகமான பணியாள்—காட்டிற்கு அவளுடன் சென்றவன்.

## பெண்டிர்

1. **ஜூலியா :**—வெரோணு நகர நங்கை—புரோத்தியஸ் காதலி. **மாற்றுருவில்—ஆண்—அவன் பணியாள்.**
2. **லூஸெத்தா :**—ஜூலியா தோழி.
3. **ஸில்வியா :**—மிலன் தலைவன் மகள்—வலந்தைன் காதலி.

# கதைச் சுருக்கம்

புரோத்தியஸும் வலந்தைனும் வெரோணா நகரின் இரு செல்வ இளைஞர்கள்; இணைபிரியா நண்பர்களும் கூட. புரோத்தியஸ் ஜூலியா என்ற நங்கையின் காதலில் ஆழ்ந்து கிடக்க, வலந்தைன் மேல் நிலையை எண்ணி முயன்று மிலன் நகரத்தலைவனிடம் பணிபெற்றேகினான். புரோத்தியஸின் தந்தையின் விருப்பத்தால் அவன் முயன்று புரோத்தியஸுக்கும் ஒரு பணி தருவித்தான்.

வலந்தைன் மிலன் நகரத் தலைவன் மகளாகிய ஸில்வியாவைக் காதலித்தான். தந்தை அவளைத் தூரியோ என்பவனுக்கு மணஞ்செய்ய ஏற்பாடு செய்யவே, அவர்கள் நூலேணி மூலம் வெளியேறிக் களவியல் முறையில் மணஞ் செய்ய எண்ணினர். நட்பு முறையில் வலந்தைன் இதனைப் புரோத்தியஸிடம் சொல்ல, அவன் நம்பிக்கைக் கேடாய் அதனைத் தலைவனுக்கறிவித்து வலந்தைனை நகரினின்றும் துரத்தும்படி செய்தான். வலந்தைன் காட்டில் ஒரு திருடர் கூட்டத்தில் அகப்பட்டும் தன் திறத்தால் அவர்களைத் தன் வயப்படுததித் தலைவனானான்.

புரோத்தியஸுக்காக நெடுநாள் காத்திருந்த ஜூலியா இறுதியில் ஆணுடையுடன் அவனிடம் பணியாளாய் வந்து, அவனால் ஸில்வியாவிடம் காதல் தூதாய் அனுப்பப்பட்டு, அவள் உள நிலை அறிந்தாள்.

வலந்தைனைப் பின்பற்றி ஸில்வியா வீட்டிற்குச் சென்று திருடர் கைப்பட, அவளைப் பின்பற்றி அங்கு வந்த புரோத்தியஸ் அவளை விடுவித்துப் பின் தானே தொந்தரவு செய்தான். அச்சமயம் வலந்தைன் வந்தான். உடனிருந்த ஜூலியாவும் தன் உருக்காட்டினாள். புரோத்தியஸ் காதலியையும் நண்பனையும் வஞ்சித்தமைக்கு மன்னிப்புக் கேட்டு மனமாறி ஜூலியாவை ஏற்று மணந்தான். வலந்தைனும் ஸில்வியாவை மணந்தான். மிலன் நகரத் தலைவன் சிற்றமாறி நண்பனாய் அனைவரையும் ஏற்றுக்கொண்டான்.

# 3. வெரோணு நகரின் இரு செல்வர்கள்

## 1. நண்பர் பிரிவு

வெரோணு நகரத்தில் புரோத்தியஸ் (Protheus) என்றும், வலந்தைன் (Valentine) என்றும் இளைஞர்கள் இருவர் செல்வர்களாக இருந்தனர். அவர்கள் இருவரும் ஈருடலும் ஓருளமும் போல் மனமொத்த



வலந்தைனும் புரோத்தியஸும்

நண்பர்களாய் விளங்கினர். பருவம் குணம் நடை முதலியவற்றில் மட்டுமின்றி உடையிலுங்கூட அவர்கள் ஒற்றுமையுடையவர்களாகவே வாழ்ந்துவந்தனர்.

அவர்களிடைத் தோன்றிய வேற்றுமை அனைத்தும் ஒரே ஒரு வகையைப் பற்றியதாகும். அதாவது அவர்களுள் புரோத்தியஸ் என்பவன் மட்டும் காதலுக் காட்பட்டு ஜூலியா (Julia) என்னும் மங்கையை நாடி, நெஞ்சில் அவள் நினைவும் நாவில் அவள் மாற்றமுமாக இடைவிடாது அவளை விரும்பி நின்றதேயாம். இதற்கு மாறாக வலந்தைனே எனில், காதல் என்பது ஒருமயக்கம் என்றும், உடல் நலிவோ மற்று எதுவோ ஏற்பட்டகாலை அறிவும் மயங்குவதாலேயே அது ஏற்படுகின்றது என்றும் கூறிப் புரோத்தியஸை எள்ளி நகையாடுவான்.

காதலே கருத்தாய்த் தான் நினைத்த கன்னிகையையே மன மொழி மெய்களால் வழிபட்ட அப் புரோரத்தியஸையும், கன்னியர் எவரையும் மனித வகுப்பிற்குப் புறம்பாகவும் களையாகவும் மதித்து வெறுத்திருந்த வலந்தைனையும், அவர்கள் நட்பையும் பற்றி நாத் தழும்பு படப் பேசி நகையாடி இன்புறுதவர் அந்நகரத்தில் இலர் என்னலாம்.

ஒருநாள் வலந்தைன், தன் காதலியின் படம் ஒன்றை வரைந்து, அதற்கு மைதீட்டிக்கொண்டிருந்த புரோத்தியஸிடம் வந்து ஏளனங் கலந்த புன்னகையுடனும் அன்புடனும் அவன் தோள்மீது சார்ந்து நின்று, "அன்பனே! மாந்தர் வாழ்க்கை யனைத்தும் பெண்களுக்காகவே ஏற்பட்டதென்றுதான் நீ நினைத்திருக்கிறாய்போலிருக்கிறது. உனக்கு என்னதான் சொல்லியும் பச்சைக் குழந்தைகள் ஒரு பொம்மையை வைத்து விளையாடுவது போல, ஒரு பெண்ணின் படத்தை வைத்து இப்படி விளையாடுகிறாயே" என்றான்.

புரோத்தியஸ் அவனைத் திரும்பிக் கூடப் பாராமல், "ஆமாம்; நான் பச்சைக்குழந்தை போலும்! ஊனையும் உளத்தையும் உருக்கி உயிருக்கு உயிரூட்டும் காதலைப் பச்சைக் குழந்தைகள் விளையாட்டு என்று கூறும் நீ குழந்தையா, நான் குழந்தையா என்று நாலுபேரைக் கேட்டுப்பார்; எல்லாம் இன்னும் இரண்டோர் ஆண்டு சென்றால் தெரிந்துபோகிறது. வேண்டாம் வேண்டாம் என்பதெல்லாம் பின்னால் வேண்டும் என்பதற்கோர் பீடிகையேயன்றி வேறன்று" என்றான்.

வலந்தைன்: சரி; புரோத்தியஸ், அது கிடக்கட்டும். இப்படி நாம் விளையாட்டாய்ப் பொழுது போக்கிக் கொண்டிருக்கும் காலத்திற்கு ஓர் எல்லை வந்துவிட்டது. உன்னை விட்டுப் பிரிவது எவ்வளவோ வருத்தமா யிருப்பினும், என் எதிர்கால நலனை யொட்டிப் பிரியத்தான் வேண்டி வருகிறது. நீ உடன் வருவதாயின் உனக்குக்கூட நலமாயிருக்கும். ஆனால் நீ வழிக்கு வருவது ஏது! நீதான் ஜூலியா என்ற கட்டுத்தறியிற் கட்டப்பட்டவனாயிற்றே.

புரோத்தியஸ்: உன் நகையாடலுக்கு இதுதானா நேரம்? ஏது அப்படி என்னையும் பிரிந்து செல்லும்படி தூண்டும் செய்தி? நம் நட்பைவிட நலந்தருவதான அப்பொருள் காதலல்லாது வேறு யாதாயிருக்கக்கூடும்!

வலந்தைன்: போதும் போதும். உன் அறிவு செக்கைச்சுற்றி ஓடும் மாடுபோலவேதான் ஓடுகிறது. உன் ஊகம் முற்றிலும் தவறு. நான் ஓர் உயர்ந்த அரசியல் பணியைப் பெற்று மிலன் நகர் செல்கின்

றேன். மிலன் நகர்த்தலைவனிடமிருந்து அதற்கான கடிதம் வந்துளது.

புரோத்தியஸ் சற்றே ஜூலியாவின் படத்தைக் கீழ் வைத்துவிட்டுக் கவலையுடன் தன் நண்பன் கைகளைப் பிடித்துக்கொண்டு "நீ நல்நிலை பெறுக; என்னை என்றும் மறவாதே" என்முன்

வலந்தைனும் "நான் மறக்கமாட்டேன். நீதான் அடுத்த நொடியே என்னை மறந்து அப் படத்தில் மூழ்கிவிடப் போகிருய்" என்று கூறிவிட்டு அகன்ருன்.

## 2. காதலர் பிரிவு

அவன் கூறிய மொழிகள் ஒரு சிறிதும் வழுவாதபடி வலந்தைன் அகன்றதே புரோத்தியஸ் அப்படத்தின் முன் உட்கார்ந்து, ஜூலியாவின் பெயரில் அமைந்த பா வொன்றை அப்படத்தின் கீழ் வரைவதில் கண்ணும் கருத்துமாய் ஆழ்ந்துவிட்டான்.

புரோத்தியஸின் காதலுக்கு இலக்கான ஜூலியா ஓர் உயர் குடியைச் சேர்ந்த பெண். அழகிலும் ஒழுக்கத்திலும் ஒப்புயர்வற்றவள். பிற கன்னியரைப் போல் அவள் இளைஞர் காதல் நடிப்புகளுக்கு இடந் தருவதுமில்லை. அவர்களுடன் உறவாடுவதையும் நகையாடுவதையும் எள்ளளவும் விரும்புவதும் இல்லை. எனவே புரோத்தியஸும் அவளை நெடுநாள் அணுக முடியாதபடியே இருந்தது.

பலநாள் ஜூலியாவின் பின் சென்று அவள் வீட்டையும் தோட்டத்தையும் சுற்றித் திரிந்து அவள் மனமுனைந்து வந்தான். அவன் காதலைக் குறிப்பால்

அறிந்த ஜூலியா தன் இயற்கைப்படியே அவன் பக்கம் நாடாதிருக்க முயன்றும் அவனை யறியாது அவள் உள்ளமும் கண்களும் அப் பக்கம் சென்றன. ஆயினும், அவள் மடமும் பயிர்ப்பும் அவளைத் தடை செய்து அவன் பக்கத்தினின்றும் அவளை அகற்றிச் சென்றன.

ஜூலியாவின் தோழி லூஸெத்தா (Lucetta) என்பவள், தன் தலைவியின் உள்ளக்குறிப்பையும் அவள் காதலன் புரோத்தியஸின் துன்பத்தையுங் கண்டு ஒருநாள் அவனிடம் வந்து உரையாடலாயினள். புரோத்தியஸும் நீந்த அறியாதவன் ஆறு கடக்கும் புணை கண்டது போல் மகிழ்ந்து, அவள் வாயிலாகத் தன் காதலைத் தெரிவிக்கலானான். தெரிவித்தும், காதலனது காதலின் ஆழத்தை அறியும் அவாவினளாய் ஜூலியா அவனுக்கு எளிதில் விட்டுக்கொடாமலும் தெளிவான மறுமொழி தராமலுமிருந்து வந்தாள்.

புரோத்தியஸின் காதலைத் தேரும் நோக்குடன் காட்டிய இக் கடுமை, நாளடைவில் தனக்கே தேர்வாய் இருப்பதை ஜூலியா கண்டாள். அடிக்கடி தன்னையும் மீறித் தன் உள்ளம் அவன்பாற் செல்வதையும், தன் கண்கள் தன் கட்டையும் மீறி அவனைக் காணக் கோடுவதையும் அவள் மறைக்க முடியவில்லை. சில சமயம் அவன் ஓரிரண்டு நாழிகை வராதிருந்தால் அவனைத் தாமே சென்று காணவும் கால்கள் விரையும். ஆனால், அவன் எப்போதும் வலந்தைனுடன் இருந்தது கண்டு நாணித் திரும்புவாள். அவன் வலந்தைனுடன் தன்னைப்பற்றிக் கூறியது கேட்டு அவனுக்கு எழுதவும் அவள் உளங் கூசிற்று.

தன் தோழியின் வாயிலாக, வலந்தைன் மிலன் நகர் சென்றான் என்று கேட்டபின் அவள் சற்றுத் துணிந்து அவனிடம் தன் காதலைக் குறிப்பாய்க் காட்டி ஒரு கடிதம் வரைந்தாள். அப்போது அவன் உண்டிக்கு அலைந்தவன் ஒப்பற்ற அமுதம் பெற்றது போல மகிழ்ந்து அக்கடிதத்தை ஓவாது படிப்பதும் மடிப்பதும் பின்னும் பிரிப்பதும் விரிப்பதுமாக இருந்தான்.



காதற் கடிதங் கண்டு
தன்னை மறந்திருத்தல்

புரோத்தியஸ் இங்ஙனம் தன்னை மறந்திருக்கும் நேரம், அவன் தந்தை அவனைக் காண வந்தான் அவனுடைய நண்பர்கள், புரோத்தியஸ் வேறு தொழிலொன்றிலும் ஈடுபடாமல் தேனீப்போல் ஜூலியா என்னும் மலரைச் சுற்றித் திரிவது கண்டு, அவன் என்றும் இப்படிச் சோம்பேறியாய் இருந்துவிடாமல் மேம்பாடு தரும் நல்ல தொழில் முறையில் ஈடுபட வேண்டும் என்று விரும்பி, அதனை அவனிடம் அடுத்தடுத்து அறிவித்துவந்தனர். தந்தையோ மைந்தனிடம் உள்ள பற்றுதலால் அவனை விட்டு அகல மனமில்லாதவனாய் இருந்தான். ஆனால், அவனிலும் இளைஞனான அவன் நண்பன் வலந்தைன் கூடத் தொழில் முறையை நாடித் தொலைவிடம் சென்ற

தைக் கேட்டபின், அவனும் தன் மகனைத் தொலைநாடு அனுப்பத் தீர்மானித்தான். அதனைத் தெரிவிக்கவே அவன் இப்போது தன் மைந்தனிடம் வந்தது. மைந்தன் ஒரு கடிதம் வைத்துக்கொண்டிருப்பதைக் கண்டதே, அவன் அது நண்பனிடமிருந்துதான் வந்திருக்குமோ என்று எண்ணி, "அது யார் எழுதியது?" என்று கேட்டான்.

முதலில் புரோத்தியஸ் இக் கேள்வியைச் செவியுட் கொண்டவுடன் திடுக்கிட்டான். பின் காதலர் இயற்கைப்படி நொடியில் மனந்தேறி, சமயத்துக் கேற்ப "அது தன் நண்பனிடமிருந்து வந்தது" என்றான்.

தந்தை அதனை நம்பி, "அவன் என்ன எழுதி யிருக்கிறான்?" என்று கேட்டான்.

புரோத்தியஸ் சூதொன்றும் இன்றி வினை வாய்ப் பட்டு, "வேறொன்றுமில்லை; அவன் அங்கு மகிழ்ச்சி யுடன் இருப்பதாகவும், நானும் அங்கே போனால் அவனைப்போல் நல்ல நிலையில் இருக்கலா மென்றும் எழுதி யிருக்கிறான்" என்றான்.

புரோத்தியஸின் தந்தை அதனை முழுமையும் நம்பி, மறுநாளே வலந்தைனுக்கு எழுதினான். வலந்தைன் உண்மையில் புரோத்தியஸுக்குத் தொழில் பார்த்துக் கொடுப்பதாகச் சொல்லவில்லையாயினும், அவன் வரவேண்டு மென்று மிகுதியான விருப்பம் உடையவனாய் இருந்ததனால் நகர்த் தலைவனிடம் சென்று, இச் செய்தியைத் தெரிவித்தான். புரோத்தியஸின் குணமும் திறனும் பற்றி வலந்தைன் புகழ்ந்துரைப்பது கண்ட தலைவன் அவனுக்கு வலந்தைன் நிலைக்கு ஒப்பான பணி தருவதாக மறுமொழி அளித்தான். அதனை யறிந்த புரோத்தியஸின் தந்தை புரோத்

தியஸை அழைத்து, மறுநாளே நண்பனிருக்கும் நக ருக்குப் போகுமாறு உத்தரவளித்தான்.

இங்ஙனம் சிறுபிழை யொன்றை மறைக்கப் புகுந்து பெருந்தொல்லைக் காளான புரோத்தியஸ் மிக வும் மனமுடைந்தான். ஆயினும் தந்தை சொல்லைத் தட்ட மனந்துணியாமல் ஜூலியாவினிடம் சென்று பிரியாவிடை பெற்று மிலனுக்குச் சென்றான். ஜூலி யாவும் தன் பயிர்ப்பாகிய திரையைக் கிழித்து அவ னிடம் தன் காதலின் வன்மையை முற்றிலுங் காட் டியதுடன் தானும் உடன் வரவேண்டு மென்று மன்றாடினாள். ஆயினும், தொழில் முயற்சியை நாடிச் செல்பவர்க்குப் பெண்டிர் தடை யெனக் கூறக்கேட்டு அவள் அமைந்து மனம் வருந்தி இருந்தாள்.

## 3. பொறாமைப் புழு

மிலனில் புரோத்தியஸ் வந்ததும் வலந்தைன், நெடு நாள் தாய்நாட்டை விட்டவன் அந்நாட்டவன் ஒரு வனது வரவு கண்டாற்போல எல்லையிலா மகிழ்ச்சி கொண்டான். மிலன் நகர்த் தலைவனிடம் அவன் புரோத்தியஸை அறிமுகம் செய்துவைத்து, தன் நாட் டில் எல்லாரையும் விட அறிவிலும் குணத்திலும் அவன் பெயர்பெற்றவன் என்று புகழ்ந்துரைத்தான். விரைவில் தலைவனும் வலந்தைனிடம் காட்டிய அதே பற்றும் அந்த மதிப்பும் புரோத்தியஸினிடமும் காட்டலானான்.

ஆனால் வலந்தைன் மட்டும் இப்போது வெரோ ணுவிலிருந்த வலந்தைனு யில்லை. அவனிடம் இப்போது ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டிருந்தது. பெண்களின் பெயரையும் எடுக்காத அவன், இன்று தலைவனின்

புதல்வியாகிய சில்வியார் சீமாட்டி (Lady Silvia) யின் உளமார்ந்த நட்பைப் பெற்றான். தலைவன் வலந்தைனை மிகவும் நேசித்துப் பாராட்டி வந்தபோதிலும், தன் குடும்பத்திற்கு ஒத்த நிலை உடையவனாக அவனைக் கருதாதவன். ஆகவே அவர்கள் காதல், மறைவிலேயே வளர்ந்துவந்தது. தலைவன் அவளைத் தன் அரண்மனைப் பெருமக்களுள் ஒருவனான தூரியோ (Thurio) வுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தான். ஸில்வியா தூரியோவை ஏறெடுத்தும் பாராமல் வலந்தைனையே தன் நெஞ்சுக் கிறைவனாகக் கொண்டு நாட்கழித்தாள்.

நண்பர் இருவரும் கலந் துறவாடுகையில் வலந்தைன் தன் வாழ்க்கையில் ஏற்பட்ட இப் புது மாறுதல்பற்றிப் புரோத்தியஸிலிடம் கூறினான். தம்மிலும் எத்தனையோ உயர்நிலையுடைய கன்னிகையைத் தன் நண்பன் அடைந்தான் என்று கண்டதே, பொறாமை என்னும் புழு அவன் மனத்தகத்தே புகுந்து வேலை செய்யத் தொடங்கிற்று. அதன் பயனாக அவன் எப்படியாவது தன் நண்பனுக்குக் கிட்டிய காதலைப் பயன்பட வொட்டாமற் செய்துவிட வேண்டும் என்று எண்ணங்கொண்டான்.

புரோத்தியஸின் படுமோசக் கருத்தை உணராமல் வலந்தைன் தன் காதற் கதை முழுமையும் கூறியதோடன்றி, தன் காதலி வகையில் தலைவன் செய்யும் ஏற்பாட்டையும், அதினின்றும் விலக எண்ணி அவளுடன் தான் இரவிற் புறப்பட்டோடச் செய்திருக்குந் திட்டத்தையுங் கூறினான். இதனைக் கேட்டதே புரோத்தியஸின் வஞ்சநெஞ்சம், நண்பனது திட்டத்தைக் காட்டிக்கொடுத்து, அவன் நிலையையும் அவன் காதலியின் காதலையுங்கூடக் கவர எண்ணிற்று.

வலந்தைன் தன் காதலியுடன் வெளியேறக் குறித்த நாளன்று அதற்கான நூலேணி ஒன்றைச் சுருட்டி முன்னேற்பாடாகத் தன் உடையிற் கரந்து வைத்திருந்தான். தனது திட்டத்தைப்பற்றி விரிவான செய்திகள் கூறியபோது அவன் இந்நூலேணியையும் புரோத்தியஸுக்குக் காட்டினுன். புரோத்தியஸ் நண்பன் என்ற முறையில் இத்தனையையும் அறிந்துகொண்டு, நகர்த் தலைவனிடம் சென்று எல்லாவற்றையும் தெளிவாகக் கூறிவிட்டான்.

## 4. கலங்கிய நீர்

அதுகேட்ட நகர்த்தலைவன் அதன் உண்மையைத் தெளிவுபடுத்த எண்ணி வலந்தைனிடம் சென்ருன். சென்று விரைவாக எங்கோ செல்பவன் போல் பரபரப்புடன் நின்ற அவனிடம் "அன்ப, இவ்வளவு விரைந்து போகும் காரியம் யாது?" என்று கேட்டான்.

வலந்தைன், "வெரோணு செல்லும் தூதன் ஒருவனிடம் அங்குள்ள நண்பர்களுக்குக் கடிதம் கொடுத்தனுப்பப் போகிறேன்," என்ருன்.

தலைவன், "அவ்வளவுதாஞ? எனக்குக் கொஞ்சம் அரசியல் காரியங்களைப்பற்றி ஆராயவேண்டும்," என்று கூறி அவனைத் தாக்காட்டினுன். வலந்தைன் வெளிக்கு அமைதியாகப் பேசமுயன்ருலும், உள்ளே பொறுமையிழந்து குமுறுவதைக் குறிப்பாகக் கண்டு, காணுததுபோல் அவனைப் பின்னும் நயமாக வாட்ட எண்ணினுன். ஆதலால் தன் புதல்வியின் பேச்சை எடுத்து, அவள் தன் எண்ணப்படி தூரியோவை மணக்க விரும்பாததால், அவளுக்கு உடைமையில்லாமல் வெற்றுடம்புடன் யாரையேனும் மணக்கும்

படி விடுவதாகவும், தான் இரண்டாவது மணம் செய்துகொள்ள விரும்புவதாகவும், அதுவகையில் வலந்தைன் உதவவேண்டும் என்றும் திறம்பட வினவினன்.

அப்போது சூதறியாத வலந்தைன், "நான் அதில் எவ்வாறு உதவக்கூடும்," என்றான்.

தலைவன், "ஏன், நண்ப, எப்போன்ற முதியவர் காதலியை வசப்படுத்தும் வகையறியாதவர் அன்றோ? மேலும், காதலர் நடைமுறைகளும் காலத்துக்குக் காலம் மாறுபடுகின்றன. எனக்குப் பெண்களிடம் நடந்துகொள்ளும் முறையை அறிவிக்கலாகாதா?" என்றான்.

வலந்தைன் கபடின்றித் தலைவன் கேட்ட வகையில் விரிவான நல்லுரைகள் தந்தான். தலைவன் அவள் நாணமுடையவள் எனவும், பகலில் பேச அஞ்சுகிறாள் எனவும் கூற, வலந்தைன் இரவு காண்பது நன்று என்றான்.

தலைவன், இரவு அவள் மாளிகை தாழிடப்பட்டுக் காவலுடையதாயிருக்குமே என்ன, வலந்தைன் தன் மனத்து நிறைந்த எண்ணமே மேலிட்டு உந்த நூலேணி ஒன்றின் உதவியால் பலகணிவழியாகச் சென்று காணலாம் என்றான்.

தலைவன், நூலேணியைப் பிறர் காணாமல் கொண்டு போவதெங்ஙனம் என, வலந்தைன் என்னைப்போல் ஆடையுடுத்துக் கரந்துசெல்க என்றான். இவ்வுரைக்கே காத்திருந்த தலைவன் அப்படியாயின் அவ்வாடையைப் பார்ப்போம் என இழுத்த அளவில், வலந்தைன் ஒளித்து வைத்திருந்த நூலேணி தென்பட்டது.

தென்படவே, தலைவன் தனது நடிப்பைத் துறந்து வெகுளியுடன், "நன்றிகெட்ட பதரே, உண்ட வீட்டுக் கிரண்டகமாக என் புதல்வியின் மனத்தையா கெடுக்க எண்ணினுய்?" என அவனை இழித்துப் பேசி அவமதித்து நகரினின்றும் துரத்திவிட்டான்.

வலந்தைனை இங்ஙனம் காட்டிக்கொடுத்துத் துரத்தியபின் புரோத்தியஸ் தலைவனுக்கு உண்மையுள்ள நண்பனுனன். அதோடுநில்லாமல் ஸில்வியாச் சீமாட்டியையும் அண்டி, அவளைத் தன் வயப்படுத்த முயன்றான். ஆனால் அவளோ, வலந்தைனுக்கு உள்ளத்தைப் பறிகொடுத்ததுமன்றி, புரோத்தியஸின் இழிதகையான நன்றியின்மையை அறிந்தவளாதலால், அவனையும் மனமார வெறுத்து விலக்கினுள்.

## 5. காதல் துணிவு

புரோத்தியஸால் முதலில் காதலிக்கப்பட்ட ஜூலியா, நெடுநாள் அவனிடமிருந்து கடிதம் வராதது கண்டு கவலை கொண்டாள். இறுதியில் அவனை எப்படியாவது கண்டுபிடிப்பதென்று துணிந்து ஆணுருத் தாங்கி மிலன் நகர் வந்து சேர்ந்தாள்.

ஜூலியா மிலனில் பெரிய விடுதி ஒன்றில் தங்கியிருந்தாள். தான் அங்கே அவ்வுருவுடன் வந்திருப்பதை அறிந்தால் புரோத்தியஸ் தன்னை ஏளனமாக நினைப்பான் என்று எண்ணி அவள் கவலை கொண்டதால், அவள் முகம் நகை யிழந்திருந்தது. அவளை ஓர் இளஞ்செல்வனுகக் கொண்ட விடுதியாளன், அவளை மகிழ்விக்க எண்ணி, "ஐய, இன்று தாங்கள் நேரப் போக்கு விரும்புவதானல் நல்ல வாய்ப்பு ஒன்று

உளது. தலைவன் புதல்வியுடன் ஒரு காதலன் வந்து இரவு பாடுவதுண்டாம். அதனை மறைவில் கண்டு மகிழலாம்," என்றார்.



ஜூலியாவின் கவலை

தலைவனுடைய அரண்மனையின் பக்கமே புரோத்தியஸையும் காணலாம் என்றெண்ணி ஜூலியா அதற்கிணங்கினாள். ஆனால், அங்கே யாரோ ஒரு காதலன் வருவான் என்றிருந்ததற்கு மாறாகத் தன் காதலனே வந்திருப்பது கண்டதும் அவள் நெஞ்சம் இடிவுற்றது. காதலன் எங்கிலை யுற்றானோ என்ற கவலைக்கு மாறாக, இப்போது அக்காதலனது காதலையே இழந்த நிலையில் அவள் வாழ்க்கையில் மிகவும் வெறுப்புக்

கொண்டாள். ஆயினும் காதலனை அண்டியிருந்தே னும் உயிர்பொறுக்கலாம் என்று எண்ணி அவள், அவன் பணியாள் விலகும் சமயம் பார்த்துத் தானே பணியாளாய்ச் சென்று சேர்ந்தாள்.

இங்கும் ஜூலியாவுக்குப் புதியதோர் இக்கட்டுத் தோன்றியது. அவள் ஜூலியா என்று கனவிலுங் கருதாத புரோத்தியஸ் அவளையே ஸில்வியாவிடம் காதல் தூதாக அனுப்பினான்.

ஸில்வியா புரோத்தியஸின் காதலை மறுத்தபோது தான், ஜூலியாவிற்குச் சற்று அமைதி உண்டா யிற்று. அங்ஙனம் தனக்கு ஆறுதல் தந்த ஸில்வியா வினிடம் பற்றுக்கொண்டு, அவளிடம் புரோத்தியஸின் பழைய காதலைப்பற்றிப் படர்க்கைப் பான்மையில் ஜூலியா கூறினாள். ஸில்வியா அதுகேட்டு அக் காத லுக் காளான ஜூலியாவினிடம் பரிவு கொண்டாள். தன்முன் நிற்கும் இளைஞனே அந்த ஜூலியா என் பதை அவள் அறிந்து கொள்ளவில்லை.

ஸில்வியாவின் நிலைமை இப்போது மிகவும் இடர்ப்பாடாயிற்று. ஒரு புறம் புரோத்தியஸின் தொந்தரவு; இன்னொருபுறம் தந்தைகுறித்த மண நாள் நெருங்குகிறது. இரண்டிலிருந்து தப்ப எண்ணி எக்லாமர் (Eglamar) என்ற பணியாளுடன் இரவே வெளியேறி ஓடிவிட்டாள்.

## 6. தெளிவு

ஸில்வியா வெளியேறினாள் என்று கேட்ட புரோத்தியஸ் தானும் அவளைப் பின்பற்றினான். பணி யாளுருவில் ஜூலியாவும் உடன் சென்றாள். அவர்

கள் அனைவரும் நகர்ப்புறத்துள்ள காட்டின்வழியே சென்றுகொண்டிருந்தனர். அக்காட்டில் திருடர் மிகுதி. அத்திருடர் சில நாட்களுக்கு முன் நகரினின்று துரத்தப்பட்ட வலந்தைனைக் கைப்பற்றினர்.



புரோத்தியஸ் ஸில்வியாவைக் காத்தல்.

ஆனல் வலந்தைன் தன் நாத் திறத்தாலும் உயர் குணத்தாலும் வீரத்தாலும் அத் திருடராலும் போற்றப்பட்டு அவர்கள் தலைவனாய் இருந்துவந்தான்.

ஸில்வியா காட்டுவழியாகச் செல்கையில் வலந்தைன் கூட்டத்திலுள்ள திருடரில் ஒருவன் அவளைக் கைப்பற்றித் தன் தலைவனிடம் கொண்டு செல்ல முயன்றான். அப்போது புரோத்தியஸும் மாற்றுருக்

கொண்ட ஜூலியாவும் அங்கே வந்தனர். புரோத்தியஸ் திருடனை வென்று ஸில்வியாவை மீட்டான். ஆயினும், அங்ஙனம் மீட்டதனை ஸில்வியா பாராட்ட முடியவில்லை. ஏனெனில், மீட்ட மறுநொடியே அவளை அவன் மீண்டும் தொந்தரவு செய்யலானன். அதனை உடனிருந்தும் தடுக்க இயலாத ஜூலியா மனமாழ்கிஞள். இத்தறுவாயில், வலந்தைன் அவ்விடம் வந்தான். ஸில்வியா அவனைக் கண்டதும் ஓடி அவனைக் கட்டிக்கொண்டு மகிழ்ந்தாள்.

வலந்தைன் புரோத்தியஸைப் பார்த்து, "அன்பனே, ஏன் உன் இயல்பு மாறி இத்தகைய தகாத செயல்களில் இறங்கினுய்? உன் ஜூலியா இது கேட்டால் என்ன நினைப்பாள்?" என்ருன்.

அப்போது ஜூலியா தன் ஆணுரு அகற்றி நின்று, "ஜூலியா இஃதனைத்தும் கேட்டதோடு மட்டுமன்றிக் கண்டுந்தான் நிற்கிருள்," என்ருள்.

நண்பனுக்கும் காதலிக்கும் தான் செய்த நன்றியற்ற செயல்களை எண்ணிப் புரோத்தியஸ் முகங் கவிழ்த்துத் தன்னை மன்னிக்கும்படி இருவரையும் வேண்டினன்.

வலந்தைன் நண்பன் துயர்கண்டு, கழிந்தன அனைத்தும் மறந்து அவனைத் தழுவினன்.

அவனும் தான் இடையில் கொண்ட நினைவெல்லாம் கனவெனக் கொண்டு, குணம் மாறிப் பழைய படி ஜூலியாவை ஏற்று மகிழ்ந்தான்.

# 4. இரண்டாம் ரிச்சர்டு மன்னன்

(கதை உறுப்பினர்)

ஆடவர்

1. **இரண்டாம் ரிச்சர்டு மன்னன் :**—பேரரசன் மூன்றும் எட்வர்டின் பேரன்—அவன் மூத்த மகனாகிய எட்வர்ட் இளவரசன் மகன்—தனி மனிதன் என்ற முறையில் அன்பு, பெருமிதமும், நல் உணர்ச்சிகளும் உடையவன்—அரசன் என்றமுறையில் தன்னாண்மையும், பண ஆர்வமும், பெருங்குடிமக்களை அடக்கி ஆளும் குணமும் உடையவன்.
2. **ஜான் ஆவ் காண்டு :**—அரசன் மூத்த சிற்றப்பன்—அரசியல் திறமுடையவன்—நாட்டுப் பற்றுடையவன்—கண்கண்டது சொல்லி முதுமையில் அரசன் அவமதிப்பைப் பெற்றவன்.
3. **கிளஸ்டர் கோமகன் :**—அரசன் சிற்றப்பன்—ஜான் ஆவ் காண்டு தம்பி—அரசன் விருப்பத்தை எதிர்த்ததனால் அரசன் தூண்டுதலால் கொல்லப்பட்டவன்—அரசன் அழிவுக்கு விதையாய் அமைந்தது இக்கொலை.
4. **யார்க் கோமகன் :**—அரசனது இன்னொரு சிற்றப்பன்—அவன் செயல் பொறுத்தும் பணிந்து கொடுத்தவன்—கோழை—ஹென்றியை எதிர்க்கவும் துணியாது விட்டுக் கொடுத்தவன்.
5. **ஹென்ரி ஹெரிபோர்டு—பாலிங் புரோக் கோமகன்—லங்காஸ்டர் பெருமகன்—பின் நான்காம் ஹென்ரி அரசன் :**—ஜான் ஆவ் காண்டின் மகன்—அரசனை நயமான முறையில் எதிர்த்து வெற்றிபெற்று, நான்காம் ஹென்ரி அரசன் ஆனவன்.
6. **நார்போக் கோமகன் :**—கிளஸ்டர் கோமகன் கொலையில் அரசனுக்கு உடந்தையாயிருந்த நண்பன்—அரசனழிவுக்கு

முன் பீடிகையாக ஹென்ரி ஹெரிபோர்டால் எதிர் வழக்காடப்பட்டு, அவனுடன் பத்தாண்டு நாடு கடத்தப் பட்டவன். ஹெரிபோர்டு தண்டனை குறைக்கப்பட்டும், தனது தண்டனை குறைக்கப்படாமையால் முணு முணுத்தவன்.

7. **நார்தம்பர்லந்துப் பெருமகன்:**—நார்தம்பர்லந்தை நேரிடை யாக எதிர்த்த பெருமகன்—ரிச்சர்டிடம் ஹென்ரி ஹெரிபோர்டின் தூதனுய்ச் சென்று அவமதித்து இறுதியில் பழிச்சொல் ஏற்றவன்.

8. **வொர்ஸ்டர் பெருமகன்;**—நார்தம்பர்லந்துப் பெருமகன் உடன் பிறந்தான்—அரண்மனைக்காரன்—நார்தம்பர்லந்து டன் சேர்ந்து அரசனை எதிர்த்தவன்.

9. **கார்லைல் தலைமகன்:**—அரசர் தெய்வீக நிலையில் உறுதி கொண்டவன்—மாறு நண்பனுயிருந்து அறவுரை கூறியவன்.

10. **ஆமெர்ல் பெருமகன்:**—யார்க் கோமகன் மகன்—தந்தை அரசனைத் துறந்தபின்னும் உடனிருந்தவன்.

11. **புஷி**
12. **பாகட்**
13. **கிரீன்**

(11–13) அரசன் இன்ப வாழ்வுக்குதவிய நண்பர்கள்—மக்கள் வெறுப்புக்காளானவர்—ஹென்ரி ஹெரிபோர் டின் வெற்றிகரமான கிளர்ச்சியின் தொடக்கத்தி லேயே தூக்கிலிடப்பட்டவர்கள்.

14. **தோட்டக்காரன்:**—அரசிகேட்க அரசாட்சியைத் தோட்டப் பயிர்த்தொழிலுடன் ஒப்பிட்டு அரசனைக் குறை கூறியவன்.

## பெண்டிர்

1. **அரசி:**—ரிச்சர்டின் மனைவி—பிரான்சு அரசன் உடன்பிறந் தாள்—கற்பு மிகுந்து துயருழந்த மெல்லியலாள்.

# கதைச் சுருக்கம்

இரண்டாம் ரிச்சர்டு மன்னன் இன்ப வாழ்வினன்; சோம்பேறி; ஆனால் பண ஆவலும் தன்னாண்மையும் மிக்கவன். பெருமக்கள் அவனை வெறுத்தனர். அவன் செயலைக் கண்டித்த அவன் சிற்றப்பனாகிய கிளாஸ்டர் கோமகனை மறைவாக அவன் கொலை செய்வித்தான். அவன் உடன் பிறந்தாராகிய யார்க் கோமகனும், ஜான் ஆவ் காண்டும் வெறுத்தும் வெளியிட்டுச் சொல்லாதிருந்தனர். ஜான் ஆவ் காண்டின் மகன் ஹென்ரி ஹெரிபோர்டு ரிச்சர்டுக்கு உடந்தையாய் நின்று கிளஸ்டரைக் கொன்ற நார்போக் கோமகன் மீது வழக்காடினான். இருதிறத்தாரும் பத்தாண்டு நாடு கடத்தப்பட்டனர். ஹென்ரி ஹெரிபோர்டின் தண்டனை குறைக்கப்பட்டும் அதே கவலையால் முதியவனான ஜான் ஆவ் காண்ட் இறந்தான்.

இறக்கும் போதும் அரசன் ஜான் ஆவ் காண்டை அவமதித்ததுடன் பண ஆவலால் அவனுரிமையையும் செல்வத்தையும் பறித்தெடுத்தான். இதனை வைத்து ஹென்ரி ஹெரிபோர்டு இங்கிலாந்தில் ஒரு பிரஞ்சுப் படையுடன் இறங்கினான். அச்சமயம் அயர்லாந்து சென்றிருந்த அரசன் எதிர் காற்றினால் திரும்பிவரத் தாமதமாக, ஹென்ரியுடன் நார்தம்பர்லந்துக் கோமகனும் வொர்ஸ்டர் பெருமகனும் சேர்ந்தனர். யார்க் கோமகனும் ஹென்ரிக்கு நண்பனாயினான்.

கடைசியாக ரிச்சர்ட் இங்கிலாந்து வந்திறங்கினான். நாட்டு நிகழ்ச்சிகளை ஒன்றன்பின் ஒன்றாய் அறிந்து மனங் கலங்கினான்.

ஹென்ரியும் தந்தையிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட பாலிங் புருக் நிலக்கிழமையைத் தனதாக்கியதோடு அரசனைப் போலவே விளங்கிப் படையுடன் மேற்சென்று கொண்டிருந்தான்.

பாலிங் புருக்கை நோக்கி வந்துகொண்டிருந்த ரிச்சர்ட் நண்பருடன் பிளின்ட் கோட்டையருகில் வந்ததும், ஹென்ரி

படையுடன் அண்மையிலேயே வருகிருனென்று கேள்வியுற்று அக்கோட்டையிலேயே தங்கிஞன். சின்னேரத்தில் நார்தம்பர்லந்து ஹென்ரியின் தூதனுக வந்து ஹென்ரிக்கு நீதி வழங்கவேண்டுமென்று கூறிஞன்.

ரிச்சர்ட் தன் வலிமையின்மை தோன்றுமாறு சினத்தால் பலவாறு அவனிடம் பேசி ஹென்ரியை அழைத்து வருமாறு கூறிஞன். நார்தம்பர்லந்து மூலம் இதை உணர்ந்த ஹென்ரி பிளின்ட் கோட்டைக்கு வந்து நின்று அரசன் தன்னை வந்து பார்க்குமாறு மீண்டும் நார்தம்பர்லந்தை ஏவினன். ரிச்சர்ட் வந்ததும் அவனை ஹென்ரி பணிந்தான். அதுகண்ட ரிச்சர்ட் தன் சினம் வெளிப்படப் பலவாறுபேசி, 'உமக்கு உரியதையும் தந்தேன்; என்னையும் தந்தேன்' என்று கூறிஞன். ஹென்ரி ரிச்சர்டைக் கொண்டு படையுடனும், துணைவருடனும் லண்டன் நோக்கிச் சென்ருன்.

லண்டன் வெஸ்ட் மின்ஸ்டரை யடைந்ததும் ரிச்சர்டே மன வெறுப்புற்று, "என் முடியை உம் தலைவர் ஏற்பாராக!" என்று நார்தம்பர்லந்திடம் கூறினன். ஹென்ரியும் முடி சூட்டப் பெற்ருன்.

ரிச்சர்ட் சிறையில் வைக்கப்பட்டான், அவன் மனைவி மடத்தில் சென்றுறைந்து சின்னுளில் உயிர் நீத்தாள்.

யார்க் கோமகன் மகன் திரும்பவும் ரிச்சர்டை அரசனுக்க முயன்ருன். இதை யார்க் கோமகனே ஹென்ரிக்குக் காட்டிக் கொடுத்தான். பின் ஹென்ரியின் நண்பர் மூவர் ரிச்சர்டை வலியச் சண்டைக் கிழுத்துக் கொன்றனர்.

ஆயினும் ஹென்ரி தனக்குற்ற மாசு துடைப்பானுய் அம் மூவரையும் வெறுத்துத் தூக்கிலிட்டான்; யார்க் கோமகன் மகனையும் மன்னித்துவிட்டான்.

இங்ஙனம் முடிவில் ரிச்சர்டின் குணமே மேலோங்கி விளங்கிப் புகழ் பெற்றது.

# 4. இரண்டாம் ரிச்சர்டு மன்னன்

## (RICHARD II)

---

## 1. மூத்தோர் சொல்லும் முழு நெல்லிக் காயும் முன் துவர்க்கும் பின் இனிக்கும்

மனிதன் சிறப்புக்களுட் பல அவனது இன்ப வாழ்வினுட் காணுவிடினும், துன்பவாழ்விற் காணப் படுவது உறுதி. துன்ப வாழ்விலும் சிறப்படையாத வன் கீழ்மகனேயாவன்.

இரண்டாம் ரிச்சர்டின் (Richard II) வாழ்வு இவ்வுண்மைக்கு ஒரு சான்று ஆகும். மணி முடி யுடன் மாநிலம் ஆளுங் காலையில், அவன் குற்றங் களே தலைசிறந்து விளங்கின. அரசுரிமை அவனை விட்டகலும்போது தான், அவன் அரசர்க்குரிய பெருமை எய்தி விளக்கமுற்றான் என்னல் வேண்டும்.

இங்கிலாந்தில் முடியிழந்த மன்னர் ரிச்சர்டு நீங்கலாக மூவராவர். அவர், இரண்டாம் எட்வர்டு (Edward II), முதல் சார்லஸ் (Charles I), இரண் டாம் ஜேம்ஸ் (James II) ஆகியோர். அவருள் பின் இருவரும் பொதுமக்கள் விழிப்படைந்த பின் அவர்களது விடுதலை யுணர்ச்சியின் பயனாக முடி யிழந்தவராவர்.

ஆனால், ரிச்சர்டும் எட்வர்டும் முடியிழந்தது பொதுமக்கள் விழிப்பாலன்று. அரசியல் வாழ்வில் அன்று பொதுமக்களோ நடுநிலை மக்களோ இடம்

பெறவில்லை. பெருங்குடி மக்களே ஒரு புறம் பொது மக்களைத் துன்புறுத்தியும், இன்னொரு புறம் மன்னரை எதிர்த்தும் நின்று, அன்று மேலோங்கி யிருந்தனர். இவர்களின் எல்லையற்ற வன்மையால் எங்கும் உள்நாட்டுச் சண்டையே மலிந்திருந்தது.

ரிச்சர்டு 'கரிய வீரன்' எனப் புகழ் பெற்ற எட்வர்டு இளவரசன் (Edward the Black Prince) மகன். பேரரசரான மூன்றும் எட்வர்டு இறந்தபின், எட்வர்டு இளவரசனே பட்டம் பெறவேண்டும். ஆனால், அவன் எட்வர்டு காலத்திலேயே போரிற் பட்டபடியால், ரிச்சர்டு அரசனானான்.

அரசனாகும்போது ரிச்சர்டு சிறுவனாகவே யிருந்தான். ஆகவே, அவன் சிற்றப்பனாகிய ஜான் ஆவ் காண்டு (John of Gaunt) அவன் இடத்தில் இருந்து அரசாட்சி செய்து வந்தான். ஆனால், ரிச்சர்டு செருக்கும் தற்போக்குவிருப்பும் உடையவன். விரைவில் அரசுரிமையைத் தன் கையிலேயே பறித்தெடுத்ததோடு, தன் விருப்பம்போல் நாட்டை யாண்டும், நாட்டின் பொருட்குவையைத் தானும் தன்னைச் சேர்ந்தவருமாக, மட்டின்றிச் செலவு செய்தும் வந்தான். யாரேனும் இந்நடைகளை வெறுத்துப் பேசினால் அவர்களை அவன் ஈவிரக்கமின்றி அழித்தடக்கி வந்தான்.

இத்தகையோருள், ஜான் ஆவ் காண்டுக்கு இளையவரான கிளஸ்டர் கோமகன் (Duke of Gloucester), யார்க் கோமகன் (Duke of York) ஆகிய சிற்றப்பர் இருவரும் தலையானவர். ரிச்சர்டின் வஞ்சினம் அவர்கள்மீது சென்றது. அவனது சூழ்ச்சியால் பிரான்சு

நாட்டில் கலேக்குச் (Calais) சென்றிருந்த கிளஸ்டர், அங்கு வைத்தே கொல்லப்பட்டான். தனக்கும் அதே முடிவு வந்தெய்துமோ என அஞ்சி, யார்க் கோமகன் அவனிடம் வளைந்து பணிந்து அவனுக்கு உடந்தையாய் நின்றுகொண்டான்.

ரிச்சர்டு இன்ப விருப்பினனும் சோம்பேறியு மாதலால் அரசியல் வல்லுநராகிய தன் சிற்றப்பரை அரசியல் வாழ்வில் ஈடுபடுத்தாது, தன் மனப் போக்கிற்கொத்த சமயசஞ்சீவிகளான புஷி (Bushy), பாகட் (Bagot), கிரீன் (Green) முதலியவர்கள் உறவையே நாடினுன். இவர்களுதவியால் நாட்டின் சீர்திருத்தங்களுக்கென ஒதுக்கி வைத்திருந்த பொருளை அவன் ஊதாரித்தனமாகச் செலவு செய்துவந்தான். இப்படியும் வருவாயற்றுப் போகவே நாட்டின் செழித்த வட்டங்களைத் தனி மனிதருக்குப் பணயம் வைத்தும் வரிப்பணத்தை ஈடுவைத்தும் பொருள் திரட்டலானுன். மேலும், அவன், செல்வர்களான வணிகரிடமிருந்து கடன் என்ற பெயரால் பெருந்தொகைகளைக் கொள்ளையுங் கொண்டான்.

எதை மூடி வைத்தாலும் கொலையையும் வஞ்சத்தையும் மூடிவைக்க முடியாதன்றோ? அதன்படி கிளஸ்டர்முடிபு இயற்கையானதன்று; படுகொலையின் பயனே என்றும், அதுவும் ரிச்சர்டின் கைவரிசையே என்றும், ஆங்காங்கு மக்கள் கூறத் தலைப்பட்டனர். அதிலும், இக் கிளஸ்டர் பெருமகன் பேரரசன் மூன்றும் எட்வர்டின் மகனும் பெருமக்களுள் தலைசிறந்தவனும் ஆனதனுல், பெருமக்களிடையேயும் மிகவும் கிளர்ச்சி ஏற்பட்டது. ரிச்சர்டின்

வாள்வலிக்கும் பொதுமக்களிடையே அவனுக்கிருந்த செல்வாக்குக்கும் அஞ்சியே, அவர்கள் வெளிப்படையாக அவனை எதிர்க்காதிருந்தனர்.

இங்கிலாந்தின் பெருமக்களுள் செல்வாக்கிற் சிறந்தவன் நார்தம்பர்லந்துப் பெருமான் (Earl of Northumberland) ஆவன். அவனும் அரண்மனைக் காரியக்காரனான அவன் உடன்பிறந்தான் வொர்ஸ்டர் பெருமகனும் (Earl of Worcester) துணிந்து ரிச்சர்டின் கொடுங்கோன்மையைப் பற்றியும் தீச்செயல்களைப்பற்றியும் பலபடத் தமக்குள்ளும் பிறரிடமும் பேசலாயினர். ரிச்சர்டின் மற்றச் சிற்றப்பர்களாகிய ஜான் ஆவ் காண்டும் யார்க்கும் இவர்களுடன் நேராகக் கலக்கவில்லையாயினும் இவர்களையொப்ப ரிச்சர்டின் போக்கை மட்டிலும் வெறுத்தே வந்தனர். இவர்கள் ரிச்சர்டின் ஆட்சியுடன் ஒத்துழைத்ததெல்லாம் கடமையுணர்ச்சியாலும் நாட்டுப் பற்றாலுமே யன்றி வேறன்று.

ரிச்சர்டின் தீச்செயல்களால் ஏற்பட்ட மனக்கொதிப்பாலும் ஆண்டு முதிர்வாலும் ஜான் ஆவ் காண்டின் உடல்நிலை மிகுதியும் தளர்வுற்றது. இத்தருணத்தில் அவன்மகன் ஹெரிபோர்டு கோமகனாகிய ஹென்ரிக்கு நேர்ந்த ஒரு நிகழ்ச்சி அவன் நோயைப் பெரிதும் மிகைப்படுத்தியது.

ஹென்ரி ஹெரிபோர்டு முதியோராகிய தன் தந்தை சிற்றப்பர் முதலியோரைப்போல் ரிச்சர்டின் தீச்செயல்களைப் பொறுத்திருக்க விரும்பவில்லை. அவர்களை ஒத்த உயர்ந்த கடமையுணர்ச்சியும் நாட்

டுப் பற்றும் உடையவன் அல்லன் அவன். வாள்வலி யால் பெருங்குடி மக்களையும் நயமொழிகளாலும் பகட்டாலும் நடுநிலை மக்களையும் அவன் தன் வயப் படுத்தி வைத்திருந்தான். அதன் பயனாக அவன் ரிச் சர்டின் தீச்செயல்களைச் சாக்காக வைத்துக்கொண்டு நாட்டு மக்களை அவனுக்கெதிராகத் திருப்பியதோடு அவனை வீழ்த்தித் தன் நிலையை உயர்த்தவும் எண் ணங்கொண்டான்.



ஹென்ரி ஹெரிபோர்டு நார்போக் கோமகனைக் குற்றஞ்சாட்டுதல்

இவ்வெண்ணங்களை வெளிப்படையாக முதலி லேயே காட்டாமல் படிப்படியாக எதிரிகளையும் அவர் களைச் சேர்ந்தோர்களையும் தொலைக்க எண்ணி அவன் முதலில் கிளஸ்டர் கொலையில் அரசனுக்குத் துணை நின்ற நார்போக் கோமகனை நாட்டுப்பகைவன் என அரசவையிற் குற்றஞ் சாட்டினன். தன் கைக்கரு வியைப் பழிப்பது தன்னையே பழித்ததாகும் என் றறிந்தும் ரிச்சர்டு, ஹென்ரியை நேரே எதிர்ப்பதை விடப் பிறருடன் மாறுபடச் செய்வதே நன்று என்று எண்ணி அக்குற்றச்சாட்டு வழக்கை மற்போரால் இருவரும் தீர்த்துக்கொள்ளுமாறு பணித்தான். ஆனால், தன் நண்பருடன் உசாவியபின், இம்மற் போர் ஒருவேளை பெரும்போராகித் தன் நிலைக்கு இடுக்கண் விளைக்குமோ என அஞ்சி அவன் அதனை நிறுத்தி இருதிறத்தாரையும் பத்தாண்டு நாடு கடத்தினன்.

இச்செயலால் தன்னை நடுநிலையாளன் என யாவரும் கொள்வர் என்று அவன் நினைத்தான் போலும்! ஆனால், உண்மையில் இதனால் இருதிறத் தாரும் முணுமுணுத்தனரேயன்றி வேறன்று. நார் போக், ஒருபுறம் அரசனிடம் தான் கொண்ட பற்றை அவன் எண்ணிப்பாராமல் தன்னைப் பகைவனோ டொப்ப நடத்திப் பகைவனுக்குக் காட்டிக்கொடுத் தான் என்று எண்ணினன். ஹென்ரியோவெனில், நார்போக்கினிடம் பழிவாங்குவதினின்றும் தடுக்கப் பட்டோம் என்று குமுறினன்.

ரிச்சர்டு இடுக்கண் வந்த நேரத்தன்றிப் பிற நேரங்களில் ஒரு கோழையேயாவன். அவன் நண்

பனைப் புண்படுத்துவதைவிடப் பலமடங்கு பகைவனைப் புண்படுத்தவே அஞ்சினான். முகம் ஒளியிழந்து வாட்டமுற்றுக் கண்ணீரும் கம்பலையுமாய் நின்ற நார் போக்கை அவன் ஏறெடுத்துக்கூடப் பாராமற் சிறிக்கொண்டு, புன்முறுவலுடன் ஹென்ரி பக்கம் திரும்பித் "தாம் என் நெருங்கிய உறவினர் ஆயினும் ஒழுங்கை முன்னிட்டு இந் நடவடிக்கை எடுக்கிறேன். பத்தாண்டுகளையும் பத்து நொடிகளாகக் கழித்து வருக," என்றான்.

இதனைக் கேட்டிருந்த ஹெரிபோர்டின் தந்தையாகிய ஜான் ஆவ் காண்டு, "அரசே, தமக்கு ஓர் ஆண்டு ஒரு நொடிதான். எமக்கு ஒரு நொடி ஓர் ஆண்டாகும் என்பதில் ஐயமில்லை. அதிலும் என் இறுதி நாட்களில் பத்தாண்டு பிரிவதென்பது என்றென்றைக்கும் பிரிவதாகவே ஏற்படும். பத்தாண்டுகளுக்குள் என் காலம் கழிந்துவிடும்,"என்றான்.

ரிச்சர்டு இயற்கையில் இளகிய நெஞ்சுடையவன். அதோடு ஜான் ஆவ் காண்டின் செல்வாக்குக்கும் உயர்வுக்கும் சற்று அஞ்சியவன். ஆகவே அவனைச் சற்று மதித்து, ஹென்ரியின் ஒறுப்பு நாட்களை ஆறாண்டுகளாகக் குறைத்தான். ஆனால், அப்போதும் ஜான் ஆவ் காண்டு முணுமுணுத்துக் கொண்டே, "தமக்கென்ன அரசே, தாம் ஒரு நாவசைப்பால் நாலு ஆண்டு குறைக்கவும் செய்யலாம்; நாற்பது ஆண்டு கூட்டவும் செய்யலாம். மனிதர் வாழ்க்கை எல்லாம் தம்போன்ற அரசர்க்கு ஒரு பந்தாட்டந்தானே," என்றான்.

இங்ஙனம் மகனும் தந்தையும் தன்னை ஒரு பொருட்டாய் எண்ணுமற் பேசினது ரிச்சர்டின் அமைதியையும் தற்பெருமையையும் குலைத்தது. அவன் அன்று முதல் அவர்களுக்கு எவ்வகையிற் பாடம் படிப்பிக்கலாம் என்றெண்ணலானுன்.

மகன் நாட்டைவிட்டுப் போன நாள் முதலே ஜான் ஆவ் காண்டின் உடல் நிலை முன்னிலும் பன் மடங்கு சீர்கெட்டு அவன் படுக்கையும் பாயும் ஆனுன். ரிச்சர்டு அதனைக் கேள்வியுற்றும் சற்றும் பரிவு காட்டாது அவனிடம் கொடுமையாகவே "இன் னும் இறுதிநாள் எவ்வளவு தொலைவிலுள்ளது?," என்று கேட்டான். பின் இறக்கும் தறுவாயில் ஜான் ஆவ் காண்டு தானுகவே ரிச்சர்டைப் பார்க்க விரும்புவதாகச் சொல்லியனுப்பினுன். அப்போதும் சமயத்தின் அருமையைக்கூடப் பாராமல் ரிச்சர்டு அவனிடம் அசட்டையான மொழிகள் பேசினுன். ஜான் ஆவ் காண்டு தன் அரசாட்சியையும் தன் போக்கையும் குறை கூறுவதைப் பொருமல் அவனை வெளியேற்றும்படியும் கூறினுன். வெளியேறிய சில நொடிகளில் அவன் இறந்தும், ரிச்சர்டு தன் குற் றத்தை ஏற்றுக் கழிவிரக்கங்கொள்ளத் தவறினுன்.

## 2. பகைப் புயல்

மேலும், தந்தையிடம் கொண்ட சீற்றத்தை மகனிடமும் காட்ட ரிச்சர்டு தயங்கவில்லை. கருவூலம் வெறுமையாயிருந்ததை உன்னி ஜான்-ஆவ்-காண்டின் நிலங்களையும் உடைமைகளையும் அரசியலுக்கெனப் பறிமுதல் செய்தான். அதோடு அவனது பெருநிலக்

கிழமைக் குரிய *பாலிங் புரோக் கோமகன் (Duke of Boling broke) என்ற பட்டத்தையும் அவன் மகன் ஹென்ரி ஹெரிபோர்டுக்குச் செல்லாமல் தடை செய்தான். அரசவையிலுள்ள நண்பரும் பிறரும் இஃது அடாத செயலெனக் கூறியும் ரிச்சர்டு அவர்களனைவரையும் பொருட்படுத்தாது வாயடக்கினன்.

ரிச்சர்டின் வாழ்க்கைக்கோள் உச்சநிலையடைந்து திரியத் தொடங்கியது இப்போதுதான் என்னலாகும்.

இதுசமயம் ரிச்சர்டின் தீவினைப்பயனாக அயர்லாந்தில் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டது. அதனை அடக்கும் எண்ணத்துடன் ரிச்சர்டு தன் படைகளைத் திரட்டிக்கொண்டு போனான். அயர்லாந்துக் கிளர்ச்சியை அடக்கப் பல வாரங்களாயின. அது கழிந்து திரும்பும் சமயத்தில் காற்று எதிர்ப்புறமா யடித்ததனால் பின்னும் சிலநாள் தாமதமாயிற்று.

இத்தனைக்குள்ளாக, இங்கிலாந்தில் ரிச்சர்டுக்கு எதிர்ப்பு வலுத்தது. பகைப்புயல் கிளம்பி அரசியல் வானெங்கும் பரந்தது.

முதன் முதல் அது வடகிழக்கு மூலையில் ஒரு சிறு வெண்முகி லுருவில் காணப்பட்டது.

ஹென்ரி தன் தந்தைவழி உடைமைகளை மீட்கும் சாக்குடன் இங்கிலாந்தில் வந்திறங்கினன். நார்தம்பர்லந்து உடன்தானே அவனுடன் வந்து சேர்ந்தான். விரைவில் பெருமக்கள் பலரும் அவன் பக்கம் வந்தனர். வொர்ஸ்டர் பெருமகன் தன் பணியைத் துறந்து, தன் ஆட்களுடனும், அயர்லாந்து போகாது எஞ்சிய படைகளுடனும் எதிரி பக்கம்

சென்றான். இங்ஙனம் ஹென்ரி உருவில் எழுந்த சிற்றோடை, பார்க்லிக் கோட்டையருகே வருவதற்குள் தடங்கரைக் காவிரியாய்ப் பெருகிற்று.

பார்க்லிக் கோட்டையில் யார்க் கோமகன் தன் சிறு படையுடன் தங்கியிருந்தான். அவனும் ரிச்சர்டின் தீவழிகளைக் கண்டிப்பவனே யாயினும், கொண்ட கொள்கையை நிலைநிறுத்தும் உரமற்றவன். இக் கோழைத்தனத்துடன் தன்னலமும் சேர்ந்து அவனது தயக்கத்தை மிகைப்படுத்திற்று. முதலில் அவன் கிளஸ்டர் பக்கம் நலிந்திருந்தபோது ரிச்சர்டு பக்கம் சேர்ந்தான். இப்போது ரிச்சர்டு பக்கம் நலிந்து வருவது கண்டு அவன் மெல்ல மெல்ல அதினின்றும் நழுவலானான். இதற்கிடையில் கிளஸ்டர் கோமாட்டியும் அவனிடம் சென்று, தன் கணவனும் அவன் உடன் பிறந்தானுமாகிய கிளஸ்டர் கோமகன் கொலைக்குப் பழிவாங்குமாறு அவனைத் தூண்டிவந்திருந்தாள்.

இவற்றின் பயனாக யார்க் ஹென்ரியை எதிர்க்கத் துணியவில்லை. ஆயினும், நன்றியற்றவனாய்விடவும் அவன் துணியாது நாக்கடிப்பாக ஹென்ரியின் செயல் அடாததெனக் கண்டித்துப் பேசினான். ஹென்ரி தன் உரிமைக்கு மட்டுமே போராட வந்ததாகக் கூறியபோதும், அவன் குடிகளுள் யாரும் தன் உரிமைக்காகக்கூட மன்னனை எதிர்க்கக்கூடாதென்ற ஒழுங்கை நினைவூட்டினான். இறுதியில் இவையனைத்தும் ஹென்ரியின் படைவலிக்குமுன் பயனற்றதென்று கண்டு தான் நடுநிலைமை தாங்குவதாகக் கூறி அவனைப் பார்க்லிக் கோட்டைக்குள் விருந்தினனாய் வரவேற்றான். இவ்வளவு இடம் பெற்ற ஹென்ரி

விரைவில் முக்கிடம்பெற்ற ஒட்டகம்போல் கோட்டை கொத்தளம் முதலிய யாவற்றையும் படையையும் தன் வயமாக்கிக் கொண்டான்.



ஹென்ரி ஹெரிபோர்டு பார்க்லிக் கோட்டையில் விருந்தினனாய் வரவேற்கப்படுதல்

ரிச்சர்டின் மனைவி பிரான்சு நாட்டரசனுடைய உடன்பிறந்தாள் ஆவள். அவள் சூது வாதற்றவள்; அன்பும் அருளும் பொருந்தியவள். அவள் அரண்மனையில் தனியே தன் கணவன் வரவை எதிர்பார்த்திருந்தாள். அவளைச் சுற்றிலும் அரசியல் புயல் குமுறியடிக்கக் காத்திருந்தது. அதனிடையே, பூந்தோட்

டத்தில் பொலிந்தொளிர வேண்டும் மலர்போன்ற அவள், வற்றற்பாலையில் வெயிலில் கிடந்து வாடினதுபோல் வாடலானாள். மாசற்ற அவள் உள்ளத்தில்கூட உலகைச் சுற்றியடிக்கும் அப் புயலின் தொலைவான எதிரலை தட்டிற்று. ரிச்சர்டின் பெயர் மதிப்பின்றி ஆங்காங்கு அடிபடுவதும் மக்களது நடமாட்டத்திலும் பேச்சிலும் ஏதோ அமைதியின்மையும் பரபரப்பும் காணப்படுவதும் அவள் உள்ளத்தின் தூய அமைதியைக் குலைத்து அதில் இன்னதென்று விளங்காத ஓர் நுண்ணிய கவலையை உண்டு பண்ணிற்று. அதனால் அவள் ஊணும் தடைப்பட்டது. உறக்கமும் தடைப்பட்டது. தோட்டத்திலேனும் சென்று உலாவலாம் என அவள் புறப்பட்டாள்.

அவளது தோட்டத்தில் அன்று தோட்டக்காரனுடன் அவன் நண்பர் சிலர் பேசிக்கொண்டிருந்தனர். தோட்டத்தின் நேர்த்தி கண்டு நண்பர்கள் தோட்டக்காரன் திறத்தை மெச்சினர். அப்போது அவன் மகிழ்வதற்கு மாறாகக் கோணிய முகத்துடன் "அன்பரீர், இத் தோட்டத்தை நீங்கள் மெச்சுவதற்கு மாறாகப் பழித்திருக்கவேண்டும். இதன் நேர்த்தி கொண்டு என்ன பயன். இன்றைய நம் இங்கிலாந்து இதனினும் பெரியதோர் தோட்டம் என்னலாம். அதுவன்றோ நேர்த்தியா யிருக்கவேண்டும். ஆனால், அது அங்ஙனம் இல்லையே! அதன் தோட்டக்காரன் நல்லவனும் நன்முயற்சி உடையவனுந்தான். ஆனால், பூவை வளர்த்துப் புழுவையும் வளர்த்துவிட்டது போல் நாட்டு மக்களிடம் காட்டும் அதே அன்பை அவர்கள் உயிரை உறிஞ்சும் சமயசஞ்சீவிகளிடமும் காட்டுவதால் நாட்டை அவன் அவர்களுக்கு இரை

யாக்கிவிட்டான். மேலும், பெருமக்களைக் களைகள் போல் வளரவிட்டுப் பொது மக்களாகிய பயிர்களின் வளர்ச்சியைத் தடைப்படுத்தியும் வந்திருக்கிறான். தன் கவனக் குறைவால் நேர்ந்த தீங்குகளைப் பாவம் அவன் அறியான்! இத் தோட்டத்தை நீங்கள் மெச்ச நேர்ந்ததைவிட அம் மாபெருந் தோட்டத்தை மெச்ச நேர்ந்திருப்பின் எத்தனையோ நலமாயிருந் திருக்கும்," என்று கூறிப் பெருமூச்சு விட்டான்.

தோட்டத்தைக் காக்கும் முறையில் தனக்கிருக் கும் திறன் இங்கிலாந்தைக் காக்கு முறையில் ரிச்சர் டுக்கு இல்லை என்று அத் தோட்டக்காரன் கூறிய குறிப்பைக் கேட்டு முதலில் கனன்றெழுந்த அரசி. கணவனுக்கு ஏதோ தீங்கென உள்ளூரக் கண்டதன் பயனாகத் தோட்டக்காரனை அணுகி, "நேயனே, அரசன் அயல்நாடு சென்று பல நாளாகியும் வரக் காணேன்; கவலைப்படுகிறேன்; அவன் அரசியலுக்கு ஊறு நேர்ந்ததெனக் கண்டால் எனக்குக் கூறுவாய்," என்றாள்.

தோட்டக்காரன் தன் புன்மொழிகள் இங்ஙனம் எதிர்பாராத பெரிய இடத்தைச் சென்று சேர்ந்ததே என வருத்தமும் வெட்கமும் அடைந்தான். பின் அரசியின் முகநோக்கி ஆண்டு அரசியல் பெருமைக்கு மாறாகப் பெண்மையின் மெல்லியல்பும் கவலையும் குடிகொண்டிருக்கக் கண்டு பரிவுற்று, ஹென்ரி ஹெரி போர்டு படையுடன் வந்திருப்பதையும் நார்தம்பர் லந்து முதலியோர் எதிரி பக்கம் சேர்ந்திருப்பதையும் விளங்கக் கூறினான். கேட்ட அரசி தீக்காற்று வீசப் பெற்ற மாந்தளிரெனச் சாம்பத் தலைப்பட்டாள்.

## 3. அலைமேல் அலை

அயர்லாந்திலிருக்கும் ரிச்சர்டுக்கு இச்செய்திகளின் முழு விவரமும் எட்டவில்லையாயினும் நிலைமை நெருக்கடியானது என்ற அளவிலேனும் செய்திகள் வந்துகொண்டிருந்தன. காற்று தொடர்ச்சியாகப் பல நாட்கள் இங்கிலாந்தினின்று அயர்லாந்து நோக்கி அடித்ததனுல், இச் செய்திகள் இங்கிலாந்தினின்று அயர்லாந்து வந்து சேர்ந்தும் ரிச்சர்டு அயர்லாந்திலிருந்து இங்கிலாந்து வரமுடியாமலிருந்தது. இக் கால தாமதத்தால் ஒவ்வொரு நொடியும் ஹென்ரியின் வலிமை வளர்ச்சி யடைந்தும் ரிச்சர்டின் வலிமை குன்றியும் வந்தன. ரிச்சர்டு இங்கிலாந்தில் வந்திறங்கியபோது, தீச்செய்திகள் பல அவன் காதில் வந்து விழக் காத்திருந்தன. அவற்றுள் முதன்மையானது வேல்சில் ஸாலிஸ்பரி தலைமையிலுள்ள படைகள் கலைந்து போயின என்பதே. அவற்றிடையே, ரிச்சர்டு இறந்து போனுன் என்ற பொய்ச் செய்தி பரந்ததே அவை கலைந்துபோனதன் காரணம் என்று தெரிய வந்தது. தன் தாமதத்தால் நேர்ந்த இப் பெருந் தீங்கைக் கேள்வியுற்று ரிச்சர்டு பொறிகலங்கி நின்முன். சற்றுக் கழிந்தபின், அவன் தன் பக்கம் நின்ற யார்க் கோமகன் மகனுகிய ஆமெர்ல் பெருமகனை (Lord Aumerle) நோக்கிச் சற்று மனத் தேர்தலுடன், "ஆயினும் என்ன, கேடொன்றும் இல்லை; நின் தந்தையிடம் இன்னும் நம் நாட்டுப் படையின் ஒரு பகுதி உண்டன்றே? அதன் வலியே நமக்குப் போதும்," என்முன்.

அவ்வமயம் தூதன் ஒருவன் வந்து, யார்க் கோமகன் பார்க்லிக் கோட்டையினுள் ஹென்ரியை வர விட்டதையும், அக்கோட்டையும் அதிலுள்ள யார்க் கோமகன் படைகளும் எதிரி பக்கம் சேர்ந்ததையும் கூறினன். அதனை யடுத்தாற்போல் இன்னொருவன் வந்து, வொர்ஸ்டர் கோமகன் எதிரியிடம் மீதிப் படைகளுடன் சென்றதையும் நார்தம்பர்லந்து முதலியோர் எதிரிக்குத் துணையாக வருவதையும் கூறினன்.

அலைமேல் அலை அடித்ததுபோல் வந்த இச்செய்திகளால் மோதுண்டு சற்றே அமிழ்ந்து நின்ற ரிச்சர்டின் உள்ளமாகிய கட்டுமரம், அதன் இயற்கை நொய்ம்மையால் மீண்டும் மீண்டும் மேலெழுந்து கடல்மீது பாய்ந்து செல்லவே தொடங்கிற்று. நன்மையே நிறைந்த வெற்றி நாட்களில் செருக்காய்த் தோன்றிய அவனது தற்பெருமை, தோல்வியின் நிழல் கண்முன் ஆடும் இந்நாட்களில் வீரமாகவும் பெருமிதமாகவும் மாறி அவனுடைய உடலெழிலுக்கு ஓர் அரசுரிமைப் பெருமை நல்கியது. தன்னை அடுத்தோரை இச்சமயம் அவன், தன் வனப்பாலும் தன்னைச் சூழ்ந்த துயரத்தின் குறிகளாலும் தன் கவித்திற மிக்க மொழிச் சித்திரங்களாலும் தன் பக்கமாக ஈர்த்து, அவர்கள் மீது புதுவகையானதோர் ஆட்சி செலுத்தினன்.

'சாவப் போகிறவன் துரும்பையும் புணையாகக் கொள்வான்' என்பது பழமொழி. ஆனல், அத்தகையோர் அத்துரும்பைப் புணையாக நம்புவதுமில்லை; நம்புவதாகக் காட்டுவதுமில்லை. ஆனல், குழந்தை போல் சூதற்ற தன்மையுடைய ரிச்சர்டுக்கு, இச்சமயம் துரும்புகூட உண்மையில் புணையாகவே தோன்

றிற்று. ஒருவேளை துயர் நீக்க அது புணையாகத் தோன்றியிராவிட்டாலுங்கூட அத்துயரிடையேதான் சிறுமைப் படாது காக்கும் அளவுக்கேனும் அவன் அத்தகைய துரும்பைப் புணையெனக் கொண்டான் என்னல் வேண்டும். ஏனெனில், நம்பிக்கை யிழந்த அந்நிலையிலும் சமய உண்மை கண்ட அந்தணனாகிய கார்லைல் தலைமகன் (**Bishop of Carlisle**) அவனை நோக்கி, "அரசே, மனிதர் துணை அகன்றதெனக் கொண்டு கவலற்க; இறைவனது துணையின் நிறைவு தமக்கு உளது. உமக்கு அரசுரிமை தந்தது மனிதரல்லவே! அவ் அரசுரிமை தந்த அதே இறை இன்று அதன் பகைவரை அழித்து உமக்கு அது நிலைக்கு மாறும் செய்யும்" என்றதே, ரிச்சர்டு தன் நிலை மறந்து அவன் ஆறுதலே ஒரு தேறுதலாகக் கொண்டு, "ஆம் ஐயனே, எனக்குப் பற்றுக்கோடாயுள்ள அப் பெருண்மையை மறந்தேன். நீர் நன்கு நினைவூட்டினீர் இனிக் கவலைப் படக் காரணமில்லை," என்று நகைத்தான். உலகின் மோசடி நடைகளை உணர்ந்த அவன் வெள்ளை யுள்ளம் கண்டு அவன் நண்பரும் பிறரும் பரிவுகொண்டு வருந்தினர்.

ஹென்ரியின் படை வலி மேன்மேலும் பெருகிக் கொண்டே வந்தது. ரிச்சர்டின்மீது பொறாமை கொண்ட பெருமக்கள், அவனது கட்டுப்பாடற்ற இன்ப வாழ்க்கையை வெறுத்த மடத்துத் துறவியர், அவன் நண்பர்களான சமயசஞ்சீவிகளையும் அவனையும் வெறுத்த பிறமக்கள் முதலிய பலரும் லண்டன் நோக்கி வரும் ஹென்ரியின் படையில் வந்து சேர்ந்தனர்.

இங்ஙனம் படை வலி மிகுதியாக மிகுதியாக ஹென்ரியின் தற்பெருமையும் பெருநோக்கும் கூடவே வளர்ந்துகொண்டு வந்தன. அவன் அரசன் என்ற பெயர் இல்லாமலேயே அரசனுரிமைகளை ஒவ்வொன்றாய் மேற்கொள்ளலானான். முதன்முதல் அவன் தனதாக்கியது, தந்தையினிடமிருந்து ரிச்சர்டு பறிமுதல் செய்த பாலிங் புரோக் பெருநிலக்கிழமையாகும். உடனே அப் பெருநிலக்கிழமைக்குரிய பட்டத்துடன் அவன் ஹென்ரி பாலிங் புரோக் என்று அழைக்கப்பட்டான். இதுவரை அவனோடொத்தவராயிருந்த பெருமக்கள், அவன் படைவலியும் செல்வாக்குங் கண்டு அரசர் முன் பணிவதுபோல் அவன் முன் பணியத் தலைப்பட்டனர். அவனும், அங்ஙனம் பணியாதவரையும் ரிச்சர்டுக்கு உடந்தையானவரையும் அச்சுறுத்தவும் ஒறுக்கவும் தொடங்கினான்.

இத்தகைய பெரு நிலைகளுடன் ஹென்ரி வரும் வழியில் ரிச்சர்டின் சமய சஞ்சீவிகளான புஷியும் கிரீனும் தென்பட, அவன் ஆட்கள் அவர்களைச் சிறைப்பிடித்து அவன் முன்னிலையிற் கொண்டுவந்து நிறுத்தினர். ஹென்ரி பாலிங் புரோக், அவர்களை வழக்கு மன்றத்தில் உசாவுவது போல் உசாவிக் குற்றஞ்சாட்டித் தானே அரசனென்றாற்போல அவர்களைத் தூக்கிலிடும்படி உத்தரவிட்டான்.

பாலிங் புரோக்கை நோக்கி வந்துகொண்டிருந்த ரிச்சர்டு, தன் நண்பர் ஒவ்வொருவராகத் தன்னை விட்டு அகன்றது கண்டு ஒருபுறம் வெகுண்டான்; தன் நிலை ஓர்ந்து ஒருபுறம் துயரடைந்தான். மற்

ெருருபுறம், இறைவன் கடைசி நொடியிலேனும் தன்னால் அரசனுகப் படைக்கப்பட்டதோர் பேருயிரைக் காப்பானே என்ற ஆவல், அவன் உள்ளத் தடத்தின் இருளிடையே மின்னிற்று. அச்சமயம் திடீரென்று அவனுக்குக் கிரீன், புஷி முதலிய நண்பர்களின் நினைவு வந்தது. வந்ததும், அவர்களேனும் இன்னும் உதவுவர் என்ற நம்பிக்கை சற்றே தலைதூக்க, அவன் அவர்கள் எங்கே என்று உசாவினன். அருகில் இருந்தவர் எவரோ அச்சமயம், "அவர்கள் அப்பாற் சென்று சேர்ந்தனரே" என்ன, அவர்களும் தன்னைக் கைவிட்டு எதிரியிடம் சென்று சேர்ந்தனர் என்று தவருகக் கருதித் தீ மிதித்தவன் போல் மனங்கொதித்து, "ஆ பதடிகள், நன்றி கெட்டவர்கள்! அவர்களும் சென்றனரா? ஆ, இவ்வுலக வாழ்வனைத்தும் எத்துணை வெளிப்பூச்சு," என அரற்றினன். அச்சமயம் நண்பர் அவன் கொண்ட தப்பெண்ணத்தைத் திருத்தி, "அரசே! அவர்கள் உம்மைக் கைவிட்டு அப்பாற் செல்லவில்லை; உமக்காக உயிர்விட்டு உலகை நீத்து அப்பால் எமனுலகுக்குச் சென்று சேர்ந்தனர்," என்றனர். அது கேட்டதும் ரிச்சர்டு சினமனைத்தும் மாறித் தன் துயரையும் மறந்து அவர்களுக்காகக் கண்ணீருகுத்து மன மாழ்கினன்.

## 4. ஊழிற் பெருவலி யாவுள?

ரிச்சர்டு தன் நண்பருடன் வேல்ஸ் எல்லையிலுள்ள பிளின்ட் கோட்டைக்கு (Flint Castle) வந்ததும், ஹென்ரி படையுடன் அண்மையிலேயே எதிர் நோக்கி வருகிருன் என்று கேள்விப்பட்டான். அவனை எதிர்க்கவேண்டிவரின் கோட்டையே பாதுகாப்பான

இடம் என்றெண்ணி ரிச்சர்டு அக்கோட்டையிலேயே தங்கி அவனை எதிர்பார்த்திருந்தான்.

சின்னேரத்தில் ஹென்ரி பாலிங் புரோக்கின் படையைச் சேர்ந்த பேரிகை ஒலியும், படைவீரர் ஆரவாரமும் பிளின்ட் கோட்டையருகே வந்தெட்டியது. கோட்டை வாயில் வந்ததும் ஹென்ரி நார்தம்பர்லந்தைத் தூதனாக அனுப்பினான். நார்தம்பர்லந்து ரிச்சர்டு முன் வந்து, "நான் ஹென்ரி ஹெரிபோர்டு பாலிங்புரோக் சோமகனிடமிருந்து வருகிறேன். எம் தலைவர், ரிச்சர்டினிடம் சில செய்திகள் பகரவேண்டுமென்று விரும்புகிறார்," என்றான்.

அரசனை அரசனுக்குரிய முறையிலன்றி ரிச்சர்டு என்று மட்டுங் கூறியது கண்டு, காவலரும் துணைவரும் உள்ளூரச் சீற்றங்கொண்டனர். ஹென்ரி பாலிங் புரோக்கின் படை வலியும் செல்வாக்குமே அன்று நார்தம்பர்லந்தைக் காத்தன என்னல் வேண்டும். ரிச்சர்டு முன்னிலையில் அவன் பணியாது நின்று பேசினான். இத்தகைய நடைகளிலிருந்தும் மக்கள் பரபரப்பிலிருந்தும் ஹென்ரியின் உள்ளார்ந்த நோக்கம் தனக்கு உரிமையான பாலிங் புரோக் பெருநிலக் கிழமையினை மட்டும் பெறுவதன்று, அதனை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு இங்கிலாந்தின்மீது படையெடுத்து அரசுரிமையைக் கைப்பற்றுவதேயாம் என்பது தெற்றென விளங்கிற்று.

ஹென்ரியின் செல்வ வெறியிலும் செல்வாக்கிலும் மயங்கிப் பெருமக்களும் நடுநிலை மக்களிற் பலரும், அவனை அரசனாக்க ஒருப்பட்டுள்ளனர் என்ற செய்தியும் ரிச்சர்டு காதில் விழுந்தே இருந்தது.

இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு ரிச்சர்டைச் சேர்ந்தோர் நார்தம்பர்லந்து ஹென்ரி ஆகியவரின் நடைமீதுள்ள சீற்றத்தை வெளிக் காட்டாது அடக்கிக் கொண்டனர். ரிச்சர்டோ, கடலினுள் புதைந்து கனன்று கொண்டிருக்கும் வடவைத் தீப்போன்று குமுறிக் குமுறி மேலெழுவதும் அடங்கி நிற்பதுமாக இருந்தான்.

வணங்காமுடி மன்னனாய் நிற்கும் நார்தம்பர்லந்தை அவன் எரியெழ உறுத்து நோக்கி, "ஐய, தாம் அரசர் முன்னிலையில் நின்று பேசுகிறீர் என்பதை மறக்கச்செய்த தமது தற்பெருமை அல்லது தம் தலைவரது தற்பெருமை யாதோ? அல்லது அரசர் யாம் அல்லேம் என்றுகூட நீங்கள் உங்களுக்குள்ளாகவே முடிவு கட்டி விட்டீர்களோ?" என்றான்.

தனது திட்டம் முற்றும் அரசர் வாயிலிருந்து வருவது கேட்டு நார்தம்பர்லந்து உள்ளூர மகிழ்ச்சியடைந்தும் வெளிக்கு ஒன்றும் அறியாதவன் போலச், "சிவசிவ, என்ன சொற்கள் சொன்னீர்? குடிகளாகிய எமக்குத் தமது அரசுரிமையை எதிர்க்கத் துணிவு வருமோ? யாம் வறிதே எம் உரிமைக்காக மன்றாட வந்துள்ளோம். தாம் எம் தலைவர் ஹென்ரி ஹரிபோர்டு பாலிங் புரோக் கோமகனுக்குச் செய்த தீங்கை அகற்றி அவரை ஏற்றுக்கொள்ளும்படி மட்டும் வேண்டுகிறோம்," என்றான்.

தேன் பூசிய நஞ்சே போன்ற அவனது நயவஞ்சக மொழிகள் கேட்டு ரிச்சர்டு தான் இதுகாறும் இயற்றிய பிழைகளை ஒரு நொடி எண்ணிப்பார்த்து,

"ஆம், இன்று வருந்துவதாற் பயனென்? இப்பெரு மக்கள் குழுவை வரம்பில் வைக்கத் தவறினேன். பொதுமக்களின் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப் பையும் பெறத்தவறினேன். நகத்தாற் கிள்ளி எறி யத்தகும் பகைவன் இப்போது கோடரியால் தறிப் பினும் தறிபட முடியாத அளவு வளர்ந்து விட் டானே! என் அரசாட்சி இருந்தவாறு என்?" என்று வருந்தினான்.

பின் அணைகடந்த வெள்ளத்துக்கு என் செய்வ தென்று மனந்தேறி நார்தம்பர்லந்தை நோக்கி அவன் "சரி, உம் தலைவனிடம் போய் அரசனைக் காணலாம். கண்டு தம் உரிமைகளைப் பெறலாம் என்று சொல்க!" என்றான்.

இத்துடன் ரிச்சர்டின் நா நின்றிருந்தால்கூட ரிச்சர்டின் வீழ்ச்சி தடைப்பட்டிருக்கலாகும். ரிச்சர்டு பாலிங் புரோக்கின் பெருநிலக்கிழமையை விட்டுக் கொடுத்திருந்தால், தற்காலிகமாகவாவது பாலிங் புரோக் தன்படைகளைக் கலைக்கவேண்டி வந்திருக் கலாம். ஆனால், பெரிய தேரின் போக்கை மாற்றும் சிறு சறுக்குக் கட்டை போன்றதோர் நிகழ்ச்சி இச் சமயம் ரிச்சர்டின் தீவினைப் பயனால் நிகழ்ந்து, அவ னது தீய நாவைத் தூண்டிற்று. வெளியே சென்று கொண்டிருந்த நார்தம்பர்லந்து, 'தன் தலைவர் வர இணக்கம் பெறவில்லையே' என்று நினைத்துத் திரும்பி வந்தான். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல் லாம் பேய்' என்றபடி ரிச்சர்டுக்கு, 'அவன் தன் மறைப்பையும் நடிப்பையும் முற்றிலும் துறந்து நேரே தன் முடிவைக் கேட்கிறானோ என்று தோன்

றிற்று. தோன்றவே, தன் மன அமைதியையும் பகுத்தறிவையும் சற்றே பறிகொடுத்துவிட்டு, "ஏன் ஐயன்மீர், இத்துணை நான் விட்டுக்கொடுத்தது போதாது என்று இன்னும் வருகிறீர்? உம் தலைவர், நான் எவ்வளவு பணிந்தால் நிறைவடைவார்? அவருக்கு இந்த ஒரு மணி முடி போதுமா? இந்த ஓர் அரசிருக்கையும் இந்த ஓர் அரண்மனையும் அல்லது இந்த ஒரு நாடும் உலகமுந்தான் போதுமா? இவ்வளவும் போதாமல் இருந்தால் இந்த ரிச்சர்டின் உயிரே வேண்டுமானாலுந் தருகிறேன். அதுமட்டு மன்று: என் அரசுரிமையோடு கூட என் தன்மதிப்புங்கூட வேண்டுமா? என்று கேட்டு வருவீர். நான் அரசனாக வாழாமல் தனி மனிதனென்ற முறையிலாவது வாழலாமா? இந்த இங்கிலாந்தில் என் மனைவியும் நான் மிதிக்கும் நிலமுமாவது எனக்குரியவை என்று நான் சொல்லிக் கொள்ளலாமா? இவை யனைத்தையும் நீர் அறிந்து வந்து சொல்லும்!" என்றிவ்வாறு தன் மனக்கொதிப்பைக் கேள்விகளாக வார்த்துக் கொட்டினான்.

நார்தம்பர்லந்து "அரசே! தற்போது தாம் தருவதாகக் கூறுவதன் ஒரு பகுதி போதும். நான் எம் தலைவரைக் கலந்துகொண்டு வருகிறேன்" என்று கூறி அகன்றான்.

இங்ஙனம் அகன்ற நார்தம்பர்லந்து விரைந்து பாலிங் புரோக்கினிடம் சென்று நடந்த விவரங்களைக் கூறினான். ரிச்சர்டினிடம் படைவன்மை இல்லையென்றும், தன் வலிமை யின்மையைத் தானே உணர்ந்து அவன் கோபமும் தாபமும் அடைகிறான் என்றும்

கேட்டதே, பாலிங் புரோக்குக்குத் தன் எதிரியின் வன்மையிற் பாதி அப்போதே தன் பக்கம் வந்து விட்டதாகத் தோற்றியது. அப்பெருமையை அவன் அடக்க ஆற்ருது உடன் தானே நார்தம்பர்லந்தை நோக்கி, "ரிச்சர்டிடம் பின்னும் ஒரு முறை செல்க; சென்று, முற்றத்தில் நான் நிற்பதாகவும் இறங்கி வந்து பார்க்கத் திருவுளம் செய்யவேண்டுமென்றும் கூறுக" என்ருன்.

நார்தம்பர்லந்து மூலம் இம்மொழிகள் ரிச்சர்டின் செவிகளில் புகவும், அவன், எண்சாண் உடலும் ஒரு சாணுகக் குன்றினுன். கடலைக் குடித்த குறுமுனி போல இச்சண்டாளனையும், இவனைத் தாங்கி நின்ற இவ்வியனுலகையுமே விழுங்கிவிடுவோமா என்ற பெருஞ்சினம் எழுந்து அவனைச் சிலநேரம் ஆட்படுத்திற்று. சினம் தீர்ந்தபின் துயர் அவனுள்ளத்தைக் கொள்ளை கொண்டது. தன் நிலைமையைக் கண்டு அவன் அலறினுன்; அழுதான்; மனம் புழுங்கிப் புழுங்கி விம்மினுன். பின் நண்பரும் பணியாளரும் தேற்ற ஒருவாறு தேறினுன். இறுதியிற் கார்லைல் தலைமகனை நோக்கி, "அந்தணுள, மன்னிக்கவும்; மாந்தரை வீழ்த்தும் துயர் மன்னனையும் ஆழ்த்துவது தகாததுதான். வாழ்வில் ஆட்சி செலுத்திய இக்கண்கள் மாள்விலும் ஆட்சி செலுத்தும் எனக் காட்டுவேன்" என்று எழுந்தான்.

பின் அவன் நார்தம்பர்லந்தை ஏறெடுத்து நோக்கி ஏளன நகைப்புடன், "பெருந்தகையோய், நின் பெருந்தகைத் தலைவனிடமிருந்து நீ கொணர்ந்த மாற்றமும் பெருந்தகைமை உடையதே. அரசர் முன்

குடிகள் வருவதன்றிக் குடிகள்முன் அரசர் வருவதில்லையே! ஆயினும் இஃது உங்கள் காலம். நான் வருகிறேன்; இறங்கி வருகிறேன்; கீழ் முற்றத்திற்கே கீழ் நோக்கி இறங்கி வருகிறேன்; செல்க" என்றான்.

ரிச்சர்டினிடம் அரைகுறை அன்புடையோர் அனைவரும் 'அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் உற்றுழித்தீர்ந்' தேகினர். ஒரு சிலர் மட்டும் உண்மை நட்புக்கிலக்காய்க் 'கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல ஒட்டி' நின்றனர். இடுக்கண் என்பது, நண்பருள் நல்லவர் தீயவர் உண்மையுடையவர் போலியானவர் இவர்களைப் பிரித்து வேறுபடுத்தும் அரிப்பன்றோ?

ரிச்சர்டின் வீழ்ச்சி உறுதிப்பட்டு விட்டது! வீழ்வது இன்றோ நாளையோ என்பது மட்டுந்தான் கேள்வி என்ற நிலையிலும், விடாது நின்ற அன்புரிமையாளர் சிலர் இருந்தனர். அவர்கள் "அரசே! பெருந்தன்மையற்ற இந்த ஹென்ரி பாலிங் புரோக்கினிடம் ஆத்திரப்பட்டுத் தம் மனத்திலுள்ள தனைத்துங் கூறிவிட வேண்டாம். அவன் ஆள் வலியை வைத்துக்கொண்டு வெளி மிரட்டுக்கு ஒரு சாக்குத் தேடுகிறான். முன்கூட்டி அவன் முடிவை எடுத்துக் காட்டி, அவனுக்கு அவன் தேடும் சாக்கிற்கு இடங் கொடுத்துவிடாதீர்கள்" என்றனர்.

ஆனால் ரிச்சர்டின் மனம் வேறு வழியிற் சென்றது. முன்னே பின்னே தன் முடிவு உறுதி என்று அவனுக்கு ஐயமற விளங்கிற்று. தான் உரலுக்குள் அகப்பட்டவனே என்று தெரிந்தது. கொஞ்சங்

கொஞ்சமாய் நொறுங்குவதைவிட ஒரே இடியாய் இடிபட்டுத் தகர்ந்து பொடியாவது நல்லதல்லவா? பூனையின் கையில் அகப்பட்ட எலி, அப்பூனை தன்னைச் சற்றே விட்டுவிட்டு விளையாட்டுக் காட்டி வதைக் கையில், அதற்கிடங்கொடுக்கும் வகையில் தப்பி ஓடப் பார்க்காமல் அப்பூனையால் உடன் கடித்துக் கொல்லப்படுவதற்குத் தானே வழி பார்ப்பது நல்ல தல்லவா" இவ்வெண்ணத்துடன் ரிச்சர்டு ஒருபுறம் பாலிங் புரோக்கின் மறைந்த வஞ்ச எண்ணங்களை வெளிப்படக் கூறிக் கோபமூட்டினான். இன்னொரு புறம் அவன் கூறத் தயங்கிய மொழிகளைத் தானே கூறி, அவன் வேலையை எளிதாக்கினான்.

## 5. முயலெய்த அம்பும் யானை பிழைத்த வேலும்

ரிச்சர்டைக் கண்டதும் பாலிங் புரோக் படம் எடுக்கப் புகும் பாம்பு பணிந்து வளைவதுபோல் முழங்காலிட்டு வணங்கி நின்றான். ரிச்சர்டு அவனைத் தூக்கி நிறுத்தி, "உள்ளத்தில் இல்லாத பணிவு உடலில் ஏனோ?" என்றான்.

பாலிங் புரோக் தீண்டப்பெற்ற அரவமெனச் சீறி, "ஐயனே., உள்ளத்திற் பணிவு இல்லையெனக் கூறுவது யார்? தன் உரிமைக்குத் தான் போராட வருவதுதான் பணிவின்மையோ? இதுவும் தம் அர சாட்சியின் வண்மைபோலும்!" என்றான்.

இது கேட்டு ரிச்சர்டு முகம் சிவந்தது. கண்கள் கன்றிப் பனித்தன. உதடுகள் படபடத்தன. அவன்

பாலிங் புரோக்கை நோக்கி, "இறைவனால் அமர்த்தப்பட்ட முடியரசு ஆட்சியைப் பழிக்கும் துணிவுடைய மேலோய்! என் ஆட்சியை நீக்கி நும் ஆட்சியை நிறுவுவதாயின் நிறுவுக!" என்றான்.



ஹென்ரி பாலிங் புரோக் ரிச்சர்டின் முன் பணிதல்

பாலிங் புரோக்கின் முகம் ஒளி வீசிற்று. குரலில் ஒரு பெருமிதம் எழுந்தது. ஆனால் மாறுதலில்லாத வெற்று மொழிகளில் அவன், "எனக்கு உரியதை மட்டுமே யான் தம்மிடம் கோரினேன்" என்று பசப்பினான்.

ரிச்சர்டின் சினம் தலைகால் தெரியாமல் துள்ளிக் குதித்தது. அவன் தீவினை அவன் நாவில் மீண்டும்

வந்து நின்றது. நிற்கவே அவன், "அன்பரீர், உமக்குரியதும் உமக்குத் தந்தேன். எனக்குரியதும் உமக்குத் தந்தேன். நானும் இனி உம் உடைமை. இன்னும் என்ன வேண்டும் உமக்கு? நான் உம்முடன் வர வேண்டுமா? எங்கு வரவேண்டும்? லண்டனுக்கா வரவேண்டும்?" எனப் பல நாள் கணக்கில் பாலிங் புரோக் படிப்படியாகக் கேட்க இருந்த அத்தனை செய்திகளையும் முன் கூட்டி ஒரே மூச்சில் அவன் முன் அள்ளி வீசினான்.

பிறர் மெய்ப்புக்காக வேண்டாம் வேண்டாம் என்று சொல்லிக்கொண்டு கொடுத்ததையெல்லாம் வாங்கி வாங்கித் தின்னும் அலகைகள் போலப் பாலிங் புரோக், "அவ்வளவு நான் எண்ணவில்லை! தாங்கள் அவ்வளவும் ஒருப்படுவதால் அங்ஙனமே ஆகுக. லண்டனுக்கே புறப்படலாம்" என்று கூறி விட்டுப் பக்கத்தில் நின்றோரிடம் "ரிச்சர்டையும் உடன் கொண்டு லண்டன் நோக்கிப் பயணமாகுக" என்றான்.

ஒருவரும் கவனிக்காமலே ரிச்சர்டு அரசன், ரிச்சர்டு ஆய்விட்டான்.

பாலிங் புரோக், அரசனைச் சிறையாளிபோல் முன்னே எளிய உடையில் எளிய ஊர்தியில் விட்டுத் தான் நாற்படைசூழ அரச உடையுடன் ரிச்சர்டின் குதிரையிலேறி அணி மணிகளுடன் ஊர்வலம் செல்லும் அரசன்போற் செல்வானாயினான்.

பெருமக்கள் ஆங்காங்கு நின்று, "ரிச்சர்டு வீழ்க, பாலிங்புரோக் ஓங்குக" எனக் கத்தினர்.

பொது மக்கள், பலரும், கொடி பிடித்தவனுக்குக் கோவிந்தாப் போடுமுறையில் கூடிநின்று 'பாலிங் புரோக் வாழ்க, ஹென்றி வாழ்க'' என்று தொண்டை கிழியக் கத்தி ஆரவாரித்தனர்.

மாநிலமாளும் மன்னவனுக் கிந்நிலை வந்துற்றதே எனப் பரிவு கொண்டவர் மிகச் சிலரே.

ரிச்சர்டின் போக்கு இங்ஙனமிருப்பக் கற்பணி கலமும் பிரான்சின் உதிர்ந்த மென் மலருமாகிய அவனரசி அவன் அரிய வரவுக்காகக் காத்திருந்து கண் பஞ்சடைந்து ஊணும் உறக்கமும் துறந்து பேய் போலத் தன்னிலை மறந்து நாற்புறமும் ஓடிக் கணவனைத் தேடுவாளாயினள். அவள் நிலை கண்டிரங்கிய சிலர் ரிச்சர்டுக்கு நேர்ந்த பழியையும் லண்டனுக்கு அவன் எடுத்துச் செல்லப்படும் அலங்கோலக் காட்சியையுங் குறித்துக் கூறினர். கணவனிடமே உயிர் வைத்து நடைப் பிணமெனச் சின்னாளாய் வீட்டில் தங்கியும் உலவியும் வந்த அம் மங்கை நல்லாள், உயிரை அணைய விரையும் உடலேபோல், லண்டன் நோக்கிச் செல்லும் வழியிற் செல்லலானாள்.

ரிச்சர்டை உடன்கொண்டு லண்டன் சென்ற பெருமக்கள் ஊர்வலம், அரசியற் பெருமன்றங் கூடுமிடமாகிய வெஸ்ட் மினிஸ்டர் (West minister) சென்று சேர்ந்தது. ஆண்டுநின்றும் 'ஹென்ரி வாழ்க, பாலிங் புரோக் வாழ்க' என்ற கூக்குரல் வானைப் பிளந்தது. ரிச்சர்டின் பெயரைத்தானுங் கூறுவாரைக் காணோம். குடிகள் அன்பின்மை என்ற நச்சரவங் கண்ட ரிச்சர்டு, அரசியல் வாழ்வில் முற்றிலும்

வெறுப்புற்று 'இம்மக்களேயோ இவ்ஹென்ரியையோ இனிக் கண்ணிற் காணுதிருக்கும் வரம் தருவாய் என இறைவனை வழுத்தலானுன்.

பின் மண்ணுலக வாழ்வை வெறுத்த அம் மன்னன் யாரும் எதிர்பாரா வகையில் நார்தம்பர் லந்தை அழைத்துப், "பெரியீர், வளைந்து வளைந்து செல்வானேன்? நேர் வழியை நான் இணக்கத் துடன் காட்டுகின்றேன். இம் மணிமுடி எனக்கு வேண்டா. நும் தலைவர் அதனை ஏற்கத் திருவுளங் கொள்ளின் ஏற்றருளுமாறு நான் இறைஞ்சுவதாகக் கூறுவீர்" என்ருன்.

கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வரப் பெற் றதுபோல் மகிழ்வெய்திப் பாலிங் புரோக், ரிச்சர் டைத் தானே வந்து அரசியல் மன்றில் அதனை விட்டுக் கொடுக்கும்படி வேண்டினுன்.

இறப்பினும் மானம் துறவா ஆங்கில அரசர் வழியில் வந்த ரிச்சர்டு, "யான் தற்போது அரசு துறந்து அரசுரிமைச் சாம்பலென நிற்பினும், யான் குடிகள் முன் சென்று குடிமக்கள் நிலையில் பேச ஒருப்படேன்" என்று மறுத்தான். ஹென்ரியும்' மாளும் அரியேற்றினிடம் மாளுமுன் எதிர்ப்பது தவ றெனக் கொண்டு, தனது வேண்டுகோளை வற்புறுத் தாமல் சற்றுப் பின் வாங்கினுன்.

ரிச்சர்டு அதன்பின், அரசிருக்கையும், முடியும் தான் ஹென்ரியினிடம் ஒப்பிவிப்பதாகவும், தான் பிரான்சிக்குச் செல்ல விரும்புவதாகவும் சொல்லி யனுப்பினுன்.

கொடுப்போர் குலப்பெருமை அறியாத வாங்குவோர் குலத் தோன்றலாகிய ஹென்ரி, ரிச்சர்டின் கோரிக்கைகளுள் முன்னதை மட்டும் வெட்ட வெளிச் சமாக மன்றத்தார் முன் வாசித்துக் காட்டிப் பின்னதை அடக்கிக் கொண்டான்.

ஹென்ரி பாலிங் புரோக் பெருமக்கள் தலைவனாகயார்க் கோமகன் துணை செல்லக், கான்ரிபெர்த் தலைமகன் வழி காட்ட, அரசிருக்கையேறி, மேளதாளங்களுக்கிடையே மணிமுடி அணிவிக்கப் பெற்றான்.

தலைமக்கள் (Clergy), பெருமக்கள் (Lords) பொதுமக்கள் (Commons) ஆகிய மும்மண்டலத்தவரும் (Chambers) போற்ற நானிலமெங்கும் புகழ்லை வீச, "பாலிங் புரோக் வாழ்க, நான்காம் ஹென்ரி வாழ்க" என்ற ஆரவாரங்களுக்கிடையே அன்று ஹென்ரி முடி சூட்டப் பெற்றான்.

ரிச்சர்டு என்னும் ஞாயிறு அரசியல் வானில் மேல்பால் கண் கவர் சிறப்புடனும் நல்லோர் மனத் துயராகிய நிழற்படலங்களுடனும் மறையவும், ஆங்கு வளர்பிறையின் முதற் கலைபோலும் பெருமிதத்துடன் ஹென்ரி என்னும் மதிக் கொழுந்து மேலெழுந்தது.

## 6. தோல்வியில் வெற்றி

புதிய முடிசூட்டு விழாவில் கறை ஒன்றே ஒன்றுதான். "புலனழுக்கற்ற அந்தணாளர்" ஆகிய கார்லைல் தலைமகன் அரசியல் மன்றில் முடிசூட்டுமுன் எழுந்து, "அரசர் என முடிசூட்டப்பெறப்போகும் பாலிங்

புரோக் பெருமகனுரே! அரசர் அரசிருக்கை ஏறு வதும் துறப்பதும் மக்கள் விருப்பு வெறுப்பாலன்று; இறைவன் திருவுளப்போக்கு ஒன்றினுல் மட்டுமே ஆகக்கூடியது என்று அறிவீர். ரிச்சர்டுக்குரிய இவ் வரசுரிமையை அவனிடமிருந்து பறிக்கவோ, மேற் கொள்ளவோ உமக்கு என்ன தகுதி உண்டு? இறை வன் முன்னிலையில் ரிச்சர்டே அரசர்; அதுவே என் கொள்கை: பிற அறிவுடையோர் கொள்கையும் அதுவேயாம். உமக்கஞ்சி உம்மை ஏற்கும் கோழை களுக்குப் புறம்பான மக்களும் உளர். அவரே மக்கள். பிறர் மாக்களே என்பதை நீர் உணர்க" என்ருன்.

பாலிங் புரோக் பொறுமை யிழந்து, முடிசூட்டு விழாநாள் என்று கூட எண்ணுது, 'உடன் தானே இப் பார்ப்பான் தலையைத் துணிக்க" என்று பணித் தான். முடி சூட்டின் முதற் பலி நிறைவேறிற்று.

இனி ரிச்சர்டின் கொலை ஒன்றுதான் குறை.

ரிச்சர்டின் துணைவி லண்டனுக்கு வந்து, அவன் மணிக்கூண்டுச் சிறைக்குக் கொண்டுபோகப் (Tower of London) படுவதாகக் கேட்டு, அவ்விடத்துக்குச் செல் லும் வழியில் ஓரிடத்தில் தன் உயிர்த் தோழியர் சில ருடன் காத்திருந்தாள்.

அவன் சிறையாளிபோல் கொண்டு வரப்படும் அப்போதும், புகழிற்கு மாருக அவன் இகழ்மாலை சூட்டப்பெற்று வரும் அந்த நேரத்திலுங்கூட, அவள் கண்ணுக்கு அவன் அடி முதல் முடி வரை ஒவ்வோர் அங்குலமும் நிறையரசாகவே காணப்பட்டான்.

அவன் துயரால் அவன் வனப்பும் கவர்ச்சியும் அவள் கண்களுக்குப் பன்மடங்கு மிகுந்து தோன்றின. அவள் தன் தோழியர் தோளிற் சாய்ந்து அவனைக் குறித்த நோக்குடன், "ஆ, மன்னர் என்ற சொல்லுக்கோர் மகுடம்போல் விளங்கும் என் இறைவனை நோக்குவீர்! துயரால் கறை பட்ட அம் மகுடத்தை யான் என் காதற் கண்ணீரால் கழுவி இன்னும் புத்துயிர் பெறும்படி புதுப்பிப்பேன் என்று புலம்பினாள்.

அவன் துயர் கண்டு தன் உள்ளுயிர் பொசுங்கினும் அவளையும் அவள் துயரையும் கண்டும் காணாதவன்போன்ற தோற்றத்துடன் ரிச்சர்டு அவளைத் தோழியருடன் சேர நோக்கி, "யான் உங்களைக் கவனிக்கும் காலம் அன்று இது. இங்கிலாந்தின் புயற்காற்றும் என் முடிவும் உங்களுக்குகந்தவையல்ல. இந்நாட்டின் சூறுவளியின் சுழற்சியுட்படாமல் அமைதியுடன் பிரான்சு நாடு சென்று கன்னியர் மடத்துட் சென்று ஒதுங்கி உறையுங்கள்" என்றான்.

"என் தலைவர் தாங்கரும் துயரினும் என்னை இங்ஙனம் மறத்தல் தகுமோ? நான் தம் உடலினும் உயிரினும் ஓர் பகுதி என்ற முறையில் தம் துயரையும் பகிர்ந்து துய்க்கும் உரிமையுடையவளன்றோ?" என்றாள் அப் பெண்மை அரசி.

ரிச்சர்டு மின்னியிடித்தார்த்து மழை பொழிந்து வெறித்தாலன்ன முகத்துடன் அவள் பக்கம் திரும்பி நோக்கி, "என் உயிரே! நீ என் பகுதிமட்டிலும் அல்லை; என் உள்ளுயிர் நீ; உயிர் நிலை நீ; உன்னைத்

தாக்காத எத் துயருக்கும் எத்தகைய முடிவுக்கும் நான் அஞ்சேன். ஆனால், உன்னைத் தாக்கும் துயர் என்னைக் கோழையாக்கி விடும். நீ என் துயரைப் பகிர்வதற்கு மாறாக, அதனைப் பன் மடங்கு மிகைப் படுத்தமட்டுமே செய்யக்கூடும். ஆதலின், இவ்வுடல் எந்நிலை யெய்தினும் அதனால் தாக்குறாமல் அதன் உயிராக விலகி நின்று மறுபிறப்பில் என்னுடன் வந்து சேர்வாய்" என்றான்.

அரசி அச் சொற் கேட்டுப் பின்னும் உருகினாள். பின் அவன் பக்கம் பாராது நார்தம்பர்லந்து பக்கம் நோக்கி, "என்னையும் சிறையாளியாக உடன்கொண் டேக வேண்டுகிறேன்" என்றாள்.

நார்தம்பர்லந்து கடுகடுத்த முகத்துடன் "அம் மணி, தம் கணவர் இப்போது சிறையாளியும் அரசியல் பகைவரும் ஆவர். அவருடன் செல்வது முடியாத காரியம். அது மட்டுமன்று. அவர் இப்போது நாட்டுப் பகைவரானபடியால் அவருடன் பேசுவதும் பரிவு கொள்வதும் கூட, அரசியற் பகைமையாகக் கருதப் பட இடமுண்டு" என்றான்.

நாக்கில் நரம்பற்றுப் பேசப்பட்ட இம்மொழி கள் கேட்டுப் பொங்கிய சினத்தை உள்ளடக்கிக் கொண்டு அரசி பின்னும் "மன்னரை ஆக்கவும் அழிக்கவும் வல்ல மன்னர் மன்னரே! நான் அவ ருடன் காட்டும் பரிவு அரசியல் முறைப்படி மன்னன் என்ற வகையில் அல்லவே, பெண் என்ற முறைப் படி கணவன் என்ற வகையில்தானே! தமது புது மன்னனிடம் தம் செல்வாக்கைப் பயன் படுத்தி,

என் கணவனுக்கு இத்துயர்ப்பொழுதில் துணையாய்ச் சில நாட்களேனும் உதவ இணக்கம் அளிக்கலாகாதா?" என்று மன்றுடினுள்.

நார்தம்பர்லந்து இரக்கமின்றி, "இதற்கு மன்னனிடம் செல்ல வேண்டுவதில்லை. முடியாதென்று நான் கூறிவிட்டேன்" என்று தன்ணுண்மையுடன் கூறினுன்.



ரிச்சர்டு தன் காதலியை இறுதியாகச் சந்தித்தல்

தனது புதிய வலிமையின் வெறியால் ரிச்சர்டு அவளுக்குத் தன் இறுதி முத்தமளித்து விடைகொள்வதைக்கூட அவன் தடுத்தான். அப்போது அரசியின் முகம் சரேலென்று சிவந்து கறுத்தது. உயிரினும் இனிய தன் துணைவிக்கு நேர்ந்த அவமதிப்புக் கண்டு ரிச்சர்டு சீறினுன்.

சீற்றத்தால் ஒரு வாழ்நாளின் அரசுரிமை வீறு முற்றும் ஒரு நொடிக்குள் அவன் . முகத்திலும் நிலையினும் வந்தேற, அவர் நார்தம்பர்லந்தை அழுலெழ நோக்கிக் கேட்போர் அஞ்சும் வஞ்சின மொழிகள் பகரலானன்.

"கொண்ட முடிமன்னனுக்கு வஞ்சகம் செய்த நீ, கொண்ட கணவனிடமிருந்து மனைவியைப் பிரிக்க எண்ணுதல் இயல்புடையதே !'

"முடிமன்னனுக்கு வஞ்சமிழைத்த நீ, அவ்வஞ்சத்தின் பயனாக உயர்த்திய நின் கைப்பிடி மன்னனுக்கு வஞ்சமிழைப்பாய் !

"மணிமுடியார்வத்தால் தீங்கிழைத்த நின் தலைவற்கு, அம் முடி முள்முடியாகி அவனுக்குத் துன்பத்தையும் வெறுப்பையுந் தருவதாக !

"முடிமன்னர் குடிக்கெதிராக மேலோங்கிய நின் புன் கை நின் குடியையுங் கெடுக்க !" என்றான்.

இப் பழிமொழிகளைப் பொருட்படுத்தாது நார்தம்பர்லந்து சிரிக்க முயன்றான். ஆனல், அது பேய்ச் சிரிப்பை யொத்து நகையிழந்திருந்தது. மன்னனுடன் உள்ளூரப் பரிவுகொண்டவர்கள் உள்ளங்களையும் இம் மொழிகள் ஈர்த்தன.

அனைவரும் பேச்சு மூச்சின்றி நிற்ப, ரிச்சர்டும் அரசியும் வாயற்ற நெடும் பார்வையுடனும் நெடு மூச்சுடனும் ஒருவரை ஒருவர் பிரிந்தனர். இது முதல் ரிச்சர்டின் வாழ்வு, குறுகிய மணிக்கூண்டுச் சிறையினும்; அரசியின் வாழ்வு, அகன்ற பசையற்ற மடத்து வாழ்விலும் கழியலாயின.

அரிசி, தன் வாழ்நாளை நெடுநாள் தாங்க இயலாது உடல் வாடி வதங்கி உலகை நீத்தாள். அவள் உயிர் தன் தலைவனை எதிர்கொள்ள முன்கூட்டி விண்ணுலகெய்திற்று.

ரிச்சர்டின் ஆட்சி முடிவு கேட்டுப் பொது மக்களிற் பலர் வியப்புற்றனர். அவன் ஆட்சியின் குறைபாடுகளை நன்கு உணர்ந்தவர்கள்கூட, அவன் ஆட்சி முடிவு ஏற்புடையதன்றெனக் கொண்டனர். 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்றபடி பெருமக்களும், இன்ப வாழ்வும் தற்பெருமையு முடைய ரிச்சர்டின் குற்றங்கள், தன்னலமே நோக்கமாகக் கொண்ட ஹென்ரி ஆட்சியின் குற்றங்களைப் பார்க்கினும் எவ்வளவோ மேல் என்று எண்ணினர்.

ரிச்சர்டுக்கு உட்பகையாய் நின்ற யார்க் கோமகன் மகன் ஆமெர்ல் பெருமகன் தலைமையில் பல பெருமக்களும் பொதுமக்களும் சேர்ந்து, திரும்ப ரிச்சர்டை அரசனுக்கும் எண்ணத்துடன் சூழ்ச்சி செய்தனர். ரிச்சர்டுக்கு வஞ்சமிழைத்த யார்க், மைந்தனையும் மனைவியையும் கூடக் காட்டிக் கொடுத்து நல்ல பெயரெடுக்க முயன்றான்.

ஹென்ரியின் சமய சஞ்சீவிகளில் ஒரு மூவர் யார்க்கைவிட ஒருபடி முன் சென்று சிறையிலிருந்த ரிச்சர்டை வலியச் சண்டைக்கிழுத்துப் படுகொலை செய்தனர்.

தன்னலத்திற்காக ரிச்சர்டிற்கு எதிராக அனைவரையும் தூண்டிய ஹென்ரி, ரிச்சர்டின் பெருந்தன்மையினையும், அவனுக்கெதிராகத் தன் தூண்டு

தலுக்கிணங்கிய வஞ்சகர்களின் சிறுமையையும் உள்ள படி உணர்ந்து ரிச்சர்டை மனமாரப் புகழ்ந்து, அவன் கொலைஞர்களைத் தூக்கிலிட்டான். ஹென்ரியின் குற்றங்களை இச்செயல் ஒருவாறு பொது மக்கள் முன்னிலையில் கழுவிற்று என்னலாம்.

இதே காரணத்தால் அவன் யார்க் கோமகன் சொற்கேளாது அவன் மனைவி மக்களை மன்னித்து விட்டான். யார்க்கின் கோழைத்தனமான நட்பை விட, அவர்களது வீரஞ்செறிந்த பகைமை நல்லதெனக் கொண்டான். அதற்கேற்ப, அவர்களும் ரிச்சர்டினிடம் காட்டிய உண்மையினை அவனிடமுங் காட்டினர்.

ஹென்ரி இங்ஙனம் ரிச்சர்டுக்குத் தன்னலத்தால் தான் இழைத்த தீங்கைச் சரிசெய்ய எண்ணியும், ரிச்சர்டின் புகழும் வஞ்சினமும் அவன் வாழ்க்கையை வாள்போல் ஈர்த்தன.

ரிச்சர்டுக்கு வாழ்விலாத வெற்றி, மாண்டபின் கிட்டியதென்னலாம். அவன் முடியரசை வென்றவனையும் அவன் வழியினரையும் ரிச்சர்டின் பெயர் நின்று நெடுநாள் வருத்திப் பலிகொண்டு பின் தணிந்து, இங்கிலாந்துக்கு மாறாப் புகழாக மாறிற்று.

ஆங்கில மக்கள் அவன் அரசியல் குறைகளை மறந்து, அவனது குண நிறைவையும் துயரிடையே அவன் காட்டிய பொறையையும் பெருந்தன்மையினையும் நெடுநாள் புகழ்ந்து பாராட்டினர்.